184370

V57
N22
184370

# பூர்விக கிரேக்கர்

19 MAY 1922

தி. ரா. சேஷய்யங்கார், எம். ஏ.,
எம். ஆர். ஏ. எஸ்., எப். ஆர். எச். எஸ்.
சரித்திர போதகாசிரியர்,
பச்சையப்பன் கலாசாலை

சென்னை

எம். ஆதி. அண்டு கம்பெனி,

1922.

[ரெஜிஸ்டர் செய்தது] [விலை ரூபா 0-12-0.]

Printed at
The Chandra Press,
Madras.

184370
சென்னை-600 008

10 MAY

# முகவுரை

சற்றேறக்குறைய பத்தாண்டுகளாய்க் கலாசாலையில் சரித்திரபோதகாசிரியனாக யான் இருந்துவருகிறேன். இப்பத்தாண்டுகளில் சரித்திர சம்பந்தமாக எனக்கு உண்டான எண்ணங்கள் பலவாகும். மேனாட்டார் அயல் நாட்டுச் சரித்திரங்களைத் தமது தாய் மொழிகளில் வரைந்து தமது நாட்டினர் பலர்க்கும் உதவி வருதலின் அவர்தம் மொழிகளில் ஆயிரக்கணக்கான அயல் நாட்டாரது அரிய பெரிய நூல்கள் மல்கி நற்பயனளித்து வருகின்றன. நந்தம் இந்திய நாட்டிலோவெனின் அங்ஙனமின்றிச் சரித்திர நூல்கள் மிகச் சிலவேயுள்ளன. அவைதாமும் நம் நாட்டு மாணவர்களுக்கு எளிதிற் பயன்படாதவாறு அயல் நாட்டு மொழியினியன்றுள்ளன. அயல் நாட்டு மொழியினியன்றுள்ள நூல்களைக் கற்பதனைக் காட்டினும் தம் நாட்டுத் தாய் மொழியில் மாணவர்கள் பல நூல்களைச் சிலவாண்டுகளிற் கற்றுமுடித்தற் கூடும் என்பது திண்ணம். ஆதலின் சரித்திர முறையினுழைத்து வருபவர்கள் அயல் நாட்டுச் சரித்திரங்களையும் தம் மொழியில் அழகுபெற வரைந்துதவின், அஃது காலத்திற் செய்த நன்றியே யாகும். ஆதல் பற்றிக் கிரேக்கர்களது அரிய சரித்திரத்தின்கண் அமைந்து கிடக்கும் அரும் பெரும் விடயங்களை யித் தமிழ் நாட்டிற்கு எடுத்தோதுவான் கருதி யானிச் சிறு நூலை வரையப் புகுந்தனன்.

யான் கிரேக்கர்களது சரித்திரத்தை ஆங்கிலத்தில் வரைந்து கலாசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு உதவியுள்ளேன். அந்நூலினைக் குறித்துச் சான்றோர் பலர் தமது நல்லபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளார். இத்தகைய அயல்நாட்டுச் சரித்திரங்களை ஆங்கிலத்தில் கற்றற்குக் கலாசாலையிலுள்ள மாணவர்களே தகுதியுள்ளவர்களாவர். அவர்களும் திடீரென இத்தகைய நூல்களிலுள்ள புதுமையானவையும் உட்சரித்தற்குக் கடினமானவையுமான விடயங்களையுங் கண்டு இடர்ப்படுகின்றனர். ஆதலின் இக்கிரேக்க சரித்திரத்திலுள்ள விடயங்கள் தமிழ் மொழியில் வெளிப்போந்து நடுத்தர பாடசாலை (High School) யிலுள்ள மாணவர்களுக்குப் பாடமாக ஏற்படுத்தப்படுமாயின் அது அவர்கள் கலாசாலையிற் சேர்ந்து மென்மேலுங் கற்கப் புகுங்கால் அவர்களுக்குண்டாகு மிடர்களை யகற்றுமென்பதில் ஐயப்பாடின்று.

இனி, நடுத்தர பாடசாலையிற் பயிலும் மாணவனொருவன் கலாசாலையிற் சேர வியலாது தான் கற்பதை யொழித்து உலகவாழ்க்கையில் புகினும் அவனுக்கும் இச்சரித்திரத்திற் பொதிந்துகிடக்கும் அரிய விடயங்கள் தெரிந்திருத்தல் பெரும் பயனளிப்பதாகும். தவிர, சிலர் அயல்நாட்டு விடயங்களைத் தமிழில் எழுதப்புகின் அவை நன்கமைவது கடினமென்றும், அங்ஙனம் புரிதல் வடமொழி முதலிய இதர மொழிகளின் உதவியின்றி யியலாதெனவுங் கருதுவர். இஃது அவர்கள் மனத்தே யுதித்ததோர் தப்பெண்ணமாம் என்பதையும் தமிழ் தனிமொழி யாதலின் அதனாலேயே பல விடயங்களை யெடுத்து விளக்கக்கூடுமென்பதையும் வற்புறுத்துமாறு இந்நூலை யெழுதத் துணிந்தேன். ஆகலின் இதன்கண் இதர மொழிகள் இன்றியமையா விடத்தன்றிக் கலவாதபடி இந்நூலை வரைந்துள்ளேன். இதனுள் யான் கிரேக்க தேயத்தினது சிறப்புக்களையும், அத்தேயத்தின்கண் தோன்றிய அரிய பெரியார்களின் செயல்களையும் வாழ்க்கை நலத்தையும், குடிகளின் நாகரிகப்போக்கையும், அரசியன் முறைகளையும் இனிது விளக்கியுள்ளேன். அன்றியும் வேண்டிய விடங்களில் விடயங்களை நன்கு விளக்குதற் பொருட்டுச் சில படங்களைச் சேர்த்திருக்கிறேன்.

MAY

பச்சையப்பன் கலாசாலையில் தமிழ்ப் புலமை நடாத்திய காலஞ்சென்ற ஸ்ரீமான். திருமணம். செல்வகேசவராய முதலியாரவர்கள் இந்நூலைப் பார்வையிட்டு இது நடுத்தர பாடசாலையிற் கற்கும் மாணவர்களுக்கு உதவியாகுமெனவும் இனிய நடையில் ஆற்றொழுக்காயமைந்துள்ளதெனவுங் கூறியுள்ளார். ஆதலின் இந்நூலின் பயன் கூறாமலே விளங்கும்.

சென்னை.
1922ஆ பிப்ரவரி 1உ

தி. ரா. சேஷய்யங்கார்.

19 MAY 1922

# பூர்வீக
# கிரேக்கர் சரித்திரம்

## 1. கிரேக்க தேசத்தின் இயற்கை யமைப்பு.

*கிரேக்க தேசத்தின் சிறப்பு.*

இப்பூமியானது ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா என்று ஐந்து பெரும் பிரிவுகளாகப், பிரிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வைம் பெருங் கண்டங்களுள் இப்பொழுது எல்லா வகையிலும் சிறந்து விளங்குவது ஐரோப்பாக் கண்டமே யாம். அக் கண்டத்துள்ள தேசங்கள் பல, வற்றுள்ளும் முதன் முதல் கிரேக்கதேசமே பல்வகையிலும் சிறந்து விளங்கியது. அத்தேசத்தினர் கல்வி, செல்வம், நாகரிகம், ஒழுக்கம், சிற்பம், சித்திரம், வான சாஸ்திரம், பிரகிருதி சாஸ்திரம், கணித சாஸ்திரம், இசை, ஆண்மை, வீரம், புதியனவாகப் பல விஷயங்களைக் கண்டறிதல், புதுவகையான நூல்களை யியற்றல் முதலிய பல வகைகளிலும் மற்ற நாட்டினர் யாவருங் கண்டு வியப்படையும் படியான உன்னத நிலைமையை [illegible]

இயற்கை யமைப்பு.

இத்தகைய குடிகள் முன்னேற்றம் அடைந்ததற்கு முக்கிய காரணம் இவர்களது நாட்டின் இயற்கையமைப்பே. நாம் உலகபடத்தில் கிரேக்க தேசத்தைப் பார்ப்போமானால், அஃது ஐரோப்பாக் கண்டத்தின் தென் பாகத்தினின்று மத்தியதரைக்கடலுட் சென்று, ஒரு பதக்கம்போல் அமைந் திருத்தலைக் காணலாம். கிரீஸ் தேசம் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள மலையடர்ந்த தேசங்களில் ஒன்று.

மலைகளின் அமைப்பு.

அதில் பள்ளத்தாக்குகளும் குன்றுகளும் கற்பாறைகளும் மிதமிஞ்சி யிருக்கின்றன. இத்தன்மையதாகிய அத் தேயத்தில் சம நிலங்கள் மிகவுங் குறைந்திருக்கின்றன. பால்கன் மலைத்தொடர், அத்தேசத்தின் வட பாகத்தை ஊடுருவிச்சென்று, கிழக்கு மேற்காக அமைந்திருக்கின்றது. அம்மலைத் தொடரினின்று கிளைத்தொடர்கள் பிரிந்து, சால்விதிஸ் எனப்படும் பிரதேசத்தினுட் புகுந்து, உந்நத சிகரங்களோடு உயர்ந்து விளங்குகின்றன. மாஸிடோனியாப் பிரதேசத்தை அடுத்த தெர்ம வளைகுடாவினுக் கப்பால், அம்மலைத்தொடர் மிகவும் பெரிய அணையைப்போல் தோன்றுகின்றது. அதினின்று பிரிந்து செல்லு மலைத்தொடர்களே கிரேக்க தேசத்திற்கு ஆதாரமான மலைகள். இக்கிளைத்தொடர் மலைகளில் முக்கியமானது பிண்டஸ் என்பதே. இது கிரீஸ் தேசத்தில் இடைத்தொடர் மலையா யிருக்கின்றது. இத னிருபுறத்தினின்றுங் கிளைத் தொடர்கள் பிரிந்து செல்கின்றன. பிண்டஸ் மலைத்தொடர் தென் முகமாகச் சென்று, இல்லிரியா நாட்டினின்று மாஸி-



டோனியா நாட்டையும், தெஸ்ஸலிப் பிரதேசத்தினின்று எபைரஸ் பிரதேசத்தையும் பிரிக்கின்றது. எட்ரியாட்டிக் கடலின் சமீபமாக மேற்குப் பக்கத்தில் மேற் கூறப்பட்ட மலைத்தொடருக்கு நேராகப் பல மலைத்தொடர்கள் அமைந்திருக்கின்றன. அவற்றினிடையிடையே நெருங்கிய பள்ளத்தாக்குகள் பலவுண்டு. கீழ்ப்புறத்தில் ஈஜியக் கடலுக் கருகில் மேற்குக் கிழக்காகக் குறுக்கிட்டுச் சென்றிருக்கு மலைத்தொடர்கள் பல உள. இவைகள் கடலினருகில் வடக்குத் தெற்காகச் செல்லும் பல மலைத்தொடர்களோடு கூடி மாஸிடோனியா, தெஸ்ஸலி என்னும் நாடுகளுக்கு எல்லைகளாக அமைந்திருக்கின்றன. கிரீஸின் தென்பாகத்திலுள்ள பெலப்பொனீஸ் என்னும் மாகாணத்தின் மலைகள் வேறு விதமாய்ப் பொருந்தியிருக்கின்றன. அவற்றின் முக்கிய தொடர்கள் வடக்குத் தெற்காகச் செல்லாமல் மேற்குக் கிழக்காகச் செல்லுகின்றன. பெலப்பொனீஸ் மலைத்தொடர்களின் பெரிய தொகுதி, அக்கேயா, ஆற்கேடியா என்னு நாடுகளுக் கிடையில், வடதிசைக் கடற்கரையோரத்திலுள்ள மலைத்தொடராம். அத்தொடரினின்று சில கிளைத்தொடர்கள் தென்முகமாகச் செல்லுகின்றன.

நதிகளின் அமைப்பு.

கிரீஸ் தேசத்தின் நதிகள் அதிக நீளமுடையனவும் அல்ல; மிக்க நீர்ப்பெருக்கினை உடையனவும் அல்ல. பெலப்பொனீஸ் மாகாணத்தின் முக்கியமான ஆறுகள் மேற்கு முகமாகவும் வடக்கு முகமாகவும் ஓடுகின்றன. பொதுவாகக் கிரீஸ் தேசம் முழுதும் நீர்வளத்திற் குறைவானதே. அந்த ஆறுகளில் நீர்ப்-

பொழுதுங் கிடைப்பதில்லை. மாரிகாலத்தின் முற்பகுதியில் மாத்திரம் இருகரைகளிலும் வெள்ளம் புரண்டோடும், வேனிற்காலம் வருவதற்குள் வற்றிவிடும்.

கிரீஸ் தேசத்திற்கு மலை அமைப்பினாலும் நதி யமைப்பினாலும் வாய்ந்த நன்மை தீமைகள்.

கிரீஸ் தேசத்தில் ஒரே தொடர்பான சம பூமிகளும், பெரிய பள்ளத்தாக்குகளும் மிகவுங் குறைவாயிருப்பினும், வெவ்வேறாக அமைந்திருக்கும் மலைகளும், பள்ளத்தாக்குகளும், மலைச்சரிவுகளும் மிகுதியாக உண்டு. கிரீஸ்தேசம் இவ்வகையாகப் பல சிறு சம பூமிகளாகவும், பள்ளத்தாக்குகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் அத்தேசத்திற் பல சிறிய இராச்சியங்கள் உண்டாயின. மலைகள் குறுக்கிடுவதனால் ஓர் இராச்சியத்தினின்று மற்றோர் இராச்சியத்திற்குப் போக்கு வரவு நடத்துவது மிகவும் அரிது. அத்தேயத்தின் ஆறுகளோ கப்பல்கள் செல்லுதற்கும் வியாபாரம் நடத்துதற்கும் தகுதியற்றன. சரக்குகளைத் தரை மார்க்கமாய் எடுத்துச் செல்வது மிகவும் கடினமாயிருந்ததனால், கிரீஸ்தேசத்திலுள்ள ஓர் இராச்சியம் மற்ற இராச்சியங்களோடு ஒழுங்காக வாணிபஞ் செய்வதும் தடைப்பட்டது. ஒவ்வோரிராச்சியமும், மற்ற இராச்சியங்களை எதிர் பார்த்துக் கொண்டிராமல், தனக்குவேண்டிய பொருளைப் பயிரிட்டேனும், கைத்தொழிலாலேனும் உண்டாக்கிக்கொண்டு, சுதந்திரமுற்றிருந்தது. அன்றியும் ஒவ்வோரிராச்சியமும் மற்ற இராச்சியங்களினிடம் பொறாமை யுடையதாய்ச் சச்சரவு விளைத்துக்கொண்டிருந்தது. ஆதலால் தேசம் ஒற்றுமையற்றிருந்தது. தேசாபிமான மென்பதையே



கிரேக்கர்கள் அறியமாட்டார்கள். ஆயினும் அவர்கள் தங்கள் தங்கள் இராச்சியங்களின் நன்மையைக் கோரிப் பாடுபட்டு வந்ததன்றி அவற்றின் முன்னேற்றத்தின் பொருட்டுத் தங்கள் உயிரையும் விடச் சித்தமாயிருந்தார்கள். அவ்விராச்சியங்கள் ஒவ்வொன்றும் சிறிதானமையின், ஒவ்வோரிராச்சியத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் அவ்விராச்சியத்தைப் பாதுகாத்தற்கும், இராச்சிய விஷயங்களைப்பற்றி ஆலோசித்தற்கும் இன்றியமையாதவனெனக் கருதப்பட்டனன். இராச்சிய வாழ்க்கைக்குச் சுதந்தரமும், தன்னடக்கமும் ஆதாரமானவை என முதன் முதலிற் கிரீஸ் தேசத்தில் தான் அறிகிறோம். அத்தேயத்தவர்களில் ஒவ்வொருவருக்கும் தத்தம் நற்குணங்களை மேன்மேலும் விருத்தி செய்தற்கேற்ற சாதனங்கள் வாய்த்திருந்தன. இங்ஙனம் கிரீஸ் தேசம் சுதந்திரத்திற்கு இருப்பிடமாயிருந்தது.

கிரீஸ் தேசத்திற்குக் கடலால் உண்டான நன்மைகள்.

கிரீஸ் தேசத்தில் முனைகளும், விரிகுடாக்களும், வளைகுடாக்களும், பல இருக்கின்றன. கடலுக் கருகில் பல நாடுகள் உள. பெலப்பொனீஸ் மாகாணத்தின் வடிவத்தையும், அதன் தென்புறமுள்ள லக்கோனியா, மெஸ்ஸீனியா என்னும் வளைகுடாக்களையும், அட்டிக்கா நாட்டி னிருபுறத்திலுஞ் சூழ்ந்திருக்குங் கடலையும், பெலப்பொனீஸின் வடபுறத்திலிருக்குங் காரிந்தியா வளைகுடாவையும், நாம் படத்தில் எளிதிற் காணலாம். ஆதலின், அநேகமாகக் கிரீஸின் பிரதேசங்களொவ்வொன்றிற்குங் கடற்கரையில்லாம லிருக்கவில்லை. ஒரு தேசம் சமுத்திரத்தை

அடுத்திருப்பின், அதிலுள்ள மக்களின் குணங்களும் சரித்திரமும் எத்தகையனவா யிருக்குமென்பது யாவர்க்கும் நன்றாய்த் தெரிந்த செய்தியே. கிரேக்கர்கள் கப்பலோட்டுவதிலும், வியாபாரம் செய்வதிலும், பிறதேசங்களிற் சென்று குடியேறுவதிலும், நாகரிகத்திலும் சிறந்தவர்களானார்கள். கடற்கரை மிகுதியாகவிருந்தது அதேனு நாட்டினர் எப்போழ்தும் சுறுசுறுப் புடையவர்களாயும், கடலில் துணிந்து செல்பவர்களாயும், நாகரிகத்தா லுண்டாகும் மாறுபாடுகளுக்கு இடந் தருபவர்களாயும், கற்பனைசக்தி மிக்கவர்களாயுமிருந்தார்கள். இவர்கள் தன்மை கடற்கரையைச் சார்ந்த நாடுகளி லிருப்பவர்கள் பல வகைகளினு மேன்மையுற்று விளங்குவார்களென்பதற்குச் சிறந்த உதாரணமாம்.

ஆசியா ஆப்பிரிக்கக் கண்டங்களினால் கிரேக்க தேசத்திற் குண்டான நன்மைகள்.

கிழக்கிலிருக்கும் ஈஜியக் கடலிலுள்ள எண்ணிறந்த திவுகளின் மூலமாக, ஆசியாக் கண்டத்திலிருந்த பழமையான நாகரிகத்தினரோடு கிரேக்கருக்குக் கூட்டுறவு ஏற்பட்டது. அது கிரேக்கரி னாகரிகம் மேன்மேலும் வளர்தற் காதாரமாயிற்று. தெற்கிலிருக்குங் கிறீட் என்னுந் தீவின்மூலமாகக் கிரேக்கர் நாகரிகத்தின் மிகவுஞ் சிறந்தவர்களான எகிப்து தேசத்தவர்களைச் சந்தித்தார்கள். அதனால் கிரேக்கரி னாகரிகம் விர்த்தியடைந்தது.

கிரீஸ் தேசத்தின் சீதோஷ்ண நிலையும் நிலவளமும்.

தேச சரித்திரம் எழுதுவதில் சிறந்த புலமை வாய்ந்துள்ளவரான பூரி என்பவர் கிரீஸ் தேசத்தின் சீதோஷ்ணநிலை மாந்தர்க்கு ஊக்கமும் மனவன்மையும் உண்டாதற் கேற்ற சுகமும்



குளிர்ச்சியுந் தருவதா யிருக்கின்றதெனக் கருதுகின்றனர். இத்தேசத்தில் வேண்டியவளவு தானியம் விளைவதில்லை யாதலால், கிரேக்கர் மிகவும் வருந்திப் பாடுபட வேண்டியதாயிற்று. அன்றியும் அவர்களுக்குத் தங்களிடம் இல்லாதனவற்றைக் கடல் வியாபாரத்தின் மூலமாகத் தேடிக்கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்பட்டது.

---

## 2. கிரேக்கரின் குடியேற்றம்.

கிரேக்க தேசத்தின் குடிகள்.

கிரேக்க தேசத்துப் பழைய குடிகள் ஈஜியர் எனப்படுவர். கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் வருடங்களுக்கு முன், கிரேக்கர் வேறு நாடுகளினின்று சிறு சிறு கூட்டத்தினராக வந்து அத்தேசத்திற் குடியேறத் தொடங்கினர். அவர்கள் வந்து குடியேறிய பின்னரே, அத்தேசத்திற்குக் கிரீஸ் என்னும் பெயருண்டாயிற்று. அதற்கு முன் வழங்கிய அதன் பெயர் இன்னதென்பது புலப்படவில்லை. கிரேக்கர் அக்காலத்தில் அக்கேயர், டோரியர், என்னுமிரண்டு வகுப்பினரா யிருந்தனர்.

அக்கேயர்.

அவர்களுள் அக்கேயர் என்னும் வகுப்பினரே முதலில் கிரீஸ் தேசத்திற் குடியேறினவர்கள். அவர்கள் முதலில் கிரீஸின் வடபாகத்திற் குடியேறிப் பிறகு மெல்ல மெல்ல அதன் மத்திய பாகத்தை யடைந்து, பின்பு அதன் தென் பாகத்திலுஞ் சென்று பரவினார்கள். அவர்கள் அத்தேசத்துப் பழைய குடிகளோடு எல்லாவகை

மினுஞ் சிறிதும் வேறுபாடின்றிக் கலந்துகொண்டு ஒரே வகுப்பினர் என்னும்படி ஆய்விட்டனர். அக்கேயர் அத்தேசத்திற் குடியேறத் தொடங்கிய காலத்தில், பழைய குடிகளாகிய ஈஜியர் சிறந்த நாகரிகமுடையவர்களாகவே இருந்தனர். அக்கேயர், கிரீஸின் தென்பாகத்திற் குடியேறிய பின்னர், அத்தேசத்தின் பழைய குடிகளிடங் காணப்பட்ட அந்த நாகரிகத்தை வளர்த்து, மிகவும் உன்னதமான நிலைக்குக் கொண்டு வந்தார்கள். அக்காலத்தில் கிரீஸ் தேசத்தின் மற்றெல்லாப் பட்டணங்களையும்விட மைசீனே என்னும் பட்டணமே நாகரிகத்தின் மிகச் சிறந்ததாயிருந்தது.

*டோரியர்.*

இவர்கள் இங்ஙனங் குடியேறிய சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு, டோரியர் அத்தேசத்தின் வடபாகத்தினு மத்திய பாகத்தினுங் குடியேறி, பின்னர் சற்றேறக்குறைய கி.மு. தொள்ளாயிர வருடங்களுக்கு முன், அதன் தென்பாகத்தில் வந்து சேர்ந்து, ஆர்காஸ், காறிந்த், லக்கோனியா என்னு மூன்றிடங்களையுங் கைப்பற்றிக் கொண்டனர். முதலிற் சொல்லப்பட்ட இரண்டிடங்களிலும் இவர்கள் அங்குள்ள பழைய குடிகளோடு அக்கேயரைப் போலவே வேறுபாடின்றிக் கலந்து கொண்டார்கள். ஆனால் லக்கோனியாவில் மாத்திரம் இவர்கள் அங்குள்ள பழைய குடிகளோடு அவ்வாறு கலக்காமல், அப்பழைய மாந்தர்களைத் தங்களுக்குட்பட்டவர்களாகித் தாங்கள் வென்றவர்கள் என்பதும் அவர்கள் தங்களால் வெல்லப்பட்டவர்கள் என்பதுந் தோன்றப் பெருமிதத்தோடு அப்பதியை ஆண்டு வந்தனர்.



*அயல் நாடுகளில் கிரேக்கர் குடியேறல்.*

பிறகு கிரேக்கர்களிற் சிலர், கி. மு. ஆயிரத்து முந்நூறு வருடங்கட்கும் தொள்ளாயிர வருடங்கட்கு மிடைப்பட்ட காலத்தில், ஆசியாமைனரில் குடியேறினார்கள். பின்னர் கிரேக்கர்களிற் பலர், கி. மு. எழுநூற்றைம்பதிலிருந்து ஐந்நூற்றைம்பதுக்குள், ஈஜியன் சமுத்திரத்திலுள்ள தீவுகளினும், கருங்கடலைச் சுற்றியுள்ள நிலங்களினும், மத்தியதரைக் கடலின் கரையிலுள்ள ஆப்பிரிக்காக் கண்டத்தின் வடபாகங்களினும், சிசிலித்தீவினும், இத்தாலியின் தென்பாகத்தினும், பிரஞ்சு தேசத்தின் கடற்கரையைச் சார்ந்த நிலங்களினும் குடியேறினார்கள்.

## 3. கிரீஸ் தேசத்தின் ஆளுகை.

*ஹோமர் காலத்தில் கிரீஸ்தேசத்தின் ஆளுகை.*

கி. மு. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன் கிரீஸ் தேசத்தின் ஆளுகை எத்தகைய நிலைமையிலிருந்தது என்பது நன்கு புலப்படவில்லை. ஆனால் கி. மு. ஒன்பதாம் நூற்றாண்டில், கிரீஸ்தேசம் பல பிரிவுகளாக இருந்தது என்பதும், ஒவ்வொரு பிரிவையும் ஒவ்வோரரசன் ஆண்டுவந்தான் என்பதும், ஹோமர் என்னுங் கிரேக்க மகா கவி எழுதிய நூல்களினின்று விளங்குகின்றன.

*மன்னரது ஆட்சி.*

அம்மன்னர்கள், பல கிராமங்களில் அங்குமிங்குமாகப் பரவியிருந்த குடிமக்களை ஒருங்குதிரட்டி, நகரராச்சியங்களையுண்டாக்கி, அவற்றைத் தனித்தனியாக ஆண்டு வந்தார்கள். அந்த ராச

சியங்கள் பெரியவைகளல்ல. அவற்றுள் ஒவ்வொன்றும் நிலப்பரப்பிலும் மக்கட்டொகையிலும் நமது நாட்டிலுள்ள சிறு சிறு ஜமீன்களை ஒத்தவைகள். அவ்விராச்சியங்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு கோட்டை உண்டு. ஒவ்வொன்றும் பகைவர்கள் தகர்க்க முடியாதபடி மிகவும் வலியுள்ளதாகக் கட்டப்பட்டிருந்தது. மாந்தர்கள் அக்கோட்டைகளிலும் அக்கோட்டைகளைச் சுற்றியுள்ள இடங்களிலும் வசித்து வந்தார்கள். கோட்டையின் புறத்துள்ள இடங்களில் வசிப்பவர்கள் ஆபத்து நேரிடுங்காலங்களிற் கோட்டைக்குட் போய்விடுவார்கள். ஒவ்வொரு ராச்சியத்திலும் இரண்டு சபைகள் இருந்தன. அவற்றுள் ஒன்று பொதுஜன மகா சபை. மற்றொன்று உயர்குடியிற் பிறந்தவர்களும், கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களும், வயதின் முதிர்ந்தவர்களுமாகிய சிலரைத் தன் அங்கத்தினராகக் கொண்ட சிறு சபையாகும். இவ்விரு சபைகளின் உதவியைக்கொண்டே அரசர்கள் செங்கோல் செலுத்தி வந்தார்கள்.

**பிரபுக்களின் ஆட்சி.**

அம்மன்னர்கள் இங்ஙனம் நகரராச்சியங்களை உண்டாக்கிய சிலகாலத்திற்குள், பிரபுக்கள் அவ்வேந்தர்களை யொழித்துவிட்டுத் தாங்களே அரசாளத் தொடங்கினர். அம்மன்னர்கள் அங்ஙனங் குடிகளை ஒருங்கு கூடி வாழச் செய்ததே, பிரபுக்கள் அம்மன்னர்களின் ஆளுகையை எளிதில் ஒழித்தற்கு ஏதுவாயிற்று. அம்மன்னர்கள் சபையின் சொற்களைக் கேளாமல் குடிகளுக்குப் பலவகை இடுக்கண்களைப் புரிந்து வந்ததனாலே தான், பிரபுக்கள் அம்மன்னர்களின்



ஆளுகையை ஒழித்துவிட்டார்கள். பிரபுக்கள் இங்ஙனம் அவ்விராச்சியங்களைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டு ஆளத்தொடங்கிச் சிறிதுகாலம் வரையிலும் குடிகளின் நலங்களையே கருதி ஆண்டனர். இப்பிரபுக்கள் தாங்கள் உலகில் தோன்றியது பொதுநலம் புரிதற்கே எனக் கருதி உண்மையாக உழைத்துத் தங்களுடைய பொருள்களைக் கொண்டு, ஏழைகளுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்தார்கள்; நிலமில்லாதவர்களுக்கு நிலங்களைக் கொடுத்துதவினார்கள்; கல்வி, சிற்பம், சித்திரமெழுதல், புதிய நூல்களை இயற்றல் முதலியவற்றின் தோற்றத்திற்கு விதையிட்டவர்கள் இவர்களே. இவர்கள் இங்ஙனம் ஒரு நூற்றாண்டு வரையிலும் செம்மையாக ஆண்டார்கள். பின்னர் இப்பிரபுக்கள் மேற்கூறிய நன்முறைகளையெல்லாம் விடுத்துத் தங்கள் நலங்களையே பாராட்டிக் குடிகளைப் பெரிதும் வருத்துவாராயினர். இவர்களுடைய கொடுங்கோன்மையிலகப்பட்ட குடிகள், பாம்பின் வாய்ப்பட்ட தேரைபோலவும், நடுக்கடலிலே சுற்றிச் சுற்றி வீசும் புயலினிடைப்பட்ட கலத்திலிருப்பவர்களைப் போலவும், மனங்கலங்கித் தவிப்பாராயினர். இங்ஙனங் குடிகள் வருந்திக் கொண்டிருக்கையில், விஷந் தலைக்கேற வருந்துங்காலத்து வந்துதவிய விடவைத்தியனைப்போலச் சில வீரர்கள் தோன்றிக் குடிகளிற் சிலருடைய உதவியைக்கொண்டு, பிரபுக்களின் ஆட்சியை யொழித்துக், குடிகளின் துன்பத்தைக் களைந்து, தாங்களே அவ்விராச்சியங்களை ஆளத் தொடங்கினார்கள்.

**வல்லரசரின் ஆட்சி.**

இவர்கள் இராச்சியங்களைத் தங்களுடைய மறத்தினால் கைப்பற்றிக் கொண்டமையாலும், பாரம்பரையாக வந்த அரச உரிமையை யுடையோரல்லராதலாலும், நாட்டிலேற்பட்டுள்ள சட்டங்களை யேற்றுக் கொள்ளாமல் எதையும் தங்கருத்தின்படியே செய்து வந்தமையாலும், வல்லரசரெனக் கூறப்பட்டார்கள். இவர்கள் குடிகளுக்குப் பல நன்மைகளைப் புரிந்தனர். முதலில் இவர்கள் எளியவர்களை மேலான நிலைமைக்குக் கொண்டுவந்தனர். பிரபுக்களென்றும் ஏழைகளென்றுங் கருதாமல் இவர்கள் எல்லோரையும் ஒரே விதமாக நடத்தினார்கள். மரக்கலங்களின் உதவியைக் கொண்டு வேறு தேசங்களோடு இவர்கள் வியாபாரஞ் செய்யலுற்றார்கள். மேலும் இவர்கள் சாதாரண மனிதர்கள் குடியரசைப்பெறுதற்கு வேண்டிய ஆற்றலை யுடையவர்களாகுமாறு செய்தனர். இங்ஙனஞ்சிறிது காலஞ் சென்ற பிறகு, வல்லரசரின் ஆளுகையுந் தவிர்ந்தொழிந்தது. அதனால் பின்பு குடிகள் அரசாளுதற்குரிய வழி ஏற்பட்டது.

---

## 4. ஸ்பார்த்தா என்னும் நகர ராச்சியம் விருத்தியடைந்த வரலாறு.

**ஸ்பார்த்தா எனும் நகரத்தின் விருத்தாந்தம்.**

ஸ்பார்த்தா என்னும் நகர் லக்கோனியாவில் உள்ளது. ஆதிகாலத்தில் ஐந்து கிராமங்கள் ஒருங்கு சேர்ந்ததனால் இந்நகர் உண்டாயிற்று. ஸ்பார்த்தாவைப் போன்ற மற்றும் பல பட்டணங்கள் லக்கோனியாவில் இருந்தன. நாளடைவில்



ஸ்பார்த்தா, அப்பட்டணங்களையெல்லாம் தன் வசப்படுத்திக்கொண்டு, லக்கோனியாவிற்கு ஒரு திலகம் போற் பொலிவுற்று விளங்கியது.

**ஸ்பார்த்தாவிற்கும் மெஸ்ஸீனியாவிற்கும் நடந்த யுத்தம்.**

பிறகு ஸ்பார்த்தாவிற்கும் அதனருகிலிருந்த மெஸ்ஸீனியா என்னும் நாட்டிற்கும் கி. மு. எட்டாம் நூற்றாண்டில் சண்டை நேர்ந்தது. சற்றேறக்குறைய இருபது வருஷகாலம் இரு நாட்டாரும் ஒருவருக்கொருவர் பின்னிடாமல் தத்தம் வன்மையால் மிகக் கடூரமாக யுத்தம் புரிந்தார்கள். மெஸ்ஸீனியருடைய தளகர்த்தர் அரிஸ்தாடேமன் என்பவர், பலவகையான சூழ்ச்சிகளைச் செய்தும் ஒன்றும் பயன்படாமற்போக, மெஸ்ஸீனியர் நாட்டின் கோட்டைகளிலொன்றாகிய இதோம் என்னும் கோட்டைக்குள் சைனியத்தோடு புகுந்து, மனத் தளர்ச்சியடையாமல் நெடுநாள்வரையினும் போர்புரிந்து வந்தார். முடிவில் அவர் டெல்பி என்னுமிடத்தில் கிரேக்க தேசத்தாருக்கு வேண்டிய காலத்தில் அவர்கள் அறியவேண்டுவனவற்றைக் குறி சொல்லித் தெரிவிக்கும் தெய்வத்தை வணங்கித் தமது நாடு வெற்றிபெறும் வழியைத் தெரிவிக்கும்படி மன்றாடிக் கேட்டுக்கொண்டனர். அப்போது அத்தெய்வம் மெஸ்ஸீனியர் ஒரு கன்னிகையைப் பலி கொடுப்பின், ஐயமின்றி வெற்றி பெறுவார்களென்று அங்குள்ள குறிகாரியின் மீது ஆவேசித்துக் கூறியது.

**அரிஸ்தாடேமன் தன் புத்திரியைப் பலிகொடுக்கத் தீர்மானித்தல்.**

இத் தெய்வவாக்கைக் கேட்டும், ஒருவராவது தாம் ஈன்ற கன்னிகையைப் பலிகொடுக்கத் துணிந்திலர்.

கடைசியாக, அரிஸ்தாடேமன் என்னும் தளகர்த்தரே, தமது நாடு க்ஷேமமடைய வேண்டுமென்று தாம் கொண்ட பெரு விழைவினாலும், தேசாபிமானத்தினால் தூண்டப்பட்டவராயினும், தமது ஒரே புதல்வியை, அழகே உரு எடுத்தாற்போன்ற கன்மணியை, மற்றோர் வியப்பும் திகைப்பும் ஒருங்கெய்தும்படியாகவும், உலகம் புகழும்படியாகவும், பலி கொடுக்கத் தீர்மானித்தனர். இவ்விசனகரமான விஷயம் நாராசம்போல் இக்கன்னிகையினுடைய காதலன் காதின் விழ, அவன் இதைப் பொறுக்க மாட்டாமல் வீதியிலோடி, அந்தப் பெண் கன்னிகையல்லள் என்றும், கருவுற்றிருக்கின்றனளென்றும், கூவினான். அதைச் செவியுற்றவுடன் மேற்கூறிய தளகர்த்தருக்குச் சொல்லற்கரிய சினம் பொங்கிற்று. உடனே அவர் உடை வாளை உருவித் தன் பெண் வயிற்றை நோக்கிக் குத்தினார். அவ்வெளிய மாதின் உயிர் ஒரு கணப்பொழுதில் மண்ணுலகை நீத்து விண்ணுலகை யெய்தியது. அவள் தந்தையாகிய அத்தளகர்த்தரும் அதனால் துன்பக்கடலில் ஆழ்ந்து சிறிது போழ்தில். துஞ்சினர். பின்னர் ஸ்பார்த்தர், இதோம் கோட்டையையும் அதைச் சார்ந்த தென்பாகத்து நிலங்களையும் கைப்பற்றிக்கொண்டு, மெஸ்ஸீனியரை அடிமைகளாக்கி, அந்நிலங்களில் மெஸ்ஸீனியர் சாகுபடி செய்து விளையும் பொருள்களில் பாதியைத் தங்களுக்கு அனுப்ப வேண்டுமென, ஏற்பாடு செய்தனர். இங்ஙனம், மெஸ்ஸீனியர் ஊழின் வலியால் தங்கள் சொந்த நிலங்களிலேயே அடிமைகளைப்போல் வேலை செய்து வந்ததன்றி, ஸ்பார்த்தர் செய்யும் கொடுமை



களையும் இவர்கள் பொறுமையில் பூமியை யொத்தவர்களென்று உலகம் புகழும்படி பொறுத்து வந்தனர். இவ்விதமாகச் சிறிது காலஞ் சென்றது. மெஸ்ஸீனியர் பெருந் துன்பத்திற் கிடமான இவ்வடிமைத்தனத்தினின்றும் நீங்குதற்கு முயல்வாராயினர். இவ்விதம முயன்று சுதந்தரக் கொடியை விரித்துத் தங்களை யெதிர்த்த ஸ்பார்த்தரை வென்று மெஸ்ஸீனியர் வெற்றி முரசை முழக்கினர்.

அதேனா நகரின் பள்ளி உபாத்தியாயனது செய்கை.

அத்தோல்வியினால் உள்ளங் கலங்கிய ஸ்பார்த்தர்கள் கிரீஸ் தேசத்தின் பல நிலங்களுக்கும் நாயகமாய்ச் சிறந்து விளங்கிய அதேனா என்னும் நகரிலுள்ள அதேனியர்களைத் தங்கட்குத் துணை புரியும்படி வேண்ட, அவர்கள், ஒருகால் நொண்டியாகிய எளிய பள்ளி உபாத்தியாயனை, ஸ்பார்த்தர்கள் வெந்நிட்டதனால் எய்திய மாசு நீங்கிப் புகழெய்தும்படி, அனுப்பினார்கள். ஸ்பார்த்தர், இவ்வுபாத்தியாயனைத் தலைவனாக அமர்த்தி, மெஸ்ஸீனியாவை அடைந்து, அத்தேசத்தாரை ரணகளத்தில் முதுகு காட்டி யோடும்படி செய்தார்கள். இப்படி அபஜயமடைந்த மெஸ்ஸீனியர் ஈரா என்னும் கோட்டைக்குட் புகுந்து அவ்விடமிருந்தபடியே ஸ்பார்த்தரோடு உக்கிரமான போர் புரிந்தார்கள். தந்திரத்தில் நிபுணரும், ஆண்மையில் அரிமாவையொப்பவரும், தேசாபிமானத்தையே தமக்கு ஆபரணமாகப் பூண்டவருமாகிய, அரிஸ்தாமினன் என்னும் மெஸ்ஸீனிய போர்த்தலைவர் தமது போர்த்திறத்தினைப் பலவிதமாகச் செலுத்தியும், ஸ்பார்த்தருடைய சிறந்த வன்

ஜமக்கு முன் எதிர் நிற்க முடியாமல், யுத்தமுனையில் அழிந்த சேனைகள்போக எஞ்சி நின்ற சேனைகளோடு, தமது நாடுவிட்டுப் புறநாடேகினர். ஸ்பார்த்தர் தமக்கெய்திய வெற்றியினால் மிக்க மனக்கிளர்ச்சியுற்று, ஈரா என்னும் கோட்டைக்குச் சென்று, அதனைக் கைப்பற்றிக் கொண்டனர். அதனால் மெஸ்ஸீனியாவின் வடபாக முழுதும் இவர்கள் கைவசமாயிற்று. இவ்வாறாக இவ்விரு யுத்தங்களிலும் மெஸ்ஸீனியநாடு முழுதும் ஸ்பார்த்தருக்கு ஐக்கியமாய்விட்டது. பின்னர் ஸ்பார்த்தருக்குப் பல நாடுகளையும் ஜயிக்கவேண்டுமென்னும் அவா மேன்மேலும் வரையறையின்றிப் பெருகிற்று. ஸ்பார்த்தாவுக்கு வடக்கே ஆர்கேடியா எனு நாடுளது. இந்நாட்டின் தென் பாகத்திலுள்ள திஜியா என்னும் பட்டணத்தின்மீது ஸ்பார்த்தர் படையெடுத்துச் சென்று முதலில் தோல்வியடைந்து பின்பு தெய்வ சகாயத்தினால் அப்பட்டணத்தைத் திமீது வசமாக்கிக்கொண்டனர். அதே காலத்தில் வடகிழக்கிலுள்ள திரியா என்னும் நாட்டிற்கும் அவர்கள் அதிபதிகளானார்கள். ஸ்பார்த்தர்கள், இவ்விதமாக அநேக பட்டணங்களையும் நாடுகளையும் தம் வசத்தில் கொண்டுவந்து, தங்கள் கீர்த்தி நாளுக்குநாள் பூர்வ பக்ஷத்துச் சந்திரன்போல் வளர, மகோன்மத்தராய் வாழ்ந்து வந்தார்கள்.

பெலப்பொனீஷிய கான்பிடரஸி

பின்னர் கி. மு. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பெலொப்பனீஸிலுள்ள நாட்டினரெல்லாரும், ஸ்பார்த்தருடைய பேராற்றலை நோக்கி, அவர்களோடு சேர்ந்து, அவர்களைத் தலைவர்களாகக் கொண்டு,



பொதுவிஷயங்கள் யாவற்றையும் ஒன்றுகூடி நடத்துவதெனத் தீர்மானித்துப் பெலப்பொனீஸ் ஐக்கிய ஆட்சிச் சங்கம் (பெலொப்பனீஷியன் கான்பிடரஸி) ஒன்றை ஸ்தாபித்தார்கள்.

---

## 5. ஸ்பார்த்தாவிலுள்ள குடிகளின் பகுப்பு.

டோரியர்.

டோரியர் என்னும் ஜாதியார் ஸ்பார்த்தாவிற் குடியேறி அவ்விடத்தில் அவர்கள் கண்ட பழைய குடிகளோடு ஒன்றுசேர்ந்து ஐக்கியமாகாமலிருந்தார்கள் என்று முன்பே குறிப்பிட்டுள்ளோம். ஸ்பார்த்தாவிலுள்ள டோரியர் யாவரும் இராச்சியம் ஆளுதற்குரியவர். பதினாயிரம் டோரியர்கள் ஸ்பார்த்தாவில் வசித்ததாகச் சரித்திராதிபர் கூறியுள்ளார். அவர்கள் ஆளுகையின் கீழ்ப்பட்ட வகுப்பினருள் பெரியோக்கர் என்பார் ஒருஜாதியார்.

பெரியோக்கர்.

இவர்கள் தொகை முப்பதினாயிரம். இவர்கள் டோரியர் வருவதற்குமுன் ஸ்பார்த்தாவில் குடியேறியவர்கள். இவர்கள் டோரியர்களால் வெல்லப்பட்டவர்கள். அதனால் இவர்கள் லக்கோனியாவில் துறைமுகத்திலும் மற்ற இடங்களிலும் வசித்துப் பிறதேசத்தாரோடு வியாபாரஞ் செய்து மிக்க பொருள் சம்பாதித்தார்கள். ஆனால் ஸ்பார்த்தாவின் ஆளுகையில் இவர்களுக்குச் சிறிதும் சம்பந்தம் கிடையாது. இவர்கள் லக்கோனியாவில் சிறு சிறு பட்டணங்களில் வசித்தனர்; ஸ்பார்த்தா எனும் நகரராச்சியத்தில் தாங்கள் டோரியர்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாயினும் தத்தம் சிறு பட்

டணங்களில் சுயஆட்சியைச் செலுத்திவந்தார்கள்

ஹெலத்தர்.

ஸ்பார்த்தர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்தவர்களுள் ஹெலத்தர் என்பார் மற்றொரு வகுப்பினர். இவர்களின் தொகை இரண்டு லக்ஷம். இவர்கள் ஸ்பார்த்தாவில் அடிமைகளாயிருந்தனர். இவர்கள், அடிமைத்தனத்தால் மிகவும் கொடுஞ்சிறையிலகப்பட்டவன் அச்சிறையினின்றும் நீங்க அவாவி நிற்பது போல், கொடுமையாகிய அடிமைத்தனத்தினின்றும் நீங்கப் பெரும் விருப்புற்று, ஸ்பார்த்தர்களுக்கு விரோதமாகக் கிளம்புவதற்குத் தக்க சமயத்தை எதிர் நோக்கிச் சித்தமாயிருந்தார்கள். ஆகையால் ஸ்பார்த்தர், மிகவும் ஜாக்கிரதையுடையவர்களா யிருந்ததோடு, ஹெலத்தரில் சிறிது வன்மையுடையவர்களாகக் காணப்பட்டவர்களின் தலைகளைப் பனங்காய்களைச் சீவுவதுபோல் சீவிவந்தனர்.

கிரிப்ஷியா.

இக்கொடுஞ் செயலைச் செய்வதற்குக் கிரிப்ஷியா எனும் அந்தரங்கச் சேவகர்களை ஸ்பார்த்தர் ஏற்படுத்தினார்கள். இவ்விதமாகப் பதினாயிரம் ஸ்பார்த்தர்கள், முப்பதினாயிரம் பெரியோக்கர்களையும், இரண்டு லக்ஷம் ஹெலத்தர்களையும், தங்களுக்குக் கீழ்ப்படுத்தி ஆண்டுவந்தார்கள்.

---

## 6. ஸ்பார்த்தர்களின் ஜனசார ஏற்பாடுகள்.

ஸ்பார்த்தர்கள் யாவரும் போர்புரிதற்கே உதித்த குலத்தவர்களெனும்படி யிருந்தார்கள். ஒவ்வொரு ஸ்பார்த்தனுடைய வாழ்நாளும் தன் தேச ஊழியத்திற்கே அர்ப்பணம் செய்யப்பட்டு வந்தது.



இங்ஙனம் ஸ்பார்த்தர் தேச ஊழியத்திலேயே மனஞ்செலுத்தவேண்டியவர்களாயிருந்தமையின், அவர்கள் குடும்ப கவலை சிறிதும் அணுகாத மனமுடையவர்களா யிருக்கவேண்டுமென்பது அவசியமாயிற்று. ஆகையால் ஸ்பார்த்தாவிலுள்ள விளைநிலங்கள் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டன. அவற்றுள் ஒவ்வொருபாகம் ஒவ்வொரு ஸ்பார்த்தனுக்குக் கொடுக்கப்பட்டது. அப்பாகத்தை அவன் விற்கக்கூடாது. ஒருவனுடைய பாகம் அவனிறந்தபின் அவன் குமாரனைச் சாரும். இவ்வேற்பாட்டால் ஸ்பார்த்தாவில் ஒவ்வொருவனும் வறுமையின்றி வாழ்ந்துவந்தான். இப்பாகங்களை அடிமைகள் சாகுபடி செய்து அவற்றில் விளையும் பொருள்களில் மிகுதியான பங்கைத் தம எஜமானர்களுக்குச் செலுத்துதல்வேண்டும். ஸ்பார்த்தர் போர்த்தொழிலின் முறைகளை விருத்தி செய்வதிலேயே தங்கள் முழுகவனத்தையும் செலுத்திவந்தார்கள். ஸ்பார்த்தா ராணுவப் பயிற்சிக்கு ஒரு பெரிய கலாசாலையா யிருந்தது.

ஸ்பார்த்தனது பயிற்சிமுறைமை.

ஸ்பார்த்தாவின் கல்வி முறையும் விவாக ஏற்பாடும் போர்வீரர்களை உண்டாக்கும் நோக்கத்திலேயே இருந்தன. ஸ்பார்த்தாவில் ஒரு குழந்தை பிறந்தவுடன் அதை அதிகாரிகள் பரிசோதிப்பார்கள். அக்குழந்தை பலஹீனமாயிருந்தால், அவ்வதிகாரிகள் அதை தேஜித்தஸ் என்னு மலையினுச்சிக்குக் கொண்டுபோய் உயிரிழக்கும்படி உருட்டிவிடுவார்கள். அன்றி, அக்குழந்தை திடகாத்திரமாயிருந்தால் பெற்றோர்களிடம் அதைத் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள். அங்ஙனம் திருப்பிக் கொடுக்கப்பட்ட குழந்தையை ஏழுவயது வரையிலும்

பெற்றோர்கள் வளர்ப்பார்கள். பின்னர் அவ்விளைஞன் அதிகாரி ஒருவனிடத்தில் ஒப்புவிக்கப்படுவான். இவ்வதிகாரி இச்சிறுவனை அநேகவிதமான கஷ்டங்களுக் குட்படுத்தித் தைரியமும் பலமும் உடையவனாகச்செய்வான். இச்சிறுவன் கடூரமான சிக்ஷைகளைப் பெற்றுக் கொள்ளும்படி பயிற்றப்படுவான். மேலும், இவ்விதப் பயிற்சியினால் தேசாபிமானம் இவனிடத்தில் நாளுக்குநாள் வளர்ந்தோங்கும். இங்ஙனம் பயிற்றப்பட்ட இச்சிறுவன் இருபதாம் வயதில் ஸ்பார்த்தாவினது ராணுவத்திற் சேர்வான். இப்பொழுதுதான்

*ஸ்பார்த்தனது இல்வாழ்க்கை.*

இவன் மணம் புரிந்துகொள்ள உரியவனாவான். ஆனால் இவன் தன் இல்லத்தில் மனையாளுடன் இருக்க முடியாது. போர்வீரர்கள் வசிக்கும் விடுதிகளிலே மற்ற வீரர்களோடு வசிக்கவேண்டும். இவன் தன் இல்லாளை அகத்திற் சென்று சந்திக்கலாம். இவனுக்கு முப்பது வயதானவுடன் இவ்வித நிர்ப்பந்தங்கள் நீங்கிவிடும். அப்பொழுது ஸ்பார்த்தா எனும் நகர ராச்சியத்திற்குரிய உரிமைகளைப் பெற இவன் யோக்கியதை யுள்ளவனாவான். அவ்வுரிமைகளைப் பெறுவதற்குரியவர்களாகிய ஸ்பார்த்தர்கள் சிறுசிறு கூட்டத்தினராய் கூடாரங்களிலிருந்து உணவு கொள்ளுதல்வேண்டும். இதனால் ஸ்பார்த்தர்களில் பிரபுக்கள், ஏழைகள், உயர்குடிப் பிறப்பினர், சாமானியர் என்னும் வேறுபாடுகள் மிகுதியாகப் பாராட்டப்படாமலிருந்தன. ஸ்பார்த்தாவில் ஸ்திரீகளும் ஆடவர்களைப்போல் தேகப்பயிற்சி செய்துவந்தார்கள். பலமுள்ள பிள்ளைகளைப் பெறுவார்கள் என்னும் கருத்தாலேயே இங்ஙனம் பெண்களையும் தேகப்பயிற்சி செய்யும்



படி இராசாங்க அதிகாரிகள் ஏற்பாடு செய்தனர். ஸ்பார்த்தாவின் ஸ்திரீகள் சுயேச்சையா யிருப்பார்கள். அங்ஙனமிருப்பினும் அவர்கள் தங் கற்பில் பிழையார்கள். அம்மகளிர் தங்கள் புருடரும், மைந்

*ஸ்பார்த்தாவின் வீரத்தாய்மார்.*

தரும் முதுகுகாட்டி ஓடாமல் ரணகளத்தி லிறந்தால் மிகக் களிப்பர். ஸ்பார்த்தர்கள் உணவு, ஆடை முதலிய விஷயங்களில் எப்பொழுதும் மிதமாயிருந்தார்கள். பொன்னையும் வெள்ளியையும் அவர்கள் எதற்கும் உபயோகித்த லாகாதென்றும், இரும்பைக் கையாடலா மென்றும், ஏற்பாடு செய்யப்பட்டது. மேற்சொன்ன ஏற்பாடுகளினால், ஸ்பார்த்தர்களனைவரும், தேசத்தோடு ஐக்கியமாய் விட்டமையின், தங்கள் சுய நன்மையைத் தனியாகச் சிறிதும் கவனித்தலின்றிப் பொது நன்மைக்காகவே பாடுபட்டுவந்த

*ஸ்பார்த்தா கலைஞானங்களுக்கு இருப்பிடமாகாமை.*

னர். இதனால் ஸ்பார்த்தர்களனைவரும் போர்வீரர்களா யிருந்தார்களே யன்றி, அவர்களில் தத்துவ விசாரம் செய்பவர், கவிஞர், பல விஷயங்களை ஆய்பவர், சொல்வன்மை யுடையோர், நாடகாசிரியர், சிற்பிகள், இசைவல்லோர் முதலிய கலைஞர்கள் தோன்றினாரல்லர்.

## 7. ஸ்பார்த்தர்களின் அரசியல்.

*சரித்திர காலத்திற்கு முன் ஸ்பார்த்தாவின் அரசியல்.*

ஹோமர் காலத்தில் ஸ்பார்த்தாவில் மன்னர்கள், பிரபுக்களின் சிறு சபையின் உதவியையும் பொதுஜனமகாசபையின் உதவியையுங் கொண்டு, அரசாண்டு வந்தனர். ஆனால் இவ்விரு சபையும் தக்க

படி உருப் பெற்றிருக்கவில்லை. பிறகு ஒன்பதாம் நூற்றாண்டில் லைக்கர்கஸ் என்பவர் தோன்றிச் சில சீர்திருத்தங்களைச் செய்தனர். ஸ்பார்த்தர்களின் அரசியலைப்பற்றி மேற்கூறிய இரு விஷயங்களும் சரித்திரகாலத்திற்கு முற்பட்டவைகளாதலின், அவை எவர்க்கும் தெளிவாகத் தெரிந்தவைகளல்ல.

சரித்திர காலத்தில் ஸ்பார்த்தாவின் அரசியல்: மன்னர்கள்,

இனி, சரித்திரகாலத்திலுள்ள அதன் அரசியலைப்பற்றி விளக்கமாகக் கூறுதல் கூடும். ஸ்பார்த்தாவில் இரண்டு மன்னர்களிருந்தார்கள். அங்கு இரண்டு மன்னர் இருந்ததற்குக் காரணம் யாதெனில், ஆதி காலத்தில் இரண்டு ஜாதியினர் ஒருங்குகூடி ஸ்பார்த்தா என்னும் நகரராச்சியத்தை ஸ்தாபித்தார்கள். ஆதலின் அவ்விரு ஜாதியார்க்கும் ஒவ்வொரு வகுப்பினின்றும் ஒவ்வொரு மன்னனாக இரண்டு மன்னர்களை ஏற்படுத்த வேண்டியது இன்றியமையாததாயிற்று. இம்மன்னர்களின் அதிகாரம், முதலில் மிகுதியாயிருந்து, நாளடைவில் குன்றிப்போயிற்று. ஆயினும் சைனியங்களுக்குத் தலைவராகவிருந்து அவைகளை நடத்தும் அதிகார மட்டும் இவர்கள் வசத்திலேயேயிருந்தது. அங்ஙனமிருப்பினும் இவர்கள் போர்வீரர்களைத் தம் மனம்போல் முறை பிறழ்ந்து நடத்தாமல் இருக்கும்படி ஈப்பர்கள் என்னும் அதிகாரிகளை, இவர்களுக்கு மேற் பார்வை பார்ப்பவர்களாய், ஸ்பார்த்தர்கள் ஏற்படுத்தினார்கள். இம்மன்னர்கள் வேற்று நாடுகள் எவற்றோடும் தம்மிஷ்டம் போல் போர் தொடங்கலாம், இவர்கள் தம் நாட்டினரது



தெய்வ வழிபாடுகளை ஆதரிக்கும் தலைவர்களாகவுமிருந்தார்கள். அந்நாட்டுத் தனவந்தர்களுக்குள் இவர்களே முதன்மையானவர்கள். அன்றியும் பெற்றோரை இழந்த சீமாட்டிகளுக்குத் தகுந்த புருஷர்களை விவாகஞ் செய்விப்பதும், மக்களின் ஸ்வீகாரச் சடங்குகளுக்குத் தலைமை வகிப்பதும் ஆகிய இவ்வியவகாரங்களை இவர்கள் நடத்திவந்தார்கள். இவர்கள் செலுத்திய மற்ற அதிகாரங்களெல்லாம், சூரியன் தோன்றியபோது காணப்படாத இருளைப்போல், சரித்திரகாலம் தொடங்கியபோது காணப்பட்டில. ஆகையால் ஸ்பார்த்தாவின் ஆளுகையில் முக்கியமான எல்லா அதிகாரங்களையும் இழந்த இம்மன்னர்களை ஈப்பர்கள் பதுமைகள்போல் நடத்திவந்தார்கள். இனி நாம் மன்னர்களுக்குத் துணைபுரியுஞ் சிறு சபையைப் பற்றிச் சில விஷயங்களை கூறுவாம்.

ஜெரூஷியா,

இச்சபைக்கு ஜெரூஷியா என்று பெயர். இச்சபைக்கு மேற்கூறிய இரு மன்னர்களும், பிரபுக்கள் வமிசத்திலிருந்து (உயர்குடியிலிருந்து) தேர்ந்தெடுக்கப்பட்ட அறுபது வயதுள்ள இருபத்தெண்மரும், அங்கத்தினரா யிருந்தனர். இவர்களைப் பின்வருமாறு ஜனங்கள் தேர்ந்தெடுப்பார்கள். தாடி நரைத்தவரும் வயது முதிர்ந்தவருமாகிய ஸ்பார்த்தர்கள் ஒவ்வொருவராகப் பொதுஜனமகாசபைக்கு முன்பாக வருவார்கள். அங்ஙனம் வருபவர்களில், ஜனங்கள் யாரை அங்கத்தினராக ஏற்படுத்த விரும்புகிறார்களோ அவரைக் கண்டபொழுது மிகுதியாகக் கரகோஷமும் ஆரவாரமும் செய்வார்கள்; இவ்வாறே ஒவ்வொரு அங்கத்தினரையும் தேர்ந்தெடுப்பார்கள். அரிஸ்தாத்திலன் என்னும் கிரீஸ்

தேசத்து மேதாவியார் அங்கத்தினரைத் தேர்ந்தெடுப்பதில் இவர்கள் உபயோகித்துவந்த இம்முறை மிகவும் மதியீனமான தென்று கூறியுள்ளார். இச்சபைக்கு ஆதியில் மன்னர்கள் அக்கிராசனாதிபதிகளாய் வீற்றிருப்பது வழக்கம். பின்னர் அந்தஸ்தானத்தை ஈப்பர்கள் வகிக்கலாயினர். இச்சபை சட்டஞ்செய்தல், நியாயம்தீர்த்தல், விஷயங்களை ஊன்றிப்பார்த்தல், ஆளுதல் ஆகிய இவ்வதிகாரங்களையுடையது. ஆளுதலில் ஈப்பர்களுக்கு உதவிபுரிதலும், அரசர்கள் முறை பிறழ்ந்தாலும் குடிஜனங்கள் குற்றஞ்செய்தாலும் தண்டித்தலும் ஆகிய இக்கடமைகளும் அச்சபைக்கு உரியனவா யிருந்தன. ஸ்பார்த்தாவில் இதைத்தவிர மற்றொரு சபை உண்டென்று நாம் முன்பே குறித்துள்ளோம்.

அப்பெல்லா,

அந்தச் சபையின் பெயர் அப்பெல்லா என்பது. ஸ்பார்த்தாவில் வசிக்கும் டோரிய வமிசத்தைச் சார்ந்த எல்லோரும் முப்பது வயது அடைந்தவுடன் இப் பொதுஜனமகாசபைக்கு அங்கத்தினராவர். இச்சபைக்கு ஈப்பர்கள் அக்கிராசனாதிபதிகள். பொதுவிஷயங்களைப்பற்றி இச்சபையினங்கத்தினர்கள், ஆமோதிக்கின்றோம் அல்லது ஆமோதிக்கிலோம் என்று சொல்லலாமே யன்றி, அவற்றைப் பற்றி வாதித்தல்கூடாது. போர் செய்தல், சமாதானமாதல், வெளிநாட்டு விஷயங்களைக் கவனித்தல், ஈப்பர்கள் இதர ராஜாங்க அதிகாரிகள் ஜெரூஸியாவின் அங்கத்தினர் ஆகிய இவர்களை நியமித்தல், முதலிய அதிகாரங்கள் இச்சபைக்கு உண்டு. ஏதாவதொரு விஷயத்தில் இச்சபையினபிப்பிராயம் ஈப்பர்களினபிப்பிராயத்தினின்றும் மாறுபடின், இதனபிப்பிராயத்தின்படி ஈப்பர்கள் நடப்பதில்லை.



நாம் இதுவரையிலும் மன்னர்களைப்பற்றியும் சிறு சபையோரைப் பற்றியும் பெரிய சபையோரைப்பற்றியும் பேசி வந்தோம். இனி, ஸ்பார்த்தாவில் மன்னர்கள் முதலிய எல்லோரினும் மேலான அதிகாரம் செலுத்திவந்த ஈப்பர்களைப் பற்றிச் சிறிது புகல்வோம்.

ஈப்பர்.

ஸ்பார்த்தாவில் ஈப்பர்கள் என்னும் அதிகாரிகள் ஐவரிருந்தனர். டோரிய வமிசத்தைச் சார்ந்த ஸ்பார்த்தர்களில் எவரும் ஈப்பர்களாதல்கூடும். ஆதியில், அரசன் பட்டணத்தைவிட்டு வெளியில் சென்றிருக்குஞ் சமயத்தில் பொருளைப் பற்றிய வழக்குகளைத் தீர்ப்பதற்காக ஈப்பர்கள் ஏற்படுத்தப் பட்டார்கள். முதலில் மன்னர்களுக்கு உதவி புரிவது இவர்களுடைய கடமையா யிருந்தது. பின்பு மன்னர்களுக்கும் ஜனங்களுக்கும் சச்சரவு உண்டாக, ஈப்பர்கள் ஜனங்களோடு சேர்ந்துகொண்டு, மன்னர்களுடைய அதிகாரங்களை நாளடைவில் குறைத்துத் தாங்களே இராச்சியத்திற்குத் தலைவர்களாய், ஜனங்களின் கஷ்டங்களைப்போக்கி, அவர்களுக்குப் பல்வகையிலும் உதவிபுரிந்தார்கள். ஈப்பர்களின் அதிகாரங்கள் பலவகையாயிருந்தன. இவர்கள் வேண்டியபோது ஜெரூஸியாவையேனும் அப்பெல்லாவையேனும் சபை கூட்டச் செய்வார்கள்; அச்சபைகளில் தாங்களே அக்கிராசனாதிபதிகளாக வீற்றிருப்பார்கள். இவர்கள் இவ்விரு சபைகளின் தீர்மானங்களின்படி அரசாளுவார்கள்; பிறதேசத்தாரின் தூதர்களை வரவேற்பார்கள்; அவர்கள் கொண்டுவந்த செய்திகளை ஜெரூஸியாவிற்குத் தெரிவிப்பார்கள். சிறு சபையிலும் பெரு சபையிலும் புதிய விஷயம் எதையும் ஈப்பர்களே முதலில்

பிரேரேபிப்பார்கள். சர்வ ஜனங்களின் பொருள், சம்பந்தமான வழக்குகளை இவர்கள் தீர்ப்பார்கள்; பெரியோக்கீ, ஹெலத்தர் முதலியவர்களில் குற்றவாளிகளை விசாரித்துத் தண்டிக்கும் அதிகாரமும் பெற்றிருந்தனர்; ஸ்பார்த்தர்களின் ஒழுக்கங்களையும் கவனித்து வந்தார்கள். மன்னர்களிடத்தில் ஏதேனும் தவறு காணின், அவர்களை ஜெரூஷியாவின்முன் நிறுத்திக் குற்றஞ்சாட்டுதலும், சிறைச்சாலையில் அடைத்தலும் ஆகிய இவ்வதிகாரங்களை எப்பர்கள் பெற்றிருந்தார்கள். முற்கூறிய பெலப்பொனீஸ் மாகாணச் சங்கத்திலும் அவர்கள் அதிகாரஞ் செலுத்துவார்கள்.

ஸ்பார்த்தாவின் அரசியலைப் பற்றி முடிவான கொள்கை யாது?

இவ்வாறான ஆட்சியைக் குடி அரசு என்று சொல்வதா, பிரபுக்களின் ஆளுகை என்று சொல்வதா, என்னென்று கூறுவது? அரசன் அநேகமாய் எல்லா அதிகாரங்களையு மிழந்ததனால், இவ்வாட்சி மன்னரின் ஆட்சி அல்லவென நாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணரலாம்; எப்பர்கள் இராச்சியத்திற்குத் தலைவர்களாய் இருப்பதால், இது பிரபுக்களின் அரசு என்று ஐயமறச் சொல்வதற் கியலாது; சாமானியமான ஜனங்கள் உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்தார்களேயன்றி, தாங்களே நேரில் அரசாளுதலில்லையாதலால், இதைக் குடியரசென்று சொல்வதற்கும் தக்க காரணங்களில. ஆதலின் பிரபுக்களும் குடிகளும் ஆகிய இருதிறத்தினரும் ஒருங்குசேர்ந்து ஆண்டுவந்தனர் என்ற கொள்கையே யாவராலும் அங்கீகரிக்கத்தக்கது.



## 8. காறிந்த் ராச்சியத்தின் வரலாறு.

காறிந்த் ராச்சியத்தின் வரலாறு.

இனி, காறிந்த் என்னும் நகரராச்சியத்தின் சரிதத்தைச் சுருக்கிக் கூறுவாம். இந்நகரின் பிரபுக்கள் இந்நகரை கடலுக்கோர் நாயகம்போல் விளங்கும்படி செய்தார்கள். சிறிதுகாலம் பிரபுக்களின் அரசாட்சி இந்நகருக்கு நன்மை பயந்தது. பின்னர் பிரபுக்கள் ஜனங்களைத் துன்புறுத்த, நாட்டில் குழப்பம் உண்டாயிற்று. இச்சமயத்தில்தான் நாடு வல்லரசர்களின் வசத்தில் சேர்ந்தது. அக்காலத்தில் லேப்டா என்னும் உயர்குலத் துதித்த சீமாட்டி ஒருத்தி யிருந்தாள். அவள் ஒருகால் முடமாயிருந்தபடியால் தன் அந்தஸ்திற் கேற்ற மணாளனைப் பிரபுக்கள் குலத்திற் பெற்றிலள். ஆதலின் சாமானிய குலத்தில் பிறந்தானொருவனை மணந்துகொண்டாள். பிள்ளைப்பேறின்மையால் மனம் வருந்திய இக்காதலர்கள், டெல்பியின் தெய்வத்தை வணங்கித் தங்கட்கு மக்கட்பேறு உளதோ, இலதோ, எனக் கேட்டார்கள். அத்தெய்வம், அவர்கட்கு ஒரு புத்திரன் தோன்றுவானென்றும், அப்புத்திரன் காறிந்தின் பிரபுக்களை அதோகதிசெய்துவிடுவானென்றும், குறிகாறியின் மூலமாகத் தெரிவித்தது. அப்படியே சிறிதுநாள்சென்றபின், அவர்கட்கு ஒரு மைந்தன் உதித்தனன். டெல்பியின் தெய்வம் கூறியதை அறிந்த பிரபுக்கள், அக்குழந்தையை வளரவிடாமல் அழித்தல் வேண்டுமென்று உறுதிகொண்டு, யமதூதர்கள் போன்ற கொலையாளிகள் பதின்மரை, லேப்டாவின் அகத்திற் கனுப்பினார்கள். அச்சமயம் லேப்டாவின் நாயகன் வெளிச்சென்றிருந்தான். அவ்

விடமிருந்த லேப்டாவை அவளது குழந்தையைத் தங்
கட்குக் காண்பிக்கும்படி அக்கொலையாளிகள் கேட்ட
னர். அவர்களின் தீக்கருத்தை உணராத அவள் அப்
பதின்மர்களில் ஒருவனிடத்துத் தன் குழந்தை
யைக் கொடுக்க, அவன், அதைத் தரையில் மோதப்
போகும் தருணத்தில் அக்குழந்தை தெய்வாதீன
மாய்த் தன்னை நோக்கிப் புன்முறுவல் செய்தமை
யின், தன் எண்ணத்தை நிறைவேற்றச் சக்தியற்றவனா
யினன். பிறகு அவன் தன்னுடன் வந்தவர்களில் மற்
றொருவனிடம் அக்குழந்தையைக் கொடுக்க, அவனும்
திடீரென்று கருணைகொண்டு அதைக் கொல்லாமல்
மற்றொரு கொலையாளியினிடம் ஈந்தனன். இங்ஙனம்
அப் பதின்மரும், அக்குழந்தையைக் கொல்லாமல்
அதன் தாயிடம் ஒப்புவித்து, வெளியேறி, வந்த காரி
யத்தை நிறைவேற்றாமையினால், ஒருவர் மீது ஒருவர்
குற்றஞ்சாட்டினர். பின்னர் எல்லோரும் ஒன்று
கூடிக் கொல்வதென உறுதிகொண்டு வீட்டினுள்
நுழைந்தனர். ஆனால் இவர்கள் சம்பாஷணையை
உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த லேப்டா என்பவள்
தன் குழந்தையை ஒரு பேழைக்குள் ஒளித்துவைத்
தனள். அம்மனிதர்கள், குழந்தையை வீட்டினுள்
பலவிடங்களில் தேடியும் காணாமையின், மீண்டும்
போய்ப் பிரபுக்களுக்குத் தாங்கள் குழந்தையைக்
கொன்றுவிட்டதாக ஒரு பொய் கூறினார்கள். அக்
குழந்தை, இவ்வபாயத்தினின்றும் தப்பி, சைப்ஸி
லன் என்னும் பெயர்பூண்டு, வளர்ந்து, காளைப்பரு
வம் வந்தவுடன் பிரபுக்களை வென்று, அவர்களை நாட்
டைவிட்டுத் துரத்தி, அவர்கள் சொத்தையும் இராச்சி
யத்தையும் கைப்பற்றிக் காரிந்த் நகரத்தில் வல்லரசை



வல்லரசு ஸ்தாபனம்.

ஸ்தாபித்தான். சைப்ஸிலன் என்ப
வனுடைய ஆட்சியைப் பற்றி நாம்
மிகுதியாக அறிந்திலோம். இவனுக்
குப்பின் அரியணை யேறிய இவனுடைய குமாரன்

பெரியாண்டர்.

பெரியாண்டர் என்பவன் காலத்தில்
நடந்த விஷயங்கள் தெற்றென
விளங்குகின்றன. கிரீஸ் மேற்பாகத்தில், காரிந்தியர்
கள் பண்டைக்காலத்துக் குடியேறின கார்சைரா
எனும் நகரம் ஒன்றுளது. அக்காலமுதல், கார்சைரா
என்னும் பட்டணம் தன் தாய்நாடாகிய காரிந்
தைவிடச் செல்வத்தில் மேம்பாடுற்றிருந்தது. ஆத
லின் பொறாமைகொண்ட காரிந்தியர்கள் அதைப்
பலமுறை தாக்கிப் பின்னிட்டனர். பின்னர் அவர்கள்
பெரியாண்டரது உதவியைக்கொண்டு அப்பட்டணத்
தை வென்று தங்களரசாட்சிக்குட்படுத்தினர். அவ்
வெற்றியினால் காரிந்த் நகர ராச்சியத்தின் செல்வாக்கு
கிரீஸின் மேற்பாகத்திற் பரவியது. பெரியாண்
டர், வாணிகமே செல்வம் பெருக்கமுறுதற்குக் கார
ணமென்றும், அவ்வாணிகத்திற்கு இன்றியமையாது
வேண்டப்படுவது அயல்நாட்டாரின் நட்பு என்றும்
தெளிந்து, ஆசியாமைனரிலுள்ள மைலீட்டஸை
ஆண்ட திராஸிபுலன் என்னும் வல்லரசனோடும் எகிப்
து தேசாதிபதியோடும் நண்பு பூண்டனன். இவன்
காலத்தில் காரிந்த் ராச்சியத்தில் செல்வமும் நாக
ரிகமும் ஒருங்கே செழிப்புற்றிருந்தன. இவன் கல்வி
யின் அருமை பெருமைகளை நன்கு அறிந்தவன். கற்ற
அறிஞர்க்கு வேண்டுவன புரிந்து பாதுகாத்தலும்,
அவர்கள் இயற்றிடும் நூல்களை நன்கு மதித்து ஏற்றுப்
பரிசளித்தலும், கலைக்கழகங்களை ஏற்படுத்தலும் கல்வி

அபிவிர்த்திக்கரம் வழியெனக் கைக்கொண்டிருந்தான். டிதிராம்ப் எனும் ஒரு நூதனமான செய்யுள் நடை இவன் காலத்தில் உண்டாக்கப்பட்டது. சிற்ப சாஸ்திரம் விருத்தியடைந்தது. தன் பிரஜைகள் அடிமைகளை மிகுதியாக வைத்துக் கொள்ளுதலும், வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்தலும், "சோம்பலாயிருத்தலும், கிராமங்களிலிருப்போர் அவற்றை விட்டுப் பட்டணத்தில் வந்து வசித்தலும் ஆகிய இவைகள் சட்ட விரோதங்களென்று பகிரங்கப்படுத்தினான். இவன், இந்நன்மைகளைத் தன் நாட்டிற்குச் செய்தும், சந்துஷ்டியடைந்தானில்லை. இவனுக்கு மனக்கவலைகள் பெருகின. இவன் தன் மாமனாரைச் சிறைவைத்தான். தன் காதற்கிழத்தியைக் கத்திக் கிரையாக்கினான். இதையறிந்த அவனது இளையகுமாரன் தன் தந்தையோடு பேசுதலொழிந்தான். அவ்வாறிருத்தலைக் கண்ட பெரியாண்டர், "இவன் தன் தாயை நாம் கொன்ற செய்தியை உணர்ந்துகொண்டுதான் இம்மாறுபாடடைந்திருக்கின்றான்; இவன் இந்நாட்டிலேயே இருப்பின் இவனுக்கு நாளுக்குநாள் நம்மீது கோபமிகும்; ஆகலின் இவனை வெளிநாட்டிற்கு அனுப்பிவிட வேண்டும்" என்றெண்ணிக் கார்கைராவுக்கு இவனை அதிபதியாக அனுப்பிவிட்டான். தன் இறுதிக்காலத்தில் பெரியாண்டர் மிகவும் குரூரமுள்ளவனாயினான். ஒருசமயம் தன்னால் கொல்லப்பட்ட தன்மனைவியின் ஆவேசம் ஆடையின்றிக் குளிரினால் வருந்துவதாக இவன் முன் தோன்றிச் சொன்னதாகவும், அதனால் இவன் காரிந்திலுள்ள ஸ்திரீகளின் ஆடைகளைக் களைந்து நெருப்புக் கிரையாக்கினால் அவை தன் மனைவியைப் போய்ச் சேரும் எனக் கருதி அவ்வாறே புரிந்தானென்றும்,



ஒரு கன்னபரம்பரை வழங்கி வருகின்றது. ஆனால் இவன் உண்மையாகக் கடினசித்தை உள்ளவனா அல்லனா என்று அறிதற்குத் தக்க ஆதாரங்களில்லை. ஒருகால் இவனுக்கு விரோதிகளாயிருந்த காரிந்தின் பிரபுக்கள் இவனைப்பற்றிக் கேவலமாக எழுதியிருத்தல் கூடும். பெரியாண்டர் காலத்திற்குப்பின் சாமித்திக்சன் என்பான் காரிந்த் இராச்சியத்திற்குத் தலைவனாயினான். இவன் சிறிதுகாலம் அரசாண்டபின் கொல்லப்பட்டான். இவனுக்குப்பின் பிரபுக்களே, மீண்டும் இராச்சியத்தின் ஆளுகையைக் கைக்கொண்டு, சாமானிய ஜனங்களுக்கு வேண்டிய உரிமைகளைக் கொடுத்து, நீதியாக நாட்டைப் பரிபாலித்து வந்தனர்.

வல்லரசு ஒழிதல்.

---

## 9. சிக்கியன் ராச்சியத்தின் சரித்திரம்.

இனி சிக்கியன் எனும் நகர ராச்சியத்தின் வரலாற்றை உரைப்போம். சமையற்றொழில் செய்துகொண்டிருந்தவனாகிய ஆர்த்தகோரன் என்பவன் இந்நகரில் வல்லரசு ஸ்தாபித்தான். அவன், இந் நகரிலுள்ள பிரபுக்களின் ஆட்சியை ஒழித்து, அதற்கு அதிபதியாய்ச் சிறிது காலம் அரசியற்றினான். அவனுக்கு அப்பால் அவனுடைய மைந்தன் க்ளையஸ்தினன் என்பவன் சிங்காதனமேறினான். பலஆண்டுகளாக, சிக்கியன் ஆர்காஸ் எனு மற்றொரு ராச்சியத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தது. இவன் ஆர்கைவர்களை வென்று தன் நாட்டின் சுதந்தரத்தை நிலைநிறுத்தினான். இது நிற்க,

சிக்கியன் எனும் ராச்சியத்தில் வல்லரசு ஸ்தாபனம்.

க்ளையஸ்தினன்.

கிரீஸின் மத்திய பாகத்தில் ஒரு போர் நிகழ்ந்தது. டெல்பி யென்னும் ஊர் கிரிஸா எனும் துறைமுகப் பட்டணத்தருகிலிருந்தது. டெல்பியின் தெய்வத்தைத் தொழுதேத்துவதற்காகத் தென்றிசையிலிருந்து போகும் பிரயாணிகள் கிரிஸாவின் மார்க்கமாகப் போதல் வேண்டும். அங்ஙனஞ் செல்லும் பிரயாணிகளைக் கிரிஸர்கள் சிறு தொகை கட்டணமாகச் செலுத்தும்படி நிர்ப்பந்தப்படுத்திவந்தனர். இதனால் டெல்பியர்களுக்குக் கோபம் மேலிட்டமையின் அவர்கள் கிரிஸர்களோடு சண்டை தொடங்கினர். அப்பொழுது சிக்கிய நாட்டதிபதியும் மகா வீரனுமாகிய க்ளையஸ்தினன் டெல்பியர்கள் பக்கம்சேர்ந்து, கிரிஸர்களை வென்றிகொண்டு, அவர்களையும் அவர்கள் பட்டணத்தையும் நாசஞ்செய்தான். பின்னர் டெல்பியின் தெய்வத்திற்காக ஒரு திருவிழாவையும், அத்திருவிழாவின் காலத்தில் தேகப்பயிற்சியில் தேர்ந்தவர்கள் தங்கள் வன்மையைக் காட்டுதற்குரிய பல்வகை விளையாட்டுகளையும் ஏற்படுத்தினான்.

இவ்விதமாகப் புகழெய்திய க்ளையஸ்தினனுக்கு அகரிஸ்தா எனும் புத்திரி ஒருத்தி இருந்தாள்.

அகரிஸ்தா என்பவளுடைய விவாக நிமித்தம் செய்த ஏற்பாடுகள்.

க்ளையஸ்தினன், ஆலிம்பியா எனுமிடத்தில் ஒரு முறை உற்சவம் நடந்தபொழுது, தன் புதல்வியைக் கல்வி, ஒழுக்கம், சொல்வன்மை, ஒப்புரவு, அழகு முதலிய பல விஷயங்களிலும் சிறந்தோன் ஒருவனுக்குக் கடிமணஞ் செய்துகொடுக்க விரும்பியிருப்பதாகவும், அவ்வித லட்சணங்கள் பொருந்தியவர்கள் யாவரும் சிக்கியன் எனும் நகரத்திற்கு வருதல் வேண்டுமென்றும், அங்கு வந்திருந்



தோர்களுக்குத் தெரிவித்தான். அவ்வாறே கிரீஸ் தேசத்தின் எல்லா இடங்களினுமிருந்து பலவீரர்களும் அழகு வாய்ந்த அநேக வாலிபர்களும் சிக்கியனுக்குப் புறப்பட்டுவந்தார்கள். க்ளையஸ்தினன் ஓராண்டு வரையிலும் அவர்களை உபசரித்துவந்தனன். அவர்களில் ஹிப்போக்கிளைடன் மெகக்கிளன் என்னும் இரு அதேனியர்கள் மற்றெல்லோரைக்காட்டிலும் அதிக சாதுரியமுடையவர்களாகவும், நாகரிகமுடையவர்களாகவும், பல கலைகளிலும் வல்லவர்களாகவும், அங்கு வந்தவர்களின் கூட்டத்திற்கு இரு சிரோரத்தினங்கள்போன்றும் விளங்கினர். அவ்வாண்டின் கடைசித் தினத்தில் ஹிப்போக்கிளைடன், தன்னுடைய வித்தையைக் காண்பித்துக் க்ளையஸ்தினனை மகிழ்விக்கவேண்டுமென்று ஊக்கங்கொண்டவனாய், மிதமிஞ்சிச் சாராயம் பருகினதினாலோ, அன்றித் தான் அகரிஸ்தாவை மணஞ்செய்து கொள்வது நிச்சயம் என்ற களிப்பின் மிகுதியினாலோ, ஒரு மேசையை வரவழைத்து, அதின்மேலேறிக் கூத்தாடத் தொடங்கினான். அப்பொழுது க்ளையஸ்தினன் இவனது மதியீனச் செயலைக் கண்டு இன்னும் யாது செய்கின்றனனோ பார்ப்போம் எனும் எண்ணத்தால் அவ்விடத்தில் ஒன்றும் சொல்லாமல் மௌனமுற்றிருந்தனன். பிறகு ஹிப்போக்கிளைடன் மேசையின் மேல் தலை கீழாகவும் கால் மேலாகவும் நின்றுகொண்டு கூத்தாடினன். அவ்வாச்சரியச் செய்கையை நோக்கின க்ளையஸ்தினன் 'நீ அகரிஸ்தாவை உன் மதியீனக் கூத்தினால் இழந்து விட்டாய்' என்று உரக்கக் கூவினான். ஹிப்போக்கிளைடன் 'நான் அதை ஒரு பொருட்டாக மதியேன்' என்று மறுமொழி பகர்ந்தனன்.

க்ளேயஸ்தினன் காலத்திற்குப் பின்னர், பிரபுக்கள் சிக்கியன் நகரில் மீளவும் ஆளத்தொடங்கினர்.

## 10. மிகாரா ராச்சியம்.

*மிகாரா நாட்டில் வல்லரசு ஸ்தாபனம்.*

இனி, மிகாரா எனும் மற்றொரு நகர ராச்சியத்தின் வரலாற்றைச் சுருக்கமாக வரைவோம். கெசவுகாரர்களுக்கு உறைவிடமான இந்நகரின் வாணிகத்தால் பிரபுக்கள் பெருஞ் செல்வத்தையடைந்தனர்; இங்ஙனம் செல்வ மிகுதியினாலும் தாங்களே ஆட்சிபுரிந்துவந்ததனாலுஞ் செருக்கடைந்து தம் மனம் போனபடி குடியானவர்களை வருத்தினார்கள். குடியானவர்களின் அதிர்ஷ்டவசத்தால் தியாஜினன் என்பவர் அவர்களின் ரக்ஷகராகத் தோன்றிப் பிரபுக்களின் வன்மையை யொழித்து நாட்டிற்குத் தலைவராயினர். இவர் இந்நகரைச் சின்னாளே ஆண்டனர். இவருக்குப் பின்னர் பிரபுக்களே மீண்டும் அரசுரிமை பெற்றனர். ஆயினும், பிரபுக்கள் முன்போலத் தமது இஷ்டப்படி ஆளுதல் இயலாதாயிற்று. சாமானிய ஜனங்களும் ஆட்சியில் உரிமை யெய்துங் காலம் நெருங்கிவிட்டது. பிரபுக்களுக்கும் சாமானிய ஜனங்களுக்கும் இராசாங்கத்தில் தத்தம் உரிமைகளைப்பற்றிச் சச்சரவு விளைந்தது. ஆதலின் அரசாட்சியில் சுற்றுப்புறத்துக் கிராமங்களிலுள்ள குடிகள் சில உரிமைகளைப் பெற்றனர். குடியானவர்களின் நிலைமை மேம்பாடடைந்தது. அவர்கள் பொதுஜனமகாசபைக்கு அங்கத்தினராகும் உரிமையை யடைந்தனர்; மிகாரா ஆதிகாலத்தில் மிக

*தியாஜினன்.*



செழிப்புற்றிருந்தது. ஆயினும் கி. மு. 7-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், இதற்கு உரியதான சலமிஸ் எனும் முக்கியமான தீவை அதேனியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள்; அதேனியர்கள் முன்னுக்கு வரத் தலைப்பட்டனர்; இவ்விரு முகாந்திரங்களினால் மிகாரா க்ஷீணத்தை யடைந்தது.

*மிகாராவின் க்ஷீணதசை.*

## 11. அதேனா ராச்சியத்தின் வரலாறு.

### பிரிவு. 1. அட்டிக்கா நாட்டின் ஐக்கியம்.

இதுகாறும் பெலப்பொனீஸிலுள்ள வெகுவாய் எல்லா முக்கிய நகரங்களைப்பற்றியும் சொல்லினோம். நாம் இனி அதேனா நகரின் வரலாற்றை விவரமுற விளக்குதும். நாம் அதேனா நகரின் சரிதத்தை அறிந்து கோடல் மிகவும் இன்றியமையாதது. இந்நகரம் சங்கீதம், கவி, சிற்பம், நாடகம், சித்திரம் முதலிய பல கலைகளுக்கும், சொல்வன்மைக்கும், நாகரிகத்திற்கும் தாயகமாயிருந்து, அவற்றைப் போற்றி வளர்த்து, மகோன்னத நிலைக்குக் கொண்டுவந்தது. அதேனா நகரம் இங்ஙனம் இவற்றைப் போற்றிவந்ததனால் உலகத்திற்கே ஒப்பரியதோர் உதவி செய்ததாயிற்று. மேற்கண்ட கலைகள் முதலியவற்றைக் கிரீஸ் தேசம் முழுவதும் பரவச்செய்தது அதேனா நகரேயாம். தற்காலத்தவரும் வியப்புறும்படி மிகச் சிறந்த நாகரிகத்தை அதேனா நகரம் விருத்திசெய்தது. குடியரசை உலகில் முதன்முதலில் தாபித்ததும் அதை இடங்கள்தோறும் பர

*அதேனா நகரத்தால் உலகிற்கு உண்டான நன்மை.*

வச்செய்ததும் இந்நகரேயாகும். இந்நகரினது இராச்சியதந்திர முறையையும் பரிபாலன முறையையும் இக்காலத்திலுள்ள இராச்சியதாரிய நிபுணர்கள் மிகவும் சிறந்தனவெனக் கருதித் தத்தம் இராச்சியமுறைகளில் அவற்றையே பின்பற்றிவருகிறார்கள்.

அட்டிக்கா நாட்டின் இயற்கை அமைப்பு.

இனி, இத்தகைய அதேன நகரைத் தன்பாற் கொண்டுள்ள அட்டிக்கா நாட்டின் இயற்கையமைப்பைப் பற்றிக் கூறுவாம். அட்டிக்கா நாடு அறுபது மைல் நீளமும் இருபத்தாறு மைல் அகலமுமாகிய விஸ்தீரணத்தையுடையது. இது நிலவளமுடையதன்று. இந்நிலம் இங்ஙனம் வளமற்றிருந்தமையின், வருந்தி உழைத்தலும் ஒவ்வொரு காரியத்திற்கும் பிறருதவியை எதிர்பாராது தாமே தம் சுய அறிவைக்கொண்டு காரியத்தைச் செய்துமுடித்தலுமாகிய இக்குணங்கள் அதேனியர்கள்பால் வளர்ந்தன. அட்டிக்கா நாட்டின் நிலவளமின்மை அதேனியர்கள் பிற்காலத்தில் உன்னத நிலைமை அடைதற்கு ஒரு முக்கிய காரணமாயிருந்தது. அட்டிக்காநாட்டின் நிலத்தோற்றம் அழகு வாய்ந்து வசீகரமுள்ளதாயிருந்தது. அவ்விதமிருந்தமையின் அதேனியர்களுக்கு அழகின் அருமையை அறிந்துகொள்ளும் சக்தி உண்டாயிற்று. இதனாற்றான், அதேனியர்கள் சிற்பம், சித்திரம் முதலிய கலைகளிலும், மற்றுமுள்ள பல வித்தைகளிலும் பாண்டித்தியமுடையவராயினர். அட்டிக்கா நாட்டின் சீதோஷ்ணநிலை மிதமானது. அதன் கடற்கரை மிகவும் நீண்டு அநேக துறைமுகங்களையும் குடாக்கடல்களையும் உடையதாயிருக்கின்றது. இவ்விதமான காரணங்களினால் அதேன ராச்சியம் கடல் ஏகாதிபத்தியத்



தைப் பெறுதற்குரிய பாக்கியம் வாய்ந்ததாயிருந்தது. அட்டிக்கா நாடு இருபக்கங்களிற் கடலாலும் ஒரு பக்கத்தில் மலைகளாலும் சூழப்பட்ட ஒரு முக்கோண வடிவமானது. இந்நாட்டின் இவ்வியற்கையமைப்பே அதேனியருடைய சரித்திரம் மிகச் சிறந்த மதிப்பிற்கு இடனாகும்படி செய்தது.

அட்டிக்கா நாட்டின் குடிகளின் பகுப்பு.

அட்டிக்காவின் குடிகள் எல்லோரும் அநேகமாய் அயோனியர் எனும் ஜாதியாரைச் சேர்ந்தவர்களாயிருப்பினும், வேறு பல ஜாதியார்களும் நானாவிடங்களிலிருந்து இந்நாட்டில் பண்டைக்காலத்திற் குடியேறியிருக்கலாம். ஆதலின் சரித்திர காலத்து அதேனியர்கள் அயோனியர்களும் மற்றும் பலஜாதியினரும் ஐக்கியமுற்றதினால் உண்டானவர்கள் என்று சொல்லுதல் பொருந்தும். பல ஜாதியினர் ஒன்று கூடிக் கலப்புற்றது அதேனியர் சிறந்த நிலைமையை அடைதற்குரிய முக்கிய காரணங்களுள் ஒன்றாகுமென்ப. அங்ஙனம் கலப்புள்ளவர்களாயினும், அவர்களனைவரும் அயோனியரென்னுமொரே ஜாதியினராகவே வழங்கப்பட்டார்கள். இவ்வயோனியர்கள் நான்கு வகுப்பினராகப் பிரிக்கப்படுவார்கள். ஒவ்வொருவகுப்பும் மூன்று கூட்டங்களையுடையது. ஒவ்வொரு கூட்டமும் முப்பது பெரிய குடும்பங்கள் கூடியது. ஒவ்வொரு பெரிய குடும்பமும் சகோத்திரமான முப்பது சிறிய குடும்பங்கள் கூடியது, அன்றியும் அட்டிக்கர்கள், பிரபுக்கள், வணிகர்கள், குடியானவர்கள் என்றும் பிரிக்கப்பட்டிருந்தனர். இம்மூன்று வகுப்பினர்களும் அதேன நகர ராச்சியத்தில் பொதுஜனமகாசபையினங்கத்தினராதற்கு உரிய

வர்கள். மேலும் தங்கட்குச் சொந்தநில மின்றிப் பிர-
புக்களின் நிலங்களில் வேலைசெய்யும் மற்றொருபகுப்பி
னரு மிருந்தனர். இவர்கள் நிலத்தைப் பயிரிட்டு
அதில் விளையும் பொருள்களில் ஆறில் ஐந்து பங்கைத்
தம் எஜமானர்களுக்குச் செலுத்துதல் வேண்டும்;
எஞ்சி நின்ற ஒரு பங்கைத் தம் உபயோகத்திற்கு
வைத்துக்கொள்வார்கள். மேலும் நான்கு லட்சம்
அடிமைகள் அதேனா அரசாட்சியின் உரிமைகளைப்
பெற்றுள்ள ஜனங்களின் சுகத்திற்காகப் பாடுபட்டு
வந்தனர். எல்லா வேலைகளையும் அதேனியர்களுக்கு
இவ்வடிமைகள் செய்து வந்தனர். இதனால் வேறு
கவலை ஒன்றுமின்றி அதேனியர்கள் தமது தேசத்திற்
காக உழைத்துவந்தார்கள்; தம் வீட்டின் வேலைகளை
அடிமைகள் பார்த்து வந்ததனால், தம் தேயவூழியத்
தைச் செய்ய அவர்களுக்கு அவகாசமேற்பட்டது.
மேலும், நாற்பத்தையாயிரம் வேற்றுநாட்டுக் குடி
கள் அதேனா நகரத்தைத் தமது நிலையான உறைவிடமா
கச் செய்துகொண்டனர். வரியை சௌகரியமாக
வசூல் செய்வதற்காக அட்டிக்கா நாடு நாற்பத்தெட்டு
ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டது.

அதேனா நகர ராச்சியத்தின் உற்பத்தி.

ஆதியில், பல சிறிய சுயஆட்சிபெற்ற இராச்சியங்
கள் அட்டிக்கா நாட்டின்கண் இருந்தன. இவ்விராச்சி
யங்களுள் செக்கிரோப்பியா எனு மிராச்சியமே முதன்
மையானது. அவ்விராச்சியத்தில் செக்கிரோப்பியர்கள்
எனும் வன்மையுள்ள ஓர் ஜாதியார்
வாழ்ந்துவந்தனர். அவ்விடத்தில்
பகைவர் தாக்குதற்கரிய அக்கிராப்
பொலிஸ் எனும் ஓர் கோட்டை யுண்டு. இக்கோட்
டையை உறைவிடமாகக்கொண்டு செக்கிரோப்பன் என்



னும் வேந்தன் செக்கிரோப்பியாவைச் சிறிதுகாலம்
ஆண்டனன். இதுகாறும் மதிற்சுவரில்லாத கிராமாந்
தரங்களில் வாழ்ந்துவந்த அட்டிக்கர்களை, கடற்
கொள்ளைக்காரர்கள் பகைவர்கள் ஆகிய இவர்களா
லுண்டாகும் இன்னலினின்றும் நீங்கும்படி, ஒன்று
சேர்த்துப் பன்னிரண்டு பட்டணங்களில் வசிக்கும்
படி திட்டம் பண்ணினவன் செக்கிரோப்பன் அர
சனேயாவான். இவன் ஆட்சி புரியும் நாளில், பாஸி
டன் அதேனே என்னும் இரு தேவதைகளில் ஒவ்வொ
ருவரும் செக்கிரோப்பியாவைத் தத்தம் சுவாதீனஞ்
செய்துகொள்ள வேண்டுமெனத் தனித்தனி சூழ்ச்சி
செய்தனர். பாஸிடன் அக்கிராப்பொலிஸிற் கருகில்
ஒரு உப்புநீரூற்றை யுண்டாக்கினர்; அதேனே ஒலிவு
மர மொன்றை அவ்வூற்றுக்கருகி லுண்டாக்கினள்.
முடிவில் கிரேக்கர்களின் தெய்வங்கள் அதேனே தெய்
வத்திற்கே செக்கிரோப்பியாநாடு சுவாதீனமான
தென்று தீர்மானித்தனர். ஆதலின், அதேனே அக்
காலமுதல் செக்கிரோப்பியா நாட்டைத் தன் ஆதர
வில் வைத்துக்கொண்டனள். ஆகையினால், அதுமுதற்
கொண்டு செக்கிரோப்பியா எனு நாடு அதேனா நகர
மாக மாறிவிட்டது. செக்கிரோப்பியர்கள், அதேனி
யர்கள் என்று, வழங்கப்பட்டுவந்தனர். மேற்சொன்ன
பன்னிரண்டு பட்டணங்களி லொன்றாகிய அதேனா
நகரம் அட்டிக்காவின் இதர பதினொரு பட்டணங்களை
யும்வென்று தன் ஆதீனத்திற் கூட்படும்படி செய்தது.
ஆயினும் ஒவ்வொரு பட்டணத்திலும் ஒரு அரசன்
ஆட்சி புரிந்துகொண்டுவந்தனன். முடிவில் தீஸியஸ்
எனும் வேந்தன் அதேனா நகரிற் கதிபதியாயினான்.
அவன் அட்டிக்காவிலுள்ள மற்ற இராச்சியங்களின்

சபைகளையும் துரைத்தனங்களையும் கலைத்து, அட்டிக்கர்கள்யாவரையும் அதேனா நகரையே தம் நகராகவும் அதேனாவின் சபையையும் துரைத்தனத்தையும் தம் சபையும் துரைத்தனமுமாகவும் கருதும்படி செய்தனன். இவ்விதமாக அட்டிக்காவிலுள்ள பன்னிரண்டு இராச்சியங்களும் ஒன்றுகூடி அதேனா எனும் நகரராச்சியமாக மாறிவிட்டன. இவ்விதமாய் உண்டான இராச்சியத்தில், முன்னர்த் தனியாக அதேனியர்களென்று கூறப்பட்டவர்கள் உள்பட அட்டிக்கர்கள் யாவரும் சமஉரிமைகளைப் பெற்றார்கள். அட்டிக்கர்களுக்கும் அதேனியர்களுக்கும் பேதம் சிறிதும் கிடையாது. அட்டிக்கா முழுவதும் அதேனாவுடன் கலந்துவிட்டமையின், அதேனா அட்டிக்கா எனுமிரு பதங்களும் அதேனா எனும் நகரராச்சியத்தையே குறிக்கலாயின.

## பிரிவு. 2. அதேனா ராச்சியத்தின் அரசியல்.

தீஸியன் காலத்திற்குப்பின்பு அநேக மன்னர்கள் அதேனா ராச்சியத்தை ஆண்டனர். இவ்வண்ணம் ஆண்ட மன்னர் மரபில் இறுதியில் கோட்டிரன் என்பானுதித்தனன். இவன் காலத்தில் ஒரு சமயம் பெலொப்பொனீஸிலிருந்து டோரியர் அதேனா மீது படையெடுத்தனர். எக்கட்சியினது தளகர்த்தன் பகைவரால் கொல்லப் படுகிறானோ அக்கட்சி வெற்றி பெறுமென்று டெல்பியின் தெய்வங் கூறினதாகக் கோட்டிரன் காதிற்கெட்டியது. உடனே தன் அரசகோலத்தை நீக்கி, கோட்டிரன், ஒரிடையன்போல வேடம் பூண்டு, டோரியரின் கூடா

*அதேனாவில் மன்னர் அரசு:*

*கோட்டிரன்.*



ரத்தின் முன்சென்று, தானே டோரியர் கூட்டத்திற் சிலரை வலிதிற் போர்க்கிழுத்து, அங்குப் போரில் தன் உயிரைத் துறந்தான். இதன் பின்பு அதேனியர்கள், தன் தேயத்தின் நன்மைக்காகத் தன் உயிரையே பலி கொடுத்த இம்மன்னவனைப்போன்ற உத்தமகுண வேந்தர்கள் இனித் தோன்றுதல் முயற்கொம்பேயாகுமாதலின், இனி மன்னராளுகையே ஒழித்துவிட வேண்டுமெனக் கருதி, அங்ஙனமே புரிந்தனர். அதேனாவில் மன்னரது அரசுபோயினபின், பிரபுக்கள் தமது ஆளுகையைத் தாபித்தனர். பிரபுக்கள் அரசு பின்வருமாறு ஏற்படுத்தப்பட்டது. இதுகாறும் மன்னன் பார்த்துவந்த இராணுவ அலுவல்களைச் செய்யப் போலிமார்க் எனும் ஓர் தளகர்த்தன் ஏற்படுத்தப்பட்டனன். பிரபுக்கள் தங்கள் மரபிலிருந்தே அவ்வதிகாரியைத் தேர்ந்தெடுத்து நியமித்துவந்தனர்; அவ்வதிகாரியை முதலில் பத்து வருடங்களுக்கு ஒருமுறை தேர்ந்தெடுத்துவந்து, பிறகு வருடத்திற்கொருமுறை தேர்ந்தெடுக்கலாயினர். அத்தளகர்த்தன் போர்வீரர்கள் சம்பந்தமான வழக்குகளையும், அதேனாவில் குடியேறிய அந்நியர்கள் சம்பந்தமான வழக்குகளையும் தீர்த்துவந்தனன். மன்னன் பார்த்துவந்த வேலைகளில் இராணுவ சம்பந்தமான வேலைகள் நீங்கிய மற்ற வேலைகளை நிறைவேற்ற ஆற்கன்எப்போனிமஸ் என்னும் அதிகாரி ஏற்படுத்தப்பட்டான். இவ்வதிகாரியே மற்றையெல்லா அதிகாரிகளுக்கும் தலைமையானவன். இவ்வதிகாரியின் வேலைகளில் முக்கியமானது பொருள்

*மன்னராட்சி நீங்குதல்.*

*பிரபுக்களது ஆட்சி:*

*போலிமார்க்,*

*ஆர்கன் எப்போனிமஸ்,*

சம்பந்தமான வழக்குகளைக் கவனித்தல். இவ்வதிகாரிக்கிருந்த அதிகாரங்களிற் பலவும் நாளடைவிற் குறைந்து, விதவைகள், பெற்றோரையிழந்த சிமாட்டிகள், அநாதைப் பிள்ளைகள், ஆகிய இவர்களது வழக்குகளைத் தீர்த்துவரும் அதிகாரமே எஞ்சிநின்றது. தேசநன்மையின்பொருட்டு உயிர்துறந்த கோட்டிரஸ் எனும் மன்னனது புத்திரனாகிய மிடன் எனும் பிரபுவின் பரம்பரையிலிருந்து இவ்வதிகாரி தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனன். முதலில் இவ்வதிகாரி ஒவ்வொருவனும் தன் வாழ்நாள் முழுவதும் மேற்கூறிய வதிகாரத்தைச் செலுத்தும்படி நியமிக்கப்பட்டனன். பிறகு இவ்வதிகாரி பத்து வருடங்களிற்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுவந்து, பின்னர் வருடத்திற்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படலாயினன்; பிறகு நாளடைவில் மிடன் வமிசத்திலிருந்து மாத்திரமன்றி, மற்றெல்லாப் பிரபுக்களின் வமிசத்திலிருந்தும் இவ்வதிகாரி ஏற்படுத்தப்பட்டு வந்தனன். பிரபுக்கள், மன்னனது ஆளுகையையொழித்துத் தம்ஆளுகையை ஏற்படுத்திக் கொண்டனராயினும், மன்னனது ஸ்தானத்தை அடியோடு களைந்துவிடவில்லை. ஆயின், மன்னனும் மற்ற அதிகாரிகளில் ஒருவனாகக் கருதப்பட்டுவந்தான். இவனை அரசஆற்கன் அல்லது பேஸிலியஸ் என்ப.

பேஸிலியஸ்,

இராணுவம், பொருள் ஆகிய இவற்றின் சம்பந்தமான அதிகாரங்கள் இம்மன்னனை விட்டு ஒழிந்துபோயினவென்று முன்னரே கூறப்பட்டது. ஆனால் இப்பொழுது இம்மன்னனது அலுவல்கள் யாவையெனின், மதத் தலைவராயிருத்தலும், தெய்வ ஆராதனை செய்பவர்களுக்குள் தலைமை வகித்தலும், பிரபுக்களின் சபைக்கு அக்



கிராசனாதிபதியாக வீற்றிருத்தலுமாம். இவன், இராச்சிய பரிபாலனத்திற்குரிய அதிகாரங்களையெல்லாம் இழந்தமையின், அதேனியர்களின் சரித்திரமாகிய நாடகத்தில் முக்கியபாத்திரமல்லாத ஒரு வேடதாரியைப் போன்றிருப்பான். மேற்கூறிய

தெஸ்மாத்திட்டே,

மூன்றதிகாரிகளேயன்றி தெஸ்மாத்திட்டே என்னும் ஆறு அதிகாரிகளுமிருந்தனர். இவர்கள் முற்சொல்லிய மூன்று அதிகாரிகளுமின்றியமையாமல் பார்க்கவேண்டியவை யொழிந்தவழக்குகளைக் கவனித்துவந்தனர். முதன்மூன்றதிகாரிகளேற்படுத்தப்பட்டுச் சிறிதுகாலமானபின்னரே, இந்த ஆறதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இங்ஙனம், இவ்வொன்பது அதிகாரிகளும், வருடத்திற்கொருமுறை எல்லாப் பிரபுக்கள் குடும்பங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதேனா நகரைப் பிரபுக்கள் அரசாண்ட காலத்தில் அவர்கள் கட்டளையை மீறாமல் இராசாங்க காரியங்களை நடத்திவந்தனர். இனி, பிரபுக்கள் ஆட்சிபுரிந்த காலத்தில் அவர்கள் அரசுபுரிவதற்குக் கருவியாயிருந்த அரி

அரியோப்பகஸ்,

யோப்பகஸ் எனும் சிறு சபையைப் பற்றிச் சற்று விசாரிப்போம். மேற்சொல்லிய ஒன்பது அதிகாரிகளும், முக்கியமான பிரபுக்கள் சிலரும் இச்சபைக்கு அங்கத்தினராவர். அவ்வொன்பது அதிகாரிகளும், தங்கள் அதிகாரஸ்தானத்தினின்றுநீங்கிய பின்னரும், அச்சங்கத்தினங்கத்தினராதற்குரியர். பிரபுக்களினதிகாரத்தை நிர்வகிக்க இச்சபை ஓர் கோட்டைபோலும். இராச்சியசட்டங்களை இச்சபை பாதுகாத்துவந்தது. கொலைசம்பந்தமானவழக்குகளை விசாரிக்கும்

சபை இதுவேயாகும். இனி நாம் எக்கிலீஷியா என்னும் பொதுஜனமகாசபையைப் பற்றிச் சுருக்கிச் சொல்வோம். முற்கூறப்பட்ட பிரபுக்கள், வணிகர்கள், குடியானவர்கள் என்ற முப்பகுப்பினரும் இச்சபைக்கு அங்கத்தினராதற்குரியர்கள். மிகஎளியராகிய தீட்டர்கள் எனும் அதேனியர்கள் இச்சபையினங்கத்தினராதற்குரியரல்லர். இச்சபையினதிகாரங்கள் இன்னின்னவைதாமென்று தெளிவுறக் கூறுதலியலாதாயினும், தெரிந்துள்ள சிலவற்றை இங்குக் கூறுவாம். இச்சபை இன்றியமையாத சட்டங்கள்செய்தல், புறநாட்டு வியவகாரங்கள் ஆகிய இவற்றைப்பற்றித் தன் அபிப்பிராயம் கொடுக்கும் உரிமைபெற்றது. யாதேனுமோர் விஷயத்தைப்பற்றி முதன்முதலில் பிரேரேபிக்கு மதிகாரத்தை இச்சபை பெற்றிலது. இச்சபையோர் தங்கள்முன் கொண்டுவரப்பட்ட விஷயங்களை ஆமோதிக்கிறோம் அல்லது ஆமோதிக்கிலோம் என்று பகரக் கூடுமேயன்றித் தர்க்கித்தல் கூடாது. இங்ஙனம் கி. மு. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில், இவ்வித இரு சபைகளின் துணையைக்கொண்டு பிரபுக்கள் அந்நாட்டை ஆண்டுவந்தனர். பிரபுக்களின் பரிபாலனமுறையைச் சற்று ஆராய்ந்துழி, பொதுஜனமகாசபையார் அரசாட்சியில் வெகுவாகச் சம்பந்தப்பட்டிலர், என்பது வெளிப்படையாம். அரியோப்பகஸ் எனும் சபையே முற்கூறிய அதிகாரிகளைக் கருவிகளாகக் கொண்டு நீதியுடன் அரசியலை நடத்திவந்தது.

**எக்கிலீஷியா.**



**பிரபுக்களின் கொடுமையும் நாட்டின் குழப்பமும்.**

சிறிது காலஞ் சென்றபின் பிரபுக்கள் அநீதியாய் இராச்சியமாளத்தொடங்கிக் குடிகளைத் துன்புறுத்தத் தலைப்பட்டனர். ஆகலின், நாட்டிற் குழப்பம் மிக்கது. இராசாங்கத்தில் ஜனங்களுக்கு அதிருப்தி ஏற்பட்டது. நாடுமுழுவதும் கலவரத்தால் குழப்பட்டது. இவ்விதம் நாட்டில் கொந்தளிப்புண்டானதற்குக் காரணங்கள் பல உள. அவையாவன:- நாட்டின் குடிகள் அதிகரித்து வந்தனர். ஆனால் அங்ஙனம் பெருகிவரும் குடிகளைப் பேணத்தக்க விளைநிலங்களோ சொற்பமானவை. ஆகலின் சாமானிய ஜனங்கள் தம் ஜீவனத்திற்கு வழியின்மையின் இன்னலுற்றனர். இதுகாறும் அதேனு நாட்டில் வாணிபம் நாணயங்களின் உதவியின்றி நடந்தேறியது. இப்பொழுதோ பல காரணங்களினால் நாணயங்கள் வியாபாரத்தில் வெகுவாக வழங்கத்தொடங்கின. ஆயினும் சாமானிய ஜனங்கள் திடீரெனத் தேவையான நாணயங்களை ஈட்டுதல் அருமையாயிற்று. இதனாலும் குடிகள் வருந்தலாயினர். மேலும் நாட்டின் சட்டங்கள் பிரபுக்களுக்கன்றிச் சாமானிய ஜனங்களுக்குத் தெரியாமலிருந்தன. குடிகள், தாம் ஏதேனும் ஓர் குற்றம்செய்தின், அதனால் தாம் எய்துதற்குரிய தண்டனையாதென்றறிந்தாரல்லர். குடிகள் நாட்டின் சட்டங்களை உணராதவர்களாயிருந்தமையின், பிரபுக்கள் பல சமயங்களில் தம்மினத்தவரிடத்தே பக்ஷம் காட்டி நடுநிலை தவறிக் குடிகளைத் தண்டித்துவந்தனர். ஆதலின் நாட்டின் சட்டங்களை யாவரும் அறிந்துகொள்ளுமாறு எழுதி வெளிப்படுத்தும்படி, செய்யவேண்டுமெனும் அவா குடிகளிடத்திற் குடிகொள்வதாயிற்று.

கடன் சம்பந்தமான சட்டங்கள் மிகக் கொடியனவாயிருந்தன. ஏழைகள் கடன் வாங்குவ தியல்பு. அதேனா நகரில் கடன் வாங்கினர் அதைத் திருப்பிக் கொடுக்கத் தவறின், கடன் கொடுத்தவர்கள் அவர்களின் நிலத்தைத் தம் வசமாக்கிக் கொள்வார்கள். ஆதலின் கடன் வாங்கினோர் தம் சொற்ப நிலத்தையும் இழந்து, குடிக்கக் கூழின்றிப் பரதவிப்பார்கள். இந்நகரின் விளைநிலங்களைத் தம் எஜமானர்களுக்காகச் சாகுபடிசெய்து அவற்றில் விளையும் பொருள்களில் ஆறில ஐந்துபங்கு கடமை கொடுக்கும் ஓர் வகுப்பினர் இருந்தனரென்று நாம் முன் கூறினோம். அவர்கள், அங்ஙனஞ் செலுத்தத்தவறினால், தம் எஜமானர்களுக்கு அடிமைகளாகி, நாட்டை விட்டு அப்புறப்படுத்தப்பட்டு, அடிமைகள் விற்கப்படும் சந்தைகளில் விற்கப்படுவார்கள். இவ்வாறு நிலமுடையோர் நிலமிழந்தனர்; நிலமில்லாதோர் அடிமைகளாயினர். அதேனா நாட்டில் வாணிபப் பெருக்கால் தனவந்தர்களின் செல்வம் அதிகரித்தது. வறியோர்க்கு வறுமையே மேன்மேலும் வளர்வதாயிற்று. அன்றி, பிரபுக்களின் ஆட்சியோ கொடிது, கொடிது, மிகவும் கொடிது.

இக்காரணங்களால் நாடு மாறுதலடையுமென்பதற்கு அறிகுறிகளிற் சிலவற்றைப் பின் வரைவாம். நாட்டில் குழப்பமும் உளதேல், வல்லரசர்கள் தமது ஆட்சியைத் தாபித்தல்கூடும் என முன்னரே கூறியுள்ளோம். அவ்விதமே அதேனா நகரில்

கைலனது வீண் முயற்சி.

கைலன் என்பவர், மிகாரா நகரின் மக்களிற் சிலரை உதவியாகக்கொண்டு வல்லரசை ஏற்படுத்தமுயன்று, அதேனா நகரின் கோட்டையாகிய அக்கிராப்பொலிஸைப் பிடித்



துக் கொண்டனர். ஆனால் நாட்டினதிகாரிகள் எண்ணிறந்த படையோடு பகைவர்களைச் சூழ்ந்து தாக்கிய காலத்து, கைலன் தப்பியோடவும், அவனைச் சார்ந்தோர் அதேனே எனும் தேவியினது கோட்டத்தில் அடைக்கலம் புகவும் நேர்ந்தன. அங்ஙனம் அடைக்கலம் புகுந்தோர் தம்மைச் சரணமடைந்தால் தாம் அவர்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுப்பதாக மெகக்கிளன் என்னும் முக்கிய அதிகாரி வாக்குத்தத்தம் செய்தனர். அவ்வாறே அவர்கள் இவ்வதிகாரியின் வாக்கில் நம்பிக்கையுற்றுச் சரண்புக, இவ்வதிகாரி தம் உறுதிமொழியிற் றவறி, சரண்புக்கோரை யெல்லாம் பரலோகத்திற் கனுப்பிவிட்டனர். இங்ஙனம் அதேனே எனும் தேவியின் பாதகமலங்களில் சரண்புக்கவர்களைக்கொன்றதினால் நாட்டிற்குத் தீங்கு ஏதேனும் நேரிடுமோ என்ற அச்சம் அதேனியர்களின் உள்ளத்திற் குடிகொண்டது. அவ்வச்சத்தினால், படிப்படியாக மெகக்கிளனின்மீது குடிகள் சினமிக்கவர்களாய் அவனைத் தேசப்பிரஷ்டம் செய்தனர். எஃது எங்ஙனமாயினும், அதேனா நகரில் வல்லரசை நிலைநிறுத்தச் செய்த முயற்சி பயனற்றதாகவே முடிந்தது. குடிகள் வேண்டின சீர்திருத்தங்களை அடைந்திலர். கிறீட் எனும் தீவிலிருந்து எபிமினிடன் என்பவரை அதேனியர்கள் வருவித்து, அவரைக் கொண்டு மேற்சொன்ன கொலையினால் நாட்டிற்குண்டான தோஷத்தைப் போக்குதற்குரிய பரிகாரங்களைச் செய்வித்தனர். இவ்வாறு கைலன் வல்லரசராளுகையைத் தாபிக்கமுயன்றதும், வேற்று நாட்டினின்று எபிமினிடனை வருவித்து அவனைக்கொண்டு நாட்டின் தோஷங்கள் நீங்கப் பரிகாரம் செய்வித்ததும் ஆகிய

இவ்விரண்டும் நாடு மாறுதல் அடையு மென்பதைக் காட்டும் சான்றுகளே.

மூன்றாவது அறிகுறி நாட்டினைச் சீர்திருத்தி அதன் குழப்பம் நீங்கும்படிசெய்ய டிரேக்கன் என்பவரைப் பிரபுக்கள் நியமித்ததாகும். இவர் அரைத்தன முறை சம்பந்தமாகச் சீர்திருத்தம் ஒன்றும் செய்திலர். இவர் நாட்டின் சட்டங்களை எவரும் அறியும்படி எழுதிப் பகிரங்கப்படுத்தினர். சட்டங்கள் இவ்வாறு எழுதப்பட்டதே அதேனியர்கள் சீர்திருந்தியவர்கள் என்பதற்கேற்ற சான்றாகும். இவர், குற்றமன்றென நிரூபித்தற்குரிய கொலை, குற்றமெனக் கொள்ளுதற்குரிய கொலை எனக்கொலை வழக்கை இரு பிரிவாக்கி, அவற்றுள் அததற்குத் தக்கபடித் தண்டனைகளை விதித்தனர். இவரது சட்டங்களிற் சில நியாயவிரோதமானவைகளாகவும் கொடியனவாகவுமிருந்தன. பிற்காலத்துத் தோன்றிய டெமேடன் எனும் அதேனியர் அச்சட்டங்களைப் பற்றிக் கூறநேர்ந்தபோது அவைகள் 'மையினால் எழுதப்பட்டவைகளல்ல உதிரத்தினா லெழுதப்பட்டவைகளே' என்று கூறியுள்ளார். டிரேக்கன் கொலைசம்பந்தமான வழக்குகளை முடிவாகத் தீர்ப்பதற்கு எப்பீத்தே எனும் ஐம்பத்தொருநியாயாதிபதிகளை ஏற்படுத்தினர். இங்ஙனம் ஏற்படுத்தப்பட்ட இச்சட்டங்களாகிய ஔடதம் நாட்டின் குழப்பமாகிய நோயை முழுதும் தீர்க்கும் வலியற்றதாயிற்று. சட்டங்கள் டிரேக்கன் என்பவரால் எழுதிவெளியிடப்பட்டமை, ஒருவாறு நாட்டிற்கு நன்மையைச் செய்ததாயினும் அவைகள் கொடூரமானவைகளாயிருந்தமையின், தக்கபயனைத் தரவில்லை.

டிரேக்கனது சட்டம்.



## பிரிவு. 3. சோலனது குடியரசு ஸ்தாபனம்.

இனி, இக்குழப்பங்களெல்லாம் நீங்கி நாடு சீர்திருத்தமடைந்த வகையைக்கூறுவாம். கி.மு. ஐந்நூற்றுத்தொண்ணூற்றுநான்காம் வருடத்தில் சோலன் என்பவர் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டனர். நாட்டின்சீர்திருத்தத்தின்பொருட்டு அவருக்குச் சர்வ அதிகாரங்களும் கொடுக்கப்பட்டன. அவரது நோக்கங்களாவன:—அந்நாட்டில் சிலர் மிக்க செல்வர்களாகவும் பலர் மிக்க வறியர்களாகவுமிருந்தனர். அங்ஙனமிருந்தமையின், அவ்விரு திறத்தினரும் ஒருவரோடொருவர் கலந்துறவாடுதல் கூடாமையாயிருந்தது; ஆதலின் அவ்விருதிறத்தினர்க்கும் இடையிலிட்ட பாலம்போல் நடுத்தரமான செல்வர்களை உண்டாக்கவேண்டுமென்பது அவர் முதல் நோக்கம். இதுவே தாம் செய்ய விரும்பும் பரிபாலனமுறைச் சம்பந்தமான சீர்திருத்தங்களைச் செய்தற்குத் தக்க துணை புரிவதாகுமென்பதை அவர் நன்குணர்ந்தவர்; அன்றியும் முதலில் ஜனசாரசீர்திருத்தம் செய்திடின் அது பரிபாலனமுறையின் சீர்திருத்தங்களை எளிதிற் செய்தற்கேற்ற அனுகூலங்களைச் செய்யுமென்பதை முக்கிய நோக்கமாகக்கொண்டனர். ஆளுகையில் சாமானிய ஜனங்களும் சில உரிமைகளைப்பெறவேண்டுமென்பது அவரது இரண்டாம் நோக்கம். அவர் செய்த ஜனசார சீர்திருத்தங்களாவன:—முதலில் ஏழைகள் வாங்கியிருந்த கடன்களைத் திருப்பிச் செலுத்தவேண்டுவதில்லையென்று ஓர் உத்திரவை அவர் பிரசுரம்செய்தனர்; கடனுக்காக அடிமையாயின

சோலனது நோக்கங்கள்.

சோலனது ஜனசார சீர்திருத்தங்கள்.

வர்களை அவ்வடிமைத்தனத்தினின்றும் நீக்கிவிட்டனர்; ஒருவன் வாங்கிய கடனைக் குறித்த காலத்தில் திருப்பிக் கொடுக்கத்தவறின், அவன் அடிமையாதல் வேண்டுமெனும் கொடியநிர்ப்பந்தனையையும் நிலத்தை ஈடாக வைத்துக்கொண்டு கடன்கொடுத்தலையும் ஒழித்தனர்; விளைநிலங்களில் ஒவ்வொருவரும் இவ்வளவு நிலத்தையே வைத்துக்கொள்ளவேண்டுமென ஓரளவைக் குறிப்பிட்டு அதனின் மிஞ்ச ஒருவரும் நிலத்தை வைத்துக் கொள்ளலாகாதென ஓர் சட்டம் ஏற்படுத்தினார்; முன்னே தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டிருந்தோரைத் தம் நாட்டிற்குத் திரும்பிவரச் செய்தனர்; அதுகாறும் தம் நாட்டில் வழங்கிவந்த ஈஜினா நாட்டின் நாணயங்களைவிடச் சால்விஸ் நாட்டின் நாணயங்கள் தம் நாட்டினர்களுக்குப் பல சௌகரியங்களைக் கொடுக்கக்கூடியனவாயிருத்தலை நோக்கி, அவற்றையே தம் நாட்டினர் கையாளும்படி செய்தார். இந்நாட்டினர் அந்நாணயங்களைக் கையாளத் தொடங்கியபின் இந்நாட்டினோடு புதியதொரு வாணிப உலகம் வந்து நட்புக்கொண்டு உறவாடுதல்போன்ற ஒரு கிளர்ச்சி இந்நாட்டின் வியாபாரத்தில் உண்டாயிற்று. எவ்வாறெனின், இந்நாட்டினர் அதுகாறும் வியாபாரஞ் செய்திராத எகிப்து, யூபியா முதலிய நாடுகளோடும் அந்நாணயங்கள் வழங்கிவந்த மற்றத்தேயங்களோடும் வியாபாரம் செய்யலுற்றனர். சோலன் தம் நாட்டில் பஞ்சமுண்டாகாமலிருத்தற்பொருட்டு அதன் உணவு பொருள்களை ஏற்றுமதி செய்தல்கூடாதெனக் கட்டளையிட்டனர்; பல்வகையான கைத்தொழில்சாலைகளைப் பெருக்கினார்; பெற்றோர்யாவரும் தம் மைந்தர்களுக்கு யாதாயினு மொருவகைத் தொழிலைக் கற்



பித்தல் வேண்டுமெனத் திட்டம்செய்தனர். அட்டிக்கா நாடு நிலவளமற்றதாதலின், இதுகாறும் அதேனியர்களுக்கு ஜீவனோபாயம் தேடுதல் கடினமாயிருந்தது. ஆயின் சோலன் என்பவரது மேற்கூறிய சீர்திருத்தங்களால் அத்துன்பம் ஒழிந்தது. அதேனியர்கள், சோலனால் ஏற்படுத்தப்பட்ட நானாவித தொழிற்சாலைகளில், பல சாமான்களைச் செய்து, வேற்றுநாடுகளில் அவைகளைக் கிரயத்திற்கு விற்று, அவற்றால் வரும் பொருளின் உதவியைக் கொண்டு தமக்கு வேண்டிய உணவு பொருள்களை அந்நாடுகளிலிருந்து வருவித்துக்கொள்வாராயினர். அதேனியர்கள் வெண்கலம் இரும்பு ஆகிய இவ்வுலோகங்களினால் செய்துவந்த சாமான்கள் கிரீஸ் தேசமுழுதும் மற்றும் உரோமாபுரி, கார்த்தேஜ் ஆகிய புறநாடுகளிலும் அபரிமிதமாய் விற்பனை செய்யப்பட்டு வந்தன. இங்ஙனம் வாணிபமும் கைத்தொழிலும் விருத்தியடைந்ததனால், அதேனா நகரின் ஜனத்தொகை அதிகரித்தது. அதேனியர்கள் தமது வறுமையினின்றும் நீங்கினர். அதேனியர்களிடம் பொருளை மிதமிஞ்சி வீண்செலவு செய்தலாகிய ஓர் துர்வழக்கம் குடிகொண்டிருந்தது. அவ்விதத் துர்வழக்கம் அதேனியர்களைத் துன்பத்திற்குள்ளாக்கும் என்று ஓர்ந்து, அதை அடியோடு ஒழிக்கச் சட்டம் ஒன்றைச் சோலன் ஏற்படுத்தினார். நம்நாட்டுத் தமிழ்வேந்தர் குடிப்பிறப்பால் சேரர், சோழர், பாண்டியரென முத்திறத்தினராய்ப் பிரிக்கப்பட்டிருந்தது போல, அதேனியர்கள் குடிப்பிறப்புப்பற்றி நான்கு பகுப்பினராகத் தொன்றுதொட்டுப் பிரிந்திருந்தனர். சோலன் நாட்டைச் சீர்திருத்துவதற்குச் சிறிது காலத்திற்குமுன், மேற்கூறிய நான்கு பகுப்பினருள் ஒவ்

வொரு பகுப்பினரும் வருவாய்பற்றி நான்கு பகுப்பினராகப் பிரிக்கப்பட்டனர். வருடம் ஒன்றுக்கு ஐந்நூறுபடி தானியவருமான முள்ளோர் யாவரும் முதல் வகுப்பினராவர். ஐந்நூறுபடிக்குக் குறைந்து முந்நூறுபடிக்கு மேற்பட்ட அளவுள்ள தானியவருமானமுடையோர் இரண்டாம் வகுப்பினராவர். முந்நூறுபடிக்குக் குறைந்து இருநூறுபடிக்குமேற்பட்ட அளவுள்ள தானியவருமானத்தை யுடையவர் மூன்றாம்வகுப்பினராவர். இருநூறுபடிக்குக் குறைந்த தானியவருமான முடையவர் நான்காம் வகுப்பைச் சேர்ந்தவர். இப்பாகுபாட்டைச் சோலன் அநேக விடயங்களில் தம்முக்கிய கருவியாகக்கொண்டார். மேற்சொல்லிய முதன் மூன்று பகுப்பினர்களும் தத்தம் வருவாய்க்குத் தக்கபடி இராசாங்கத்திற்கு வரி செலுத்தும்படி கட்டளையிடப்பட்டனர். அன்றியும், இம்முத்திறத்தினரும் போர் நேர்ந்த காலத்துத் தவறாமல் போர்க்குச் செல்ல வேண்டிய கடமையுமுடையவர். இச்சீர்திருத்தங்களால் நாடு அமைதியுற்றது. சோலன் என்பவரை யாவரும் கொண்டாடினர்.

சோலனது துரைத்தனச்சம்பந்தமான சீர்திருத்தங்கள்.

மேற்சொன்ன குடிப்பிறப்புப்பற்றிய நான்கு பகுப்பினருள் ஒவ்வொரு பகுப்பினரும் தமக்குள் வருவாய்பற்றி ஏற்பட்டுள்ள நான்கு பிரிவினருள் முதற்பிரிவினரிலிருந்து பதின்மரைத் தேர்ந்தெடுப்பார்கள். இங்ஙனம் குடிப்பிறப்புப்பற்றிய அந்நான்கு பகுப்பினரும் பகுப்புக்குப் பதின்மராக நாற்பதின்மரைத் தேர்ந்தெடுப்பார்கள்; இங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாற்பதின்மரின் பெயர்களை



யும் தனித்தனிச் சீட்டில் எழுதி, குலுக்கிப்போட்டு, அவற்றுள் ஒன்பது சீட்டுகளை யெடுத்து, அவ்வொன்பது சீட்டுகளில் குறிக்கப்பட்ட ஒன்பதின்மரை முக்கிய அதிகாரிகளாக ஏற்படுத்துவார்கள்.

ஒன்பது அதிகாரிகள்.

நாட்டின் சாமானிய அதிகாரிகள் வருவாய்பற்றிய நான்குபகுப்பினருள் முதன் மூன்றுபகுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுவர். இவ்வித ஏற்பாட்டினால் நாட்டிற்கு மிக்க நலம் உண்டாயிற்று. இராசாங்கத்தில் ஒருவன் உத்தியோகம் பெற விரும்பின், அவன் உயர்குலத்தோனாயிருத்தல் வேண்டுமென்பது அவசியமன்று; அவன் செல்வவந்தனாயிருத்தலே பிரதானம். முன்பு பிரபுக்கள் பரம்பரையில் தோன்றியவர்களே நாட்டை ஆண்டுவந்தனர். இப்பொழுதோ தனமுடையவர்கள் யாவருமே ஆளுகையில் உரிமைபெற்றனர். உயர்குலத்துத் தோன்றும்படியான பாக்கியம் யாவரும் பெறுதலரிது. ஆனால் பொருள் சேகரித்தல் யார்க்கும் எளிது. பொருளுடையார் யாவரும் அரசாட்சியில் உரிமை பெறுதற்குரியர்என ஏற்படுத்தப்பட்டமையின், அதேனா நகரில் சாமானிய ஜனங்களும் ஆளுகையில் உரிமைபெற்றனர். மேலும் பல பெயர்களை வெவ்வேறு சீட்டுகளில் எழுதி இவற்றிலிருந்து எவையேனும் சில சீட்டுகளைப் பொறுக்கி அச்சீட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளோரை அதிகாரிகளாக நியமித்தல் மிகவும் கவனிக்கத்தக்கவிஷயம். இவ்வேற்பாட்டால் அந்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் அதிகாரஸ்தானத்தை வகிக்கும் உரிமைபெற்றவராயினர். ஆனால் அவ்வதிகாரஸ்தானத்திற்கு, வருபவர் முற்கூறிய விதமாக வருவாயை யுடையவராயிருத்தலே

இன்றியமையாதது. இவ்வித ஏற்பாடு குடியரசுஸ்தாபனத்திற்கு வேண்டிய அஸ்திவாரத்தை அமைத்து வைத்ததென்ப. இனி நாம் அரியோப்பகஸ் என்னும் சிறுசபையைப் பற்றிச் சிறிது பகர்வோம். இச்சபை சோலன்காலத்திலும் முன்போலவே பரிபாலனமுறைகளையும், சட்டங்களையும், அதிகாரிகளையும், குடிகளின் ஒழுக்கங்களையும் மேல்விசாரணை செய்துவந்தது. இராசாங்கத்துத் துரோகிகளைத் தண்டித்தல் அதனதிகாரங்களில் ஒன்றாகும். மேலும் கொலைச்சம்பந்தமான வழக்குகளைத் தீர்த்தலும் அதன் மற்றோரதிகாரமாகும். ஆயினும் இச்சபையோர் ஆளுதல், ஏதேனுமோர் விஷயத்தைப் பற்றித் தீர்க்கமாக ஆராய்ந்துசெய்த தீர்மானத்தின்படி அதிகாரிகளை ஆளும்படி செய்தல் ஆகிய இவ்வதிகாரங்களை இழந்தனர். இச்சபை, பிரபுக்கள் ஆளுதற்கு முக்கிய கருவியானபோதிலும், இராசாங்கத்தில் பிரதான அதிகாரங்களைத் துறந்தது. ஆதலின் அதேனா நகரில் பிரபுக்கள் தாம் முன்செலுத்திய அதிகாரங்களை இனிச் செலுத்துதல் இயலாதென்பது இனிது விளங்கும். இவ்விதக்காரணத்தினால் குடியரசை அதேனா நகரில் ஸ்தாபிக்க வழி ஏற்பட்டது.

அரியோப்பகஸ்.

நானூறு அங்கத்தினரையுடைய சபை

இனிச் சோலன் ஏற்படுத்திய நானூறு அங்கத்தினரையுடைய சபையைப் பற்றிச் சில விஷயங்கள் கூறுவாம். வருவாய்பற்றி ஏற்படுத்தப்பட்டுள்ள பாகுபாட்டின் முதன் மூன்று பகுப்பினர் இச்சபைக்கு அங்கத்தினராதற்குரியர். மேற்கூறிய மூன்று பகுப்பினர்களிலிருந்து குடிப்பிறப்புப்பற்றிய நான்கு பகுப்பினர்களும் வருடத்திற் கொருமுறை பலரைத் தேர்ந்தெடுப்பார்



கள். அங்ஙனம் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களிலிருந்து நானூறு அதேனியர்கள் முற்கூறியவகையான சீட்டின் துணையால் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒருவர், இரண்டாமுறையும் இச்சபைக்கு அங்கத்தினராதற்கு விரும்பின், தம்முடைய பகுப்பிலுள்ள மற்றயாவரும் அங்கத்தினரான பின்பே அங்ஙனமாதல் கூடும். இச்சபையோர், பொதுவிஷயங்களைப் பொதுஜனமகாசபைக்குக் கொண்டுவருமுன், தாமே அவற்றைத் தீர்க்காலோசனை செய்து பொதுஜனமகாசபையினங்கத்தினருள் சாமானியஜனங்களும் எளிதில் தெரிந்துகொள்ளும்படி ஒழுங்குபடுத்துவர். இச்சபையோர் அநேக இராசாங்க விஷயங்களை முடிவாகத் தீர்ப்புச்செய்தல் கூடும். இங்ஙனம் முக்கியமான அதிகாரங்களை இச்சபை பெற்றிருந்தது. ஆயினும் இச்சபையோர் தொகையோ பெரிது; இச்சபையில் நானூறு அங்கத்தினர்கள் இருந்தனர் என்பது கவனிக்கத்தக்க விஷயம். அன்றியும் வருவாய்பற்றிய பாகுபாட்டின் முதன் மூன்று பகுப்பினரும் அங்கத்தினராதற்குரியர். மேலும் சீட்டின் உதவியால் இவ்வங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்படுவதனால் மேற்சொன்ன மூன்று பகுப்பினருள் எவனும் உயர்குலத்தோனாயினும் சாமானியனாயினும், திறமையுடையோனாயினும் திறமையற்றவனாயினும் இச்சபையினங்கத்தினனாதல் கூடும். இவ்வித காரணங்களாலும் குடியரசை ஸ்தாபனஞ்செய்வதற்கு மற்றுமோர் வழி ஏற்பட்டது.

ஹெலையா

இனிச் சோலனேற்படுத்திய ஹெலையா எனும் நியாயஸ்தலத்தைப்பற்றிச் சிறிது சொல்வோம். அதேனா நகரில் எளிய தீட்டர்கள் உள்பட அதேனியர்கள்யாவரும் இந்நியாயஸ்தலத்தில் நியாயாதிபதிகளாய் வீற்றி

ருப்பார்கள். வருடத்திற் கொருமுறை முப்பது ஆண்டெய்திய எல்லா அதேனியர்களிலிருந்தும் அனேக அதேனியர்கள் சீட்டின் உதவியினால் நியாயாதிபதிஸ்தானத்தை வகிக்கத் தேர்ந்தெடுக்கப் படுவர். இங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்நியாயாதிபதிகள் சிறுசிறு தொகுதியினர் கூடிய பல பிரிவுகளாகப்பிரிக்கப்படுவர். இவ்வொவ்வொரு பகுப்பினரும் தம்முன் கொண்டுவரப்பட்ட விடயங்களைப்பற்றித் தீர்ப்புச் சொல்வர். தமது உத்தியோககாலத்தில் முறைதவறின், அதேனா நகரதிகாரிகளை, அவர்கள் தம் அதிகாரஸ்தானத்தினின்றும் நீங்கியபின், மேற்கூறிய நியாயாதிபதிகள் விசாரணைசெய்வர். இதுகாறும் அந்நாட்டதிகாரிகள் தீர்த்துவந்த வழக்குகளில் பலவற்றை இந்நியாயாதிபதிகள் முடிவாகத் தீர்க்க இப்பொழுது உரிமை பெற்றனர். நாளடைவில் எல்லாவழக்குகளும் இந்நியாயாதிபதிகளாலேயே தீர்க்கப்படுவனவாயின. ஆதலின் இந்நாட்டதிகாரிகள் தாம் இதுகாறும் செலுத்திவந்த நியாயவிசாரணை சம்பந்தமான அதிகாரங்களை இழந்தனர். இவ்வதிகாரிகள் ஒருவழக்கை விசாரணைக்குக் கொண்டுவருமுன் செய்யவேண்டிய வியவகாரங்களை நடத்தமாத்திரமே உரிமை பெற்றனர். மேற்சொல்லியபடி ஏற்படுத்தப்பட்ட நியாயஸ்தலமானது அதேனா நகரின் குடியரசைத் தாங்கும் ஓர் முக்கியத் தம்பம்போலாம். இவ்வித நியாயஸ்தலத்தைச் சோலன் ஏற்படுத்தியதனால் அவருடைய கீர்த்தியையும் மேன்மையையும் ஐரோப்பாக் கண்டத்துக் குடியரசபிவிருத்தியைக் கூறியுள்ள சரித்திராதிபர்கள் வெகுவாகப் புகழ்ந்திருக்கின்றனர். சாமானிய ஜனங்களும் இராசாங்க அதிகாரிகளை விசாரிக்குமதிகாரம்



பெற்றிருந்தனரென்றால் வேறு நாம்வேண்டுவதென்?

பொதுஜனமகா சபை (எக்கிளீஷியா).

மேலும் பொதுஜனமகாசபைக்கு எளிய தீட்டர்களும் அங்கத்தினராதற்குரிய உரிமையைச் சோலன் காலத்தில் அடைந்தனர். ஆதலின் அதேனா நகரில் குடியரசு வெகுவாய்த்தாபித்தாய் விட்டதென்பதை நாம் விதந்து கூறவும்வேண்டுமோ?

---

## 12. அதேனாராச்சியமும் அதன் வல்லரசும்.

சோலன் என்பார் புரிந்த சீர்திருத்தங்கள் அவ்வளவும் குறைவற்றதெனக் கூறுதலியலாது. ஏனெனில் அவர் அதேனா நகரின்கண் உண்டாய தீங்குகள் சிலவற்றைக் களையாது விட்டுவிட்டனர். ஆதலின் அவர் காலத்திற்குப்பின்னர் அந்நகரின்கண் முப்பது ஆண்டுவரையிற் குழப்பம் மிக்கிருந்தது. அதனுடன் அமையாது அம்முப்பதாண்டுகள் முடிவுற்றபின்னர் வல்லரசர்களின் ஆட்சி அதேனா நகரத்திலும் ஏற்பட்டுவிட்டது. இனி மேற்சொன்ன தீங்குகள் யாவை எனச் சற்று உற்றுநோக்குவாம். அதேனா நகரத்தில் முக்கட்சியினர் இருந்தனர். அவர்களிற் சிலர் பிரபுக்களின் அரசாட்சியைத் திரும்பவும் முன்னிருந்தவாறே ஏற்படுத்தவேண்டும் என்றனர். மற்றுஞ் சிலர் சோலனுடைய சீர்திருத்தங்களே சாலுமெனக் கருதினர். இராசாங்கமே அநாவசியம் என வாதித்தனர் இன்னுஞ் சிலர். இம்முத்திறத்தினராலுண்டான கலகத்தாற் சிறிதுகாலம் அதேனா நகரத்தில் இராச்சியபரிபாலனம் நடந்தேறுவது வெகு கடினமாயிற்று. தவிர மற்றொரு விதத்திலும் தீங்குகள் பல நேர்ந்தன. அதேனா நாட்டின்

குடிகளாகிய அயோனியர்கள் குடிப்பிறப்பைநோக்கி நான்கு வகுப்பினராகப்பிரிக்கப்பட்டார்களென்றும், ஒவ்வொரு பகுப்பும் முப்பது கூட்டங்களை யுடையதென்றும்; ஒவ்வொரு கூட்டமும் முப்பது குடும்பங்களைத் தன்னுட்கொண்டதென்றும் நாம் முன்பே கூறியுள்ளோமன்றோ? இப்பாகுபாடுகளைச் சோலன் மாற்றாது விட்டுவிட்டனர். ஆதலின் மேற்கூறிய பெரிய குடும்பங்களின் தலைவர்கள் தாங்கள் எவர்களைத்தேர்ந்தெடுக்கிறார்களோ அவர்களையே சாமானிய ஜனங்கள் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று அவர்களை வற்புறுத்திவந்தனர். ஆதலின் சோலனால் ஜனங்கள் அடைந்த சுதந்திரங்கள் ஏட்டுச்சுரைக்காயும் கட்டுக்கதையுமாயின. இராசாங்கவிடயங்களில் பெரிய குடும்பத்தலைவர்களது செல்வாக்கே உயர்ந்ததாகவிருந்தது.

இவ்வாறு மேற்கூறிய இரண்டு தீங்குகளின் பயனால் சோலனுடைய மேற்பார்வை யொழிந்தபின் மீளவும் அதேனா நகரிற் பிரபுக்களின் அரசு ஏற்பட்டது. ஆயினும் இவ்வரசு சிறிது காலத்திற்குள் கெட்டொழிந்தது. எவ்வாறெனின்: பைஸிஸ்திராத்தன் என்பான் ஒருவன் பிரபுக்களை நீக்கிவிட்டு அதேனா நகரத்தில் வல்லரசைத் தாபித்தான். அதேனியர் அவனை இருமுறை வெளியில் துரத்தியும், அவன் மறுபடியும் தன் அதிகாரத்தை மீட்டுக்கொண்டான். அவன் செய்துமுடித்த காரியங்கள் அதேனிய சரித்திரத்தில் அழியாப்புகழ் பெற்றனவாயிருக்கின்றன. அவனைக் கடலில் ஏகாதிபத்தியம் அடைய

பைஸிஸ்திராத்தன் எனும் வல்லரசன் கி. மு. 560-556, 551-550.540-527.



அதேனியர்களுக்கு வழிகாண்பித்தவன் எனக் கூறலாம். ஏனெனில் அவன்காலத்தில் சாலமிஸ் முதலான சில தீவுகள் அதேனா ராச்சியத்துடன் சேர்க்கப்பட்டன. அவன் கிரீஸ் தேசத்திலுள்ள நாடுகளுடன் நண்புபூண்டொழுகினன். தவிர அவன் காலத்தில் கருங்கடலுக்கருகிலுள்ள நாடுகள் பலவற்றுடன் அதேனா ராச்சியம் வியாபாரஞ் செய்யத்தொடங்கிற்று. அவன் லாரியம் என்னுமிடத்திலுள்ள வெள்ளிச் சுரங்கங்களை வெட்டியெடுத்து வேலைசெய்ய ஏற்பாடு செய்தான். அதனால் இராசாங்கப் பொக்கிஷம் மேன்மேலும் பெருகுதலாயிற்று. அவன் நிலமில்லாதார்பலர்க்கும் பிரபுக்களின் நிலங்களைப் பகிர்ந்து கொடுத்து, அவர்களை யந்நிலங்களுக்கு உரிமையாளர்களாகச் செய்தான். விவசாயமும் விருத்தியடைந்தது. அவன் கிரீஸ்தேசத்திலுள்ள அயோனிய நாடுகட்குச் சன்மார்க்க வழியிலும் மதவிடயங்களிலும் அதேனா நகரைத் தலைமை வகிக்கும்படி செய்தனன். அவனது ஆட்சியில் சாதாரண மக்களும் முன்னேற்றமடைந்தனர். அவன் வல்லரசனேயெனினும் சோலனுடைய அரசியன்முறைப்படி ஆட்சி புரிந்தனன். சோலன் காலத்திலிருந்த சபைகள் பலவும் இவன்காலத்திலும் கூடி, அரசியல் விடயங்களை யாராய்ந்துவந்தன. ஆதலின், ஜனங்கள் அக்காலத்தில் சுயராச்சிய முறைகளைக் கற்றுக்கொண்டனர்.

அவனுக்குப்பின் அவனுடைய குமாரன் ஹிப்பையன் என்பான், தன்னுடன் பிறந்தோனை ஹிப்பார்கன் என்பானுடன் கலந்து, ஆட்சிபுரிந்துவந்தனன். அ[illegible]சகோதரர்களும் கூடித் தம் நகரத்தைக் கல்

ிப்பையனும் பார்கனும்

விக்கும் நாகரிகத்திற்கும் ஓருறைவிடமாகச் செய்தனர்.

இருசதியாலோசனைக்காரர்கள்.

கி. மு. 514-ம் ஆண்டில், ஹார்மோடியுன் அரிஸ்தாஜிதன் என்னும் இரு சதியாலோசனைக்காரர்கள் தங்கள் சுயநலத்தினாலும், எல்லோராலும் ஒருங்கு வெறுக்கப்பட்ட வல்லரசை யொழிக்கவேண்டுமென்னும் அவாவினாலுந் தூண்டப்பட்டு, மேற்கூறிய இரண்டு சகோதரர்களையும் ஒருங்கே கொன்றுவிடத் தீர்மானித்தனர். ஆயினும் ஹிப்பார்கன் ஒருவனே அவர்களுடைய சதியாலோசனைக் கிலக்காகிக் கொலையுண்டுமடிந்தான். ஹிப்பையன் உயிர்தப்பினன். அது முதல் ஹிப்பையன் பலரிடத்திலும் நம்பிக்கையற்று அவர்களை வருத்த ஆரம்பித்தான். முடிவில், ஸ்பார்த்தாவினது உதவியால் அதேனா நகரில் வல்லரசு அறுபட்டொழிந்தது. ஆதலின், ஹிப்பையன் பாரசிக மன்னனிடம் சென்றடைக்கலம் புகநேரிட்டது.

---

## 13. க்ளையஸ்தினன்.

கி. மு. 507 ம் ஆண்டில் க்ளையஸ்தினன் என்பார் ஒருவர் மிகப்பிரசித்திபெற்ற சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தனர். சோலனது அரசியன்முறை சரிவர நடைபெறுவண்ணமுண்டான இடையூறுகளை அறவே அகற்ற வேண்டுமென்பது அவர் கொள்கை; தவிர மேற்கூறப்பட்ட பெருங்குடும்பங்களின் தலை



வர்களா லேற்பட்ட செல்வாக்கை வேரோடழிக்கவேண்டுமென்றும் அவர் கருதினர்; வியாபார விடயமாக அதேனா நகரிற் குடியேறிய இதர தேசத்தவர்களுக்கு அரசியல்விடயங்களில் சுதந்திரங் கொடுக்கவேண்டுமென்றும் அவர் எண்ணினர். இவ்விதப் பல்வகைப்பட்ட நோக்கங்களுடன் அவர் பின்வருமாறு சீர்திருத்தங்களைச்செய்தனர்.

க்ளையஸ்தினனது சீர்திருத்தங்கள்.

பிறப்பின் காரணமாக வேற்பட்டதும், தொன்றுதொட்டு வந்ததுமான அயோனியர்களின் பாகுபாட்டை நீக்கி அதற்குப்பதில் அரசியல் நடாத்தும் பொருட்டே புதிய பாகுபாடொன்றை க்ளையஸ்தினன் ஏற்படுத்தினர். அஃதாவது அயோனியர்கள் பத்துப் பிரிவினர்களாகப் பிரிக்கப்பட்டனர். எவ்வாறெனின், அட்டிக்கா நாட்டின்கண் இருநூறு சிறு ஜில்லாக்கள் இருந்தன. அவ்விருநூறு ஜில்லாக்களும் முப்பது டிரைட்டிஸ் என்று கூறும் பெரும் பிரிவுகளாக வகுக்கப்பட்டன. இத்தகைய முப்பது பிரிவுகளிலிருந்து அயோனியர்கள் மற்றும் பத்துப் பெருங்குடிகளாகப் பிரிக்கப்பட்டனர். மூன்று டிரைட்டிஸ் என்னும் பிரிவுகள் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டதால் ஒரு பெருங்குடி உண்டாயிற்று. இம்மூன்று பிரிவுகளும் சமபூமி, கடற்கரை நாடு, மலைப்பாங்கு ஆகிய வெவ்வேறு பிரதேயங்களினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒன்று கூட்டப்பட்டனவாகும். இங்ஙனம் பல்வேறு பிரதேசங்களிலுள்ள ஜனங்கள் இராச்சியபரிபாலனத்திற்காக ஒன்று சேர்ந்து உழைக்கநேரிட்டது. ஆதலின் நாட்டில் ஒற்றுமையுண்டாயிற்று. சண்டைசச்சரவுகள் தலைக்காட்டா

தொழிந்தன. கட்சிக்காரர்களின் கலகம் கலகலத்தது. மேற்கூறிய பத்துப் பெருங் குடிகளுடன் அந்நகரிற் குடியேறியிருந்த மற்றையோர்களும் சேர்க்கப்பட்டனர். அவர்கள் பலரும் அந்நகரத்தில் இராசாங்க உரிமைகளைப் பெற்றனர். சோலன் காலத்திருந்த நானூறு அங்கத்தினர்களையுடைய ஆலோசனைச்சங்கம் இப்பொழுது ஐந்நூறு அங்கத்தினரையுடையதாயிற்று.

ஆலோசனைச் சங்கம்.

இஃது ஒரு முக்கியமான சபை. இச்சபையின் ஆதரவின்கீழ்த் தலைமையதிகாரிகள் தம் காரியங்களைச் செய்துவந்தார்கள். இதனால் அவ்வதிகாரிகளின் பெருமை சிறிது குறைவுற்றது. இச்சபை யுத்தவிடயங்களையும், இதரதேசச்சார்பான விடயங்களையும், அரசியற்குரிய விடயங்களையும்பற்றி யோசிக்கவேண்டிய பெருமை வாய்ந்திருந்தது. இச்சபையின்கண் தீர்க்காலோசனைகள் செய்த பிறகுதான் பொதுஜன மகாசபையின் முன்பாகப் பிரேரேபணைகள் கொண்டுவரப்படலாம். தவிர, உத்தியோகஸ்தர்களுக்கு அபராதம் விதிக்கவும், அவர்கள்மீது சாட்டப்பட்ட குற்றங்களைப்பற்றி விசாரணை செய்யவும் இச்சபைக்கு அதிகாரம் உண்டு. இச்சபை மிகப் பெரிதாயிருந்தமையால் பத்துச் சிறு சபைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பொதுஜனமகாசபை முன்பு கூடியதைவிடப் பன்முறை அதிகமாகக் கூடிற்று. ஆதலின் சாதாரண மக்கள் பெரும்பாலும் அரசியல் விடயத்திற் சம்பந்தப்பட்டார்கள். அன்றியும் சோலன் காலத்திற்குச் சிறிது முன்பாக வருவாய்பற்றி ஏற்படுத்தப்பட்டிருந்த நான்கு பாகுபாட்டினருள் இரண்டாம் பாகுபாட்டினர்களிலிருந்து தலைமையதிகாரிகள் தேர்ந்



தெடுக்கப்பட்டார்கள். தவிர, க்ளையஸ்தினன் ஆஸ்திரஸிஸம் என்னும் ஒரு சட்டத்தையுங்கொண்டுவந்தார். இச்சட்டத்தால் ராசாங்கத்திற்கு அபாயத்தை விளைவிக்கக்கூடிய ஒருவன் பத்துவருடகாலத்திற்கு ஊரைவிட்டு வெளிப்படுத்தப்படுவான். ஆனால் அவனுக்குரிய பொருள் இராசாங்கத்தில் சேர்க்கப்படுவதில்லை. ஒருவனை ஊரைவிட்டு அப்புறப்படுத்தவேண்டுமானால் அவனது பெயரை பொதுஜனமகாசபையினங்கத்தினர் ஒரு ஓட்டில் எழுதித் தெரிவிப்பர். ஆயின் ஆறுயிரம்பேர் சம்மதித்தால்தான் ஒருவனை நாட்டை விட்டுப் புறநாடு ஏகும்படி செய்தல் கூடும். எச்சமயத்தில் ஒருவனுடைய வன்மையினால் தேசத்தின் அரசியல்முறைக்குக் கேடு சம்பவிக்கும்போலிருக்கிறதோ அச்சமயத்தில் ஆஸ்திரஸிஸம் எனும் இந்த சட்டத்தைப் பிரயோகிப்பார்கள். இப்படிச் செய்து வந்ததனால் அதேனா நகரத்தில் வல்லரசு வேரோடழிந்தது. குடியரசு தடைபடாமல் விருத்தியடைந்தது. இவ்வித சீர்திருத்தங்களால் க்ளையஸ்தினன் என்பவரும் சோலனைப்போற் குடியரசைத் தாபித்தவர் என்று கூறலாம்.

ஆஸ்திரஸிஸம் எனும் சட்டம்.

---

## 14. ஆர்காஸ், தீப்ஸ் ராச்சியங்களும், கிரேக்கரின் நிலைமையும்.

காறிந்த் ராச்சியத்திற்குத் தென்கிழக்கில் ஆர்காஸ் எனும் இராச்சியம் இருந்தது. இவ்விராச்சியத்திலுள்ளோர் டோரியர் வகுப்பினராவர். ஒரு காலத்திற் பெலப்பொனீஸ் மாகாணத்தில் இவர்கள் ஸ்பார்த்

ஆர்காஸ் ராச்சியம்.

தர்களை யொத்த செல்வாக்குடையவர்களா யிருந்தார்கள். பின்னர் ஸ்பார்த்தர், அவர்களைத் தோற்கடித்து அவர்களது இராச்சியத்திலொரு பகுதியைக் கைப்பற்றினர். அதன் காரணமாக ஆர்காஸ் ராச்சியத்திற்கும், ஸ்பார்த்தா ராச்சியத்திற்கும் திராப்பகைமையும் பொறாமையு முண்டாயிருந்தன. பியோஷியா நாட்டின் வடபாரிசத்தில், தீப்ஸ் எனு மோரி ராச்சியம் இருந்தது. மற்ற கிரேக்கர்கள் ஒரு காலத்தில் அவ்விராச்சியத்தவர்களைப் பிடிவாதக்காரர்களெனவும் தேசாபிமான மற்றவர்களெனவும் மூடர்களெனவும் பழித்து வந்தார்கள். ஆயினும், பிற்காலத்தில் அவ்விராச்சியத்தவர்கள் போர் புரிவதில் முதன்மையானவர்களெனவும், இராச்சிய சூழ்ச்சிகளில் இணையற்றவர்களெனவும் கண்டோர் கூறும்படியான தன்மையை அடைந்தார்கள்.

**தீப்ஸ்ராச்சியம்.**

இங்ஙனம் சற்றேறக்குறைய கி. மு. 500-ம் ஆண்டிற்குமுன் கிரீஸ்தேயத்தின்கண் அதியூக்கமும் அபிவிருத்தியும் வாய்ந்த மாந்தர் செறிந்துறைந்தனர். அவர்கள் ஐரோப்பா முழுவது மபிவிருத்தியடைதற்கு முக்கிய காரணமாகிய சுயஆட்சியின் விஷயமாகப் பரிட்சைபுரிந்துகொண்டும் தத்துவங்களிலும் மற்றுமுள்ள கல்வியறிவிலும் இப்பொழுதுள்ள ஐரோப்பிய நாகரிகத்திற்குக் காரணமாய் விளங்கும் மனோதத்துவங்களை ஆராய்ந்துகொண்டு மிருந்தனர். தேயமுழுவதுஞ் சிறுசிறு இராச்சியங்களாகப் பிரிந்திருந்ததென முன்னரே கூறியுள்ளோம். அது இராச்சிய விஷய

**கிரேக்கரின் நிலைமை.**



களிலும் கல்வியறிவிலும், தத்துவசாஸ்திரத்திலும் முன்னேற்றமடைதற்குக் கருவியாயிருந்ததுபோலும். ஏனெனில், அவ்வாறு பிரிவுபட்டமையால் அவ்விராச்சியங்களுக்குள் விடாத போட்டி ஏற்பட்டது. அது காரணமாக, ஒவ்வொரு இராச்சியத்தினரும் தத்தம் முன்னேற்றத்தைச் சீர்தூக்கிப்பார்த்தற்குச் சௌகரியங்களும் உண்டாயின. ஆயினும், பலமும், பிடிவாதமும், ஒற்றுமையுமுடைய பிறநாட்டினர் இவர்களது தேசத்தைக் கைப்பற்றக் கருதிய காலத்தில், இவர்கள் தேசத்தில் ஒற்றுமையின்மையே பேராபத்திற் கேதுவாயிருந்தது. அவ்வித ஆபத்து கி. மு. ஐந்தாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் நேர்ந்தது.

---

## 15. ஆசியாக் கண்டத்து இராச்சியங்களின் வரலாறு.

கி. மு. எட்டாவது நூற்றாண்டின் இறுதியில், சாருகன் என்னும் மன்னன் காலத்தில், அஸ்ஸீரியா ராச்சியம் நினிவே என்னும் இராசதானியோடு மிகவும் மேன்மையான நிலையிலிருந்தது. சைப்பிரியர்கள், பினீஷியர்கள், மீடர்கள், பாபிலோனியர்கள் முதலிய அநேக இராச்சியத்தினர்கள் அஸ்ஸீரியர்களுடைய ஆட்சிக்குட்பட்டிருந்தார்கள். ஆனால், அஸ்ஸீரியா ராச்சியம் சற்றேறக்குறையக் கி. மு. 700-ம் ஆண்டில் தாழ்வடையத் தொடங்கிற்று. மீடர்கள் சுதந்திரம் பெற்றார்கள். மீடர்களின் மன்னனாகிய பிரேயோர்த்தன் என்பவன் பாரசீகர்களைத் தன் ஆட்சிக்குட்படுத்தினன். பின்

**அஸ்ஸீரியா ராச்சியம்.**

**மீடியாராச்சியம்.**

னர், சையக்ஸாரன் எனும் மீடர்களின் அரசன், அப்பொழுதுதான் சுதந்திரமடைந்த பாபிலன் எனும் இராச்சியத்தின் அரசனாயிருந்த நபப்பொலசர் என்பவனது உதவியைப்பெற்று, அஸ்ஸீரியாவினது ஏகாதிபத்தியத்தை யழித்தான்; இங்ஙனம் புரிந்ததனால் அஸ்ஸீரியா தேசத்தின் ஒரு பகுதியைத் தன்னுடைய இராச்சியத்துடன் சேர்த்துக்கொண்டான். கி. மு. 595-ம் ஆண்டில், மீடியா ராச்சியத்தில் அஸ்தியாஜன் என்பான் சிங்காதனமேறினான். அக்காலத்தில் அவ்விராச்சியம் மிகவும் உன்னத நிலைமையிலிருந்தது.

லிடியாராச்சியம்.

இது நிற்க, லிடியாவினது சரித்திரத்தைச் சற்றுக் கவனிப்போம். மெர்மனடே என்னும் லிடியா அரசவமிசத்தவர்களில் முதல்வனான கைஜன் என்பான், கி. மு. 715-690-ம் ஆண்டுவரையில், அரசு புரிந்து வந்தனன். அவனும் அவனது சந்ததியார்களும் ஆசியாவிலிருந்த கிரேக்கர்களின் மீது படையெடுத்து அவர்களுடைய நகரங்களை ஒவ்வொன்றாகக் கைவசப்படுத்திக்கொண்டனர். இவ்வமிசத்திற் றோன்றிய கிரோஸன் என்பான்,

கிரோஸன்.

ஆசியாவிலுள்ள கிரேக்கர்களை முற்றிலும் வென்றதனால், தனது குலத்தினருடைய கோரிக்கையைப் பூர்த்திசெய்தவனானான். அவன் இங்ஙனந்தான் வெற்றிகொண்ட கிரேக்கர்களை நடுவுநிலைமை தவறாமல் ஆண்டும், அவர்களுடைய அன்பைப் பெற்றும், டெல்பியிலுள்ள ஆலயத்திற்கு விலையுயர்ந்த பரிசில்கள் பல அளித்தும், ஸ்பார்த்தர்களது நட்பை நாடியும் இனிதிருந்தான். லிடியாவிற் கிரேக்கபாஷை பரவியது. கிரேக்கர்களது சிறந்த நாகரிகத்



தைக் கண்ணுற்ற லிடியா தேசத்தினர் அதைப் பின்பற்றினர். கிரோஸன், யாவரும் வெல்லுதற்கரிய சார்டிஸ் என்னும் இராசதானியைத் தனது விலைமதிக்கவொண்ணாப் பொக்கிஷத்திற்கு இருப்பிடமாக்கிப் பெருமிதத்தோடு வாழ்ந்துவந்தனன். அதே காலத்தில் மற்றொரு இராச்சியத்தில் எதிர்பாராச் சம்பவங்கள் நிகழ்ந்துவந்தன.

பாரசீக ராச்சியம்: கைரன் எனும் சக்கரவர்த்தியின் அரும் செயல்கள்.

பாரசிகதேசத்தின் ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்திய கைரன் என்பான் முதன்முதல் மீடியா ராச்சியத்தின் ஆளுகைக் குட்பட்ட பாரசிக தேசத்திலுள்ள ஒரு சிறிய பாகத்திற்கு அதிபதியாயினன்; பின்னர் பாரசிகதேசத்தை மீடர்களின் ஆட்சியினின்றும் விடுவித்தான்; அதன்பின்பு மீடர்களது அரசனான அஸ்தியாஜன் என்பானை மீடியா ராச்சியத்தினின்றும் துரத்திவிட்டுத் தானே அதன் ஏகாதிபத்தியத்திற்குத் தலைவனாயினன்; இதர தேசங்களைக் கைப்பற்ற வேண்டுமென்கிற பேராவா பிடர் பிடித்துந்தலும் லிடியாவின் மீது படையெடுக்க முயற்சி செய்துகொண்டிருந்தான்.

இவனது வன்மையை அழிக்கவெண்ணிய கிரோஸன் கப்படோஷியா என்னும் நாட்டைத் தாக்கினான். இவனுக்கும் கைரனுக்கும் நடந்த பெரும் போரில் வெற்றியும் தோல்வியும் இன்னாருக்கென்பது துணியமுடியவில்லை. கிரோஸன் மீட்டுமொருமுறை கைரனுடன் போர்புரிதற்கெண்ணிப் பெருஞ்சேனையைத் திரட்டுவதன்பொருட்டுத் தனது இராசதானிக்குத் திரும்பினான். அங்கிருந்து அவன் பாபிலன்,

எகிப்து, ஸ்பார்த்தா முதலிய இராச்சியங்களின் தலைவர்களைத் தனக்கு உதவிப்படைகளை யனுப்புமாறு வேண்டினன். ஆயினும் அவர்களுடைய படைகள் ஒன்றுசேர்தற் கிடங்கொடாது, கைரன், லிடியாவிற்குள் வெகு தீவிரமாய்ப் புகுந்து, கிரோஸனை எதிர்த்து, முதுகுகாட்டி யோடச் செய்து, முடிவில் அவனைக் கைதியாக்கி, அவனது இராச்சியத்தையும் கவர்ந்துகொண்டான்.

கிரோஸனது தோல்வி.

இங்ஙனம் இராச்சியத்தை யிழந்த கிரோஸன் கைரன் எனும் சக்கரவர்த்தியால் நடத்தப்பட்ட விதத்தைப்பற்றி ஒருகதை வழங்குகிறது. அதை இங்குக் கூறுவாம். கைரன் என்பான் கட்டைகளையடுக்கி அதனிடையே கிரோஸனையும் பதினால்வர் லிடியர்களையும் தளைபூட்டி நிறுத்தித் தீயிட்டனன். கிரோஸன் அத்தீயிடை நிற்குங்கால், ஒருகாலத்தில் சோலன் என்பார் அவனுக்குக் கூறிய, 'இவ்வுலகிலிருந்து வாழும் வரையில் ஒருவனும் களிப்புடையவனாகான்' என்கிற வார்த்தைகள் அவனது நினைவிலுதித்தன. சோலன் எனும் அதேனிய மகான் தமது யாத்திரைகாலத்தில் கிரோஸனுடைய இராசாங்கத்திற்கு வந்து அங்குள்ள பெருமைகள் யாவற்றையுங் கண்ணுற்றனர். அப்போது கிரோஸன் அவரை நோக்கி, 'ஐயா, நீர் இங்குள்ளவர்களில் எவரைக் களிப்புடையவராகக் கருதுகிறீர்?' என வினவினன். அதற்குச் சோலன், 'இறந்துபட்ட சில சாதாரண கிரேக்கர்களையே நான் களிப்புடையவர்களாகக் கருதுகிறேன்' என்றனர். இதைக்கேட்ட அரையன் வியப்பின் மேலீட்டால், 'ஐய, அதேனியரே! நீர்

கிரோஸனும் சோலனும்.



என் முன்னிலையில் சிலரைப்பிரித்து உயர்த்திக் கூறுவதேன்? நமது செல்வமும் பெருமையும் அவ்வளவு குறைந்தனவா?' எனக் கூறினன். அப்பொழுது அம்மகான் வாழ்க்கையின் நிலையாமையைப்பற்றியும், கடவுளினது பொறுமையைப்பற்றியும் எடுத்துக் கூறினார். இச்சம்பாஷணை தீக்கிரையாகுந் தறுவாயில் இருந்த கிரோஸனெண்ணத்திலுதிக்கவும், அவன்வருந்திய குரலில், சோலனை மும்முறை யழைத்தனன். கைரன், அவன் அவ்வாறழைப்பதைக் கேட்டுத் தன்னிடமிருந்தார் சிலரை யழைத்து அவன் யாரை அழைக்கிறானென்பதைக் கேட்கச்சொன்னான். அவனுடைய ஏவலையேற்ற மாந்தர் கிரோஸனை வினவலும், அவன் சிறிது நேரம் வாய்திறவாதிருந்து, பின்னர், 'சோலன் என்பவரையே நான் இப்பொழுதழைக்கிறேன்; ஏனெனில் அவரது சம்பாஷணையால் குரூரச் செய்கைகளைச் செய்வோரும் திருந்தக்கூடும்' என்றனன். தீயோ பற்றியெரிகிறது; எனினும் கைரன், தன் கைதியின் பதிலைக் கேட்டுத் தானும் ஒரு மனிதனே என்பதையும், தானும் கிரோஸனைப்போல் ஒருகால் வருந்தக்கூடுமென்பதையும், உணர்ந்து தணலைத் தணித்துக் கைதியை விடுவிக்கக் கட்டளையிட்டனன். தீயானது மூண்டுவிட்டமையாலும், பக்கத்தில் ஒருவரும் செல்லக்கூடாமலிருந்தமையாலும், அதைத் தணியச் செய்வது மனிதர்களாலாகாத காரியமாயிற்று. பின்னர், அனலிடைப்பட்டு வருந்தும் கிரோஸன் அப்பாலோ எனுங் கடவுளை யுதவிக்குக் கூப்பிட, அக்கடவுள் உடனே மாசற்றிருந்த வானத்தின் கண் சூல்கொண்ட மேகங்களை யேவலும், பெருமழை பெய்து அத்தணலை அணைத்தது.

அஸ்ஸீரியா ராச்சியம் சிதைவுபட்டவுடனே, அதற்கு அதுவரையில் கீழ்ப்படிந்திருந்த கிரேக்க நகரங்களைக் கைரனது தளகர்த்தனை ஹாரற்பகன் என்பான் தன் வன்மையால் ஒவ்வொன்றாகக் கைப்பற்றித் தன் தலைவனது ஆளுகைக்குட்படுத்தினன்.

ஆசியா கிரேக்கர்கள் பாரசீகரது ஆதீனத்திற் குட்படுதல்.

---

## 16. டேரியன் எனும் சக்கரவர்த்தி.

### பிரிவு. 1. ஐரோப்பாவின் மீது டேரியன் எடுத்த முதற் படையெடுப்பு.

கி. மு. 521-ம் ஆண்டில் டேரியன் என்பவர் பாரசீக ஏகாதிபத்தியத்தின் மகுடத்தைச் சூட்டிக் கொண்டனர். தம் இராச்சியத்தைப் பெருகச் செய்ய வேண்டும் என்னும் பேரவா பாரசீகர்களுக்கு எள்ளளவேனுங் குறைந்திலது. ஆகலின் கி. மு. 512-ம் ஆண்டில், டேரியன் ஐரோப்பாவின் மீது படையெடுக்கத் தொடங்கினர். அவர் முதன்முதல் திரேஸ் எனும் நாட்டுக்குடிகளைத் தமக்குக் கீழ்ப்படியுமாறு செய்தனர். அவர், அதன் பின்னர், டானியூப் நதியைக்கடந்து, சிதியா தேயத்தின்கண்புக்கு, அங்குத் தம் வீரத்தை நிலைநிறுத்தித் தம்தேயத்திற்குத் திரும்பியதாகச் சரித்திராதிபர் கூறுநிற்பர். இதன் பின்னர், மெகபாதன் என்னும் பெயரினனாகிய பாரசீகத் தளகர்த்தன் மாஸிடோனியா என்னும் நாட்டைக் கைப்பற்றினன்.



### பிரிவு. 2. அயோனியர்களின் கிளர்ச்சி.

அயோனியர்களின் கிளர்ச்சி. கி. மு. 499-494.

ஆசியாவின்கண்ணுள்ள கிரேக்கர்கள் பாரசீகரது ஆட்சிக் குட்படுத்தப்பட்டனர் என்று முன்னமேயே கூறியுள்ளோம். இவர்கள், டேரியனது ஆட்சியின் கொடுமையினால் வருந்தி, மைலீட்டஸ் எனும் இராச்சியத்தின் வல்லரசனாயிருந்த அரிஸ்தாகரன் என்பானைத் தமக்குத் தலைவனாகக்கொண்டு, பாரசீக ராசாங்கத்திற்கு விரோதமாய்க் கலகம் விளைத்தனர். இக்கலகத்தில் ஆசியா கிரேக்கர்களில் அயோனிய வகுப்பைச் சேர்ந்தவர்களே வெகுவாகப் பாடுபட்டனர். அவ்வல்லரசன் முதன்முதல் மைலீட்டஸ் நகரின்கட் குடியரசை நிலைநிறுத்தினன். பின்னர் மற்ற கிரேக்க நகரங்களிலாட்சி செலுத்திவந்த வல்லரசர் பலரையும், தழலின் சிறு பொறியொன்று பெரும் பஞ்சுப் பொதிகளைச் சாம்பராக்கி யொழிப்பதே போன்று, வேரோடழித்தற்கு அவ்வரிஸ்தாகரன் பேருதவி புரிந்தனன். தவிர அவன், கிரீஸ்தேயத்தை யடைந்து, ஆங்குள்ள ஸ்பார்த்தர்களுடைய உதவியை வேண்டினன்; ஸ்பார்த்தர்கள் தன் வேண்டுகோட் கிசையாததை யுணர்ந்து, பின்னர் அதேனா ராச்சியத்திற்கும் யூபியா நாட்டிலுள்ள எரித்திரியா எனுமிராச்சியத்திற்கும் சென்று, அவ்விராச்சியத்தினர்களைத் தனக்குத் துணை யனுப்புமாறு மன்றாடிக் கேட்டுக் கொண்டனன். இவ்விரு இராச்சியங்களும், ஸ்பார்த்தாவைப்போன்று பின்வாங்காது, கப்பற்படையை அயோனியர்களுக்கு உபபலமாக வனுப்பின. அதேனியர், எரித்திரியர், ஆசியாதேசத்து அயோனியர்

ஆகிய இவர்கள் ஒன்றுசேர்ந்து லிடியா ராச்சியத்தின் தலைநகராகிய சார்டிஸ் எனு நகரத்தைத் தங்கள் கைவசப்படுத்தினர். அந்நகரின்கண் அவர்கள் தங்கியிருந்தபோது, திடீரெனத் தீப்பிடித்தலும், அந்நகரஞ் சாம்பராயொழிந்தது. அதன்பின், அதேனியர்களும் எரித்திரியர்களும், தங்கள் தேயங்கட்குத் திரும்பிப் போகையில், வழியில் அயோனியர்களது கடற்கரையோரத்தில் எபீஸஸ் என்னும் நகருக் கருகில் நிகழ்ந்த கப்பற்போரில் தோல்வியடைந்தனர். அதன்பின்பு அதேனியர் தந்தேயத்தைச் சேர்ந்தனர். அயோனியர்களது கலகத்தில் அதேனியர்களின் கூட்டுறவு இத்துடன்முடிவுற்றது. சார்டிஸ் நகரம் அனல்வாய்ப்பட்டழிந்தமையான், ஆசியாமைனரிலுள்ள மற்றக் கிரேக்கர்களும் கலகத்திற் றலையிடத் துணிந்தனர். ஆயினும் பாரசீகர்கள் படிப்படியாக வெற்றிபெற்றுவிளங்கினர். அரிஸ்தாகரன் வேடன் வலையினின்று விடுபட்ட மானெனத் திரேஸ்நாட்டிற் கோடி அங்குக் கொல்லப்பட்டனன். கலகம் முடிந்தபின் அவனது மாமனுஞ் சிலுவையிலறையப்பட்டனன். இங்ஙனம் கி. மு. 499-ம் ஆண்டிற் றொடங்கிய கலகம் கி. மு. 494-ம் ஆண்டில் அடங்கிவிட்டது.

இக்கலகத்தினால் உண்டான பலன்கள்

இனி, இக்கலகத்தினால் விளைந்த பலன்களிற் சிலவற்றை இங்கெடுத்துக் கூறுவோம். ஆசியாவின்கண்ணுள்ள கிரேக்கர்கள் சுயராச்சியத்தையிழந்தனர். தவிர, இக்கலகம் பாரசீகர்கள் கிரேக்கதேயத்தின் மீது படையெடுத்தற்குக் காரணமாயிருந்தது; எவ்வாறெனின், சார்டிஸ் பட்டணம் அதேனியர்களாலும் எரித்திரியர்களா



லும் அனற் கிரையாக்கப்பட்டதென, டேரியன், காரணமின்றிக் கருதி, அவர்கள்மீது அளவிலாச் சினங்கொண்டு, அவர்தமை யழித்தொழிக்கத் தீர்மானித்தனர்.

## பிரிவு. 3. ஐரோப்பாவின்மீது டேரியன் எடுத்த இரண்டாம் படையெடுப்பு, கி. மு. 492.

இனி ஐரோப்பாவின்கண் பாரசீகர்களுக் குரியனவும் அயோனியர்கள் கலகத்திற் சம்பந்தப்பட்டனவுமாய சில நாடுகளை மறுபடி கைக்கொள்ளவும், அதேனியர்களையும் எரித்திரியர்களையுந் தண்டிக்கவுங் கருதி, டேரியன் தொடங்கிய இரண்டாம் ஐரோப்பியப் படையெழுச்சியைப்பற்றி மிகச் சுருக்கமாகக் கூறுவாம். பாரசீகத் தளகர்த்தனாகிய மார்டோனியன் என்பான், திரேஸ், மாஸிடோனியா என்னும் நாடுகளிற் பாரசீகர்களின் அதிகாரத்தை மீண்டும் நிலைநிறுத்தியபின்னர், தேஸாஸ் என்னும் தீவைக் கைப்பற்றினன். அதன்பின், அதேனியர்களை அழிக்கவேண்டுமென்னும் அடங்காப் பேரவாவினால், அவன் தென்றிசை நோக்கி வருங்காலை, ஆதாஸ் முனையைச் சுற்ற வேண்டியது அவசியமாயிற்று; அங்ஙனஞ் சுற்றிவருங்கால் பாரசீகக் கப்பல்களிற் பல உடைந்தொழிந்தன. ஆதலால் மார்டோனியன் தன் தலைவனிடமிருந்து ஏற்ற காரியத்தை இயற்ற இயலாதவனாயினன்.

## பிரிவு. 4. கிரேக்கர்கட்கும் பாரசீகர்கட்கும் நிகழ்ந்த முதற் பெரும் போர் கி. மு. 490.

மார்டோனியன் என்பான் முடியாது விட்ட காரியத்தை முடித்தற்பொருட்டு, டேரியன் ஐரோப்

பாவின்மீது மூன்றுமுறை படையெடுத்தான். இதைக் கிரேக்க தேயத்தின்மீது பாரசீகர்கள் எழுப்பிய முதற் படையெழுச்சியெனவுங் கூறலாம். கிரேக்கர்கட்கும் பாரசீகர்கட்கும் இடையில் நடைபெற்ற யுத்தத்தைக் கிரேக்கர்கள் உள்ளிட்ட ஐரோப்பியர்கட்கும், பாரசீகர்கள் உள்ளிட்ட ஆசியாக் கண்டத்தவர்கட்கும், நடந்த யுத்தமெனவும் உரைக்கலாம். ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்கும், ஆரியர்கட்கும் ஆரியரல்லாதார்க்கும், கீழ்நாட்டவர்க்கும் மேனாட்டவர்க்கும், பூவுலகந் தோன்றிய நாள்தொட்டுப் பன்னெடு நாட்களாய் நடந்துவரும் போராட்டத்தில், இஃதொரு கிளைக் கதையாகும். கிரேக்கர் தம் நாகரிகமும், பல்வகைத் தொழில்களில் அவர்களுக்குள்ள பயிற்சியும் பாரசீகர்களின் தாக்குக் கிலக்காகி யழிந்து போய்விடும் போற் றோன்றியது. ஆயினும், மானிடர்களது நற்காலத்தின் விசேடத்தால், கிரேக்கர்களது நாகரிகமும் சுதந்திரமும் காக்கப்பட்டது. பாரசீகர்கள் கிரேக்க தேயத்தினின்றும் புறங்காட்டியோடினர்.

கிரீஸ்தேயத்தின் மீது எழுந்த பாரசீகர்களின் முதற் படையெழுச்சியினது உண்மை இயல்பு.

இங்ஙனமுண்டான போர்க்கு எவை தாம் காரணங்களெனின் கூறுவோம். டேரியன் என்னும் மன்னர் மன்னனுடைய மனத்தின்கண் அதேனு எரித்திரியா ஆகிய இவ்விராச்சியங்களை, ஆதவனைக்கண்ட பனித்துளிகளைப்போல், அழிந்துபடச் செய்தல்வேண்டுமென்கிற எண்ணம் குடிகொண்டிருந்ததென முன்பே கூறியுள்ளோமன்றோ? தவிர, தம் முன்னோரை விட்த்

இப்போர்க்குக் காரணங்கள்.



தாம் அநேக தேயங்களைப் பாரசீகர்களின் ஆட்சிக்குட்படுத்த வேண்டுமென்கிற எண்ணமும் அவர் அகத்தை அடிமைகொண்டது. கிரீஸுக்கும் பாரசீகத்திற்கும் இடையில் போர் நிகழும் என்பதும், கிரீஸ் குறைவடையுமாறு பாரசீகர்கள் தம் இராச்சியத்தின் எல்லையைப் பெருக்க முயல்வர் என்பதும் அகங்கை நெல்லிக்கனி யென யாவரும் அறிந்துகொள்ளக்கூடிய விடயமே. இனி, இரு சாராருடைய படைத்திறம் முதலியவற்றை ஒப்பு நோக்குவாம். பாரசீகர்கள் நாகரிகத்திற் கிரேக்கர்களுக்குத் தாழ்ந்தவர்களல்லர். தவிர அன்னார் ஒரு பெரிய எகாதிபத்தியத்தை யுடையவர்களாயிருந்தனர். அவ்விராச்சியத்தின் எண்ணற்ற சாதனங்கள் ஒரே மன்னருடைய கட்டளையின்கீழ் அவர்தம் மனப்போக்கின்படி உபயோகிக்கத் தக்கனவாயிருந்தன; ஆனால் கிரேக்கர்களில் ஒற்றுமை கிடையாது. எனினும் கிரேக்கர்களது நாகரிகம் முற்றும் ஒவ்வொருவரும் மதவிடயத்திலும், ஆசாரத்திலும், இராச்சியச்சார்பான விடயங்களிலும் சுதந்திரமுடையராய் இருத்தல் வேண்டுமென்னும் கொள்கையின் மேல் ஏற்பட்டது. பாரசீகர்களின் நாகரிகமோவெனின் புரோகிதர்களது அதிகாரத்திற்கும் அரசரது அதிகாரத்திற்கும் கண்மூடித்தனமாய்க் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டுமென்கிற கொள்கையைப் பற்றுக்கோடாகவுடையது. போர்முனையில் தம்வீரத்தைக் காட்டுதல் இரு ஜாதியினர்களுக்கும் இயல்பாயிருந்தது. ஆயினும் கிரேக்கர்கள், சுதந்திரத்துடன் வாழ்ந்து வந்தமையான், வெற்றியடையக் கூடியவர்க

இருதிறத்தினரின் பலாபலங்களை ஒப்பு நோக்குதல்.

ளாகவே இருந்தனர். காரியசித்தி யடைதற்கான ஏற்பாடுகள் செய்தற்கு அவர்களின் புத்தியின் திறமே பேராதரவா யிருந்தது.

இப்படையெழுச்சியின் நிகழ்ச்சிகள்.

இனிக் கீர்த்தி வாய்ந்த இப்படையெடுப்பில் நடந்தேறிய சில நிகழ்ச்சிகளை இங்குக் கூறுவோம். ஆர்த்தபெர்னன், டேதின் என்பவர்களால் நடத்தப்பட்டும், ஹிப்பையன் என்பவரால் பின்தொடரப்பட்டும், வந்த பாரசீகப்படை ஈஜியக்கடலைக்கடந்து, நாக்ஸாஸ் முதலிய பல தீவுகளையும் வென்றுவந்தது. பின்னர்ப் பாரசீகர்கள் யூபியாவின் பட்டணமாகிய எரித்திரியாவைச் சார்டிஸ் அழிபட்டதற்குக் காரணமென்றெண்ணி அதை எரிக்கிரையாக்கினர். முடிவில் அவர்கள் அட்டிக்காவின் கீழ்க்கரையான மாரதான் விரிகுடாவில் வந்திறங்கினர். அதேனாவில் கல்லிமாக்கஸ் என்ற சேனைத்தலைவர் பெயருக்கு மாத்திரம் தளகர்த்தரா யிருந்தார். மில்தியாடன் என்பவரே பாரசீகரோடுநேர்ந்தபோரில் அதேனியர்களுக்கு ஆவிபோன்றிருந்தவர். அதேனியர்கள் ஸ்பார்த்தர்களை யுதவிபுரியுமாறு வேண்டினர்; எனினும், மதசம்பந்தமான சிற்சில காரணங்களால், அதேனியர்களுக்கு ஸ்பார்த்தர்கள் படையனுப்பாமலிருந்துவிட்டனர். பிளத்தேயர்கள் மாத்திரம், அதேனியர்களின் வேண்டுகோட்கிணங்கி, மாரதான் போர்க்களத்திற்குப் போரில் தேர்ச்சிபெற்ற ஓராயிரம் வீரர்களை யனுப்பினார்கள். அங்குக் கூடிய போராலோசனைச் சபையின்கண் மில்தியாடன் என்பார் பாரசீகர்களின் வருகைக்காக அதேனியர்கள் தம் நகரினுள்ளிருத்தல் கூடாதென்றும் வீரத்துடன் மாரதானுக்குச் சென்று ஆங்கு எதிரிகளைச்



சந்தித்தல் வேண்டுமென்றுங் கூறினர்.

மாரதான் சண்டை.

அவ்வாறே ஒன்பதினாயிரம் வீரர்களைத் தன்னுட்கொண்டதோரதேனியப்படை, மாரதானுக்குச் சென்று, அங்குத் தம் விரோதிகளை யெதிர்த்து, அவர்களை முற்றும் தோற்கடித்துவிட்டது. பாரசீகர்கள் அதேனியருடன் சமர்புரியலாற்றாது நிலைகெட்டு ஆசியாவிற்குத் திரும்பிவிட்டனர்.

மாரதான் வெற்றியினால் உண்டான பலன்கள்

அதேனியர்களது சரித்திரத்தில் மாரதான் பெரும்வெற்றி மனதிற்கு மட்டிலா மகிழ்ச்சியை யூட்டுமோர் சம்பவமாயிருந்தது. கி. மு. 5-ம் நூற்றாண்டில், அதேனா நகரம் சிறப்புற்றொளிர்ந்ததற்கு இவ்வெற்றியே காரணம். அதேனியரது இவ்வரிய பெரிய செய்கை, மீளவும் அதேனா நகரில் வல்லரசை நிலைபெறச் செய்தல் வேண்டுமெனக் கருதிப் போந்த ஹிப்பையன் என்பவனிடமிருந்தும், பாரசீகர்களது கொடுங்கோன்மையினின்றும், அதேனியர் தம் குடியரசையும் உரிமையையும் காப்பாற்றியது. அதேனாவிற் குடியரசை முன்னரே க்ளையஸ்தினன் தாபித்தமையின், அதேனியர்கள் இவ்வெற்றியை யெளிதிற் பெற்றார்கள். ஆதலிற் குடியரசே சிறந்ததென்பது வெள்ளிடைமலைபோல் விளங்கியது. அதேனியர்கள் மற்ற கிரேக்கர்களைவிடப் பெருமைவாய்ந்த மகோன்னத பதவியடைதற்குத் தம் குடியரசே தகுந்த கருவியாமெனவும் தாம் அதை நம்பியிருத்தலாமெனவும் கருதினர். கிரேக்கர்களுக்குள் அதேனியர்கள் திடீரெனப் பெருந்தைரியமுடையவர்களாகவு மாய்விட்ட

னர். அதேனியருடைய வெற்றியே அவர்தமக்குச் சுயநம்பிக்கையையும் அளவிடற்கரிய ஊக்கத்தையும் கொடுத்துப் பாரசீகர்கள் அதன் பின்னர் எழுந்த படையெழுச்சிகளை யெதிர்த்துத் தாக்குதற் குரிய பேருற்சாகத்தையும் உண்டுபண்ணிற்று. ஒரேதாக்கில் கிரேக்க ராச்சியங்களுக்குள் அதேனா நகருக்குச் சிறந்த பதவி சித்தித்துவிட்டது. இவ்வெற்றி, அதேனாவைக் காப்பாற்றியதுமன்றி, கிரீஸையும் ஐரோப்பாவையும் ஆதரித்தது. ஆதலின் உலகில் நிகழ்ந்த பெரும்போர் பலவற்றுள்ளும், இம் மாரதான் யுத்தம் மிகச் சிறந்தவைகளில் ஒன்றெனக் கருதப்படுகிறது.

---

## 17. செர்க்கிஸன் சக்கரவர்த்தி.

### பிரிவு. 1. பாரசீகர்களது இரண்டாம் படையெழுச்சி.

### கி. மு. 480-479.

இரண்டாம் படையெழுச்சியில் நேர்ந்த முதல் யுத்தம். கி. மு. 480.

டேரியனுக்குப் பின்வந்த செர்க்கிஸன் சக்கரவர்த்தி மாரதான் இரணகளத்தில் இறந்துபட்ட பாரசீகர்களின் பொருட்டுப் பழிக்குப் பழிவாங்க முயன்றார்; பாரசீகர்கள் இழந்த பெருமையை மீட்டுக்கோடற்கும் பாரசீக ராச்சியத்துடன் கிரீஸைச் சேர்க்கவுங் கருதி மார்டோனியன் என்பானது தூண்டுதலின்மேல் இரண்டாவதாகக் கிரீஸின் மீது படையைக் கிளப்பினார். அப்படையெடுப்பின் பொருட்டுக் கூட்டப்பட்ட பாரசீகச் சேனைக்கு ஆசியாவிலுள்ளனவும் பாரசீகரது ஆட்சிக்குட்பட்டனவு மாகிய நாற்பத்தாறு தேசங்



களின் சேனைகளும் உதவிக்குவந்தன. அம்மன்னர் தம் உத்தரவைத் தலைமேற்கொண்டு சிற்பிகள் பலர் அப்பெருஞ் சேனை கடந்து செல்லற்கு, ஹெல்லஸ்பாண்டு ஜலசந்தியின் மீது பாலமிட்டு, ஆதாஸ் எனும் பூசந்தியின் குறுக்கிற் கால்வாய்வெட்டி வேண்டியவைகளைப் புரிந்தனர். செர்க்கிஸன் சார்டிஸ் நகரினின்றும் ஹெல்லஸ்பாண்டிற்குச் சென்று, அங்கிருந்து திரேஸ், மாஸிடோனியா என்னும் இடங்களின் வழியாகப்போய், முடிவில் ஆலிம்பஸ் குன்றுக்கு அணித்தாக வந்துசேர்ந்தனர்.

பாரசீகரை வெல்ல கிரேக்கர் செய்த ஏற்பாடுகள்.

இது நிற்க, இனித்தம்மை எதிர்க்க வருஞ்சேனையைத் தடுத்தற் பொருட்டுக் கிரேக்கர்கள் எவ்வாறு முயன்றனரென்பதைச் சற்று நோக்குவோம். கிரீஸைப் பாதுகாத்தற் பொருட்டு ஸ்பார்த்தாவின் அக்கிராசனத்தின்கீழ்த் தேசாபிமானமுள்ள நாற்பத்தாறு கிரேக்க ராச்சியங்களினின்றும் பிரதிநிதிகள் காறிந்த் எனும் பூசந்திக்கு வந்து அங்கொரு பெருஞ் சபை கூடினர். கிரேக்கர்களினிடத்தில் பெருகி வரும் ஒற்றுமையைக் காட்டுதற்கு இப்பேரவையே போதிய சான்றாம். பற்பல நகரங்களினின்றுந் துணைப்படை யழைக்கவேண்டியிருத்தலின் அந்நகரங்கட்கு தூதுவர் பலரை யனுப்புதல்வேண்டுமென அப்பேரவையினர் தீர்மானித்தனர். அவ்வபாய காலத்தில் அதேனா நகரம் பழைய விரோதங்களைப் பாராட்டுதலொழித்துத் தனக்கு நெடுங்கால விரோதியான ஈஜினாவினுடன் நட்புபூண்டது. காற்சைரா எனும் இராச்சியம் உதவி புரிவதிற் கவலைபற்

திருந்தது. ஐக்கியபடைக்கு ஸ்பார்த்தாவினதிபதி லியோனிடான் என்பவர் சேனைத் தலைவராகவும், ஸ்பார்த்தரில் ஒருவராய யூரிபையாதன் என்பார் கப்பற்படைத் தலைவராகவும் ஏற்படுத்தப்பட்டனர்.

இனி, முதற் போரின்கண் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை ஆராய்வாம். தெஸ்ஸலி யெனு மிடத்தைப் பாதுகாத்தற்பொருட்டு அதன் வடபாலுள்ள டெம்பி யெனும் கணவாயைக் காக்க, கிரேக்கர் ஓராயிரம் போர்வீரர்களை அங்கனுப்பினர். எனினு மிச்சேனை செர்க்கிஸன் தெற்கு நோக்கி வருதற்கு வேறு பல்கணவாய்களு மிருந்தமையின் தான் அக்கணவாய்கள் பலவற்றையுங் காத்தல் கடினமென்றுன்னி டெம்பியினின்றும் பின்வாங்கியது. இதனால் டெம்பிக்கும் தெர்மாப்பிலே எனு மிடத்திற்கும் இடையிலுள்ள வடகிரீஸ் முழுமையும் செர்க்கிஸனுக்குக் கீழ்ப்படிந்தது. துரதிருட்டத்தின் பயனால் முந்நூறு ஸ்பார்த்த வீரருடனும், சில்லாயிரம் நேயத் துருப்புகளுடனும், தெர்மாப்பிலே யென்னும் கணவாயின் வழியாக மத்திய கிரீஸுக்கும் பாரசீகரை வரவிடாவண்ணம் அக்கணவாயைக் காத்தற் பொருட்டு லியோனிடான் என்

தெர்மாப்பிலே என்னும் கணவாயில் நேர்ந்த போர்.

பார் அனுப்பப்பட்டார். அங்குப் பாரசீகருடன் பெரும்போர் நடந்தது. முடிவில் செர்க்கிஸன் ஒரு கிரேக்கனது வஞ்சனையால் கணவாயின் பின்புறத்தே வந்தனன். பாதுகாப்புக்காகச் சென்றோர்களது நிலைமை மிக வபாயகரமாயினமையின், தெர்மாப்பிலேவிற்கு லியோனிடானைப் பின்பற்றிச் சென்ற நேயப்படைகளி லநேகம் பின்வாங்



கும்படி நேர்ந்தது. பின்னர் ஸ்பார்த்தர்களுக்குச் சிறந்தவராய லியோனிடான் என்பார் தமக்கு மரணமுண்டாதல் திண்ணமென உணர்ந்தும், தாமும் தம்முடன் நின்ற அழியாப் பெரும் புகழ் வாய்ந்த முந்நூறு ஸ்பார்த்த வீரர்களும் அவ்விடத்தினின்றகலாமல் செர்க்கிஸன் என்பாரோடு பெரும்போர் புரிந்து மண்ணுலகை விட்டு விண்ணுலகேகினர். இதனால் இவர்கள், புலாலுடம்பினின்றும் நீங்கினார்களெனினும், அழியாப் புகழுடம்பு பெற்றனர்.

இனி ஆர்த்திமிஷியம் எனுமிடத்திலும் அதற்கு

ஆர்த்திமிஷியத்தில் நடந்த கப்பற் சண்டை.

அணித்தாயுள்ளவிடத்திலும் நடந்த கப்பற் சண்டையைப்பற்றிச் சுருங்கச் சொல்லுவாம். பாரசீக நிலப்படையுடன் பாரசீகக் கப்பற்படையுந் தென்றிசை நோக்கிச் சென்றது. கிரேக்கரது கப்பற்படைக்கும், பாரசீகரது கப்பற்படைக்கும் ஆர்த்திமிஷியம் எனுமிடத்திற் பெரும்போர் பல நிகழ்ந்தன. அவற்றில் கிரேக்கர்கள் தோல்வியடைந்தனர். தெர்மாப்பிலேவின்கண் உண்டான பெருஞ் சேதத்தைப்பற்றிய விடயம் தம் செவிக்கெட்டினதும், கிரேக்கர்கள் அட்டிக்காவினது கடற்கரையை நாடிச் சென்றனர். செர்க்கிஸன் என்பார், தெர்மாப்பிலே என்னுங் கணவாயைக் கைப்பற்றிய பின்னர், அட்டிக்காவின் மேற்புறத்துள்ள இராச்சியங்கள் பலவற்றையும் தமதுரிமைக்குட்படுத்தி, மத்திய கிரீஸ் வழியாகச் சென்றனர். அதேனியர்கள், தமது நகரத்தின்கண் இருக்க அஞ்சி, சாலமிஸ் எனுமிடத்திலுள்ள கிரேக்க கப்பற்படையின் உதவியைக் கொண்டு, பாதுகாப்போடிருந்த ஈஜினா, சாலமிஸ் எனு

மிவ்விடங்களுக்குச் சென்றனர். அதேனிலுள்ள நகரமாந்தரனைவரும் அதை விட்டு நீங்கியதும், செர்க்கிஸன் அதன் கோட்டையைத் தீவாய் மடுத்தனன். இதற்குள் பாரசீகரது கப்பற்படை சாலமிஸ் எனும் தீவையணுகி, சாலமிஸ் விரிகுடாவிற்கு வடபாலுள்ள வழியையடைந்தது. இதற்கு முன்னரே கிரேக்க கப்பற்படை அத்தீவையடைந்து சாலமிஸ் விரிகுடாவின்கண் தங்கியிருந்தது. சாலமிஸ் என்னும் விரிகுடாவாகிய குறுகிய இடத்திற் போர் நிகழ்ந்தால் பாரசீகப்படையைவிட எண்ணிக்கையிற் குறைவாயிருந்த நேயப்படைக்கு நன்மை உண்டாகும். தவிர, அதேனியர், ஈஜினிட்டர், மிகேரியர் ஆகிய இவர்கள் சத்துருக்களால் தாக்கப்படுமாறு விடப்படமாட்டார்கள். சாலமிஸ் என்னும் விரிகுடா குறுகிய இடத்ததாகலின், அதன் வழியே பாரசீகர்கள் தம் கப்பற்படையைச் செலுத்திப் போர்புரிவது கூடாத காரியமேயாகும்; அவ்வாறு புரிந்தால் அவர்கள் அழிந்திருப்பர் என்பது திண்ணம். தெமிஸ்தாக்கிளன் என்னும் அதேனியத்தலைவர் இதைப்பற்றி நேயப்படைத்தலைவர்களுக்குப் பலவாறு வற்புறுத்திக் கூறியும், அவரது நன்மதியை ஏற்றுக்கொள்ளாது, அப்படைத்தலைவர்கள் சாலமிஸ் என்னுமிடத்தைவிட்டு, அதற்குத் தென்முகமாகவுள்ள காரிந்த் பூசந்திக்குச்சென்று, அங்குத் தம்மைத் தாக்கக்கருதி வரும் பாரசீகரை எதிர்பார்த்திருத்தல் வேண்டுமென நிச்சயித்தனர். எனினும், அறிவின்மிக்க அதேனியத் தலைவராம் தெமிஸ்தாக்கிளன் என்பார், தாம் தம் தேயத்திற்குப் பகைமை பூண்டொழுகுவார் போன்று நடித்து, தமது அடிமை மூலமாக செர்க்கிஸனுக் கோர் சமாச்சாரம் விடுத்தனர். அஃ



தாவது: சாலமிஸ் விரிகுடாவிற்குத் தென்முகமாகவுள்ள காரிந்த் சலசந்தியின்கண் சென்று கிரேக்கர்கள் போர்புரியக் கருதியிருப்பதாகவும், அவர்கள் அங்ஙனம் புரிவரேல் பாரசீகர்களுக்குத் தோல்வியுண்டாதல் திண்ணமெனவும், அவர்கள் அவ்வாறு புரிவதற்கு முன்னரே சாலமிஸ் விரிகுடாவின் தென்பாரிசத்திலுள்ள வழியையடைத்துக்கோடல் செர்க்கிஸனுக்கு இன்றியமையாததோர் சூழ்ச்சியாகுமென்றும், அச்சமயம் கிரேக்கர்களுக்குள் ஒற்றுமையின்மை ஏற்பட்டிருந்தமையால் அவர்களை வெல்வது எளிதென்றும் கூறிவிடுத்தனர். செர்க்கிஸன் தெமிஸ்தாக்கிளன் கூறியது உண்மையேபோலுமென்றுன்னி யங்ஙனமே புரிந்தனன். 'பொய்யுடை யொருவன் சொல் வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே' என்னும் அதிவீரராமனார் தாழ்ந்த கருத்தைத் தெமிஸ்தாக்கிளன் என்பானிடத்து விளக்கியது. பின்னர், கிரேக்கர்கள், தாம் இருபுறத்தினும் பாரசீகப்படையால் சூழப்பட்டமையின், மற்றைத் தலைவர்கள் கூறியபடி காரிந்த் ஜலசந்தியிற் சென்று போர்புரிதல் இயலாதெனக் கண்டனர். பின்னர், தெமிஸ்தாக்கிளன் கருத்திற்கேற்றபடி, சாலமிஸ் எனும் இடத்திலேயே போர்நிகழ்ந்தது. அப்போரின்கண் பாரசீகர்களைக் கிரேக்கர்கள் வென்றுவிட்டனர்.

**சாலமிஸ் சண்டை.**

**சாலமிஸ் யுத்தத்தினால் உண்டாய வெற்றியின் பயன்.**

இச்சிறந்த வெற்றியின் பயன்களை விரித்துக் கூறுதல் இன்றியமையாததாகலின் ஈண்டியம்புதும். செர்க்கிஸன் ஐரோப்பாவினின்றும் பெருங்காற் றெதிர்ப்பட்ட இலவம்பஞ்சென வெகு விரைவிற் பின்வாங்கினர். அவ்வெற்றி, பாரசீகர்களது கப

பற்படையைச் சிதைத்து அவர்கள் மற்றொருகால் கப்பற்படையி னுதவியைக்கொண்டு படை யெடாதபடி செய்துவிட்டது. அதேனாநகர் முழுவதும் எரிவாய்ப்பட்டுக் கெட்டொழிந்ததெனினும், அதேனியர்களது மனோபலமும், கப்பற்படையும் கெட்டொழிந்தில. இனி, வருங்காலத்து, அதேனியர்கள் இராச்சிய விடயத்திலும், வியாபார விடயத்திலும் மேலான நிலைமையை யடைவரென்பதற்கோர் ஐயப்பாடு முளதோ? மேற்கூறிவந்த பெரும்போர் கப்பற்படையில் மாலுமிகளாயிருந்த சாமானிய ஜனங்களால் வெல்லப்பட்டது. ஆதல்பற்றி, இராச்சியத்தில் சாதாரண மாந்தர்கட்கும் அதிகாரம் மிக்கது. அதனால் அடுத்த தலைமுறையில் அதேனாவின்கண் குடியரசு மிகச் சிறப்படைந்தது. கிரேக்கர்களது உரிமையை இரண்டாமுறையாகக் காப்பாற்றியதும் அவ்வெற்றியே யாகும். அது கிரீஸ்தேசத்துக் கல்விக்கும் நாகரிகத்திற்கும் ஒரு தூண்டுகோற்போன்று மிருந்தது.

இரண்டாம் யுத்தம். கி. மு. 479.

பாரசீகச் சேனாதிபதியாகிய மார்டோனியன் என்பான் இரண்டாம் பாரசீகப் படையெடுப்பில் இரண்டாம் யுத்தம் செய்யும்படி கட்டளையிடப்பட்டனன். மார்டோனியன், மாஸிடோனியாவின் அதிபதி அலெக்ஸாந்தர் மூலமாய், அதேனியர்களைத் தம்முடன் தனியே உடன்படிக்கை செய்துகோடற்குத் தூண்டினன். அந்த நாகரிகமற்றவருடன் அதேனாநகரம் உடன்படிக்கை செய்துகோடலைத் தடுத்தற்பொருட்டு, ஸ்பார்த்தா அதேனாவிற்குத் தூதர் பலரை அனுப்பியது. அதேனியர்கள் கிரேக்கர்களது



பொது நன்மைக்காகத் தாம் உண்மையுடன் உழைத்தலை வற்புறுத்திக்கூறி, பாரசீகர்களது உடன்படிக்கைக்கு இணங்காது, அவர்களை வெல்ல உபபலம் அனுப்பும்படி ஸ்பார்த்தாவைக் கேட்டுக்கொண்டனர்; ஸ்பார்த்தாவும் அங்ஙனமே புரிதற்கு வாக்களித்தது; ஆயினும் அஃது அங்ஙனம் உதவியனுப்புதலிற் காலந்தாழ்த்தியது. ஆகலின், அதேனியர்கள் தத்தங் குடும்பங்களைச் சாலமிஸ் என்னுமிடத்திற் கனுப்பிவிட்டுத் தமது நகரைத் திரும்பவும் அந்த நாகரிகமற்றவர்கள் கைப்பற்றிக்கோடலைக் காணும்படி நேர்ந்தது. அவர்கள் ஸ்பார்த்தாவை உதவியனுப்புமாறு மற்றுமொரு முறை கேட்டனர்.

வெகுகாலந் தாமதித்துப் பின்னர் பாஸேனியன் என்பார், கிரேக்கர்களது உரிமைக்காகப் போராடக்கருதி, ஐயாயிரம் படைவீரர்களுடன் ஸ்பார்த்தாவினின்றும் வடதிசை நோக்கிப் புறப்பட்டார்; வழியில் திரள் திரளான சேனைகள் இவரது சைனியத்துடன் சேர்ந்தன. பாஸேனியனது வருகையைக் கேள்வியுற்றதும், மார்டோனியன் என்பான் அதேனாவையகன்று, பியோஷியா எனு நாட்டினுட் புகுந்து, பிளத்தேயா எனு நகரத்திற் றங்கினன். பிளத்தேயாவின்கண் பெரும்போர் நிகழ்ந்ததிற் கிரேக்கர்களே வெற்றி பெற்றனர். மார்டோனியன் இரணகளத்தில் உயிர்துறந்தான். பிளத்தேயாவில் நடந்த இப்பெரும்போர் உலக சரித்திரத்திலுள்ள முக்கியமான யுத்தங்களில் ஒன்று. இதில் உண்டான வெற்றி பாரசீகப் பகைவரிடமிருந்து கிரீஸைக் காப்பாற்றியது. பின்னர், பாரசீகர்கள் கிரீஸ் தேசத்தின் உரிமையை யழிக்கப் பெருமுயற்சி யொன்றும் செய்திலர்.

கி. மு. 479 ஆண்டில், ஆசியாவின் கடற்கரையினணித்தாய், சாமாஸ் எனுந் தீவுக் கெதிரிலுள்ள மைக்கேல் எனுமோரிடத்திற் கிரேக்கர்களது கப்பற்படை, பாரசீகர்களது நிலப்படையையுங் கப்பற்படையையும் புறங்கண்டது. இவ்வெற்றியின் பின்னர், ஆசியாவிலுள்ள கிரேக்கர்கள் வெகு தீவிரமாய்ப் பாரசீக ஆட்சிக்குப் பகைமை பூண்டெழுந்தனர். எனினும் பெலப்பொனீஸைச் சேர்ந்த சேனாதிபதிகள் ஆசியாவிலுள்ள கிரேக்கர்களைத் தமது பாதுகாப்பிலமைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆதல்பற்றி, ஆசியாவிலுள்ள கிரேக்கர்களை யாதரிக்குஞ் சுமையை அதேனியர்கள்மீதமைத்துவிட்டு, அவர்கள் தந்தேயத்திற்கு மீண்டனர். பின்னர், அதேனியர்கள், சாந்திப்பன் என்பாரது தலைமையின் கீழ், வடக்கே சென்று, செஸ்தாஸ் எனு நகரத்தைப் பாரசீக ஆட்சியினின்றும் விடுவித்தனர். இதனோடு பாரசீகரது படையெழுச்சியின் வரலாறு முடிகிறது.

---

## 18. பாரசீகப் படையெழுச்சிக்குப்பிற்பட்ட அதேனா ராச்சியத்தின் வரலாறு.

### பிரிவு. 1. டீலிய ஐக்கியஆட்சிச்சங்கம்.

பாரசீகர்களது படையெடுப்பிற் கிரீஸ் தேயத்தைக் காத்தளித்ததன்பயனால் அதேனியர்கட்குக் கிரேக்க ஆசியாவில் ஏகாதிபத்தியம் உண்டாயிற்று. அதேனா நகரம் டீலியச்சங்கமென்ற ஓர் சங்கத்திற்குத் தலைமை பூண்டது. ஸ்பார்த்தாவிற்குப் பலகாரணங்களினால் இத்தகைய சிறப்புண்டாகவில்லை. பாரசீகப் பெரும் போர் நிகழ்ந்த காலத்து, ஸ்பார்த்தா



வினது நடத்தை மிகவு மற்பத்தன்மை பொருந்தியதாயிருந்தது. அது பெருந்தன்மையிற் சிறந்திருக்கவில்லை. பெரிய இராச்சியத்திற் செவ்வனே ஆட்சிபுரிதற்கு இன்றியமையாக் கருவிகளாகிய முன்யோசனை, விடாமுயற்சி, காலமறிந்தொழுகல் முதலிய அரும்பெருங் குணங்கள் அதனிடத்திற் சிறிது மில்லாதொழிந்தன. தவிர ஸ்பார்த்தாவிற்குக் கப்பற்படையுமில்லை. கப்பற்படையின்றி ஈஜியக்கடலின் இராச்சியங்களை யொருகணமேனு மாளுதல் முடியாது. பாஸேனியன் எனும் ஸ்பார்த்தப் படைத்தலைவர், பிளத்தேயாவினிகழ்ந்த பெரும் போர்க்குப் பின்னர், ஆசியாமைனருக்குச் சென்றிருந்தபொழுது, பாரசீகருடன் சூழ்ச்சிசெய்து, ஆசியாவிலுள்ள கிரேக்கர்களை இழிவாக நடத்தித் தம் நாட்டிற்குப் பெரிதுந் தீங்கிழைத்தனர். இங்ஙனமங்கிய நாட்டிற்கனுப்பப்பட்ட தந்தளகர்த்தர் முறைபிறழ்ந் தொழுகிய காரணத்தால், ஸ்பார்த்தர்கள் ஆசியாவி லேகாதிபத்தியமடைதல் வேண்டுமெனுங் கருத்தை யறவே யொழிக்கும்படி நேரிட்டது.

*ஆசியாவின்கண் ஸ்பார்த்தா ஏகாதிபத்தியம் அடையாததற்குக் காரணம்.*

தன் கருத்துகளை முடித்தற்கான கருவிகள் அதேனா நகருக்கு அளவற்றிருந்தன. அது பாரசீகத்தின்கண் நடந்த பெரும் போரில் தன்பொருட்டும் கிரீஸ் தேயத்தின்பொருட்டும் அடைந்த நட்டங்களுக்கோரளவில்லை. அதேனியர்கள் கடற்போரிற் கன்னியம் பெற்றனர்; மைக்கேல் யுத்தத்தின் பின்பு, ஹெல்லஸ்பாண்டினின்றும் பாரசீகர்களைத் துரத்தல்வேண்டி

*ஏகாதிபத்தியம் செலுத்துவதற்கு அதேனா பெற்றிருந்த சாதனங்கள்.*

முயற்சிகள் பல் புரிந்தனர்; அவர் தஞ்சுற்றத்தவராம ஆசியாவிலுள்ள கிரேக்கர்களைக் காத்தளிக்க முயன்றனர். அதேனாவிற்கு அளவற்ற கப்பற்படைகளுண்டு. அதன் சேனாதிபதிகள், பாஸேனியனைப் போலல்லாது, கருணையுடையவர்களும், சமாதானமாய்ப் போதற்கு விருப்பமுடையவர்களுமா யிருந்தனர். ஸ்பார்த்தர்களிடத்திற் காணமுடியாத நற்குணங்கள் பல அதேனியர்கள்பாலமைந்திருந்தன. ஸ்பார்த்தாவினது பலமின்மையும், அது புரிந்த பல்வகையினவாகிய குற்றங்களுமே அதேனா முன்னேறி வருதற்கு இடங்கொடுத்தன.

மைக்கேல் யுத்தத்தின் பின், பாரசீகர்களுடன் அமராடும் வண்ணம் அதேனியர்களை யமைத்துவிட்டு, ஸ்பார்த்த சேனாதிபதிகள் கிரீஸ்தேயத்திற்கு மீண்டனர். அதன்பின் கி. மு. 478-ம் ஆண்டில், ஆசியாவின்கண்ணுள்ள கிரேக்க நகரங்களின் விருப்பப்படி, அதேனா அக்கிராசனத்தின்கீழ்

டீலிய ஐக்கிய ஆட்சிச்சங்கம்.

டீலிய ஐக்கியஆட்சிச்சங்கம் ஒன்று தாபிக்கப்பட்டது. ஈஜியக்கடலின்கணுள்ள பல் தீவுகளும், திரேஸ்நாட்டிலும் யூபியாநாட்டிலுமுள்ள சில நகரங்களும் இச்சங்கத்தைச் சேர்ந்தன. இச்சங்கம், பாரசீகர்களது வன்மையை இன்மையாக்குதற் பொருட்டும், ஆசியாவிலுள்ள கிரேக்கர்களது உரிமையைப் பாரசீகர்கள் மறுமுறை கவராதிருத்தற்பொருட்டும், பாரசீக ராச்சியத்தைக் கொள்ளைகோடற்பொருட்டும், ஏற்படுத்தப்பட்டது. இச்சங்கத்தின் ஆலோசனைச்சபை டீலியத்தீவின்கண் அப்பாலோ எனும தெய்வத்தினது கோட்டத்திற் கூடும். டீலிய ஐக்கியஆட்சிச்சங்கத்தைச் சேர்ந்த எல்லா இராச்சியங்



களும் ஆலோசனைச் சபைக்குப் பிரதிநிதிகள் அனுப்புவார்கள். இவ்வாலோசனைச்சபையில் பிரதிநிதிகள், தாம் பெரிய ராச்சியத்தவரெனினும் சிறிய ராச்சியத்தவரெனினும், சம அதிகாரமே செலுத்திவந்தனர். ஒவ்வொரு இராச்சியமும் சேனையோ, கப்பல்களோ, நிதியமோ ஆகிய இவற்றில் எதை அனுப்பவேண்டுமோ அதை யித்தனையளவு அனுப்புதல் வேண்டுமெனும் வரையறையை இச்சபை தீர்மானித்தது. இச்சபை சங்கத்திற்குத் துரோகம் செய்வோரைத் தண்டித்தல், சங்கத்தின் பொதுவிடயங்களைக் கவனித்தல், சட்டநிருபணஞ்செய்தல், நியாயந் தீர்த்தல் ஆகிய இவைகளைப் பார்த்துவந்தது. அதேனா ராச்சியம் இச்சபையின் தீர்மானங்களை முடிவுபெறச்செய்யும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது. பொதுப் பொக்கிஷம் டீலியத்தீவில் அமைக்கப்பட்டிருப்பினும், அதேனிய அதிகாரிகள் வயத்தில் இருந்தது.

இச்சங்கத்தின் நோக்கங்கள் முடிவுபெற்றன. கப்பற்படையின் தளகர்த்தரும் அதேனா நகரத்தவருமாகிய சைமன் என்பவர், பாரசீகத்திற்குச் சொந்தமான கோட்டைகள் பலவற்றைக் கைப்பற்றி, ஆசியாவின்கண் பாம்பிலியா எனு நாட்டிலுள்ள யூரிமிடன் எனு நதிக்கரையில் பாரசீகர்களது நிலப்படையையும் கப்பற்படையையும் முறியடித்தார். ஈஜியக் கடற்கரை யணித்தாயுள்ள நாடுகளினின்றும் பாரசீகர்கள் துரத்தப்பட்டனர். இங்ஙனம் பாரசீகரால் நேர்ந்த அச்சம் நீங்கவே, மற்ற இராச்சியங்கள் தாஞ் செலுத்தவேண்டிய வரிகளைச் செலுத்த விரும்பிற்றில. தவிர, சில இராச்சியங்கள் சங்கத்தினின்றும் பிரிந்து போதற்கு முயன்றன. அதேனியர்கள், அங்ஙனஞ்

சங்கத்தினின்றும் விலகிய புலவரையும், கட்டாயப் படுத்தி மறுமுறை அதிற் சேரச்செய்தனர். சற்றேறக் குறைய கி. மு. 450-ம் ஆண்டில், டீலியச்சங்கம் அதேனிய ஏகாதிபத்தியமாக மாறிற்று. அச்சங்கத்தைச் சேர்ந்த மற்ற நேயவிராச்சியங்கள் பலவும் அதேனாவுக்குக் கீழ்ப்பட்ட இராச்சியங்களாயின.

## பிரிவு ௨. அதேனா ஏகாதிபத்தியம்.

**அதேனா ஏகாதிபத்தியம்:**

இவ்வாறு அதேனாவினது ஏகாதிபத்தியத்தினாலுண்டான பயன்களை இங்குக் கூறுவாம். அது, தன் கீழ்ப்பட்ட இராச்சியங்களிலிருந்து வருங் கப்பத்திற் பெரும் பகுதியைக் கப்பற்படையைச் செம்மையுறச் செய்தலிற் செலவழித்தது. அக்கப்பற்படையின் உதவியால், அதேனியர்கள் பாரசீகர்களது கப்பல்களை ஈஜிய சமுத்திரத்தில் தலைகாட்டாவண்ணம் விரட்டிவந்தனர்.

**நன்மைகள்,**

இஃது அதேனாவிற்குக் கீழ்ப்பட்ட இராச்சியங்களுக் கோரனுகூலமாக விருந்தது. தன் கீழ்ப்பட்ட இராச்சியங்களை அதேனா மிகவும் அன்போடும் நீதியோடும் ஆதரித்து வந்தது. அதேனாவிற்குக் கீழ்ப்பட்ட இராச்சியங்கள் குடியரசுபெற்றன. ஆசியாவிலுள்ள நாகரிகமற்ற நாட்டினர்க்கும் குடியரசின் உணர்ச்சியுண்டாயிற்று. அதேனா ராச்சியத்தினிடத்திலிருந்து மற்றைக் கிரேக்க இராச்சியங்களும், ஆசியாவிலுள்ள நாகரிகமற்ற இராச்சியங்களும், ஆதவனிடத்திலிருந்து ஒளியைப் பெற்றுப் பிரகாசிக்குஞ் சந்திரன் முதலிய கிரகங்களைபோல், உயர்ந்த நோக்கங்களைப்பெற்று விளங்கின. அதேனா நகரமாந்தர் அனைவரும் சிறப்புடன்



வாழ்ந்து வந்தனர். அதேனாவினும் அதற்குட்பட்ட நாடுகளினும் வாணிபம் பெருகியது.

**தீமைகள்.**

ஆயினும் அதேனாவினது ஆட்சி முழுமையும் நன்மை பயக்கவில்லை. அதேனா, தனக்குக் கீழ்ப்பட்ட இராச்சியங்களின் வருமானம், நீதி, ஆட்சி, இதர நாடுகளுடன் பழகுதல் ஆகிய இவ்விடயங்களில், தலையிட்டது; வருமான விடயத்தில், அதேனிய உத்தியோகத்தர்கள் அதேனாவிற்குக் கீழ்ப்பட்ட நாடுகளினின்றும் வரி வசூலித்தனர். அவர்கள் வசூலித்த வரியின் தொகையானது சிறிதெனினும், அவ்வாறு வசூலித்தல் அந்நாடுகளின் குடிகளுடைய சுயராச்சியக் கொள்கைக்கு விரோதமாகவே யிருந்தது. நீதி செலுத்து முறையில், அதேனியர்களது நியாயத்தலங்கள் பல கொலை வழக்குகளைத் தீர விசாரிக்கவேண்டி யிருந்தது. வழக்காளிகள் அதேனாவிற்கு வரவேண்டியது அவசியமாயிற்று. ஆட்சி முறையில், அதேனியர்கள், சில நாடுகளைத் தம்மாட்சியைமாற்றிக் குடியரசை நிறுவுமாறு, வற்புறுத்தினர். தனக்குக் கீழ்ப்பட்ட இராச்சியங்கள், இதர தேயங்களுடன் கூட்டுறவு செய்யவேண்டி யிருப்பின், அதேனாவினது உத்தரவு பெற்றே அங்ஙனம் புரிதல் வேண்டும். தவிர, மற்றும் பல விடயங்களில் அதேனாவினது அதிகாரம் அதன் ஏகாதிபத்தியத்தின் கீழுள்ள குடிகளுக்கு மனவெறுப்பை யுண்டுபண்ணியது. பலநாடுகளினின்றும் வரும் வரித்தொகையிலெஞ்சியதை அதேனியர்கள் தந்நகரத்தை யழகுபெற வலங்கரிப்பதிற் செலவிட்டனர். அதேனியர்களால் வெற்றிகொண்ட நாடுகளில்

தேசக்காப்பாளர் பலர் ஏற்படுத்தப்பப்பட்டனர். தவிர, நகரராச்சியத்தின் வாழ்வை அதேனியர்களதிகாரம் தொலைத்துவிட்டது. அதேனியர்கள், தம்மைப் போன்றுயரக்கூடிய இதர ராச்சியங்களின் உரிமையையும், சௌகரியத்தையுங் கெடுத்து, மானிடர்கள் எய்தற்கரிய மேலான நிலைமையை யெய்தி, பின்புற்றிருந்தனர். பிற நாடுகளின் அழிவினால், அதேனா ராச்சியம் தனது செல்வத்தையும், புகழையும் பெருக்கிக்கொண்டது. கிரேக்கர்களது சுயஆட்சிக் கொள்கையை அதேனாவின் அதிகாரம் அழித்துவிட்டது. பின் கூறப்படும் பெலொப்பொனீஸின் பெரும்போரில், சிசிலித்தீவின்கண் நடைபெற்ற விபத்தினால், அதேனா ராச்சியம் தாழ்வுற்றது; மற்ற நகரங்கள் அதனுடைய அதிகாரத்தினின்றும் விடுபட்டன.

---

## 19. பெரிக்கிளனது ஆட்சிக்காலம், கி. மு. 467-429.

### பிரிவு. 1. பேரிக்கிளனுடைய ஜீவிய சரித்திரம்.

பெரிக்கிளனது காலத்தின் சிறப்பு.

தற்காலத்து ஐரோப்பிய நாகரிகத்தின் தாயென்று கொண்டாடப்படும் கிரீஸ்தேசத்தின் பெருமைக்கு முக்கிய காரணம் அதேனா நகரமேயென்று முன்னமேயே கூறியுள்ளோம். அந்நகரவாசிகள் பயின்ற கலைகள் பலவெனினும் அவற்றுள் ஒவ்வொன்றினும் சிறந்து விளங்கினர். அதேனா ராச்சியம் முழுமையும் மானுட அறிவை வளர்ப்பதே யாவற்றினும் மேன்மையென்று கருதப்பட்டதன் பயனாக, அநேக மகான்கள் பெரிக்கிளன்



காலத்தில் உதித்தனர். அதேனா நகரில், பெரிக்கிளன் காலத்து, நாகரிகம் பெருகியதைப் போன்று ஒரு காலத்திலும் பெருகியதேயில்லை. அதேனா நகரம் கல்வியிலும், சாத்திரப்பயிற்சியிலும், நாகரிகத்திலும் உலகத்திற்கொரு திலகமென விளங்குமாறு முன்னேற்றமடைந்திருந்தமை சாலவும் போற்றத் தகுவதாகும். அக்காலத்தில் நாடகம் எத்துணை பெருகுதல் கூடுமோ அத்துணை பெருகியது. அதற்குமுன்பு தாழ்ந்த நிலையிலிருந்த சிற்பத்தொழில் அக்காலத்தில் எதிர்பாரா வண்ணம் ஏற்றமடைந்தது. சித்திரத்தொழிலுஞ் சிறப்புற்றோங்கியது. கற்றோர் தேசசரித்திரம் வரைதலை யேற்றவாறு பயின்றனர். வானசாஸ்திர விற்பன்னர்களும் அக்காலத்தில் தோன்றினர். மிகச் சிறந்த தத்துவசாத்திரத்தைப் பலர் வெள்ளிடைக் குன்றமென விளக்க வாரம்பித்தனர். இவ்வாறு அரும்பெரும் விடயங்கள் பல முன்வந்தமையான், பெரிக்கிளனது காலத்தைக் கிரீஸ் தேச சரித்திரம் மிகச் செழித்தோங்கிய காலமெனச் சாற்றுகிற்கும்.

பெரிக்கிளனது ஜீவிய சரித்திரம்.

பெரிக்கிளன் என்பார், வெகு இளம் பருவத்திலேயே அதேனாவினது ஆட்சிமுறைகளிற் புகுந்து, நாற்பதாண்டுகள் வரையில் நற்றொழில் புரிந்து, பின் பதை விட்டு நீங்கினார். அவரது பெருமை முதலிலேயே வெகு சிறப்புற்று விளங்கினமையால், ஒழுக்க முறைகளிலும், இராச்சிய முறைகளிலும் அவரிட்டதே சட்டமாயிற்று. தெமிஸ்தாக்கிளன் என்பார் அதேனிய ஆட்சி விடயங்களினின்றும் நீங்கியகாலத்து, பெரிக்கிளன் அவற்றின்

கட்புகுந்தி, வெகு தீவிரமாய், தம் பெருமையினாலும், பின்வருவி காரியத்தை யறிந்து நடக்கும் ஆற்றலாலும், பொறுமையான குண விசேடத்தாலும், இன்னிசைப் பயிற்சியினாலும், கேட்போர் மனத்தைக் காந்தமெனக் கவரும் பேச்சுத் திறமையினாலும், தத்துவஞானத்தினாலும் அதேனா நகரச் சம்பந்தமான விடயங்களில் மிகப் பெயர்பெற்று விளங்கினர். சிறிது சிறிதாக அவரது அதிகாரம் பெருகி வந்தது. கி. மூ. 462 ம் ஆண்டில், குடியரசுகட்கு வேண்டியவரான எப்பையாலுதன் என்பாரும் இவரும் ஒன்றுகூடி அதேனியர்களது இராசாங்கத்திற் பல மாறுதல்களைச்செய்தலும், அவ்விராசாங்கத்தின் குடியரசு முழு உரிமையைப் பெற்றது. பிரபுக்களுக்குத் தலைவராகவும், இவர்களுக்குப் பகைவராகவுமிருந்த கைமன் என்பார் 461-ம்ஆண்டில் இராச்சியத்தினின்றும் நீக்கிவிடப்பட்டார். எப்பையாலுதன் குடியரசுக் கனுகூலமான சீர்திருத்தங்களை யேற்படுத்தியதன் காரணமாகப் பிரபுக்கள் அவரை அதே வருடத்திற் கொலைபுரிந்தனர். எப்பையாலுதன் இவ்வாறு பிரபுக்களின் குரூரச்செய்கைக்கு இரையாயினபின், இராச்சியவிடயங்களிற் பெரிக்கிளனது அதிகாரம் முன்பிருந்ததை விட அதிகமாயிற்று. கி. மு. 457-ம் ஆண்டில், கைமன் என்பார் மீண்டுவந்து இராசாங்க விஷயத்தில் பெரிக்கிளனுக்கு இணங்கி நடப்பதாக மொழிந்தனர். பின்னர் கி. மு. 449-ம்ஆண்டில், கைமனும் இறந்து பட்டனர். அதன்பின் கி. மு. 442-ம் ஆண்டில், பெரிக்கிளனது பெரும்பகைவரான துஸிடிடன் என்பார் நாட்டினின்றும் அகன்றனர். இவ்வாண்டுதொடங்கிப் பெரிக்கிளன் இறந்துபடும்வரையில், அதேனிய இராச்



சியத்தில் அவரது அதிகாரத்தை யொருவரும் தடுக்கவில்லை. பொதுஜனமகாசபையானது அவர் கைத்தலத்துற்றதோர் ஆட்டப்பொம்மையாயிற்று. அச்சபை, அவர் கூறுதற்கு மாறுபடாமல் அவர் வாய்மொழியைக்கேட்டு, ஒவ்வோராண்டும் தளகர்த்தர் பதின்மரில் அவரையும் ஒருதளகர்த்தராக ஏற்படுத்தியது. தளகர்த்தர்கள் பலர்க்கும் ஒரே விதமான அதிகாரமிருந்த போதிலும் அனுபோகத்தினால் பெரிக்கிளனே தலைவராயினார். பெயரளவில் இராசாங்கம் குடியரசாயிருந்ததேயொழிய, உண்மையில் அவர் ஒருவரே அதனை நடத்திவந்தார். இத்துணைத் தேர்ச்சிபெற்ற இராஜதந்திரியின் இறுதிக்காலத்தில், அவரது இராசாங்க எதிரிகள் அவரை யெதிர்க்கத்தலைப்பட்டனர். பெலப்பொனீஸ் யுத்தத்தின் முற்பகுதியில் பிளேக் எனுங் கொள்ளைநோய் தோன்றி அதேனியர்களை வருத்தியதால், அவர்கள் அந்நாள் தொடங்கி மனக்கட்டமும், முணுமுணுப்பும் உடையவர்களாய், பெலப்பொனீஸ் பெரும்போர்க்கும் அதனாலுண்டான துன்பங்களுக்கும் பெரிக்கிளன் என்பவரே காரணமானவரென்று, அவர்மீது அமையாக் குற்றஞ்சாட்டினர். பெரிக்கிளனுக்கும் சாக்கிரத்தின் என்பவருக்கும் குருவும், தத்துவ சாஸ்திரியுமாகிய அனக்ஸாகரான் என்பவர் தமது கொள்கைகளுக்காக அபராதம் விதிக்கப்பெற்றார். கி. மு. 430-ம்ஆண்டில் இராசாங்கத்தின் பொருளைக் கவர்ந்தாரென்று பெரிக்கிளனும் அபராதம் விதிக்கப்பட்டார். பின்னர், குடிகள் அவ்வருடம் பெரிக்கிளனைத் தளகர்த்தராகத் தெரிந்தெடுக்கவில்லை. எனினும் குடிகள் அவரிடத்துத் தமக்கிருந்த குறையா அன்பையும், நம்பிக்கை

யையும் கஷ்டக் கருதி, அவரை மன்னித்து, மறுபடியும் தளகர்த்தராக ஏற்படுத்தினார். இதற்குள் மேற்கூறிய கொள்ளைநோய் வயப்பட்டு அவரது இரு புத்திரசிகாமணிகள் இறந்துபட்டனர். ஆதலின், ஏற்கனவே அறுபது வயதுடையவராய் அங்கந்தளர்ந்திருந்த அவர், அப்புத்திரர்களது பிரிவாற்றாமையினால் மனத் தளர்வடைந்து, பிணியாளராகி, அதேனா நகரத்துள்ளார் அனைவருந் துன்பக்கடலி லாழும்படி கி. மு. 429-ம் ஆண்டில் இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகேகினர்.

## பிரிவு. 2. அதேனாவின் குடியரசு.

குடியரசு முழு உரிமைபெற்ற விதமும், அதனால் உண்டான நன்மையும்.

பெரிக்கிளன் காலத்தடைந்த பல நன்மைகளில் அதேனா ராச்சியத்தின்கண் சோலனாலும், க்ளையஸ்தினனாலும், ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட குடியரசு முழுஉரிமை பெற்றமை மிக முக்கியமானதாகும். கி. மு. 463-ம் ஆண்டில் கைக்கூலி வாங்காத கண்ணியனெனப் பெயர் பெற்ற எப்பையாலுதன் என்பார் அரியோப்பகஸ் சபையினங்கத்தினரில் சிலரை இலஞ்சம் வாங்கியதாகக் குற்றஞ்சாட்டினார்; பின்னர், அரியோப்பகஸ் சபையினது அதிகாரங்களைக்குறைக்க முயன்று பெரிக்கிளன் என்பவருடன்சேர்ந்து, ஒரு சட்டத்தை ஏற்படுத்தினார். இதனால் பூர்வ பழக்க வழக்கங்களை விடக்கூடாதென்னு மபிமான முள்ளதும், மாறுபாடொன்றிற்கு மிடங்கொடாததும், குடியரசு ஸ்தாபனம் முற்றுப்பெறுதற்கு இடையூறு செய்வதுமான அரியோப்பகஸ்சபையானது அதிகாரிகளைச் சட்-



டத்திற்கு விரோதமாக நடந்தால் தண்டித்தல், இராச்சிய பரிபாலனத்தை மேற் பார்வை பார்த்தல், நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு எல்லோரையும் கட்டாயப்படுத்தல் ஆகிய இவ்வித அதிகாரங்களை இழந்தது. இங்ஙனம் மிக்க மேலான அதிகாரத்தைச் செலுத்திக்கொண்டிருந்த இச்சபை கேவலம் கொலைவழக்கைத் தீர்க்கும் நியாயஸ்தலமாக மாறிவிட்டது. இதனதிகாரங்கள் குறைவுபட்டமை குடியரசின் முன்னேற்றத்திற்கு ஒருதவியாயிற்று. தவிர கி. மு. 458-ம் ஆண்டில் தலைமை அதிகாரியினது பதவி வருவாய்பற்றிப் பிரிக்கப்பட்ட நான்கு வகுப்பினர்களுள் மூன்றாவது வகுப்பினர்களும், நான்காவது வகுப்பினர்களும் கூட அடைதற்குரிய பதவியாய்விட்டது. அப்பதவியை அடைந்த ஒவ்வொருவனும் சம்பளமும் பெற்றுவந்தனன். அன்றியும், முப்பது ஆண்டிற்கு மேற்பட்ட வயதையுடைய அதேனியர்கள் யாவரும் நியாயஸ்தலங்களில் நியாயாதிபதிகளாக வீற்றிருக்க உரிமையைப் பெற்றனர். ஒவ்வொரு வருடமும் சற்றேறக்குறைய ஐயாயிரம் நியாயாதிபதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்கள் ஒரு பிரிவுக்கு ஐந்நூறு பெயர்கள் வீதம் பத்துப் பிரிவுகளாக எளிதில் நியாயந்தீர்த்தற்பொருட்டுப் பிரிக்கப்பட்டனர். அந்நியாயஸ்தலங்களில் நடைபெறும் தீர்மானத்திற்கு மறுவிசாரணை கிடையாது. அத்தலங்களிற் கையுறை வாங்குதலில்லை. அந்த நியாயஸ்தலங்களில் வேலை பார்த்துவந்த நீதிபதிகள் வேதனம் பெற்றுவந்தனர். அதிகாரிகள், முறைதவறின், இந்நியாயஸ்தலங்களுக்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டு விசாரிக்கப்படுவார்கள். நியா

யாதிபதிகளைத் தேர்ந்தெடுத்தற்குச் சீட்டுக் குலுக்கு
முறை கையாளப்பட்டது. அதேனு ராச்சியத்தில்
உரிமையுடைய அதேனியர்கள்பெயர்களைத் தனித்
தனிச் சிறு கடிதத்துண்டுகளில் எழுதி அவற்றை ஒரு
சேரக்கலந்து அவற்றில் ஏதேனுமொன்றை எடுத்துப்
பார்க்கையில் யாருடைய பெயர் அதிலிருக்கிறதோ
அவர் நியாயாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டவ
ராவார். இவ்வாறே ஐந்நூறு அங்கத்தினரையுடைய
சபையினரும் தலைமை அதிகாரிகளும் தேர்ந்தெடுக்
கப்பட்டுவந்தனர். சாமானிய ஜனங்கள் உள்பட
அதேனியர்கள் யாவரும் எக்கிளீஷியா எனும் பொது
ஜனமகாசபையி னங்கத்தினராவர் என்று முன்னரே
கூறியுள்ளோம். பெரிக்கிளன் காலத்தில் இச்சபை
ஒரு வருடத்திற்கு நாற்பது முறை கூடிற்று. இச்
சபை யுத்தம், உடன்படிக்கை, வருமானம், மதம்,
நிலப்படை, கப்பற்படை ஆகிய இவற்றைப்பற்றிய
விடயங்களைத் தீர்மானித்தும், அதிகாரிகளது நடத்
தையைப்பற்றிய வழக்குகளை விசாரித்தும், புதுச்
சட்டங்களைப் பிறப்பித்தும், பழையனவற்றைச் சீர்
திருத்தியும் வந்தது. இச்சபையே இராச்சியத்தில்
மேலான சபையாக விருந்தது. ஐந்நூற்றுவரடங்கிய
சபை இராச்சியச் சம்பந்தமான விடயங்களை மேற்பார்
வையிட்டும் எக்கிளீஷியா எனும் பெருஞ்சபை எக்
காரியத்தை நடத்தவேண்டுமென்பதை யதற்கு அறி
வித்தும் வந்தது. அச்சபை ஐம்பது பெயர்கள்
அடங்கிய சிறுசிறு கூட்டமாகப் பிரிந்து ஒவ்வொரு
கூட்டமும் ஒரு வருடத்திற் பத்திலொரு பகுதி கால
வரையில் வேலையைச் செய்துவந்தது. அச்சபை,
சில தொகையபராத மளிக்கும் அதிகாரம் ஒழிய,



தனக்கிருந்த நீதி செலுத்தும் மற்றை அதிகாரங்
களை இழந்துவிட்டது; சாமானிய ஜனங்களும் நியா
யாதிபதிகளாக வீற்றிருக்கும் நியாயஸ்தலங்களே
அவ்வதிகாரங்களை ஏற்றுக்கொண்டன. அச்சபைக்
குரிய ஐந்நூறு அங்கத்தினர்களும் இராசாங்க விடயத்
தைக் கவனித்தற்பொருட்டுச் சம்பளம் பெற்றுவந்
தனர். இதைத் தவிர வருமானம், கல்வி, மதம் ஆகிய
இவ்விடயங்களை மேற்பார்வையிட்டு வரும்பொருட்
டுச் சிறுசபைகள் ஏற்பட்டிருந்தன. மேலும் தலைமை
அதிகாரிகள் ஒன்பதின்மர், தளகர்த்தர் பதின்மர் முத
லியவர்களும் இராசாங்க காரியங்களை நடத்திவந்தார்
கள். இவ்வாறு வயதுவந்த முப்பதினாயிரம் குடிக
ளில் வருடத்திற்கொருதரம் ஆயிரத்துத்தொள்ளாயி
ரம் பெயர்கள் இராசாங்க உத்தியோகங்களிலமர்ந்து
காரியங்களை நடத்திவந்தனர். சாமானிய உத்தியோ
கத்தர்களைத் தேர்ந்தெடுப்பதிலுங்கூட மேற்கூறிய
சீட்டுக் குலுக்குமுறை கையாளப்பெற்று வந்தது.
ஒருவருடம் உத்தியோகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்
பட்டவன் பின்னர்ப் பதினாறு வருடம் வரையிலும்
மற்று முள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வரையில்
தேர்ந்தெடுக்கப்படமாட்டான். வயதுவந்த முப்பதி
னாயிரம் குடிகளும் முறையே வருடத்திற்கு ஆயிரத்
துத் தொள்ளாயிரம் பெயர் வீதம் தேர்ந்தெடுக்கப்
பட்டு வந்தமையின், ஒவ்வொருவனுக்கும் தன் வாணா
ளில் பதினாறு வருடங்கட்கு ஒரு முறை இராசாங்க
உத்தியோகம் கிடைப்பது திண்ணமாயிற்று.

இவ்வாறு அதேனியர் தம் இராச்சியத்தைத்
தாமே இனிது நடத்திவந்தனர். அதேனுவினது ஆட்சி
அதன் குடிகளிடத்திலேயே யிருந்தது. ஒவ்வொரு

அதேனியனும் தானே பொதுக்காரியங்களைக் கண்ணுற்றும் அவைகளைப் புரியும் மற்றவர்களை முறைதவறின் விசாரித்தும் வந்தான். அவனுக்குத் தெரியாத நுட்பமான விடயமொன்றும் இராச்சியத்தின்கண் இருந்திலது. இராசாங்கத்திற்கும் குடிகளுக்கும் அதேன ராச்சியத்தில் ஒருவித வேற்றுமையுங் கிடையாது. குடிகளே இராசாங்கத்தவர்களா யிருந்தனர். கல்வியிலும் மனதிற்கு மகிழ்ச்சியை விளைவிக்கும் மற்ற விடயங்களிலும் அரசாங்கத்தார் எல்லோரையும் ஒரே விதமாய் நடத்திவந்தனர். ஆதலின் இராசாங்கத்தைக் கீாத்தலில் பலர்க்கும் ஒரேவிதமான உரிமையிருந்தது. தவிர, அதேனவினது ஆட்சிமுறை ஒவ்வொருவரும் தத்தம் அறிவைப் பெருக்குதற்கு அதிக இடங்கொடுத்தது. தனதிராச்சியத்தின் தினப்பாதுகாப்பில் தானுஞ் சேர்ந்து, கணக்குகளைச் சரிப்பார்த்தலிலும், இராசாங்க ஊழியர்களை மேற்பார்வை யிடுதலிலும், ஒவ்வொருவனும் கடமைப்பாடுடையவனாயிருந்தான். இராச்சியவருமானத்தில் எஞ்சிய தொகையைக் குடிகளின் அறிவை வளர்த்து மகிழ்ச்சியைத் தரக்கூடிய கல்வியைப் புகட்டுவதிலும், தேகத்திற்கு வன்மையைத் தரத்தக்க தேகப்பயிற்சிக்குரிய இடங்களை யேற்படுத்துவதிலும், உயர்ந்த கோபுரங்களையும் கட்டடங்களையும் கட்டுவதிலும், இலவசமாகக் குடிகளுக்குத் துன்பியல் நாடகங்களையும் இன்பியல் நாடகங்களையும் நடிப்பித்துக் காட்டுவதிலும் இராசாங்கத்தார் செலவழித்துவந்தனர். இவ்வாறு பல துறைகளில் கல்வியும் அறிவும் ஓங்கிவளர்ந்தன. அவை இராச்சியத்தின் நன்மைக்கும், பெருமைக்கும் நற்றுணையாயின. அதேனநகரம் இத்தகையச் சீர்பெற்றுயர்ந்



தோங்கிய காலத்து, எஸ்கைலஸ், யூரிபைடீஸ், சொபோக்கிளஸ், அரிஸ்தோபேனஸ், துசிடிடீஸ், பிளேட்டோ, சாக்கிரத்தீஸ், பெரிக்கிளஸ் ஆகிய அழியாப் புகழ்வாய்ந்த வித்துவசிரோமணிகள் பலர் தோன்றி யந்நகரை யழகுபெறச் செய்தனர். அன்னார் தமது திறத்தால் அதேனவிற்கு அழியாப் பெரும் புகழை யாக்கிபோரென்பதில் அணுவளவும் ஐயப்பாடிலது. இவ்வாறிதர விராச்சியத்தவர்களினும் இவ்விராச்சியத்தவர் இனிது வாழ்ந்துவந்தனர். அரசாங்கத்தாரும் குடிகளும் தஞ் சுகத்தை நாடுவதி லொத்தமனமுடையவராயிருந்தனர்.

ஆயினும் அமிருதத்துடன் விடமுந் தோன்றினாற் போன்று, இவ்விராச்சியத்தில் நல்லொழுக்கத்துடன் சிலதீய ஒழுக்கங்களுந் தோன்றியிருந்தன. தம் நன்மையைக் கருதி நடப்பதில், அதேனியர்கள் பல்வேறிராச்சியங்களினுடைய உரிமைகளைக் கவர்ந்து வரலாயினர். தவிர, அதேனவின்கண் 100,000 அடிமைகளும், 1,35,000 உரிமையாளரும் உறைந்திருந்தனர். அடிமைகட்கு அரசாங்க விடயங்களில் அணுவளவும் உரிமை கிடையாது. ஆதலின் தற்காலக் கொள்கைக்கேற்ப உற்று நோக்குவோமாயின், அதேனவைக் குடியரசெனக் கூறுதல் நேரிதாகாது. அதைப் பிரபுக்களினது ஆட்சி யெனவே அறைதல் வேண்டும். இவ்வமயத்தில் அவர்களுக்குக் கருவியாயிருந்த விடயத்தைப்பற்றிச் சிறிது கவனிப்பாம். அதேனியர்களது அடிமைகள் அவர்களுக்குக் குற்றேவல்களையும் கைத்தொழில்களையுஞ் செய்து வந்தனர். ஆதலின் அதேனியர்கள் இராசாங்கத்திற்

காக உழைத்தற்குப் போதிய அவகாசத்தைப்பெற்றிருந்தனர். அக்காலத்து நாகரிகத்தின் பொருட்டு அவர்கள் பாடுபட்டிருத்தலை யுற்று நோக்குங்கால், அவர்கள் இலட்சம் பெயர்களை அடிமைகளாகக் கொண்டிருந்ததைப் பற்றி யவ்வளவு குறைவாகக் கூறுதலொண்ணாது.

## பிரிவு. 3. கிரேக்க உலகத்தில் அதேனாவுக்கிருந்த செல்வாக்கு.

*அதேனாவினது நில ஏகாதிபத்தியம்.*

பெரிக்கிளன் காலத்தில் கடல் ஏகாதிபத்தியத்தைத்தவிர, நிலத்திலும் அதேனா ராச்சியம் ஏகாதிபத்தியத்தைத் தாபித்தது மிகவும் கவனிக்கத்தக்க விடயம். அதேனாவிற்கும் பெலப்பொனீஸுக்கும் இடையில் நிகழ்ந்த போர் ஒன்று அதேனியர் இவ்வாறு தம் ஆதிபத்தியத்தை நிலைநாட்டற்கு இடந்தந்தது. மிகாரா, ஈஜினா, அக்கேயா, டிரோஸன், பியோஷியா எனுமிவ்விடங்களில் அதேனிய ஆதிபத்தியம் நிலைபெற்று விளங்கியது. ஆயினும் இவ்வாதிபத்தியம் வெகு சீக்கிரத்தில் பல்வேறு காரணங்களினால் நிலைகுலைந்துபோயிற்று.

*அந்நிய நாட்டில் அதேனாவின் செல்வாக்குப் பரவுதல்.*

பாரசீகர்களுடன் பெரிக்கிளன் ஓர் உடன்படிக்கையின் மூலமாகச் சமாதானஞ் செய்தனன். அவ்வுடன்படிக்கையின்படி பாரசீகர்கள் தாம் ஈஜியக்கடலின் வழியாகக் கப்பற்படையை அனுப்புவதில்லையென உடன்பட்டனர்; அதேனியர்களும் தாம் பாரசீகராச்சியத்தின் கடற்கரை நாடுகளைத் தாக்குவதில்லையென வொத்துக்கொண்டனர். பெரிக்கிளன் காலத்தில் அதேனியர்களது செல்வாக்குக் கிரீஸுக்கு மேற்பாகத்திலும், கீழ்ப்பாகத்திலும் பரவிற்று. காரிந்தியர்களது வாணிகத்தால் ஏற்பட்ட வன்மையைக் குறைத்தற் பொருட்டுப் பெரிக்கிளன் இத்தாலியின் தென்கிழக்குக்கரையில் தூரியை, புதிய சைபாரிஸ் என்னும் இடங்களில் அதேனியர்களையும் இதர கிரேக்கர்களையும் குடியேறும்படி செய்தனர். அதேனாவிற்குக் கருங்கடலுக் கருகிலுள்ள நாடுகளுடன் நடந்துவந்த தானியவியாபாரம் மிகமுக்கியமான தென்றறிந்து அதேனியர்களது செல்வாக்கை அவ்விடங்களிற் பரப்புதல் கருதி, ஒருபெருங் கப்பற்படையுடன் சென்று சைனோப், பாந்திக்கப்பேயம், எனுமிடங்களுடன் நட்பைச் சம்பாதிக்கப் பெரிக்கிளன் மிகவும் முயன்றனர். அதேனியர்களின் அதிகாரம் ஈஜியக்கடலினது வடபாகத்திலும் மாஸிடோனியாவினது கீழ்க்கரையிலும் பரவியிருந்தது. பெரிக்கிளன் யுத்தத்திற்கு உதவியாயிருக்கக் கூடியதும் வர்த்தகத்திற்கு மிகச் சிறப்புற்றதுமாகிய ஆம்பிபொலிஸ் எனும் பட்டணத்தைத் திரேஸ்நாட்டில் ஸ்திரைமன் நதிக்கரையில் தாபித்தார்.



## பிரிவு. 4. அழகுக்கும் கல்விக்கும் அதேனா தாயகமாயிருத்தல்.

*அதேனாநகரின் அழகுவாய்ந்த கட்டடங்கள்.*

பெரிக்கிளன் காலத்துப் பிரையஸ் எனுமிடத்தில் வெடிமருந்துச் சாலையும், கப்பற்றங்குங் கட்டடங்களுங் கட்டப்பட்டன. தவிர, பெரிக்கிளன் காலத்தை என்றும் நினைவிற்குக் கொணருமாறு கட்டப்பட்ட, அழ

கும் பெருமையும் வாய்ந்த கட்டடங்களிற் புகழ்பெற்ற பைடியஸ் என்பவராற் செய்யப்பட்ட அதேனே தேவியின் உருவமைந்த மூன்று கற்சிலைகளும், பார்த்தினன் எனும் அதேனே தெய்வத்தின் கோயிலும், ஹெப்பீஸ்தஸ் தெய்வத்திற் கேற்பட்ட ஆலயமும், அதேனே தேவிக்கு நடந்தேறும் திருவிழாக் காலத்திற் சங்கீதப் பரீட்சைகளுக்கெனக் கட்டப்பட்ட ஓடியன் எனு நாடகச்சாலையும் அதேனாவி லிருந்தன. இவ்வழகிய கட்டடங்களால், அதேனா கிரீஸ் எனும் தேவிக்கோர் மங்கலநாண் போன்றிருந்தது.

சிற்பசாத்திரத்தின்மாத்திரமன்றி, இலக்கியத்திலும் தத்துவசாத்திரத்திலும் பெரிக்ளீஸ் காலத்தில் அதேனா மேன்மையுற்றது. நாடகங்கள் மிகப் பல்கின. அதேனா நாட்டிலிருந்த நாடகக்கவிகளிற் சிறந்து விளங்கிய ஈஸ்கைலஸ், சொபோக்ளீஸ், யூரிபைடஸ், அரிஸ்தோபேனீஸ் முதலியோர் இக்காலத்தினராவர். இந்நாடகக் கவிஞர்களையன்றிப் பாரசீகப் போரைப் பற்றி எழுதிய ஹெரோடத்தஸ், பெலப்பொனீஸ் யுத்தத்தைப்பற்றி வரைந்த துஸிடிடஸ் ஆகிய வசன நூற் புலவர்களும் இக்காலத்திலிருந்தனர்.

பெரிக்ளீஸ் காலத்துக் கலைஞர்.

தத்துவசாத்திரத்தை முன்னுக்குக் கொண்டு வருவதில் அதேனாவைப் போன்று வேறெவ்விராச்சியமும் முயன்றிலது. ஐரோப்பியரது தத்துவசாத்திர விருத்தியைப்பற்றிக் கூறும் சரித்திரத்தில் ஆசார சாத்திரத்திற்கும், தத்துவசாத்திரங்களுக்கும் முதலாசிரியராய சாக்கிரத்தீஸ் எனும் அதேனியரே மிகச்சிறப்புற்றனர். தமது புத்திகூர்மையாலும், நாகரி



த்தாலும், மேன்மையாலும், கல்வியின் முன்னேற்றத்தின் பொருட்டும் அறிவின் வளர்ச்சியின் பொருட்டுந் தாஞ்செய்த அரிய பெரிய செய்கைகளினாலும் அதேனியர்கள் தம் பின்னோராற் பெரிதும் புகழப்பட்டனர். அதேனியர் தம் நாட்டிற்குச் செய்த நன்மைகள் பலவும் நன்மதிப்புடையனவாயின; அவை அதனுடனமையவில்லை. அவை பின்போந்த அதேனியர்கள் அங்ஙனம் புரிதற்கோர் வழிகாட்டிகளாகவுமிருந்தன.

## பிரிவு 5. எளிய அதேனியர்களையும் பெரிக்ளீஸ் ஆதரித்தமை.

பெரிக்ளீஸ் என்பார், அறிவாளிகளுக்கு உதவி புரிந்ததுமன்றி, ஒவ்வொரு அதேனியனும் தேர்ச்சி யடைதற்குரிய உத்தம வழிகள் பலவற்றையும் ஏற்படுத்தினர். அவர் அதேனாவின் வருமானத்தைக்கொண்டு, ஏழைகளுக்கு விநோதங்களை விளைவித்தும், சிறந்த திருவிழாக் காலங்களில் அவர்களுக்கு அன்னம் அளித்தும், அங்கவீனர்கட்கு உபகாரச் சம்பளமளித்தும், நாடகச்சாலையில் நாடகம் பார்க்கப் பரம ஏழைகளுக்கும் வழி யேற்படுத்தியும், நகரை யழகுபெற வலங்கரித்தும் வந்தார். மதச் சம்பந்தமாகவோ அல்லது இராச்சியச் சம்பந்தமாகவோ பொதுக்காரியங்களைப்புரிய வேதனமளித்து வந்தமை, அதேனியர்கள் மதத்திலும், இராசாங்க விடயத்திலும் தேர்ச்சியடைதற்குக் கருவியாயினதுமன்றி, அதேனியரது நாகரிகம் பெருகுதற்குங் காரணமாயிற்று.

## பிரிவு 6. பெரிக்ளினது மனோபாவங்கள்.

பின் கூறப்போகும் பெல்ப்பொனீஸ் யுத்தத்தின் முதலாண்டில் இறந்துபோனவர்களின் பெருமையை எடுத்துச்சொல்லும் உபந்நியாசத்தில், பெரிக்கிளன் தனது மனோபாவங்களை நன்கெடுத்துக் கூறியுள்ளார். அவற்றுள் ஒன்று இதரதேயங்களைவென்று, அதேனவை யவற்றிற்குத் தலைமை வகிக்கும்படி செய்தலேயாம். இதரதேயங்களைத் தனது ஆட்சிக்குட்படுத்தல் வேண்டுமென்னு முண்மையான ஊக்கத்துடன், பெரிக்கிளன் டீலிய ஐக்கியஆட்சிச்சங்கத்தை ஒரு பெரிய ஏகாதிபத்தியமாக மாற்றிவிட்டனர். அதேனராச்சியத்தினது பரப்பை அதிகப்படுத்துவதிலேயே அவர் கண்ணுங் கருத்துமாயிருந்தனர். இத்தாலி, திரேஸ், யூக்ஸைன் எனு மிவ்விடங்களில் அதேனவின் அதிகாரத்தை யேற்படுத்தும் பொருட்டு அவர் செய்த அரியபெரிய காரியங்களை முன்னரே கூறியுள்ளோம். கிரீஸின்கண் சிறிது காலம் நிலைபெற்றிருந்த அதேனவினது ஏகாதிபத்தியமும் அவர் உண்டுபண்ணியதேயாம். கிரீஸின்கணுள்ள பல நாடுகளையும் ஒன்று சேர்க்க வேண்டுமென்பதே அவரது கருத்து. தவிர, அதேன் தலைமை வகித்திருந்த கிரீஸின்கணுள்ள நாடுகளுக்கோர் ஒற்றுமையுண்டாக்குதல் வேண்டுமென்கிற எண்ணமும் அவருக்குண்டு.

பெரிக்ளினது மனோபாவங்கள்.

அவர், கிரேக்க மகாசபை யொன்று ஏற்படுத்தி, பாரசீக யுத்தத்தாலழிக்கப்பட்டிருந்த ஆலயங்களைப் புதுப்பித்தற்கும், கடற்கரை வியாபாரத்-



தைக் காப்பதற்குமான வேற்பாடுகளை அச்சபையினர்க்குத் தெரிவித்து, அவர்களது எண்ணத்தையறிய விரும்பினார். எனினும் இவ்விடயத்தில் அவரது எண்ணம் நிறைவேறாமையானும், கிரேக்கர்களை ஒன்றுசேர்த்தற்கான அவரது முயற்சி தவறிவிட்டமையானும், அதேனநகரைக் கிரீஸ் தேயத்தின் கல்விக்கும் தேர்ச்சிக்கும் ஒரு பொதுவிடமாகவும், உறுப்பிற் சிறந்த கண்ணாகவும், சாத்திரங்களுக்கும் சொல்வன்மைக்குந் தாயாகவும், கிரேக்கர்களது மனநிலைமைகட்குத் தோற்றுவாயாகவும், அவர்களது அறிவாகிய விளக்கிற்குத் தூண்டுகோலாகவும் தேசாபிமானமும் மனிதர்களின் சுதந்திரமும் ஒன்றுகூடி யொளிரும் இராச்சியம் இஃதே எனக் கண்டோர் கூறும்படி செய்ய முயன்றனர். அவரது முயற்சி வீண்போகாது அதேன நகரம் பல விஷயத்திலும் அவரது காலத்தில் பொலிவுற்று விளங்கியது.

பெரிக்ளினது எண்ணங்கள் நிறைவேறினமை.

## பிரிவு 7. துஸிடிடன் பெரிக்ளினது ஆட்சிமுறையைக் கண்டனஞ்செய்தல்.

அதேனியப் பிரபுக்கள் அதேனவின்கணுள்ள குடியரசையும் அதேனவினது ஏகாதிபத்தியத்தையும் வெறுத்தனர். பெரிக்கிளன் என்பாரது நடவடிக்கைகளையும் ஏகாதிபத்தியத்தைச் செலுத்தும் முறைகளையும் துஸிடிடன் என்பவரைத் தலைவராகக் கொண்டு சிலர் எதிர்த்துப்பேசினர். அதேனியர்களுக்கு இராசாங்க பொக்கிஷத்தினின்றும் பொருளளித்து அவர்களைத் தீய நெறியிற் றிருப்பியதாகவும், இராச்சியத்திற்கு ஏகாதிபத்தியத்தாற் கிடைத்த வருமா

னத்தை நகரை யலங்கரிப்பதிலேயே செலவழித்து விட்டதாகவும் பெரிக்ளின்மீது குற்றஞ்சாட்டினர். ஆசியாவிலுள்ள கிரேக்கர்கள் பாரசீகவாட்சியினின்றும் உரிமையை யடைந்ததனால் டீலியச் சங்கத்தை ஒழித்துவிடவேண்டுமென்றும், பாரசீகர்களோடு சமாதானமாயிராமல் போர்தொடுத்திருக்க வேண்டுமென்றும் துவிடிடன்வாதித்தனர். பாரசீகத்தாரிடமிருந்து இராச்சியத்தைப் பாதுகாத்தற்குரிய ஏற்பாடுகள் தான் செய்ததாகவும், டீலியச்சங்கத்தை யொழித்திருந்தால் பாரசீகக் கப்பற்படை மறுபடியும் ஈஜிபக்கடலுக்கு வந்திருக்குமென்றும், இனிப்பாரசீகர்கள் படையெடுத்தால் அதற்குப்போதிய பொருள் தான் பொக்கிஷத்தில் வைத்திருப்பதாகவும், தானே பாரசீகராச்சியத்துட் புகுந்து போராடல் வீண்நட்டத்தையும் பொருட்செல்வையும் உண்டுபண்ணுவதாமென்றும், ஆதலின் பொருளைத் தன் னலங்காரத்திற்கும் பெருமைக்கும் வேண்டிய அளவு உபயோகித்துக்கோடற்கு அதேனாவுக்கு உரிமையுண்டென்றும், பெரிக்ளின் எதிர்வாதம் புரிந்தனர். பெரிக்ளினது நடவடிக்கை அதனுடைய பயன்களால் சரியானதென வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது. அதேனா நகரம் உலகிற்கே ஓருன்னத நகராகி, கோவில், கோபுரங்கள் முதலியவற்றில் தன்னை யொத்த நகரம் எதுவுமின்றெனக்கூறும்படி சிறந்துவிட்டது.



## 20. பெலப்பொனீஸ் மகாயுத்தம், கி. மு. 431-404.

பெலப்பொனீஸ் பெரும் போர்.

கிரேக்கர்களது புராதனத்தையும் நாகரிகத்தையும்பற்றி வரையும் ஒருவர், பெரிக்ளின் என்பாரது காலத்தை விடுத்து அவர்க்குப் பிற்பட்ட காலத்தைப் பற்றி எழுதப்புகின், மிகுந்த அநுதாபத்துடன் எழுதவேண்டியிருக்கிறது; ஏனெனில் அவர் காலத்திற்குப்பின் கல்வியில் தேர்ச்சிபெற்றிருந்த கிரேக்கர்கள் பெலப்பொனீஸ் யுத்தம் என்னும் ஒரு பெரும் போர் புரிந்தனர். அப்போரினால் அநேக இராச்சியங்கள் தளர்ச்சி யடைந்தமையின், கிரீஸ் முழுதும் சிறிது காலத்திற்குள் மாஸிடோனிய அரசன் கைவசப்பட்டது. ஆதலின் கிரேக்கர்கள் இப்போர்புரிந்ததால் தமக்குத்தாமே கேட்டைத் தேடிக்கொண்டனர் எனக்கூறலாம்.

இப்போர்க்குக் காரணங்கள்.

இப்பெரும் போர்க்குக் காரணங்கள் எவையெனின் கிரேக்கதேய முழுவதும் அதேனாவின்பால் கொண்ட வெறுப்பும், அச்சமும், ஆச்சரியமும், கிரீஸின மற்றை நாடுகளினது பொறாமையைப் பொங்கியெழச் செய்த அதேனாவின்பாலுள்ள அழகிய மாட மாளிகைகளும், காறிந்த் பொறாமை கொள்ளக்கூடிய அதேனாவின் சிறந்த வியாபாரமும், கப்பற்படையினாலும் நிலப்படையினாலும் அதற்குண்டாயிருந்த செல்வாக்கும், ஏகாதிபத்தியமும், அவ்வேகாதிபத்தியத்தைக கிரீஸின் மற்ற நாடுகள்யாவும் வெறுத்தபோதிலும் விடாது செலுத்தவேண்டுமென்கிற அதன் தீர்மானமும், அதேனாவிற்குக் கீழ்ப்பட்ட

இராச்சியங்கள் தம்முரிமையை யிழக்க நேர்ந்தமையால் அதற்றிற் குண்டான நீராக்கோபமும் ஆகிய இவைகளே. தவிர, அதேனியர் அயோனியர் வகுப்பைச் சேர்ந்தவர். பெலப்பொனீஸி லுள்ளவரோ பெரும்பாலும் டோரிய வகுப்பைச் சேர்ந்தவர். அதேனாவில் குடிகள் தாமே ஆண்டனர்; பெலப்பொனீஸ் மகாணத்தின் இராச்சியங்களில் பெரும்பாலும் பிரபுக்களே அரசாட்சி செய்து வந்தனர். இக்காரணங்களால் அதேனியர்களுக்கும் பெலப்பொனீஸிலுள்ளவர்களுக்கும் போர் நேர்ந்தது எதிர்பார்க்கக் கூடாததல்ல. அதேனா தன்னிடமிருந்து பெரிக்கிளீஸை நீக்க வேண்டுமென்றும், தனது ஏகாதிபத்தியத்தை விட்டுவிட வேண்டுமென்றும், தன் ஆட்சிக்குட் பட்ட இராச்சியங்களுக்கு உரிமை யளித்தல் வேண்டுமென்றும், அதை ஸ்பார்த்தா கேட்டுக்கொண்டது. பெரிக்கிளீஸ் அவ்வாறு செய்ய மறுத்தார். இதனால் பெரும போர்நிகழ்ந்தது. அப்போரில் ஸ்பார்த்தாவின் சார்பில் பெலப்பொனீஸ் மாகாணத்தின்கண் ஆர்காஸ் அக்கேயா இவ்விரண்டும் நீங்கலாக ஏனைய நாடுகளும், மெகாரா, பீயோஷியா ஆகிய நாடுகளும் சேர்ந்திருந்தன. அதேனாவின் சார்பில் அதன் ஏகாதிபத்தியத்தின் கீழுள்ள இராச்சியங்களும், கார்சைராவும் இருந்தன.

பெலப்பொனீஸ் பெரும்போரின் சம்பவங்கள்.

பெலப்பொனீஸ் பெரும் போர்த் தொடக்கத்திற் சில்லாண்டுகள் வரையில் ஒருவர் மாட்டும் வெற்றி யேற்படாதிருந்தது. கி. மு. 431, 430, இவ்வருடங்களில், ஸ்பார்த்தர்களும் அவர்தம் நேயர்களும், அட்டிக்காவினுடன் அமராடப் பெரும்படை திரட்டிச் சென்றனர். எனினும், அதேனி



யர்கள் தமது நிலன்களை ஸ்பார்த்தர்கள் தடையின்றி யழிக்குமாறு விட்டுவிட்டுக் கோட்டைக்கு உட்புறத்தே நின்றுவிட்டனர். பின்னர் அதேனியர்கள் கடல்மார்க்கமாய்ப் படையெடுத்துச் சென்று, ஸ்பார்த்தர்களுக்கு இன்னல் பல இயற்றினர். ஆயினும் போர் மட்டும் முடிந்திலது. கி. மு. 430-ம் ஆண்டில் பிளேக் எனும் பெருநோய் தோன்றி, அதேனாவில் அல்லலை விளைத்தது. கி. மு. 42[illegible]-ம் ஆண்டில் பெரிக்கிளீஸ் இறந்துபட்டார். அவருக்குப்பின் அதேனாவின் இராசாங்க விடயங்களை ஆவலுடன் அதிக சிறப்பாக நடத்துவார் ஒருவருமிலராயினர். போர் பல வருடங்கள் வரையில் நீடித்திருந்தது. அப்போரின்கண், மனதிற்கு அச்சத்தை விளைக்கத்தக்க மட்டிலாவிடயங்கள் பல நிகழ்ந்தன. போர் முடிவுக் கறிகுறியான சண்டையொன்றும் நிகழ்ந்திலது. எனினும் கி. மு. 421-ம் வருடத்தில் தாம் கைப்பற்றியவைகளை மீண்டும் கொடுத்துவிடல் வேண்டும் என்கிற கட்டுப்பாட்டினால் இருதிறத்தினரும் ஒருடன்படிக்கை செய்துகொண்டனர்.

சிசிலித்தீவில் சண்டை, கி. மு. 415-13.

போர்தொடங்கியது முதல், சிசிலியிலும், இத்தாலியிலும் உள்ள நாடுகளைக் கைப்பற்றவேண்டு மென்னும் பேரவா அதேனியர்களின் பிடர் பிடித் துந்திற்று. சிசிலித்தீவும் இத்தாலியின் தென்பகுதியும் அதேனா ராச்சியத்துடன் சேர்ந்து விடுமாயின், அதேனியர்களினது வெற்றிக்கு வழியுண்டாமென்பது திண்ணம். சிசிலியின்கண்ணுள்ள நாடுகளில் அதேனியர்கள் புகுந்து, அவற்றின் காரியங்களில் தலையிடுதற்கு, அவற்றின் சச்சரவுகளே வழி காட்டின.

வெளிப்படையாக, செஜெஸ்தா எனும் இராச்சியத்திற்கு விரோதமாய்ச் செலினஸ் எனும் இராச்சியத்திற்கு உதவி புரியவும், உண்மையில் சிசிலித்தீவைக் கைப்பற்றவும், படையெடுத்தற் பொருட்டு, சேனை யொன்றை யனுப்புதல்வேண்டு மென்று, ஆல்கிபியாடன் என்னும் அதேனியப் பிரபு ஒருவர் தமது நாட்டினர்களை வற்புறுத்தினார். இக்கொள்கையை மற்றொரு அதேனியர் நிஸியன் என்பார் எவ்வளவோ மறுத்துக் கூறியும், படையனுப்புதற்கு அதேனா தீர்மானித்துவிட்டது. அதேனாவிலிருந்து அதுவரையில் வெளிக்கிளம்பாத பெருஞ் சேனைகள் முறையே நிஸியன் ஆல்கிபியாடன், லமாக்கன் எனும் மூவரைத் தமக்கு அதிபதிகளாகக்கொண்டு சிசிலித்தீவை யடைந்தது. அதேனியர்கள் தாம் வெற்றி பெறுவோம் என்னும் நம்பிக்கையுடனிருந்தனர். எனினும், சிசிலித்தீவு பெரும்பாலும் வெகு பலம்பொருந்திய சைராக்கியூஸ் எனு மிராச்சியத்தின் ஆதிபத்தியத்திலிருந்தமையாலும், அதேனாவிற்கு வெகுதூரத்தில் இருந்தமையாலும், அதை அதேனியர்கள் வெல்வது வெகுகடினமாயிருந்தது. தவிர, அதேனாவிற்குத் திரும்பிச் செல்லக் கட்டளைபெற்ற ஆல்கிபியாடன் என்பார், தாம் அங்ஙனம் புரியாமல், ஸ்பார்த்தாவிற்குச் சென்று, அங்குத் தம்தேயத்திற்குப் பரம விரோதிகளாகிய ஸ்பார்த்தர்கள் பக்கம் தம் அறிவின் திறமையை யுபயோகித்தனர். அதேனாவிற்கு மாறாக, சைராக்கியூஸ் எனு மிராச்சியத்திற்கு உதவி புரியுமாறு, ஸ்பார்த்த படைத் தலைவர் ஒருவர் சிசிலித் தீவிற்குச் சென்றனர். இவ்வாறு போர் ஸ்பார்த்தர்களுக்கும் அதேனியர்களுக்கும் மீண்டுந் தொடர்ந்தது. அதேனியர்கள் சிசிலித்தீவின்



மேல் எழுந்த படையெழுச்சி பேராபத்தாய் முடிந்தது. லமாக்கன் எனும் படைத்தலைவர் கொலையுண்டு மண்ணிற் சாய்ந்தனர். அதேனாவினது கப்பற்படையும் அழிந்துபட்டது. அதனதிபதிகள் சிறையாகிக் கொலையுண் டொழிந்தனர். இவ்வெதிர்பாரா விபத்திற்குப்பின், அதேனா ராச்சியம் நிலைகுலைந்துபோயிற்று.

எனினும், போர் மாத்திரம் ஒன்பதாண்டுகள் வரையில் ஓயாது நடைபெற்றது. போர் சிசிலித்தீவில் நடப்பதற்குப் பதிலாக, ஹெல்லஸ் பாண்டெனும் ஜலசந்தியில் நடந்தது. ஸ்பார்த்தாவின்கண் லைஸாந்தர் எனும் சிறந்த சேனாதிபதி யொருவர் தோன்றினார். அவர் கி. மு. 404-ம் ஆண்டில் ஹெல்லஸ்பாண்டுக் கணித்தாயுள்ள இகஸ்பொட்டாமி எனுமிடத்தில் அதேனிய கப்பற்படை, நிலப்படை ஆகியவற்றைக் கைப்பற்றிக்கொண்டனர். கி. மு. 404-ம் ஆண்டில், அதேனா நகரம் முற்றுகையிடப்பட்டதனால், அது அடைக்கலம் புகவேண்டியது அவசியமாயிற்று.

ஹெல்லஸ்பாண்டில் போர், கி. மு. 412-404.

அதன் குடியரசு மழிந்தது; எகாதிபத்தியமும் அறவே யொழிந்தது. பின்னர், அதேனா ஸ்பார்த்தாவைப் பின்பற்றி நடப்பதாக ஒப்புக்கொள்ளும்படி நேரிட்டது. கிரேக்கர்களது பெரும்போர் இவ்வாறு முடிவு பெற்ற

அதேனாவின் தோல்வி. கி. மு. 404.

## 21. இளைய கைரன்.

பாரசீக ராச்சியத்தில் இரண்டாம் டேரியன் எனும் சக்கரவர்த்தியின் ஆட்சிக்காலத்திற்குப்பின், அவரது மூத்த குமாரன் ஆர்த்தசெர்க்ஸிஸன் என்பவர் பட்டத்திற்கு வந்தனர். ஆயின், இது டேரியனது இளைய குமாரன் கைரன் என்பானுக்கு முற்றும் அதிருப்தியை உண்டுபண்ணிற்று. ஆகலின், ஆசியாமைனரிலுள்ள பாரசீக மகாணங்களின் பாதுகாப்புக்காக அனுப்பப்பட்டிருந்த கைரன் தன் உடன்பிறந்தான் வசமிருந்து பாரசீக ராச்சியத்தை யபகரிக்கவேண்டுமென்னும் அடங்கா அவாக்கொண்டனன்; தன் எண்ணத்தை நிறைவேற்றும் நிமித்தம் பதினாயிரம் கிரேக்கர்களையும் லக்ஷம் ஆசியா தேசத்தவர்களையும் கூட்டிக்கொண்டு பாரசீக ராச்சியத்தின்மீது படையெடுத்து ஆசியாமைனர், கப்படோசியா, ஸிலிஷியா, முதலிய நாடுகளின் இடையே சென்று, யூப்பிரத்தீஸ் நதியைக் கடந்து பின்னர் நான்கு லக்ஷம் சேனையுடன்வந்த ஆர்த்தசெர்க்ஸிஸன் சக்கரவர்த்தியுடன் கனக்ஸா எனுமிடத்தில் போர்புரிந்தனன். இப்போரில் கிரேக்கர்கள் வெற்றியடைந்தும், அது பயனற்றதாகவே முடிந்தது.

*கைரனும் பதினாயிரம் கிரேக்கர்களும்.*

*கனக்ஸா சண்டை, கி. மு. 401*

ஏனெனில், போர் இருதிறத்தினர்க்கிடையே கடுமையாக நடந்துகொண்டிருந்த சமயத்தில் கைரன், தன் சகோதரனை, அமர்க்களத்தில் காணவும், திடீரென ஆவேசங்கொண்டு, தன் உயிருக் கஞ்சாமல் அவன் மீது பாய, அவனது மெய்காப்பாளர்களால் வெட்டுண்டு வீழ்ந்தான். இங்ஙனம் பாரசீகத்தின் மீது எடுத்த படை



யெழுச்சிக்கு ஆவிபோன்றிருந்த கைரன் மடிய, பகைவர்களது நாட்டின்கண் அகப்பட்டுக்கொண்ட கிரேக்கர்கள் சிறிது நேரம் துன்பக் கடலி லாழ்ந்தனர். பின்னர், தைரியத்தைக் கைவிடாமல் அவர்கள் தம் தேயத்திற்குத் திரும்பிச் செல்லத் தீர்மானித்தனர். பகைவர்களது சூழ்ச்சியினால் கிரேக்க சேனாதிபதிகள் படுகொலைக்கிலக்காயினரெனினும், கிரேக்க வீரர்கள் வேறு தளகர்த்தர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு அநேக மலைகளையும் ஆறுகளையும் நாடுகளையும் கடந்து இடையில் பல இடையூறுகட்குட்பட்டுக் கடைசியாகத் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போந்தனர். இவ்வனம் பதினாயிரம் கிரேக்கர்கள் நான்கு லக்ஷம் பாரசீகர்களை அவர்களது நாட்டின்கண்ணே முறியடித்துத் திரும்பிவந்தமை மிகவும் கவனிக்கத் தகுந்த விடயம். இந்நிகழ்ச்சி கிரேக்க தேயத்திற்கு மிக்க நன்மை பயந்தது; ஏனெனின், கைரன் ரணகளத்தில் இறவாது வெற்றி பெற்றிருப்பின், அவன், பாரசீக ராச்சியத்திற் கதிபதியாகி, பின்னர்க் கிரேக்கர்களது சுதந்திரத்திற்கே கேடு நினைத்திருப்பான். இச்சம்பவத்தினால் மற்றும் சில பயன்கள் உண்டாயின. இச்சம்பவம் பாரசீகர்களது ராச்சியம் க்ஷீணதசையடைந்துவிட்டதென்பதற்குப் போதிய சான்றாகும். ஆகலின் பாரசீகர்களது ஏகாதிபத்தியத்தை அழித்தல் எளிதெனக் கிரேக்கர்கள் தெரிந்துகொண்டனர். எனவே, ஸ்பார்த்தாவினது மன்னனாகிய இஜிஸிலான், பேரே எனும் இராச்சியத்தின் வல்லரசனாகிய ஜேஸன், மாஸிடோனியாவினது மன்னராகிய அலெக்ஸாந்தர் முதலியவர்கள் ஆசியாவின்மீது படையெடுக்கத் துணிந்தனர். இச்சம்பவத்தினால், கிரேக்கர்களது மனோவலிமையும், வீர

மும், சைனியத்தின் உயர்வும் பாரசீகரது சைனியத்தின் தாழ்வும் ஆகிய இவ்விடயங்கள் அறிந்து கோடல் எளிது.

---

## 22. ஸ்பார்த்தாவினது ஏகாதிபத்தியம், கி. மு. 404-371.

பெலப்பொனீஸ் யுத்தத்தின் பயனால் அதேனா தாழ்வடைந்தமை ஸ்பார்த்தா கிரீஸ் தேயத்தின்கண் உயர்ந்த பதவியடைதற்குக் காரணமாயிற்று. கிரேக்க ராச்சியங்களின் சுதந்திரம் அதேனாவால் அழிபடாமல் இருத்தற்பொருட்டே, பெலப்பொனீஸ் யுத்தத்தைத் தொடங்கினதாக ஸ்பார்த்தர்கள் தற்புகழ்ச்சி செய்துகொண்டனர். ஆயின், ஸ்பார்த்தா, யுத்தம் முடிவுற்ற பிறகு, அதேனிய ஏகாதிபத்தியத்திற் குள்ளடங்கிய கிரேக்க ராச்சியங்களுக்கு அதேனாவால் கவரப்பட்ட அவைகளின் சுதந்திரத்தைக் கொடுக்காது அவைகளின் மீது தன் ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்தியது. ஸ்பார்த்தாவின் ஏகாதிபத்தியத்தைத் தாபித்தவர் பெலப்பொனீஸ் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த அதன் தளகர்த்தா லைஸாந்தரே யாவர். அவர் அதேனாவினிடமிருந்து விடுவிக்கப்பட்ட ராச்சியங்கள் ஒவ்வொன்றிலும் ஹார்மஸ்த் எனும் நகரக்காப்பாளர் ஒருவரை நியமித்தனர்; அன்றியும் பதின்மர் அடங்கிய டெக்கார்க்கி என்னும் சபையையும் ஸ்பார்த்த சேனை ஒன்றையும் அவ் விராச்சியங்கள் ஒவ்வொன்றிலும் அமைத்தார். இங்ஙனம் ஸ்பார்த்தா தன் ஏகாதிபத்தியத்தைச் செலுத்திவந்தது. ஸ்பார்த்தாவின் ஆட்சி

*ஸ்பார்த்தாவின் ஏகாதிபத்தியமும் அதனால் உண்டான தீங்குகளும்.*



குரூரமுள்ளதாக விருந்தது. ஸ்பார்த்தாவிற்குக் கீழ்ப்பட்ட நாடுகளில் ஸ்பார்த்தனொருவன் தன் மனம் போனவாறு எதையும் இயற்றலாம். எல்லா நகரங்களும் ஸ்பார்த்தனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்துவந்தன. ஸ்பார்த்தாவால் ஏற்படுத்தப்பட்ட ஹார்மஸ்த் எனும் நகரக் காப்பாளர், பெயருக்கு மாத்திரம் நகரக் காப்பாளரா யிருந்தனரே யொழிய, செய்கையில் கொடுங்கோன் மன்னராகவே யிருந்தனர். அவரது குரூரச் செய்கைகளைப்பற்றி ஸ்பார்த்தாவின் ஆதீனத்திற் குட்பட்ட ராச்சியங்களி லொருவன் ஸ்பார்த்தாவுக்குத் தெரிவித்தல் பயனற்றதாயிருந்தது. டெக்கார்க்கிச் சபையினங்கத்தினர்கள் தம் மனம் போனவாறு காரியங்களைச் செய்தற்குப் பெற்றிருந்த அதிகாரத்தை இராசாங்கத்திலுள்ள தமது விரோதிகளைப் பழிக்குப்பழி வாங்குவதிலும் கொள்ளையடிப்பதிலும் உபயோகித்து வந்தனர். இத்தகைய சபையினது ஆட்சியினால் சட்டங்களை நெறிபிறழ்ந்துபயோகித்தல், ஆட்சி முறைகளை அழிவுறச்செய்தல், பிறர்சொத்துக்களைச் சூறையாடுதல், இராச்சிய விஷயங்களில் தமது கொள்கைக்கு மாறான கொள்கையை யுடையவர்களைக் கொலைபுரிதல் ஆகிய தீச்செயல்கள் தலையெடுத்தன. அதேனா நகரின்கண் பெலப்பொனீஸ் யுத்தம் முடிந்தபின், லைஸாந்தரின் உதவியினால் ஏற்படுத்தப்பட்ட முப்பதின்மர்களடங்கிய சபையானது புரிந்த குரூரச்செய்கைகளே ஸ்பார்த்தா தன் குடிகளைக் குரூரமாக நடத்தியதற்குச் சான்றாகும். ஸ்பார்த்தாவின்கண், அதற்குக் கீழ்ப்பட்ட நாடுகளில் ஸ்பார்த்தர்கள் புரிந்துவந்த அக்கிரமங்களைப்பற்றி முறையிட்டுக் கோடற்குரிய மேலான

நியாயத்தலமும் ஒன்றுங் கிடையாது. இவ்வாறு ஸ்பார்த்தா, தான் செய்த வாக்குத்தத்தத்திற்கு மாறாக, ஒவ்வொரு கிரேக்க ராச்சியத்திலுமிருந்த சுய ஆட்சியை அழித்தது. அதனால், அதேனாவினது ஆட்சியைவிட, ஸ்பார்த்தாவின் ஆட்சி பன்மடங்கு தீயதாயிருந்தது. அதேனியர்களது ஆட்சியைச் சாட்டையடிக் கொப்பிடுவோமாயின், ஸ்பார்த்தாவின் ஆட்சியைத் தேள்கொட்டுதற் கொப்பிடலாம். அதேனா, ஆசியாவிலுள்ள கிரேக்கர்களைப் பாரசீகர்களது ஆதீனத்தினின்றும் விடுவிக்க முயன்றதனால், தனக்கு ஏகாதிபத்தியம் தேடிக்கொண்டது. ஸ்பார்த்தாவோ, அவ்வாறின்றி, ஆசியாவிலுள்ள கிரேக்கர்களைப் பாரசீகத்தவர்களின் ஆதீனத்தில் விட்டுவிட்டு, அதற்கு மறுபயனாய்ப் பாரசீகர்களது நட்பைப் பெற்றுத் தன் ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்தியது. நாம் ஏற்கனவே கூறியுள்ளவாறு, அதேனாவினுடன் கூடிய வரையில் அதற்குக் கீழ்ப்பட்ட இராச்சியங்களின் குறைகள் யாவும் மனோபாவத்தை யொட்டியனவாயிருந்தன. ஸ்பார்த்தாவிற்குக் கீழ்ப்பட்ட இராச்சியங்களின் குடிகளோ, உண்மையில் அதனுடைய குரூரச் செயல்களுக் குட்பட்டுப் பெரிதும் வருந்தினர். தங்கள் நோக்கங்கள் பெருந்தன்மையற்றனவா யிருந்தமையாலும், தமக்குக் கல்வியும் இராச்சிய தந்திரமும் குறைவுற் றிருந்தமையாலும், உரிமையாளர்களை ஆளும் வன்மை தங்களுக்கு இன்மையாலும், ஸ்பார்த்தர்கள் தமக்குக் கிடைத்த அதிகாரத்தை மாறான நெறியில், உபயோகித்து, தமக்குக் கிடைக்கவேண்டிய புகழைப் பெறாமல், கிரீஸில் ஒற்றுமை யின்மையை யொழிக்க வழிதெரியாத வாளாவிருந்தனர்.



ஸ்பார்த்தா ஏகாதிபத்தியம் செலுத்திய பொழுது ஏற்பட்ட சம்பவங்கள்.

பெரும்பாலும், பாரசீகர்களது ஆதரவினாலும் பொருளுதவியினாலுமே ஸ்பார்த்தர்கள் அதேனியர்களை வென்றனர். எனினும் பாரசீகர்களுக்கும் ஸ்பார்த்தர்களுக்கும் பெலப்பொனீஸ் யுத்தம் முடிந்தபின் போர் நேர்ந்தது. இப்போர்க்குக் காரணங்களை இனிக் கூறுவாம். ஸ்பார்த்தர்கள் பதினாயிரம் கிரேக்கர்களுடைய செய்கையால் பாரசீகம் வலியற்றிருந்ததை யுணர்ந்து அதைத் தாக்க விரும்பினர். மேலும் ஆசியாவிலுள்ள கிரேக்கர்களை மீளவும் பாரசீகரது ஆட்சிக் குட்படுத்த ஆசியாமைனரிலுள்ள பாரசீகமாகாணத் தலைவன் திஸ்ஸபெர்னன் என்பவன் முயன்றனன்.

ஸ்பார்த்தாவுக்கும் பாரசீகத்திற்கும் போர். கி. மு. 400-386.

ஆதலின் ஆசியாவிலுள்ள கிரேக்கர்கள் தம் சுதந்திரத்தைக் காக்க ஸ்பார்த்தர்களை உதவி வேண்டினர். அன்றியும் இஜிஸிலான் என்னும் ஸ்பார்த்த மன்னன், தனது தேயம் பாரசீகதேயத்தின் முன்னிலையில் மிகத் தாழ்வடைந்திருந்ததைக் கண்டு சினங்கொண்டு, பாரசீகத்தைக் கைப்பற்றக் கருதினன். இவ்விதக் காரணங்களினால் ஸ்பார்த்தாவுக்கும் பாரசீகத்திற்கும் போர் தொடங்கியது. ஸ்பார்த்த மன்னன் ஆசியாமைனரிலுள்ள பாரசீக மாகாணங்களின் மீது படையெடுத்துச் சில சண்டைகளில் வெற்றி பெற்றனன். ஆயினும் பாரசீகத்தை ஸ்பார்த்தாவின் ஆளுகைக் குட்படுத்தவேண்டுமென்ற அவனது எண்ணம் ஈடேறவில்லை. ஏனெனில், கிரீஸில் உண்டான கலகத்தினால் அவன் தன் தேசத்திற்குத் திரும்பிப்போகும்படி நேர்ந்தது.

இக்கலகத்தினது காரணங்களை நாடறிந்து கோடல் எளிதேயாகும். கிரேக்க ராச்சியங்கள் பலவும் சுயஆட்சி பெற விரும்பின. அவ்விராச்சியங்கள் ஸ்பார்த்தாவின்பால் வெறுப்பும் பொறாமையும் அடைந்தன. அவற்றிற்கு ஸ்பார்த்தா கொடுங்கோலோச்சுவதுபோல் தோன்றியது. ஆதலின் தீப்ஸ், ஆர்காஸ், காரிந்த் எனு மிராச்சியங்கள் ஒன்றுகூடி ஸ்பார்த்தாவுக்கு விரோதமாய் ஒருடன்படிக்கை செய்துகொண்டன. பெலப்பொனீஸ் யுத்தம் முடிந்த பின்னர், அதேனா தன் பழைய நிலையைச் சிறிது பெற்றது. அதேனாவும் முற்கூறிய நேய விராச்சியங்களுடன் சேர்ந்துகொண்டது. பியோஷியப் போர் என்றும், காரிந்தியப் போர் என்றும் இரண்டு யுத்தங்கள் நடந்தன. ஆயினும் ஒன்று சேர்ந்த நேய விராச்சியங்களால் ஸ்பார்த்தாவிற்குப் பெருந் தீங்குகள் புரிய இயலவில்லை. ஸ்பார்த்தாவிற்குப் பழைய சேனாபலம் குறையாமலிருந்தது. தவிர, அது ஆசியாவின்கணிருந்த இஜிஸிலான் என்பாரை வரவழைத்து அவர் மூலமாய் முன்பிருந்ததைவிடப் பெரும் பலம் பெற்றது. அது, யுத்தத்தை முடிவுக்குக் கொணரும்பொருட்டுப் பாரசீகத்தினது உதவியை நாடியது. பாரசீகப் பெரும் போர்க்குப்பின் ஆசியாமைனரின்கண் சுதந்திரம் பெற்றிருந்த கிரேக்க ராச்சியங்களைப் பாரசீகர் மீண்டுங் கைப்பற்றிக்கொள்ளுதற்குச் சம்மதிப்பதாகவும் அது தெரிவித்தது. இவ்வாறு பாரசீகர்கள், தாம் பெறப்போகும் பேரிலாபத்திற்குக் கைம்மாறாக, ஸ்பார்த்தர்களுக்குக் கிரீஸ் நாடுகள் கீழ்ப்படிந்து நடக்குமாறு தங்கள் பொரு

கிரீஸின்கண் போர், கி. மு. 395-387.



ளையும் சேனைகளையுங் கொண்டு அவர்களுக்கு உதவி புரிவதாய் ஒத்துக்கொண்டனர். இங்ஙனம் அண்டால்ஸிடன் உடன்படிக்கை என்னும் ஓர் உடன்படிக்கையினால் கிரீஸில் போர் முடிந்தது. இவ்வுடன்படிக்கை ஸ்பார்த்தாவிற்கு அது ஏற்கனவே கொண்டிருந்த ஏகாதிபத்தியத்தை உண்மையில் நிலைநிறுத்தியது; ஏனெனில் அவ்வுடன்படிக்கை ஸ்பார்த்தாவினது சங்கத்தை நிலைநிறுத்தற்பொருட்டும், அதற்குப் பகைமைபூண்டிருந்த இதர சங்கங்களைக் குலைந்தொழியச் செய்தற்பொருட்டும் ஏற்பட்டது. இதன் நிபந்தனைகள் பாரசீகத் தேசபத்தரையனிடமிருந்து கிரீஸுக்குக் கடிதவாயிலாகத் தெரிய வந்தன. கிரீஸும் அந்நிபந்தனைகட்கு இணங்கவேண்டியதாயிற்று. இதனால் கிரீஸ் பாரசீகர்களது காலில் வீழ்ந்தது போலவும், அது சாலமிஸ், பிளத்தேயா, எனுமிவ்விடங்களிற் பெற்ற வெற்றிகள் வீணானது போலவும் காணப்பட்டன.

அண்டால்ஸிடன் உடன்படிக்கை, கி. மு 386.

ஸ்பார்த்தா கிரேக்கர்களது போரில் பாரசீக தேசத்தரையனைப் பொதுவாளியாக வேற்படுத்திக் கிரேக்கர்களின் சுதந்திரம் அழியும்படி செய்தமையால், அதற்குப் பேரவமான மேற்பட்டிருந்தபோதினும், அது அச்செயலைத் தனக்கொரு சிறந்த வெற்றி யெனவே கொண்டது. ஏனெனில் அஃது அவ்வாறு புரிந்தமையால், கிரீஸ் தேசத்தின்கண் அதை எதிர்ப்பாரொருவரு மிலராயினர். அஃது சால்ஸிடிஸிலுள்ள ஐக்கிய ஆட்சிச்சங்கத்தை அழித்தது; ஆற்கேடியா நாட்டிலுள்ள மாண்டினியா எனும் நகர ராச்சியத்தைப் பாழாக்கிற்று. இங்ஙனம்

ஸ்பார்த்தர் செருக்குடன் கிரேக்க ராச்சியங்களின் சுதந்திரத்தைக் கவரத் தொடங்கியது; பின்னர்ப் பியோஷியாவிலுள்ள தீப்ஸ் ராச்சியத்தின் வன்மையைக் குறைக்க முயன்றது. தீப்ஸ் தனக்குக் கிரீஸ் தேசத்தின்கண் அதிகாரம் உண்டாதற் கேதுவாயிருந்த பியோஷியா நாட்டின்கண்ணுள்ள நகரங்கட்குத் தான் கொண்ட தலைமைத் தன்மையை விடுமாறு ஸ்பார்த்தாவால் கட்டாயப்படுத்தப்பட்டது. பின்னர்ச் சமாதானம் கிடந்திருந்த காலத்தில், கி. மு 382-ம் ஆண்டில், கிரேக்கர்களுக்கு வெறுப்பு உண்டாகும் வண்ணம், போபிடான் என்னும் ஸ்பார்த்த சேனாபதி தீப்ஸ் கோட்டையை வஞ்சனையாகக் கைப்பற்றிக்கொண்டனன். இங்ஙனம் இவன் தீப்ஸ் ராச்சியத்தை ஸ்பார்த்தாவின் ஆளுகைக்குக் கீழ்ப்படுத்தி அதன் அதிகாரம் அங்கு நிலைத்து நிற்க ஒரு சேனையையும் காவல்வைத்தான். இவ்வாண்டில், கிரீஸில் ஸ்பார்த்தா உன்னத நிலைமை அடைந்திருந்தது. ஆயினும் அது தான் செய்த தீச்செய்கைகளுக்குரிய தண்டனைகளைப் பின்னர் ஏற்கும்படி நேரிட்டது.

௨. ஸ்பார்த்தாவின் கொடுஞ் செயல்கள்.

தீப்ஸ் ராச்சியத்தில் ஸ்பார்த்தாவின் உதவியினால் ஏற்படுத்தப்பட்ட பிரபுக்களின் ஆட்சி குரூரமும் கொடுங்கோன்மையும் உள்ளதாயிருந்தது. இப்பிரபுக்கள் தேசாபிமானிகள் சிலரைத் தேசப்பிரஷ்டம் செய்திருந்தனர். அவ்வாறு நகரினின்றும் நீக்கப்பட்டவர்களுள் ஒருவராகிய பெலோப்பிடான் என்பார் தீப்ஸ் நகரத்தை ஸ்பார்த்தாவின் வசத்தினி-



தீப்ஸ் சுயாதீனம் பெற்ற விதம், கி. மு. 379.

-ருந்து விடுவிப்பதற்கும் குரூரப் பிரபுக்களின் ஆட்சியை நீக்குதற்கும் கருதித் தமது உயிரைத் துரும்பென மதித்துத் தாம் செய்யக் கருதியிருந்த காரியத்தில் தம்முடனின்று உதவிபுரிவதற்கு அறுவரைத் தம்முடன் சேர்த்துக்கொண்டனர். ஆர்ச்சியன், பிலிப்பன் என்னும் தீப்ஸ் ராச்சியத்திலுள்ள தலைமை அதிகாரிகளினது அதிகாரம் செலுத்தும் காலம் முடிவுபெறும் நாள் நெருங்கியது. அதற்கு முன்னாள், பெலோப்பிடானும் அவரது நண்பர்கள் அறுவரும், வேட்டைக்காரர்கள்போல் வேடம் பூண்டு, இரவுபட்டதும் வயல்களிலிருந்து தம் வீடுகளுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்த உழவர்கள் பலருடனும்சேர்ந்து, தீப்ஸ் நகரத்தின்கண் புகுந்து, அங்கு ஓரிடத்தில் மறைந்திருந்தனர். தலைமை அதிகாரிகளில் ஒருவனது காரியதரிசி அன்றிரவு தலைமை அதிகாரிகளைப் பெருமைப்படுத்துவதன் நிமித்தம் தான் ஒரு பெருவிருந் தேற்படுத்துவதாகவும் அவ்விருந்துக்கு அவர்கள் வரவேண்டுமென்றும், தான் அவர்கள் விரும்பக்கூடிய அழகிய உயர்குடிப் பெண்கள் சிலரை வரவழைப்பதாகவும் அவர்களுக்குத் தெரிவித்தனன். அவ்வதிகாரிகளும் அவ்வாறே வந்தனர். மேற்சொல்லிய காரியதரிசி அவர்களை நல்வரவேற்று ஆசனங்களிலமர்த்தினன். அப்போது ஏவலாளன் ஒருவன் ஒரு கடிதத்தைக் கொணர்ந்து தலைமையதிகாரிகளி லொருவனிடங் கொடுத்து அக்கடிதம் மிக முக்கியமான காரியத்தைக் குறித்ததாகும் எனக் கூறினன். அக்கடிதத்தைப் பெற்ற அதிகாரி அதைத் தனதிருக்கையில் வைத்துவிட்டு 'எல்லாக்

'காரியமும், நாளைக்குத்தான்'. எனக்கூறி விடுத்தனன். மறுநாட் காலையில் அக்கடிதம் அங்கு நிகழ்ந்த சதியாலோசனையை வெளிப்படுத்தும்பொருட்டு அனுப்பப்பட்டதென விளங்கியது. அவ்வதிகாரிகள் அம்முக்கியக் கடிதத்தைக் கவனியாமல் பக்கத்தறையிற் காத்திருந்த பெண்மணிகளை யழைக்கும்படி கூறினர். மேற்கூறிய காரியதரிசி அவர்கள் உயர்குடிப் பெண்களாதலின் பல புருடர்களுக் கிடையில் வர வெட்கப்படுவதாயும் அவர்கள் தங்களுடனிருக்கும் பணியாட்கள் பலரையும் வெளியே அனுப்பிவிட்டால் அப்பெண்கள் வருவார்களெனவுங் கூறினார். விருந்திற்கு வந்த பலரும் வெளிச் சென்றனர். எனினும் அதிகாரிகளும் அவர்களது நண்பர்களிற் சிலரு மாத்திரம் மதுவுண்டு, மயக்கங்கொண்டு இருந்தனர். அச்சமயத்தில் பெண்கள் உள்வந்து பிரபுக்களுக்குப் பின்புறமாக வமர்ந்தனர். அப்பெண்கள் முகமூடி யணிந்திருந்தமையால் அதிகாரிகள் அவர்களைத் தம் முகமூடிகளைத் திறக்குமாறு கட்டளையிட்டனர். முகமூடி யணிந்திருந்தவர்கள் அவர்கள் கருதியபடி பெண்களல்லர்; பெண் வேடந் தரித்த பெலோப்பிடானும் அவரது தோழர்களுமேயாவர். ஆதலின் அவர்கள் திடீரெனப் பாய்ந்து அதிகாரிகளின் ஆகங்களில் வேகமாகத் தம்வாளைப் பாய்ச்சினர். இவ்வாறு அவர்கள் மடிந்தொழிந்தபின், பெலோப்பிடானும் அவரது தோழர்களும் பிரபுக்களின் குரூரத்தலைவர்களும் இராசாங்கத்தின் அதிகாரிகளுமாகிய லியோந்தியாடன், ஹிப்பேத்தன் எனும் இருவர்களையும் அவர்கள் வீட்டிற்குச் சென்று கொன்றொழித்தனர். மறுநாள் கதிரவனுதயத்தில் தீப்ஸ் ராச்சியத்தின்கண்



ஒரு பெருஞ் சபைகூடிற்று. அக்கூட்டத்தவர் சதியாலோசனைக்காரர்களுக்குப் பூவினால் மகுடந் தரித்தனர். அவர்களில் பெலோப்பிடான் உள்ளிட்ட மூவர் தலைமை அதிகாரிகளாக ஏற்படுத்தப்பட்டனர். குடியரசு மீளவும் தீப்ஸ் நகரில் தாபிக்கப்பட்டது; தீப்ஸ் சுதந்திரமும் பெற்றது.

முக்கிய கிரேக்க ராச்சியங்களுடன் மீளவும் ஸ்பார்த்தா போர் புரிதல்.

பின்னர் இதனால் சினங்கொண்ட ஸ்பார்த்தாவுக்கும் தீப்ஸுக்கும் பெரும்போரொன்று நிகழ்ந்தது. அப்போரில் அதேனியர்கள் தீபர்களுடன் சேர்ந்தனர். ஸ்பார்த்தர்கள், தீபர்களது ராச்சியத்தின்மீது படையெடுத்தனரெனினும், அவர்களால் அதைக் கைவசப்படுத்திக்கொள்ள இயலவில்லை. ஸ்பார்த்தர்கள் அதேனியர்களால் கப்பற் சண்டையிலும், தீபர்களால் நிலச் சண்டையிலும் தோல்வியுற்றுச் சமாதானஞ் செய்துகொள்ள ஆவலாயினர். அதேனாவும் தன் ஊக்கத்தை இழந்து சமாதானம் செய்துகொள்ள விருப்புற்றது. மேற் சொன்ன அண்டால்ஸிடன் உடன்படிக்கையையொட்டியே கல்லியன் உடன்படிக்கை எனக் கூறும் ஒரு உடன்படிக்கை செய்யப்பட்டது; அதையொவ்வொரு தேயமும் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதற்குத் தீபர்கள் பியோஷியாவில்தமது ஏகாதிபத்தியத்தை நிலைபெறச் செய்தற்கு இடந்தரினல்லது ஒத்துவர முடியாதெனக் கூறிவிட்டனர்.

கல்லியன் உடன்படிக்கை கி. மு. 371.

வியூக்திரா சண்டை.

தீப்ஸ் இவ்வாறு தனியே பிரிந்துவிட்டமையால், ஸ்பார்த்தர்கள் களிப்புற்று அதனோடு முடிவான போர் புரிவதற்கு ஏற்பாடு செய்தனர். கி. மு. 371-ம் ஆண்டில், கிளியோம்பிராத்தன் என்பார் ஒருவர் தீப்ஸைத் துன்பத்திற்குள்ளாக்கக் கருதிப் பெரும்படையுடன் பியோஷியாவிற் புகுந்தனர். எனினும், தீப்ஸ் எதிர்பாராத வன்மையுடன் லியூக்திரா எனும் இடத்தில் போர் புரிந்தது. தீப்ஸின் படைத்தலைவராய எப்பமினொந்தன் என்பார் வெற்றிபெற்றார்; கிளியோம்பிராத்தன் கொலையுண்டனர். ஸ்பார்த்தர்கள் முழுதுந் தோல்வியடைந்தனர். இத்தோல்வியினால் நெடுநாட்களாய்த் தான் பெற்றிருந்த பதவியினின்றும் ஸ்பார்த்தா கீழிறங்கிவிட்டது. அதன் ஏகாதிபத்தியம் ஒழிந்துபோயிற்று. பின்னர், தீபர்களது ஏகாதிபத்தியம் தொடங்கியது.

---

## 22. தீப்ஸின் ஏகாதிபத்தியம். கி. மு. 371-362.

தீப்ஸினது ஏகாதிபத்தியத்தில் உண்டான சம்பவங்கள்.

தீப்ஸின்கணிருந்த எப்பமினொந்தன் என்பார் ஒரு சிறந்த போர் வீரரும், இராச்சியதந்திர நிபுணருமாவர். கிரீஸ்தேசத்தின்கண், அவருக் குண்டாயிருந்த செல்வாக்கு, அவருக்கு முன்பிருந்தோர் ஒருவருக்கும் இருந்ததில்லை. தீப்ஸ், ஏகாதிபத்



தியத்தையேற்ற சிறிது காலத்திற் கெல்லாம், தன் அதிகாரத்தைத் தெஸ்ஸலியிலும், மாஸிடோனியாவிலும் பரவச்செய்தது. எப்பமினொந்தன் பெலப்பொனீஸின்மீது நான்கு முறை படையெடுத்தனர். ஸ்பார்த்தாவை யவமானப் படுத்துவதுடன் நில்லாது அநேக தலைமுறைகளா யதற்குக் கீழ்ப்பட்டிருந்த நாட்டினர்களைப் பலம் பொருந்தியவர்களாகச் செய்தல்வேண்டு மென்பதும் அவரது முக்கிய நோக்கம். அவர், ஆற்கேடியா வெனு நாட்டிற்கு, மெகலப்பொலிஸ் எனு நகரத்தைத் தலைநகராக்கினர். தவிர, அவர், ஸ்பார்த்த சரித்திரத் தொடக்கத்தில் அடிமைத்தனத்திற்கு ஆட்பட்டிருந்த மெஸ்ஸீனியர்கட்கு மீண்டுஞ் சுதந்திரமளித்து, அவர்கள் பொருட்டு மெஸ்ஸீனே எனு மொரு நகரையும் ஏற்படுத்தினர்; ஸ்பார்த்தாவிற்குப் பகைமைபூண்ட ஆற்கேடியாவின் ஐக்கியஆட்சிச்சங்கத்திற்கும் உதவி புரிந்தார். கிரீஸின்கணுள்ள பல இராச்சியங்கள் எப்பமினொந்தனுடன் ஒத்துழைத்தன.

எனினும், பண்டைய பகைமையும், பொறாமையும் மீண்டும் கிரீஸ் தேசத்தின்கண் தோன்றின. குடிகள் அதேனிய ஆட்சியை எவ்வளவு யருவருத்தனரோ அவ்வளவு தீப்ஸினது ஆட்சியையும் வெறுக்கத் தலைப்பட்டனர். சில்லாண்டுகள்வரையில் தீப்ஸின் கருத்தின்படி யாவும் நடந்தேறின. பின்னர், தீப்ஸின் அதிகாரம் முடிவுக்குவந்தது. ஸ்பார்த்தர்களும், அதேனியர்களும், தீபர்களிடம் பகைமை பூண்டிருந்த மற்ற நாட்டினர்களும் ஒன்றுகூடி ஒருடன்படிக்கைசெய்துகொண்டு எப்பமினொந்தன் செய்திருந்த

ஏற்பாடுகளைத் தடுக்க ஆரம்பித்தனர். எப்பமினாந்தன், அத்தகைய வேற்பாடுகளை நிலைநிறுத்தும்பொருட்டு, கி. மு. 362-ம் ஆண்டில், பெலப்பொனீஸஸுக்குச் சென்றனர். அதன்பின் நடைபெற்ற மாண்டினியா எனும் போரில் தீபர்கள் வெற்றி பெற்றனர்; எனினும் வெற்றிபெறுங் காலத்தில் எப்பமினாந்தன் கொலையுண்டனர். தீப்ஸின் ஏகாதிபத்தியமும் அவரது மரணத்துடன் முடிவுற்றது.

மாண்டினியா சண்டை.

தீப்ஸின் ஆதிபத்தியத்தை நிலைபெறச் செய்தவர்கள், பெலோப்பிடான் எப்பமினாந்தன் எனு மிருவராவர். இவர்கள் பண்டைக்காலத்தோர் புகழ்தற்குரிய சீரிய நோக்கங்களையுடையவர்களும், உண்மையான நண்பர்களுமாயிருந்தனர். பெலோப்பிடான் என்பவருக்குத் துணிவும் வல்லமையுமுண்டு. தவிர, அவர் வைராக்கியம் வாய்ந்த தேசாபிமானியும், திறமை பொருந்திய சேனாதிபதியு மாவர். அவர், ஸ்பார்த்தாவினது ஆட்சியினின்றும் தீப்ஸை விடுவிக்க, ஊக்கங்குன்றாத் தேசப்பிரஷ்டர்களுக்குத் தலைவராயிருந்தமையை ஏற்கனவே நாம் கூறியுள்ளோம். குடிகள் கி. மு. 378-364-ம் ஆண்டு வரையில் அவரை ஒவ்வோராண்டும் பியோஷியா முழுதுக்கும் தேர்ந்தெடுக்கும் தனகர்த்தர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுத்தார்கள். அவர், தீபர்களது முயற்சிகளையெல்லாம் முன்னின்று நடத்தினவர்களில் ஒருவராவர். தவிர, அவர் எப்போதும் எப்பமினாந்தனின் ஆட்சிக்குக் கீழ்ப்படிந்து, அதை யநுமோதித்து வந்தார்.

பெலோப்பிடான்



எப்பமினாந்தனது இராச்சியவாழ்க்கை, கி. மு. 378 - 362 - ம் ஆண்டு வரையில், ஈரெட்டாண்டு காலமே யிருந்தது. அப்பதினாறாண்டுகளில் கடைசி ஒன்பது வருட காலத்தில் (கி. மு. 371-362.), அவர்எவரும் அடைதற்கரிய அதிகாரத்தைப் பெற்றனர். அவர் படைத்தலைவராகவும், தேசாபிமானியாகவும், சொல்வன்மை யுடையவராகவு மிருந்தார். அவர், இராச்சியதந்திரங்களில் பெரிக்கிளனுக்குத் தாழ்ந்தவரெனினும், படை நடத்துந் திறமையில் அவருக்கு மேம்பட்டவராகவே விளங்கினார். அவர், தம் இளமைப்பருவத்தில் ஏழையாயிருந்து, இறக்குந் தருணத்திலும் அபரக்கிரியை முதலிய செலவுகட்கும் பொருளின்றி யிறந்தார். பேராசை யென்பது அவரிடத்தில் சிறிதுங் கிடையாது. தமதிராச்சியத்திற்குச் சேனையிற் சாதாரண வீரனாயிருந்து உழைப்பதில்கூட அவருக்கு அதிருப்தி கிடையாது. அவரது நோக்கங்களும் நடவடிக்கைகளும் மிகப் பெருமை வாய்ந்தவைகளாகவும், போற்றத்தக்கவைகளாகவு மிருந்தன. பண்டைக்காலத்து மாந்தர்களினது புகழையும், மதிப்பையும், தமது சிறந்த செய்கைகளால் ஒருங்கே பெற்ற உத்தமப் பெருவீரரும் அவரே.

எப்பமினாந்தன் என்பாரது சிறந்த குணங்கள்.

இத்தகைய சிறந்த குணங்களையும் செயல்களையு முடையாரது இராச்சியதந்திரங்களிற் சிலவற்றை யிங்குக் கூறுவாம். ஸ்பார்த்தர்களுடைய ஆட்சி, குரூரமானதாகவும், இழிவானதாகவும், தன்னலங் கருதுவதாகவு மிருந்தது. மித்திரபேதஞ் செய்து அரசாள்

அவரது இராச்சிய தந்திரம்.

வதே அவர்களது முக்கியக் கொள்கை. அவர்களது ஆட்சிக் குட்பட்ட இராச்சியங்கள் வன்மையற்றுச் சோர்வடைந்தன. ஸ்பார்த்தாவின் ஆட்சியில், அதற்குக் கீழ்ப்பட்ட நாடுகட்கு, ஒற்றுமையாயிருத்தல் வேண்டுமென்னும் எண்ணமே யில்லா தொழிந்தது. ஸ்பார்த்தாவும், சுயநலங் கருதி, அந்நாடுகட்கிடையிலுண்டான பொறாமை யென்னுந் தீயை வளர்த்துக் கொண்டிருந்தது. தீங்கு புரிவதிற் பின்வாங்காத ஸ்பார்த்தாவை வேருடன் களையவேண்டுவது முக்கியமென்பதை எப்பமினாந்தன் உணர்ந்தனர். தாழ்ந்த ஆற்கேடியர்களும் பெலப்பொனீஸில் ஸ்பார்த்தர்களது அதிகாரத்தை எதிர்க்கத் தலைப்பட்டனர். மெகலப்பொலிஸ் எனு நகரத்தை ஏற்படுத்தியதாலும், மெஸ்ஸீனியநாட்டைப் பழையநிலைக்குக் கொண்டுவந்ததாலும், ஆற்கேடியாவினது ஐக்கியச் சபையைப் பண்டைய நிலைக்குக் கொண்டுவந்த மாண்டினியாவிற்குத் தக்க உதவி புரிந்ததாலும், ஸ்பார்த்தர்களின் அதிகாரம் பெருகாவண்ணம் எப்பமினாந்தன் செய்தனர். அவர் ஏற்படுத்திய தீப்ஸினது ஆட்சி பொறுமைக்கும், கருணைக்கும், கிரேக்கர்களது பொதுநலத்தைக் கருதும் ஊக்கத்திற்கும் சிறந்த கருவியா யிருந்தது. அவர், கிரேக்கர்களது உரிமையைக் காக்கும் பொருட்டு, மற்ற நாடுகளுடன் நண்பு பூண்டு ஒற்றுமையாயிருந்து உழைப்பதற்கு ஆவல் கொண்டார். தீப்ஸ் சுய ஆட்சிக்குப் பியோஷியாவின்கணுள்ள நாடுகள் ஒன்றுகூடியிருத்தல் இன்றியமையாததெனத் தெரிந்துகொண்டு, அவர் அந்நகரங்களின் ஒற்றுமையைப் பெருகச் செய்துவந்தார். சிறந்த இராச்சியதந்திரி யென்பதற்கு அவர் ஒன்பது ஆண்டுகள் நிலைத்



திருக்குமாறு ஏற்படுத்திய தீப்ஸின் ஏகாதிபத்தியமே தக்க சாட்சிபகரும்.

அவரது இராச்சியதந்திரத்திலுள்ள குறைகள்.

எப்பமினாந்தனுடைய இராச்சியதந்திரங்களிற் சிற்சில குறைகளுமிருந்தன. கிரீஸ் தேயத்தின்கண், தீப்ஸ் நிலப்போர் புரிதலில் மிகவும் வன்மையுள்ள இராச்சியமா யிருந்தது. அதன் அதிகாரம் தெஸ்ஸலி, மாஸிடோனியா, மத்திய கிரீஸின்கணுள்ள பல நாடுகள், ஆற்கேடியா பெலப்பொனீஸின்கணுள்ள மற்றுஞ் சில பகுதிகள் முதலியவற்றிற் பரவியது; எனினும் அதன் ஆட்சி ஸ்பார்த்தாவினது ஆட்சியை விட எவ்வாற்றானும் மேலானதன்று. தீப்ஸினது ஆட்சியின் பயனாகப் பியோஷியர்கட்கு ஒருவித உரிமையுங் கிடைத்திலது. ஆனால் அவர்கள் முற்சொல்லிய பெரியோக்கர் எனுங் கீழ்வகுப்பினர்களின் நிலைமையை யடைந்தனர். தெஸ்பியே, ஆர்கோமினஸ் எனுமிப்பட்டணங்கள் அடியோடு அழிவுற்றன. தீப்ஸிற்கும் அதன் நேயவிராச்சியங்கட்கும், தம் செய்கையால் உண்டான கூட்டுறவை நிலைபெறச் செய்ய எப்பமினாந்தன் ஏற்பாடொன்றுஞ் செய்திலர். ஆற்கேடியா மெஸ்ஸீனியா இவைகளிலுள்ள விவசாயிகள் சுயஆட்சியின் முறையை அப்பொழுதுதான் கற்கத் தொடங்கினர். எனினும் அவர்கள், தம்மைப்போன்ற அந்நியர்களின் உதவியைக் கொண்டு, சுய ஆட்சி புரிவதில் தேர்ச்சியடைவார்கள் என்கிற தவறான கருத்தை, எப்பமினாந்தன் தம் மனத்திற் கொண்டனர். பெலப்பொனீஸிலுள்ள இதரவிராச்சியங்கள், அந்நியர்கள் தாக்கும்பொழுது தம்மைக் காத்துக்கொள்ளுதற்பொருட்டுத்

தாம் நடந்து கொள்ளவேண்டிய வழிகளை யறிந்து கொள்ளுவதில் ஸ்பார்த்தாவையே எதிர் பார்த்திருந்தன. ஸ்பார்த்தா, தன் அரசியன்முறைகளில் தவறினமையின், தாழ்வடைந்த காலத்தில், தீப்ஸ் பெலப்பொனீஸின்கணுள்ள பல நாடுகளை யொன்றுக்கொன்று முரண்பட்டுப் போர் புரியுமாறு தூண்டிவிட்டுக் கிரீஸ் முழுவதையும் பாதுகாக்கும் திறமையையுடைய ஸ்பார்த்தாவின் வல்லமையைக் குறைத்து, அமைதி குடிகொண்டிருந்த பெலப்பொனீஸின்கண் பல விடங்களிலும் பெருங் குழப்பத்தைப் பரப்பியது. தவிர, எப்பமினாந்தன் ஆர்க்கேடியாவின் விடயத்தில் நடந்துகொண்டமை அவ்வளவு திறமையுடையதாகத் தோன்றவில்லை. அவர் ஆர்க்கேடியாவினது உறுதியுள்ள நட்பைத் தீப்ஸ் அடையும்படி ஒன்றும் செய்திலர்; கிரேக்கர்களது ஐக்கியத்திற்காக ஒன்றும் புரிந்திலர். பிற தேயங்களின் விடயங்களைக் கவனித்தற்குச் சரியான ஏற்பாடொன்றும் அவர் செய்திலர். அவர் தீப்ஸைக் கடற் சண்டை செய்வதிற் பலம் பொருந்தியதாகச் செய்யவேண்டுமென விரும்பினர். அதேனிய கப்பற்படையை யழிக்கவும், தக்க பொருட்செலவினால் தீப்ஸ் கப்பற்படையை யொழுங்கு படுத்தாமலே அதைக் கடற் போரில் வன்மை யுடையதாகச் செய்துவிடவும் தம்மாலியலும் எனும் தப்பெண்ணம் அவர் மனத்தி லிருந்தது. அவர் பியோஷியாவின்கண் உண்மையான தேசவொற்றுமையை உண்டாக்க முயன்றனர் ஆயினும் அவ்வித ஒற்றுமை யேற்படும்பொருட்டு அவர் செய்த ஏற்பாடுகள் நீடித்திருக்கத்தக்கனவா யிருக்கவில்லை. தீப்ஸின் ஏகாதிபத்தியம் மனிதன் ஒருவனுடைய வல்லமையால் ஏற்பட்டதே



யொழிய, பெரிய தேயத்திலுள்ள மாந்தர்களது ஊக்கத்தினாலும், கிளர்ச்சியினாலும் ஏற்பட்டதன்று. ஆதலின் எப்பொழுது எப்பமினாந்தனது ஆயுட்காலம் முடிவுற்றதோ, அப்பொழுதே தீப்ஸின் அதிகாரமும் குன்றி விட்டது.

பாரசீகர்கள் ஐரோப்பாவினின்றுந் துரத்தப்பட்டு இன்னும் நான்கு தலைமுறைகளாக வில்லை. இதற்குள் மூன்று நகரங்கள் மேலான பதவிக்கு வந்து பின்னர்த் தாழ்வடைந்துவிட்டன. பெருந்தன்மையுள்ள அதேனாநகரம், கிரேக்க ராச்சியங்கள் சேர்ந்து வாழ்தலைச் சிறப்பிக்கும்பொருட்டு முயன்று, அவ்விதம் புரிதற் கியலாமல் தன் மேலான நிலைமையிலிருந்து தாழ்வடைந்தது. ஸ்பார்த்தா அதேனாவைவிடச் சிறிது காலம் வரையில் ஏகாதிபத்தியம் பெற்றிருந்தது. அதனுடைய ஆட்சி கொடூரமானதாகவும், தன்னலங் கருதுவதாகவு மிருந்தது. ஆதலின், கி. மு. 371-ம் ஆண்டில் அதன் ஏகாதிபத்தியம் முடிவுபெற்றது. தீப்ஸின் ஏகாதிபத்தியம், ஸ்பார்த்தா, அதேனா இவற்றின் ஏகாதிபத்தியத்தைவிடக் குறைந்த காலமே நிலைபெற்றிருந்தது. தீப்ஸ் ராச்சியம் ஒன்பது வருட காலத்தில் முக்கியமான நன்மைகளைப் பெற்றது. எப்பமினாந்தன் என்பார் மாண்டினியா எனு மிடத்தில் மாளாதிருப்பின், அதற்கு இன்னும் எத்துணையோ நலங்கள் உண்டாயிருத்தல் கூடும். அவர் செய்ய வேண்டிய காரியங்கள் அளவற்றிருந்தன. கிரேக்க அரசியல் விடயங்களில் ஒருவர்க்கொருவர் முரண்படுவதற்கான இயக்கங்கள் பலவாயிருந்தன. கிரேக்கர்களுடைய தேசாபிமானம் குறைவுபட்டமையால் நிலைபெற்ற ஒற்றுமை கிரீஸின்கண் உண்டாதற்கிட மில்லாதிருந்

தது. ஆதலின் எப்பமினொந்தன் இறந்துபட்டபின்னர், அவர் ஸ்தானத்திற்கு வரத் தகுதியானவர் ஒருவருமிலராயினர். அதேனா, மீண்டும் ஆதி நிலைமைக்கு வந்து, கிரேக்கர்களுக்கிடையில் ஒற்றுமையை யேற்படுத்த வல்லதேபோல் காணப்பட்டது. ஆனால் அங்ஙனம் நிகழ்ந்திலது. அதேனியர்களது மனம் கெட்டுப்போயிற்று. அவர்கள் ஊக்கங் குன்றித் தாம் வேலை செய்தற்கு விரும்பாமல் சம்பளத்திற்கு ஆட்களையமர்த்தித் தம் காரியங்களை நடத்திவந்தனர். சோம்பலையும் சுகத்தையுமே நாடி நின்றனர். கிரீஸ் தேயத்தின்கணுள்ள நாடுகள் பலவும் ஒற்றுமையின்றிச் சிதைவுபட்டுப்போய் மாஸிடோனிய தேயத்து மன்னனாகிய பிலிப் தம்மை ஜயிக்கும்படியான நிலைமையை அடைந்திருந்தன.

## 23. ஜேஸன் என்னும் வல்லரசன்.

இஃதிவ்வாறிருக்க, கிரீஸ் தேயத்தின் வடபால், வெகு தூரத்துக்கப்பால், தீப்ஸ், ஸ்பார்த்தா ஆகிய இவ்விராச்சியங்களைச் சூரியன் மற்ற நக்ஷத்திரங்களையும், கிரகங்களையும் தன் ஒப்பற்ற ஒளியால் மறைப்பதே போல், தன்னதிகார ஒளியால் மறைத்துவிடுமோ என்றும், அவ்விராச்சியங்களின் ஏகாதிபத்தியத்தைக் கவர்ந்துகொள்ளுமோ என்றும் ஐயுறும்படி, சிறந்த செல்வாக்குள்ள ஓர் இராச்சியம் கிளம்பியது. பேரே என்பது அவ்விராச்சியத்தின் பெயர். அது தெஸ்ஸலி நாட்டின்கண் உள்ளது. அவ்விராச்சியத்திற்கு ஜேஸன் என்பார் வல்லரசராவர். கொடுங்கோன்மை நடாத்தும் அம்மன்னன் அதிக தைரியசாலியாகவும், வல்லமையுடையவராகவும், தந்திரசாலியாகவும், பேரவாவினராகவுமிருந்தனர்.



அவர் அப்பொழுதுதான் தெஸ்ஸலி நாட்டிற்கு அதிபதியாயினர். தெஸ்ஸலியிலுள்ள நகரங்கள் பலவும் அவரது அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து நடந்துவந்தன. அவர் மனத்தில், சிலப்படை, கப்பற்படைகளை யேற்படுத்தித் தம் தேயத்தைக் கப்பற் போரில் வன்மையுடையதாகச் செய்தல்வேண்டுமென்றும், ஸ்பார்த்தாவின் ஏகாதிபத்தியத்தையொழித்துக் கிரீஸ் தேயத்தில் தாம் தலைமையதிகாரம் பெறவேண்டுமென்றும், ஈஜிபக் கடலுக்குப் புறம்பேயுள்ள நாடுகளைக் கைப்பற்றவேண்டுமென்றும், பாரசீக தேயத்தரசனைச் சிங்காதனத்தினின்று நீக்கிவிட வேண்டுமென்றும் பல்வகைத்தாய வெண்ணங்கள் குடிகொண்டிருந்தன.

ஜேஸன் ஸ்பார்த்தாவின்மீது பகைமைபூண்ட தீப்ஸுடன் நேயம் பாராட்டிவந்தார். அவர், முற்கூறிய லியூக்திரா எனும் அமர்க்களத்திற்கு வந்து, ஸ்பார்த்தர்களின் சைனிய முழுவதையும் அழிக்காவண்ணம் தீப்ஸைத் தடுத்துவிட்டனர். அவர் தெர்மாப்பொலிஸ் கணவாயைப் பாதுகாத்து வந்த ஹெறக்கிளியா எனும் ஸ்பார்த்தர்களது கோட்டையை யிடித்துத் தள்ளினர். அவர் அவ்வருடம் டெல்பியின்கணுள்ள அப்பாலோ எனும் தெய்வத்தினது திருவிழாவின்போது நடைபெறவிருந்த பந்தய ஆட்டங்களில் தமது சேனையுடன் அக்கிராசனம் வகித்துத் தமது பெருமையை அங்குக் கூடும் கிரேக்க நாட்டினர்கள் முன்னிலையில் விளம்பரப்படுத்த விரும்பினர். இவ்விடயம் நிறைவேறிய பின்னர், ஆசியாவை வெல்லவேண்டுமென்னும் தம்மெண்ணத்தைப்

பூர்த்திசெய்யவும் அவர் எண்ணினர். ஜேஸன் அவ்வாறு ஆகாயக்கோட்டை கட்டிக்கொண்டிருக்கும் நாட்களில், அலெக்ஸாந்தருக்குச் சமமான நிலைக்கு வரத்தகுந்த அவர் ஒரு நாள் தம் படையணிகளைப் பார்வையிடும்போது, வாலிபர்கள் எழுவர் தமக்குள் பெருஞ் சச்சரவு விளைந்ததே போன்று நடித்து, ஒருவரோடொருவர் தாக்கிக்கொண்டே அவரிடம் சென்று, அவரைக் கொலைபுரிந்தனர். அவர் உயிருடன் இன்னும் சிறிதுகால மிருந்திருப்பின், தாம் எண்ணிய காரியங்களை இயற்றியிருத்தலுங் கூடும். ஜேஸன் கீழ்க்கிரீஸின்கண் உயர்பதவி பெறுதற்குரிய தகுதியுடையவரா யிருந்தனர். மாஸிடோனியாவிற்கென விருந்த காரியத்தில், தெஸ்ஸலி, ஜேஸன் தலைமையின் கீழ், ஒரு பகுதியை முடித்திருக்கலா மெனக் கூறுதல் மிகையாகாது. ஆயின் அக்காரியத்தை நிறைவேற்றும் பெருமை பிலிப் அரசனின் புதல்வராகிய அலெக்ஸாந்தர் என்பவருக்கே கிடைத்தது. ஜேஸனது மரணத்திற்குப்பின் அவர் பதவிக்கு வந்த அவரது சகோதரர்கள், அவரது எட்டாக் கருத்துகளை அட்டியின்றி முடிக்கக் கருதினரேனும், திறமையின்மையால் அவ்வாறு புரிய இயலாதவராயினர். அவர் உயிருடனிருந்தபொழுதே தெஸ்ஸலி நாட்டில் தேச வொற்றுமைக்காகச் சிறந்ததும் நிலைபெற்றிருக்கக் கூடியதுமான ஏற்பாடொன்றும் செய்யாமலிருந்து விட்டார். அவரது காலத்திலுண்டான ஒற்றுமை முழுதும் அவரது சேனைபலத்தினாலும், வல்லமையாலும் நிலைபெற்றிருந்தது. அவர் மரண மடைந்ததும் அவ் வொற்றுமையும் அழிந்துபோயிற்று.

ஜேஸனது மரணம், கி.மு. 370.

---



## 24. மாஸிடோனியாவின் ஏகாதிபத்தியம், கி. மு. 359-323.

### பிரிவு 1. பிலிப் காலத்திற்கு முற்பட்ட மாஸிடோனியாவின் சரித்திரம்.

மாஸிடோனியாவினது இயற்கையமைப்பும் குடிகளும்.

மாஸிடோனியா இரண்டு பிரதேசங்களாகப் பிரிவுபட்டிருக்கிறது. அவை, மலைகளும் உள்நாட்டுச் சம பூமிகளுஞ் சேர்ந்த மலைப்பிரதேசமும், கடற்கணித்தாயுள்ள பள்ளப்பூமியுமாகும். ஆனால் கடற்கரையும், உட்பிரதேசமும் ஒன்றுக்கொன்று சம்பந்த மில்லாதிருந்தன. உள்நாட்டுக் குடிகள் பிலிப் என்பாரது காலம் வரையில் இதர நாடுகளுடன் பழகுதலின்றிக் கேவலம் நாகரிகமற்ற மலை நாட்டினர்களாகவே யிருந்தனர். அதற்கு மாஸிடோனியாவின்கணுள்ள மலைகளினது அமைப்பே காரணமா யிருந்தது. கிரேக்கர்களுக்கும், மாஸிடோனியர்களுக்கும் போக்குவரவு உண்டாகாதபடி கம்பூனியா எனும் மலைத்தொடர் அவ்விருதிறத்தினர்கட்கிடையில் இயற்கையாக வமைந்த ஒருபெருஞ் சுவரே போன்றிருக்கிறது. இவ்வுன்னத மலைத்தொடரின் காரணமாக ஒருவருக்கொருவர் கலந்து பழகுதலொழிந்து, வெளிநாட்டு மக்களின் பழக்கங்களும், ஒழுக்கங்களும் மாஸிடோனியர்களுக்குத் தெரியாமலிருந்தன. ஆதலின் அவர்கள் வெகுகாலம் வரையில் நாகரிகமற்றவர்களாகவே யிருந்தனர்.

மாஸிடோனியாவின் அரசர்கள்.

மாஸிடோனிய அரசர்கள் கடற்கணித்தாயுள்ளனவும் தெர்மா வளைகுடாவிற்கு வடக்கிலும் வடமேற்கிலுமுள்ளனவுமாகிய பிரதேசங்களைத் தம்

மனம் போனவாறு ஆட்சி புரிந்து வந்தனர். ஆனால் ஒரெஸ்தியர்கள், லின்செஸ்தியர்கள், மற்றும் பல மலை நாட்டார்கள் ஆகிய இவர்களிடத்தில் மாஸிடோனியர்களது ஆதிபத்தியம் அவ்வளவு உறுதியிலிருந்ததாகத் தெரியவில்லை. இம்மலைச்சாதியர்கள், தம் உறவினர்களாய மேற்கேயுள்ள இல்லிரியர்கள், வடக்கேயுள்ள பெயோனியர்கள் முதலியோரின் உதவியைக் கொண்டு, மாஸிடோனியாவினது ஆதிபத்தியத்தை நீக்குதற்கு ஆயத்தமாயிருந்தனர். அச்சாதியார்களில் ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு தலைவனிருந்தான். அவன் மாஸிடோனிய அரசனுக்கு அடங்கி நடப்பவனல்லன். ஹோமர் என்னும் மகா கவியின் காலத்தில் அரசியல் எவ்வாறிருந்ததோ அவ்வாறே நாகரிகமற்றவர்களாகிய அம்மாஸிடோனியர்களும் அரசியல் நடாத்திவந்தனர். அவ்வாறிருந்தபோதிலும் பள்ளப்பூமிப் பிரதேசத்தி லுள்ளவர்கட்குத் தமக்கு அருகில் கடற்கரையோரத்திற் குடியேறியிருந்த கிரேக்க நாட்டினர்களுடன் பழக்கமிருந்தமையால், அவர்கள் கல்வியில் மிகவுந் தேர்ச்சி பெற்றுவந்தார்கள். நாளடைவில், ஆர்க்கிலான் எனும் அரசரும், மற்றுஞ் சிலருமே மாஸிடோனியா ராச்சியத்திற் கிரேக்கர்களது நாகரிகத்தைப் பழக்கத்திற் கொண்டுவந்தனர். அமிண்டான் ஏனும் அரையர் கிரேக்கர்களது படையொழுக்கங்களைத் தமது படையிலும் அனுட்டானத்திற்குக் கொண்டுவந்தனர். அவர், அலெக்ஸாந்தர், பெர்டிக்கன், பிலிப் எனுந் தமது மூன்று புத்திரர்களை யிவ்வுலகில் விட்டுவிட்டுக் கி. மு. 369-ம் ஆண்டில் மாண்டுபோனார். அப்புதல்வர்கள் மூவரில் அலெக்ஸாந்தர் என்பாரை, டாலமி என்பார் ஒருவர்



கொன்றனர்; பெர்டிக்கன் இல்லிரியருடன் நேர்ந்த போரில் உயிர்துறந்தனர். பின்னர், பிலிப் ஒருவரே உயிர் பிழைத்திருந்தனர்.

கி. மு நான்காம் நூற்றாண்டின் இடையில் கிரீஸ் இருந்த நிலைமை.

சற்றேறக்குறைய கி. மு. 4-ம் நூற்றாண்டினிடையில், மாஸிடோனியா கிரீஸின் சுதந்திரத்தை யழிக்க முயன்ற காலத்தில், கிரீஸ் தேயம் இருந்த நிலைமையைப்பற்றிச் சற்றுக் கவனிக்கவேண்டும். மாஸிடோனியர் கிரீஸைக் கைப்பற்றுவது வெகு விரைவில் நேரத்தக்கதா யிருந்தது. அவ்வாறிருந்தும், கிரீஸின்கணிருந்த நகரங்களுள் ஒன்றாவது அப் பிறநாட்டுப் பகைவரை யெதிர்க்கத் தலைப்பட்டிலது. எப்பமினொந்தனின் செய்கையால் பெலப்பொனீஸ் நாட்டு விடயங்கள் தலைதடுமாறிக் கிடந்தன. ஸ்பார்த்தா தான் இழந்த உரிமையைத் திரும்பவும் பெற விரும்பியது. மெஸ்ஸீனியாவும், ஆற்கேடியாவும் தாம் பலவித இடையூறுகட்குந் தலைகொடுத்துப் பெற்றுள்ள உரிமையைக் காப்பாற்றிக்கொள்ள ஆவல்கொண்டன. ஆர்காஸ் பலவீனமுடையதாயிருந்ததால் அது கிரேக்கவிடயங்களில் முன்னின்று பாடுபடுவதற்கு இயலாததாயிருந்தது. காறிந்த் பூசந்திக்கு வடக்கில் ஒற்றுமையாவது, கட்டுப்பாடாவது கிடையாது. தீப்ஸுக்குப் பியோஷியா, லோக்கிரிஸ், தெஸ்ஸலி ஆகிய இந்நாடுகளில் மிகச் செல்வாக்கு இருந்தபோதிலும், அது, அதேனினது பொறாமையை எழுப்பியதன் காரணமாகத் தன் வல்லமையை யிழந்துவிட்டது. அதேனுவுக்கு ஆதியிலிருந்த அதிகாரத்தின் தோற்றமட்டு மிருந்ததே

யொழியவுண்மையில் ஒருவிதமான பெருமையுமில்லை. டெலியச் சங்கத்தை நடத்திவந்த அதன் வல்லமை முழுவதும் தேய்பிறைச் சந்திரனைபோல் மறைந்து போய்விட்டது. உண்மையில் கிரீஸ் தேசத்தில் ஸ்பார்த்தா, அதேனா, தீப்ஸ் இம் மூன்றிராச்சியங்களும் ஒன்றுக்கொன்று சமமான வல்லமையுடையனவா யிருந்தனவேயன்றி ஒன்று மற்றொன்றைவிட மேலான வல்லமை யுடையது என்று கூறுதற்கு இடமில்லாதிருந்தது. இக்காலத்தில், இதர நாடுகள் தம் சுயநலங் கருதி வேண்டிய காரியங்களைச் செய்தற்குப் போதிய வழிகள் ஏற்பட்டன. தவிர, பெலப்பொனீஸ் யுத்தத்தால் கிரேக்கர்களுக்கிடையில், ஒற்றுமை யென்பது கனவிலுங் கருதப்படாமல் போய்விட்டது. தன் நடத்தையால் ஸ்பார்த்தா தன் ஏகாதிபத்திய காலத்தில் கிரேக்கர்கள் ஒருவர் மீது ஒருவர் சந்தேகிக்கும்படி செய்தது. அதன் மூலமாய் ஸ்பார்த்தர்கள் கிரேக்க தேயத்தில் ஒற்றுமை ஏற்படுவதை யொழித்துவிட்டனர். தவிர, கிரேக்கர்களது ஆட்சியினின்று மேற்பட்ட நன்மைகள் பலவும் குறைந்துகொண்டேவந்தன. அவர்கள் சோம்பலுள்ளவர்களாகவும் இலஞ்சம் பெறுகிறவர்களாகவும் ஆய்விட்டனர். இராச்சியாதிகாரிகள், தாம் செய்யுங் காரியங்களையெல்லாம், தம் சுயநலத்தைக் கருதியே செய்து வந்தனர். நகர மாந்தர்கள், தேயப் பாதுகாப்பின் பொருட்டுத் தாமே படையிற் சேர்ந்து உழைப்பதை விட்டு, அத்தொழிலுக்கு இதர தேயத்தவர்களைச் சம்பள மளித்துப் போர்ச்சேவகர்களாக ஏற்படுத்திக்கொண்டனர். இந்நிலையிலிருந்த கிரீஸ், போரில் விருப்பமுடையதும் ஒற்றுமை பெற்றுள்ளதுமான



மாஸிடோனியாவிற்கு இரையானது ஒரு பெருவியப்பாகுமோ?

பிரிவு. 2. பிலிப் என்பாரது ஆட்சிக்காலம்.

பிலிப் என்பார் கி. மு. 368-365-ம்ஆண்டு வரையில் தீப்ஸ் ராச்சியத்திற் பிணையாளியா யிருந்து, எப்பமினொந்தன், பெலோப்பிடான் என்பவர்களுடைய இராசாங்க முறைகளையும், படை நடத்தும் திறமைகளையும் கசடறக் கற்றுக்கொண்டு, தாம் ஒரு சிறந்த ஏகாதிபத்தியத்தைத் தாபிக்கவேண்டு மென்னும் எண்ணத்துடன், மாஸிடோனியாவிற்குத் திரும்பிவந்திருந்தனர். அவர் கி. மு. 359-ம் ஆண்டில், பெர்டிக்கனுடைய புத்திரரான அமிண்டான் என்னும் அரசிளங்குமரருக்குப் போஷகராய் ஏற்பட்டார். மாஸிடோனியாவின்கண் ஒழுங்கையும் அமைதியையும் ஏற்படுத்த வேண்டுமென்பதும் தம் நாட்டின்கணுள்ள பகைவர்களையும், தம்க்குப் பகைவர்களாகிய இதர நாட்டினர்களையும் வெல்லவேண்டுமென்பதும், மாஸிடோனியாவைக் கிழக்கில் அதன் இயற்கை யெல்லையாகிய கடல் வரையில் பரவச் செய்தல்வேண்டு மென்பதும், சுற்றுப்புறங்களிலுள்ள நாடுகள்யாவற்றையுங் கைப்பற்றி, அவற்றைத் தம் நாட்டுடன் சேர்க்கவேண்டு மென்பதும், தம் தேயத்துள்ள பல வகுப்பினரையும் ஒருங்கு கூட்டிக் கிரீஸை வென்று, முடிவில் கிரேக்கர்களைக்கொண்டு பாரசீகத்தின்மீது படை யெடுத்தல்வேண்டு மென்பதுமே மாஸிடோனிய மன்னராகிய பிலிப் என்பாரது நோக்கங்களாயிருந்தன.

அவர் தம் உடன்பிறந்தானது புத்திரனை நீக்கிவிட்டுத் தாமே மகுடஞ் சூட்டிக்கொண்டனர்.

மாஸிடோனியாவின்கண் அவரியற்றிய அரிய பெரிய காரியங்களுள் முக்கியமானது இராணுவச் சீர்திருத்தமே யாகும். அவர் செய்த இராணுவச் சீர்திருத்தத்தினால், மாஸிடோனியர்கள் இராணுவ ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டுநடந்து நாகரிகமடைந்து தமது சுசாதி யபிமானங்களை யொழித்துப் பொதுவான பற்றுதல்களும் எண்ணங்களும் அவாவுமுடைய ஒரு தேசத்தவர்களாயினர். அக்காலத்தில் கிரீஸ்தேயத்தின்கண் சம்பளம் பெற்று ஊழியஞ் செய்துவந்த அயல்நாட்டுச் சேனைகளைவிட அவரது சேனை வல்லமையிற் சிறந்ததாயிருந்தது. கிரீஸின்கண் மாஸிடோனியாவினது ஆட்சியைப் பரவச்செய்தல் வேண்டுமெனும் பிலிப்பினுடைய எண்ணம் ஈடேறுவதற்கு அவரது இராணுவச் சீர்திருத்தங்கள் மிக்க உதவிபுரிந்தன. அவர் ஆட்சிக்கு வந்ததும், அவருக்கும் அதேனாவிற்கும் போர் தொடங்கியது. ஆம்பிபொலிஸ் எனு நகரம், அவருடைய இராச்சியத்தின் எல்லையிலிருந்ததினாலும் அதனணித்தாயுள்ள பங்கேயஸ் எனும் மலையின் அருகில் தங்கச்சுரங்கங்கள் இருந்தமையாலும், அதிகப் பெருமைவாய்ந்திருந்தது. அவர் அந்நகரத்தைக் கவர்ந்துகொள்ளக் கருதி யொரு சூழ்ச்சி செய்தனர்: அதாவது, அவர், தாம் அந்நகரைத்தாக்கிப் பின்னர் அதேனாவிற்கே கொடுத்துவிடுவதாகப்பொய் கூறி, அவ்வாறே அதைத் தாக்கும்போது அதேனா தடுக்காதிருக்கும்படி பார்த்துக்கொண்டு, முடிவில் தாமே அப்பட்டணத்தைக் கைப்பற்றிக் கொண்டார். அவர், அந்தத் தங்கச்சுரங்கங்களினின்றும் பெருகிய பொருளுதவியைக்கொண்டு, எப்போ

பிலிப் மன்னனுடைய அருஞ் செயல்கள்.



றும் போருக்குத் தயாராக இருக்கத்தக்க ஒரு சேனையை யேற்படுத்தினார்; பங்கேயஸ் மலைக் கணித்தாயுள்ள காடுகளில் வளர்ந்திருந்த மரங்களை வெட்டி, அவற்றால் ஒரு கப்பற்படையையும் செய்வித்தார். அவர், ஒவ்வொரு கிரேக்க நகரத்திலும் பொருட் செலவினால் தம் சார்பிற் பேசுவோர் பலரைச் சம்பாதித்தார். அக்காலத்தில் மதச் சம்பந்தமாக ஒரு சிறிய போர் தீபர்களுக்கும் மத்திய கிரீஸிலுள்ள மற்றொரு சிறிய இராச்சியத்தினர்களாகிய பொகியர்களுக்கும் நேர்ந்தது. அப்போரில் பொகியர், தமக்கு உபயோகமாகவிருந்த அயல் நாட்டுச் சேனைகட்குச் சம்பளங்கொடுப்பதற்காக, டெல்பி ஆலயத்தின் திரவியங்களைக் கொள்ளைகொண்டு சென்றனர். தீபர்கள், பொகியர்களிடத்தில் தோல்வியுற்று, அவர்களுக்கு விரோதமாகப் பிலிப்பின் உதவியை நாடினர். பிலிப், அம்மதவீனர்களாகிய பொகியர்கட்கு விரோதமாக, டெல்பியிலுள்ள அப்பாலோவெனும் கிரேக்க தேவதையின் கோவிலையும் பொக்கிஷத்தையும் பாதுகாத்தற்பொருட்டு மத்திய கிரீஸின் காரியங்களில் தலையிட நேர்ந்தது. அவர் தமக்கு அவ்வாறு கிடைத்த அதிருட்டத்தைத் தம் அறிவுக்கெட்டியவளவு தம் பயனைக் கருதி யுபயோகித்தனர். அவர் கி. மு. 343-ம் ஆண்டில் அதேனியர்களைத் தம்மிடத்தில் சமாதானத்திற்கு வருமாறு கட்டாயப்படுத்திப் பொகியர்கள்வசமிருந்த தெர்மாப்பிலே எனும் கணவாயைக் கைவசப்படுத்தினர். அவர் பின்பு, சால்ஸிடிஸ், எபைரஸ், திரேஸ் முதலிய நாடுகளை வென்றனர். அதன் பின்னர் மாஸிடோனியர்களை முக்கியமாய் எதிர்க்க வேண்டிய கடமை அதேனியர்கட்கு ஏற்

பட்டது. அதற்குக் காரணங்கள், அதேனியர்களது கப்பல் வியாபாரங்களுக்குத் தடை ஏற்பட்டமையும், அக்காலத்தில் அதேனாவின்கண் பேசுந்திறமையிற் பெயர் பெற்றவரும் மிக வல்லவருமான டெமாஸ்தினன் எனும் ஒரு பெரியார் இருந்தமையுமே யாகும். டெமாஸ்தினன் என்பார், பிலிப்பை யெதிர்த்தற் கெண்ணிப் பல்வகையான ஏற்பாடுகளைச் செய்ததுமன்றிக், கிரேக்கர்களின் சுதந்திரத்தையே பிலிப் அழித்துவிடுவாரென்றெண்ணியபடியால் அவரது குணத்தையும் ஒழுக்கத்தையும் கண்டித்து மிகச் சிறந்த உபந்நியாசங்கள் பல புரிந்தனர். ஆனால் பிலிப் டெல்பி ஆலயப் பாதுகாப்பு நிமித்தம் ஏற்பட்டுள்ள சங்கத்தின் வேண்டுகோட்படி ஒருசேனையுடன் மீண்டு மத்திய கிரீஸிற் புக நேர்ந்தது. முடிவில் அவரது தீயவெண்ணங்கள் வெளிப்படலும், தீப்ஸும் அதேனாவும் மற்றுஞ் சில இராச்சியங்களும் அவருக்கு விரோதமாகக் கிளம்பின. கி. மு. 338-ம் ஆண்டில், கெரோனியா எனுமிடத்திற் கிரேக்கசேனைகள் மாஸிடோனியர்களுடன் போர் புரிந்து புறங்காட்டி யோடின. கிரீஸ் தேயத்தின் சுதந்திரம் இதனால் கெட்டொழிந்தது. பிலிப் தாம் இவ்வாறடைந்த வெற்றியால் கிரீஸ் தேய முழுதுக்கும் அதிபதியாயினர்.

பின்னர், பிலிப், தெர்மாப்பிலேவிற்குத் தெற்கிலுள்ள கிரேக்க நாடுகளை யொன்றுகூட்டிக் கிரேக்க சங்கமொன் றேற்படுத்தி, அதற்கு மாஸிடோனியாவைத் தலைமை வகிக்கும்படி செய்தனர். அப்பெருஞ்சபை முதலில் காரிந்திற் கூடியபோது பிலிப் அக்கிராசனம் வகித்தார். பின்பு அதே இடத்



தில் அவருடைய அக்கிராசனத்தின் கீழ், அச்சபை மீளவும் கூடிற்று. அக்கூட்டத்தில், அவர் தாம் கிரேக்கர்களது உதவியால் ஆசியாவின் மீது படையெடுக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்தனர். அச்சபையினர் அவரைக் கிரேக்க சேனைகளுக்கெல்லாம் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். ஸ்பார்த்தாவைத் தவிர மற்ற நாடுகளெல்லாம் பாரசீகத்தோடு போர் புரிதற்கு உதவிப்படை யனுப்புவதாக வாக்களித்தன. பாரசீகத்தின்மீது படையெடுக்கப் பிலிப் எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்.

ஆனால் அவர்கோரியபடி அவர் எண்ணம் ஓர் எதிர்பாராச் சம்பவத்தினால் பலிக்கவில்லை. அச்சம்பவத்தைப்பற்றி இங்குக் கூறுவாம். பிலிப் தமரண்மனையைத் துன்பத்திற்கு ஒருறைவிடமாக்கினர்.

பிலிப் என்பவரது இல் வாழ்க்கை

அம் மாஸிடோனிய அரசர் தம் மனைவியாகிய ஆலிம்பியஸ் என்பாளுக்கு உண்மை யுள்ளவராகத் தோற்றப்படவில்லை. ஆனால் செருக்குள்ள அவரது மனைவி அவரது விசுவாசமற்ற செய்கைகளுக்கு வாய்திறவாதிருந்தனள். தவிர, அவளது கற்பும் சந்தேகித்தற் கிடமுள்ளதா யிருந்ததுடன், அலெக்ஸாந்தர் எனும் அவளுடைய புத்திரர் பிலிப் என்பாரது புத்திரரல்லர் எனும் ஒரு வதந்தியும் வெளிக்கிளம்பிற்று. இது நிற்க, பிலிப் தமது தளகர்த்தராகிய அத்தலன் என்பாரது உடன்பிறந்தானுடைய புத்திரியாகிய கிளியோபத்திரை யெனும் பெண்மணியின் மீது காதல் கொண்டனர். அவர் அவளது காதலின் வயப்பட்டு ஆலிம்பியஸை நீக்கிவிட்டுத் தம் மிரண்டாந் திரும

10

ணத்தை முடித்துக் கொண்டனர். திருமணத்தின் போது நடந்த விருந்தில், அத்தலன் என்பவர், மதுபானத்தினால் மயங்கி, விருந்திற்கு வந்திருந்த செல்வவான்களை விளித்துத் தமது புத்திரியாகிய மணப்பெண் வயிற்றில் சிங்காதனத்திற்குச் சட்டப்படி உரிமையுடைய ஒரு புத்திரன் பிறக்கக் கடவுளைத் துதிக்கும்படி கூறினர். அக்காலை அங்குத் தான் பருகுதற்பொருட்டு ஒரு கிண்ணத்தில் மதுவை யேற்று நின்று கொண்டிருந்த அலெக்ஸாந்தர், அத்தலன் தனக்கும் தன் தாய்க்கும் தகாத மொழிகளைக்கூறி இழிவையுண்டாக்கினமையால், தான் தாங்கியிருந்த மதுக்கிண்ணத்தை அவரது முகத்தின்மீது எறிந்தனர். அதைக் கண்ணுற்ற பிலிப், திடீரெனத் தம்மிருக்கையை விட்டெழுந்து, உடைவாளையுருவித் தம் புத்திரனாகிய அலெக்ஸாந்தரைக் குத்தச் சென்றனர். ஆனால் தம் வயோதிகத் தன்மையாலும், மதுவின் மயக்கத்தாலும் அவர் காலிடறிக் கீழே விழுந்தனர். அதைக் கண்டு அலெக்ஸாந்தர் புன்னகை புரிந்து, "ஐரோப்பாவிலிருந்து ஆசியாவின்மீது படையெடுத்துச் செல்லப்போகும் வீரர் தாம் இருந்த விடத்திலிருந்து மறு இருக்கைக்கு எழுந்து செல்லச் சக்தியின்றிக் கீழே விழுகிறதைப் பாருங்கள்" எனப் பரிகசித்தனர்.

பின்னர், அலெக்ஸாந்தர் அவ்விடத்தில் சிறிதுந் தங்கவில்லை. அவர் தன் தாயாரும், தந்தையாரால் நிந்தித்து நீக்கப்பட்டவருமாகிய ஆலிம்பியஸ் எனும் அரசியை எபைரஸ் எனுமிடத்திற் கொண்டுபோய் விட்டுவிட்டுப் பிலிப் தம்மை மறுபடியும் அழைக்கும் வரையில் லின்லெஸ்டிஸ் எனு மலைப் பிரதேசத்தில்



தங்கியிருந்தனர். கிளியோபத்திரைக்கோர் புத்திரன் பிறப்பானாயின் தமது அரசுரிமைக்கு ஆபத்து வருமென அலெக்ஸாந்தருக்கு மனக்கலக்கம் உண்டாயிருத்தல் கூடும். பிலிப் என்பவர் தமது முதல் மனைவியின் சகோதரனும் மிகப்பலசாலியுமான எபைரஸ் நாட்டின் அரசனுடைய கோபத்திற்குத் தாம் ஆளாதலைத் தடுத்தற்பொருட்டு முயன்றனர். அதற்காக அவர், தாம் ஆசியாவிற்குச் செல்லப் புறப்படுவதற்குச் சற்றுமுன் தமது தலைநகராகிய பெல்லாவில் தமதுபுத்திரியை அவ்வரசனுக்கு மிக்க சிறப்புடன் மணம் செய்வித்தனர். ஆனால் அவர் ஆசியாவிற்குச் செல்லக்கருதியது அவரது ஊழின் வலியால் இயலாதாயிற்று. ஆலிம்பியஸ் தன் கோபத்தைத் தீர்த்துக் கொள்ளவும் தமது புத்திரனுக்கு அரசுரிமையைக் கொடுத்தற்பொருட்டும் எளிதான ஒரு கருவியைக் கண்டுபிடித்தனள். பாஸேனியன் எனும் ஒருவன் அத்தலன் என்பவரால் தீங்கிழைக்கப்பெற்று அதை அரசரிடத்தில் முறையிட, அரசன் அதற்குச் செவி கொடுக்கவில்லை. ஆதலின் அவன் அரசர்மீது அடங்காக் கோபங்கொண்டனன். திருமணத்தன்று பிலிப் ஊர்வலம் வந்துகொண்டிருந்தபோது தம் மெய்காப்பாளர் பின்வரத் தாம் முன்பாக நாடகச்சாலையொன்றிற் புகுந்தவுடனே மேற்கூறிய பாஸேனியன்

பிலிப்பின் மரணம்.

ஓடிவந்து தன்னிடமிருந்த வாளினால் அவரை வீசிப் பிணமாகக் கிடத்தினன். அக்கொலையாளி காவலாளர் கைப்பட்டுக் கொலையுண்டான்; ஆனால் உண்மைக் கொலையாளி ஆலிம்பியஸே யாவள். இதனால் உண்டான நன்மையையடைந்தவர் அலெக்ஸாந்தரே. நாம்

அலெக்ஸாந்தருக்கு இவ்விடயத்தைப்பற்றிச் சிறிதுந் தெரியாதென்பதையும் அவரைப் போன்ற சிறந்த குணங்களை யியற்கையாகவுடையா னெவனும் தந்தையைக் கொல்ல உடன்படானென்பதையும் உண்மையாக நம்பலாம். இதைப்பற்றி அவர்மீதுண்டான சாதாரண வதந்திகளைத் தவிர அவர் அங்ஙனம் புரிந்திருக்கலா மென்பதற்கு ஒருவிதச் சான்றுமில்லை; எனினும் அவரை நிரபராதியெனக் கூறுவதும் கூடாமையே யாகும்.

கிரேக்கர்களது சுயாட்சியைக் கெடுத்தவரும், மாஸிடோனியாவை முன்னுக்குக் கொண்டுவந்தவரும், அது ஒரு ஐக்கியதேசமானதற்குக் காரணகர்த்தரா யிருந்தவரும், அதன் இராச்சியாதிகாரத்தை நிலைநிறுத்தியவரும், மிகுந்த வல்லமை யுடையவரும், எக்காரியத்தையும் ஏற்றவாறு நடத்தக்கூடிய அறிவாளரும், படையைச் சீர்திருத்தி அதை ஒழுங்குபடுத்தியவருமான பிலிப்பினது வாழ்க்கை இவ்வாறு முடிவுபெற்றது. பிலிப்பின் ஆட்சியில், மாஸிடோனியர் ராச்சியம் தனது நாகரிகமற்ற நிலைமையிலிருந்து நாகரிகத்தையடைந்தது. மாஸிடோனியா முதலிற் சிறு இராச்சியமாகவிருந்து பின்னர்ப் பெருகியதற்கும் அவ்வாட்சியே காரணம். அலெக்ஸாந்தர், தம் தந்தையார் செய்திருந்த இராணுவச் சீர்திருத்தங்களால் ஆசியாவில் பெரிய வெற்றியைப் பெற்றார். பிலிப் கிரீஸில் பெற்ற வெற்றியானது பின்னர் அலெக்ஸாந்தர் ஆசியாவை வெல்லுதற்குக் கருவியாயிற்று.



## பிரிவு. 3. மகா அலெக்ஸாந்தர், கி. மு. 336-323.

பிலிப் இறந்துபட்டதும், அவரது புத்திரர் அலெக்ஸாந்தர் மாஸிடோனியாவிற் சிங்காதனமேறினர். அவர், விரைவில் மாஸிடோனியாவின்கண் தமது அதிகாரத்தை நிலைநிறுத்திப் பின்பு கிரீஸ் நாடுகளில் தமது ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்தும் வண்ணம், கிரீஸ் முழுதும் ஒரு விதத்தடையுமின்றிச் சைனியத்துடன் சென்றனர். பின்னர், அவர் திரேஸ் நாட்டில் போர் புரிந்துகொண்டிருக்கும்பொழுது, அவர் இறந்துபோய்விட்டாரெனும் ஒருபொய் வதந்தியெங்கும் பரவியது. தீப்ஸ் அதைக் கேட்டதும் கலகம் விளைக்கத் தொடங்கிற்று. அங்ஙனம் தீப்ஸ் ஆரம்பித்தலும், அலெக்ஸாந்தர், யாவரும் அதிசயிக்கும்படி, வெகு தீவிரமாக மத்திய கிரீஸிற் புகுந்து, தீப்ஸை யழித்துத் தமது அதிகாரத்தை மீண்டுங் கிரீஸில் நிலைநாட்டினர். முடிவில், இவரது தந்தை தம் ஆயுள் வரையில் பாரசீகத்தின்மீது படையெடுத்துச்சென்று அதை வெல்லவேண்டுமெனக் கொண்டிருந்த பேரவா முடிவெய்தும் வேளைவந்தது. அலெக்ஸாந்தர் தம் தந்தையின் விழைவை முடிக்கக் கருதினர்.

பாரசீகம் மாஸிடோனியா ஆகிய இவ்விராச்சியங்களின் பலாபலங்களை ஒப்புநோக்குதல்.

அலெக்ஸாந்தர் படையெடுக்கக் கருதிய பாரசீகதேயம் ஒற்றுமை யில்லாததாயும், உதவியற்றதாயு மிருந்தது. மூன்றாம் டேரியன் எனும் வல்லமையற்ற அரசர் ஒருவர் அவ்விராச்சியத்தில் ஆட்சி செலுத்திவந்தார். அவரது அரண்மனை சதியாலோசனைகட்கும், பயங்கரமான சச்சரவுகட்கும் இருப்பிடமாயிருந்தது. இரா

சாங்க ஒழுக்கமும், இராணுவ ஒழுக்கமும் சீர்குலைந்திருந்தன. பாரசீகதேயம் கிரீஸுடன் போராடிய நாள் தொட்டு யுத்தப்பயிற்சிகளில் ஒரு விதமான உயர்வு மடையவில்லை. ஆயினும் பாரசீகத்தரையனுக்குச் செல்வம் மிகுந்த பொக்கிஷமும், திரண்ட சேனைகளும், ஒரு பெரிய கப்பற்படையுமிருந்தன. எனினும் அவைகளை யேற்ற நெறியில் உபயோகிக்குந் திறமையுடைய ஒரு தலைவனின்மையால் அவ்விராச்சியம் மிகப்பலவீனமடைந்திருந்தது. மாஸிடோனிய அரசாட்சியோ எனின் அது எடுத்த காரியங்களிலெல்லாம் குடிகளின் ஊக்கத்தோடு கூடிய உதவிகளைப் பெற்று வன்மையுற்றிருந்தது. அக்காலத்தில் மாஸிடோனியாதேசம் ஒரு பெரிய சைனியத்தையும், அத்தேயத்தின் மன்னரும் திறமை மிக்கவருமான அலெக்ஸாந்தரென்னும் சேனாதிபதியையும் பெற்றிருந்தது. அலெக்ஸாந்தரினது படைவகுப்பு மிகச் சிறந்ததாயிருந்தது. குதிரைப்படையே அவரது முக்கியப் படையாகும். அக்குதிரைப்படை அவருடைய முயற்சிகளி லெல்லாம் அவருக்கு நிச்சயமாய் வெற்றியுண்டாகும்படி போராடிவந்தது. மாஸிடோனியர்கள் செய்த போர்களில், பகைவர்களைத் தாக்கும் பொருட்டு ஏற்பட்டிருந்த இயந்திரங்களின் பிரயோகமே மிக்க பயனைச் செய்தது.

கி. மு. 334 ம் ஆண்டில், அலெக்ஸாந்தர், 40,000 போர்வீரர்களுடன், ஹெல்லஸ்பாண்டு எனுஞ் ஜலசந்தியைச் செஸ்டாஸி னின்றுங் கடந்து, அபிடாஸ் எனுமிடத்திற்குச் சென்று, அங்கிருந்து பாரசீகத்தின்மீது படையைச் செலுத்தத் தொடங்கினார்;



டிராய்லாந்து எனும் நாட்டிலுள்ள கிரேனிக்கஸ் எனும் நதிக்கரையில், பாரசீகப் படையை நாசமாக்கினார். சார்டிஸ் நகரம் அவரைத்தானாகவே சரணமடைந்தது. எபிஸஸ் எனும் நகரத்தின்கண் தங்கியிருந்த சேனை அதை விட்டுவிட்டு ஓடிப்போய் விட்டது.

*பாரசீக ராச்சியத்தின் மீது அலெக்ஸாந்தர் எழுந்த படையெழுச்சி.*

பின்னர் அலெக்ஸாந்தர் மைலீட்டஸ் எனும் நகரைக் கைப்பற்றிக்கொண்டனர். பின்பு லிஸியா, பைஸிடியா எனும் இந்நாடுகளை வென்று ஆர்மீனியா, சிலீஷியா, அஸ்ஸீரியா முதலிய நாடுகளின் வழியாகச் சென்று அவர் சிலீஷியாவின்கணுள்ள இஸ்ஸஸ் எனுமிடத்தை யடைந்தனர். அங்கு ஒரு நெருங்கிய பள்ளத்தாக்கில் பெருஞ்சேனையோடு, டேரியன் சக்கரவர்த்தி தமது வருகையைத் தடுக்கும் வண்ணம் காத்திருப்பதை அலெக்ஸாந்தர் கண்டு அமர்க்களத்தில் டேரியனைத் தோற்கடித்தார். டேரியஸ் போர்க்களத்திலிருந்து ஓடிவிட்டனர். அவரது அன்னையாரும், மனைவியும், குழந்தைகளும், அலெக்ஸாந்தரிடம் அகப்பட்டுக்கொண்டனர். இவ்வாறு ஆசியாமைனரைக் கைப்பற்றிக்கொண்டு, சிரியா, எகிப்து முதலிய தேயங்களைப் பிடித்தற் பொருட்டு அலெக்ஸாந்தர் சென்றார். ஆரடஸ் சைடன் எனும் நகரங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்துவிட்டன. அதன்பின் டயர் எனும் இடத்தை ஏழு மாதம் முற்றுகையிட்டுக் கைப்பற்றினர். அவர் அவ்விடத்தைக் கைப்பற்றினமையால் அவரது அதிகாரம் மத்தியதரைக்கடலின் கீழ்ப்பாகம்வரையில் பரவிற்று. அவர் சிரியாவை வென்று எகிப்திற் பிரவேசிக்க, எகிப்து தானே பணிந்துவிட்டது. அவர்

நைல் நதியின் முகத்துவாரங்களில் ஒன்றினருகிற் கிரேக்க நாகரிகத்தைப் பரவச் செய்யும்பொருட்டு அலெக்ஸாந்திரியா வெனும் பட்டணத்தைத் தாபித்தார்; பின்னர்ப் பினீஷியாவின் வழியாகத் தாப்ஸகஸ் எனுமிடத்திற்கு விரைந்து சென்று, யூப்பிரத்தீஸ் நதியைக் கடந்து, டைக்ரிஸ் நதிக்குச் சமீபத்தில் வந்தார். அங்கிருந்து தென்கிழக்கு முகமாய்ச் சில நாள் பிரயாணஞ் செய்தபின் அவர் பண்டைக்காலத்து அழிந்துபட்ட நினீவே எனும் நகரத்திற்கு அணித்தாயுள்ள கௌகமேலா எனும் பெரிய வெளியின்கண் வந்தார். அவ்விடத்திற் பத்து இலட்சம் பேருடன் போருக்குச் சித்தமாயிருந்த டேரியன் என்பார் அவருடன் யுத்தஞ்செய்தார். அலெக்ஸாந்தர் வெற்றிபெற்று விளங்கினர். டேரியன் இரணகளத்தை விட்டு ஓடினர். இவ்வெற்றியினால் அலெக்ஸாந்தருக்குப் பாபிலன் சூஸா முதலிய பட்டணங்களை வெல்ல சௌகரியங்கள் ஏற்பட்டன. சூஸாவினின்றும் பாரசீகத்தின் பழைய தலைநகரமாகிய பெர்ஸிபொலிஸ் எனும் நகரத்தை மீண்டும் அடைந்து, அங்கிருந்து மீடியா நாட்டை நோக்கிப் பிரயாணஞ்செய்தனர். அவர், மீடியாவின் தலைநகராகிய எக்பாட்டனா வெனுமிடத்தைக் கைப்பற்றி, டேரியனை உயிருடன் கைதியாக்கிவிடலா மெனுங் கருத்துடன், காஸ்பியன் கடலை நோக்கி விரைந்துசென்றார். வழியில் பாக்திரியாவின் மாகாணத் தலைவனாகிய பெஸ்ஸஸ் என்பான் தன் சூழ்ச்சியால் டேரியனைக் கொன்றுவிட அலெக்ஸாந்தரின் கருத்து நிறைவேறாமற்போய்விட்டது. இம்மூன்றும் டேரியன் ஆறு வருடகாலம் மிக்க துன்பத்துடன் இராச்சியத்தைப் பரிபாலித்து, அச்சொற்ப காலத்



திற்குள் மானிடர் அடைதற்கரிய மேலான பதவியிலிருந்து, தாழ்ந்த நிலைமைக்கு வந்து தமது ஐம்பதாம் வயதில் உயிர் துறந்தனர். இவரது மரணத்தால் அலெக்ஸாந்தரின் நிலைமை மாறுபட்டது. மாஸிடோனியாவின் அதிபதியாகவிருந்த அவர் பாரசீக தேயத்திற்கும் அதிபதியாயினர். அலெக்ஸாந்தரது ஏகாதிபத்தியத்தில் இவ்வெற்றிக்குப்பின் மாஸிடோனியாவின் தலைநகராகிய பெல்லா வெனும் பட்டணத்தினும் உன்னத நகரமாகிய பாபிலனே தலைமையுடையதாயிற்று.

பின்னர், அலெக்ஸாந்தர் ஹிற்கேனியா, அரியா, டிராங்கியானா, சிஸ்டான், அரக்கோசியா, சாக்டியானா, எனுமிவ் விடங்களைக் கைப்பற்றினர். அதன்பின் அவர் நம் தாய்நாடாகிய இந்தியாவைக் கைப்பற்றுவதற்காகப் புறப்பட்டார். அவ்வாறு புறப்பட்டவர் இந்துகுஷ் மலைக்கும், சிந்து நதியின் வலது கரைக்கும் இடையிலுள்ள பிரதேசங்களைக் கீழ்ப்படுத்தி அயோர்னஸ் எனும் மலைக்கோட்டையையுங் கைப்பற்றினர். அட்டாக் எனுமிடத்திற்கு அணித்தாகச் சிந்து நதியைக் கடந்து சென்றபோது தக்ஷஸிலா நகரம் தானாகவே அவரைச் சரணமடைந்தது. புருரவன் என்பார் ஒருவர் ஹிஸ்டாஸ்பிஸ் எனும் நதியின் ஓரத்தில் அவருடன் அமராடித் தோல்வியடைந்தனர். பின்னர் அலெக்ஸாந்தர் சீனாப், ராவி ஆகிய இந்நதிகளைக் கடந்து சாங்கலா எனும் பட்டணத்தைக் கைப்பற்றினார். அவர் பியாஸ் எனும் நதிக் கருகில் வந்துகொண்டிருந்தபொழுது, அவரது சேனைகள், தமக்குக் கிடைத்த கீர்த்தியினாலும், கொள்ளைப் பொருளினாலும் மிக இறுமாப்

புற்று முன்னோக்கிச் செல்லோமென மறுத்து விட்டன. அவர் உலகத்தை வெல்லப் புறப்பட்டுத் தாம் இவ்வளவுதூரம் வந்தமையை வரையறுத்துக் காட்டுமாறு, பன்னிரு பெருந் தம்பங்களை நாட்டினார்.

பிறகு அவர் தம் படைகளைப் பாபிலனுக்குத் திரும்பும்படி கட்டளையிட்டார். அவர், தம் படைகளில் ஒருபகுதியை யழைத்துக்கொண்டு, கடற்கரையோரமாகவே மேற்றிசை நோக்கிப் புறப்பட்டுச் செல்லுங்கால் வழியில் நீரில்லாத ஜெட்ரோஷியா எனும் வனாந்தரத்தில் மிகத் துன்பமுற்றுக் கடைசியாகப் பாபிலனைச் சேர்ந்தார். அவர் தமது சேனைகளில் மற்றொரு பகுதியை நியார்க்கன் என்பாரது தலைமையின் கீழ்ப்படுத்திக் கப்பல்களிலேற்றிச் சிந்து நதியின் வழியாக அனுப்பினார். நியார்க்கன் மிகத்தாமதத்துடன் யூப்பிரத்தீஸ் எனும் நதியின் முகத்துவாரத்தில் வந்துசேர்ந்தார். அரேபியா அலெக்ஸாந்தரது அதிகாரத்திற்கு இன்னும் கீழ்ப்படாமலிருந்தது. கீர்த்திபெற்ற அம் மாஸிடோனிய வீரர் செய்யவேண்டிய காரியங்கள் மற்றும் பல இருந்தன. ஆனால் அலெக்ஸாந்தர், தேகத்தை யுருக்கும் ஒரு நோயின் வயப்பட்டுத் தமது முப்பத்து மூன்றாம் பிராயத்திலேயே மரணமடைந்தனர்.

## பிரிவு 4. அலெக்ஸாந்தரின் அருஞ்செய்கையும் அதனால் உலகிற்குண்டான நன்மையும்.

இனி அலெக்ஸாந்தர் உலக நன்மையின்பொருட்டுச் செய்த அரிய பெரிய செயல்களைப் பற்றிச் சிறிது கவனிப்பாம். அலெக்ஸாந்தர் தம் குடிகளுக்



குள் இருந்து வந்த விரோதங்களையும் துன்பங்களையும் நீக்கமுயன்றனர். ஆசியா ஆப்பிரிக்கா ஐரோப்பா ஆகிய இக்கண்டத்தினர்களடங்கிய இராச்சியம் ஒன்றைத் தாபித்தற்பொருட்டும் அக்கண்டத்தினர்கள் ஐக்கியமடைதற்பொருட்டும் அவர் முயற்சிகள் பல புரிந்தனர். அவர் தம் சபாமண்டபத்தின்கண் விசேடங்கள் நிகழுங் காலத்தில் பாரசீகதேயத் தரசரேபோல் உடை யுடுத்தி வந்தனர். அவர் கிரேக்கர்களை ஆசியாவிற் குடிபுகும்படியும், ஆசியாக் கண்டத்தவர்களை ஐரோப்பாவிற் குடிபுகும்படியுஞ் செய்தனர். தவிர, அவர் மாஸிடோனியர்கட்கும், பாரசீகர்கட்கும் இடையில் விவாகக்கூட்டுறவையும் ஏற்படுத்தினார். அவர் டேரியனின் புத்திரியை மணந்து தமது உத்தியோகத்தவர்களில் நூற்றுவரைப் பாரசீகப் பெண்மணிகளை மணக்கும்படியும் செய்தார். இராணுவத்தில், அவர், பாரசீகர்கட்கும், கிரேக்கர்கட்கும் ஒரு படித்தான உத்தியோகங்களைக் கொடுத்தார்; ஆசியாக்கண்டத்தவர்கட்கு மாஸிடோனியர்களின் கல்வியைப் புகட்டினார்; கிரீஸ், எகிப்து, மேற்கு ஆசியாவிலுள்ள நாடுகள் ஆகிய இவற்றிற்கு வியாபார விடயத்திற் கூட்டுற வேற்படுத்துதல்வேண்டுமெனக் கருதினர். அவ்வாறு கூட்டுற வேற்படுத்துதற்கு நைல் நதி, டைக்ரீஸ் நதி, சிந்து நதி ஆகிய இந்நதிகளைப் போக்குவரவிற்குரிய முக்கிய சாதனங்களாகப் பெறவேண்டுமென்பதும் அவரது கொள்கை. அவர், மத்தியதரைக்கடற் பிரதேசங்களுக்கும், இந்தியாவிற்கும், மேற்கு ஆசியாவிற்கும் ஒன்றற்கொன்று வியாபாரம் புரிதற்குரிய சௌகரியங்களை யேற்படுத்தியதால், ஆசியாக்கண்டத்தவர்

கட்கும். ஐரோப்பியர்கட்கும் மிகுந்த பழக்கத்தை யுண்டுபண்ணினர்.

தமதிராச்சிய முற்றிலும் கிரேக்கர்கள் குடியிருக்கவும், அதன்கண் கிரேக்கர்களது அரசுமுறை பரவவும், பலநகரங்களைத் தாபிக்குமாறு வேண்டிய ஏற்பாடுகளையும் அவர்செய்தனர். அவ்வாறே எழுபது நகரங்களேற்பட்டன. பாலஸ்தீனத்தின்கண் பெல்லாவெனு நகரமும், எகிப்து தேசத்தில் அலெக்ஸாந்திரியாவும், பார்த்தியாவில் அலெக்ஸாந்திராப்பொலிஸ் எனும் பட்டணமும், ஹிந்துகுஷ் மலைக்குத் தெற்கில் அதன் அடிவாரத்தில் அலெக்ஸாந்திரியாவெனுமொரு நகரமும், ஜாக்ஸார்த்தீஸ் நதியோரத்தில் அலெக்ஸாந்திரியா வெனும் பட்டணமும், சிந்துநதிக் கரையிலுள்ள அலெக்ஸாந்திரியாவெனும் நகரமும் அவர் ஏற்படுத்திய நகரங்களிற் சிலவாகும். இவ்வாறு பல்வேறிடங்களிற் பரவியிருந்த தம் இராச்சியப் பகுதிகளை ஒன்று சேர்ப்பதற்கு, அவர் தாபித்த நகரங்களைச் சுயாட்சியுள்ள கிரேக்க நகர ராச்சியங்களைப் போலாக்குவதே தக்க சாதனமா மென்பதை யவருணர்ந்தனர். இந்நகரங்கள் அலெக்ஸாந்தருக்கு இராச்சியமுழுவதும் கீழ்ப்படிந்து நடக்குமாறு செய்து இராச்சியத்தின் பலபாகங்களுக்கும் வியாபார விடயங்களில் உறவேற்படுத்தி, அநாகரிக மாந்தர்களுறையுமிடங்களிற் கிரேக்கர்களது நாகரிகத்தைப் பரவச்செய்து, அந்தந்த நாட்டினர்க்குள் நகர பரிபாலன சுதந்திரத்திற்கும், சுயாட்சிக்கும் எடுத்துக்காட்டிகளாயிருக்கும் மத்திய தானங்களேபோல் விளங்கின.

பாரசீகரது ஆட்சியில் இராச்சிய நிர்வாகம், வரவு செலவு விடயம், இராணுவச்சார்பான காரியங்



கள் ஆகிய இவைகளை ஒருவரே பார்த்துவந்தது போலன்றி, அலெக்ஸாந்தரின் ஆட்சியில் அவற்றில் ஒவ்வொன்றையுந் தனித்தனி உத்தியோகத்தர் ஏற்று நடத்திவந்தார். இதற்கு உதாரணமாக, சார்டிஸ் நகரின்கண் அந்நகரத்தைத் தமக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறுசெய்யவும் பாதுகாத்தற்கும் சேனாதிபதி யொருவரையும், வரிவசூலித்தற்கென ஒருத்தியோகத்தரையும், பொதுவில் இராசாங்க நிர்வாகத்தை மேற்பார்வையிடுதற்பொருட்டு ஒருத்தியோகத்தரையும், அலெக்ஸாந்தர் ஏற்படுத்தினர். அவ்வுத்தியோகங்களை யேற்ற மூவரும் ஒருவருக்கொருவர் சம அதிகாரமுடையவர்களாவர். அலெக்ஸாந்தர் தமது பெரிய இராச்சியத்தைப் பாதுகாத்தற்கு ஏற்படுத்திய உயர்ந்த உத்தியோகங்கள் பலவற்றிற்கும் அந்தந்த நாட்டினரையே ஏற்படுத்தினர். மீடியா பாரசீகம் இவ்விடங்களில் இந்நாட்டினர்களே மாகாணத் தலைவர்களாக ஏற்பட்டனர். அலெக்ஸாந்தர் தமதிராச்சியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஏற்கனவே யிருந்துவந்த மேலான வழக்கங்களையும், ஆதிகாலந் தொட்டிருந்துவந்த ஏற்பாடுகளையும் அவ்வாறே யிருக்குமாறு விட்டுவிட்டனர்.

கிரேக்கர் எனும் சொற்கு எவ்வளவு உயர்ந்த உரை கூறலாமோ அவ்வளவு சிறந்த பொருளில் அலெக்ஸாந்தரைக் கிரேக்கரெனக் கூறலாம். அவர், கல்வியிற் சிறந்த அரிஸ்தாத்திலன் எனும் பெரியாரிடத்தில் கிரேக்க முறைப்படி கல்வி கற்றனர். அவர் கிரேக்க நாகரிகத்தில் மிகவு முயர்ந்த நிலையையடைந்து விளங்கினர். அவர் கிரேக்கர்களது கொள்கையும், அவாவும் ஒருரு வெடுத்ததேபோல் தோன்றினர். அவரது செய்கைகள் பலவும் கிரேக்-

கர்களது கல்வியாகிய மரத்திற் கிளைத்த நாகரிகமெனுங் கிளைகளில் மணமிகுந்து தோன்றி மாந்தர்களின் மனத்தையும் பார்வையையும் ஒருங்கே கவரத்தக்க மலர்களே போன்றிருந்தன. அவர் அவ்வாறிருந்தமையால், கிரேக்க நாகரிகத்தை மானிடர் பலர்க்கும் உதவுமாறு செய்ய விரும்பியதும், எண்ணற்ற மக்களடங்கிய ஒருபெரிய இராச்சியத்தை யேற்படுத்தி அதன் பகுதிகளில் ஒற்றுமை யுண்டாக்குதற்குக் கருவியாயுள்ளது கிரேக்க நாகரிகம் ஒன்றேயாமெனக் கருதியதும் வியப்பன்று.

அலெக்ஸாந்தரின் வெற்றியால் உண்டாய பயன்கள் பலவாகும். புகழையே தமக்கு அணிகலனாகக் கொண்ட அவரது படைகள் கைப்பற்றிய தேயங்களிற் கிரேக்கர்களின் வியாபாரமும், நாகரிகமும், பாஷையும் விரைந்து பரவின. ஆசியாமைனர், சிரியா, மெஸப்பொட்டேமியா, எகிப்து ஆகிய தேயங்கள் கிரேக்கர்களின் உறைவிடங்களாகியதுந் தவிர, அவர்களது கல்விக்கும் உறைவிடங்களாயின. கிரீஸின் உரிமையை முற்றும் அழித்தார் எனச் சிலர் அலெக்ஸாந்தரைக் குறைகூறுவர். அதற்கு விடையாகக் கி. மு. நான்காம் நூற்றாண்டிலிருந்த கிரேக்கர்கள் உரிமை யடையத் தக்கவர்களல்லர் என ஒருவாறு கூறலாம். மாஸிடோனியாவினது ஏற்றம் கிரீஸுக்குக் கெடுதி விளைவித்ததெனினும் அஃது உலகத்திற்கு நன்மையையே பயந்தது. அலெக்ஸாந்தரின் வெற்றி, கிரேக்கரது அரசநீதியும் பரவுதற்கு இடந்தந்து, அவர்களுடைய மனத்தினின்றும் பாரசீகரைப்பற்றி அவர்களுக்குண்டாயிருந்த அச்சத்தை



வேரோடழித்து, சற்றேறக்குறைய ஆசியாவின் அரைப்பகுதியில் கிரேக்கர்களின் பாஷை, பயிற்சி, நாகரிகம் முதலியவற்றைப் பரப்பி, மேற்கு ஆசியாவின் சரித்திரத்தில் பலமாறுதல்களை யுண்டாக்கி ஆசியாவில் ரோமர்களது அதிகாரம் வருத்தமின்றிப் பரவுதற்கும், எங்கும் கிரிஸ்தவ மதம் எளிதிற்றாபிக்கப்படுவதற்கும் காரணமாயிருந்தது. ஆதலின் உரிமைபெற்ற கிரேக்கரது குடியரசு நாடுகளழிந்துபடனும் அதன் மூலமாய் ஏற்பட்ட மாஸிடோனியாவின் ஏகாதிபத்தியம் ஏற்றமடைந்து உலகின்கணுள்ள மாந்தர்கட்கு மிக்க பயனை விளைவித்தது.

அறிவைப் பெருக்கும்பொருட்டு அலெக்ஸாந்தருக்கிருந்த ஆவலும், பல்வகையான மாந்தர்களையும் மிருகங்களையும் காணவும் பிறநாடுகளின் வழியாய்ச் செல்லவும் அந்நாடுகளின் பொருள்களை வெளிப்படச் செய்யவும் அவருக்கிருந்த விருப்பமும், ஒருபெரிய விராச்சியத்தை ஏற்படுத்தி வியாபாரத்திற்கும் போக்குவரவிற்கும் தடையாயிருந்தவற்றை நீக்கிக் கீழ்நாட்டவரும் மேல்நாட்டவரும் ஒருங்கு கூடி இனிது வாழ்தற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவும் டேரியன், செர்க்கிஸன் ஆகிய பாரசீக அரசர்கள் இயற்றிய கொடுமைகளுக்காக அவர்கள் வமிசத்தில் தோன்றிய மற்றொரு மன்னரின்மீது பழிக்குப்பழி வாங்கவும் அவருக்கிருந்த பேரவாவும் ஒருங்கே நிறைவேறின. கிரேக்க ராச்சியம் பரவவேண்டுமென்பதும், ஒன்றுக்கொன்று ஒற்றுமையில்லாது பிரிந்திருந்த கிரேக்க நாடுகளைப் பாதுகாத்துக் கிரீஸின்கணுள்ள சிறிய நகர ராச்சியங்கள், ஒன்றோடொன்று சண்டையிடா

வண்ணம் அவற்றைத் தடுத்தற்பொருட்டு மாஸிடோனியாவைப் போன்ற வலிமைபெற்ற தேச விராச்சியமொன்றைத் தாபிக்கவேண்டு மென்பதும், ஆசியா ஆப்பிரிக்கா முதலிய கண்டங்களில் கிரேக்கர்களது கல்வி பரவவேண்டு மென்பதும் ஆகிய இவைகள் அக்காலத்திருந்த சிறந்த தத்துவசாத்திரிகள் நூலாசிரியர்கள் முதலியவர்களின் கருத்துகளாகும். அக்கருத்துகள் அலெக்ஸாந்தருடைய வலிமையால் அனுபவத்திற்கு வந்தன.

---

## 26 சில கிரேக்க அறிஞர்கள்

### பிரிவு. 1. சாக்கிரத்தின், கி. மு. 469-399.

சாக்கிரத்தீன் எனும் அதேனியர் தத்துவநூல்களைப் பயிலும் மாந்தர்கள் மனத்தின்கண் அவர்கள் தம்மை மறவாதபடி ஒரு ஞாபகச் சின்னத்தை அமைத்தனர். நாம் அவருக்கு நன்றி பாராட்டுதற்குக் காரணமாயுள்ள அவரது கொள்கைகள் இக்காலத்தில் உள்ள நாகரிக மாந்தர்களின் தத்துவசாத்திரத்திற் பிரிக்கவொண்ணாப் பகுதியா யிருத்தலோடு இக்காலத்தில் பலரறிந்தனவாகவும் வழக்கில் உபயோகிக்கப்படத்தக்கனவாகவும் இருக்கின்றன. அவர் அவைகளை முதன்முதலறிந்து தாபித்தற்கு எவ்வளவு ஊக்கத்துடனும் அறிவுடனும் உழைத்திருத்தல் வேண்டுமென்பதை நாம் அறிவது எளிதன்று. எக்காரியங்களையும் ஒருவன் இது நல்லது இது தீயது எனத் தன் அறிவினாலேயே அறிதல் வேண்டுமென்றும், அவ்வாறு அறிதற்கு அறிவிற் சிறந்த கருவி வேறொன்று மின்றென்றும் அவர் முதன்முதல் சாதித்தனர். ஒருவன் பிறர் கட்டளையின் படியாவது அல்லது தன் மனவெண்ணத்தின்படியாவது தன்னறிவுக் கொவ்வாத வழியில் நடவாமல், தனதறிவு எதைச் சரியெனக் கூறுகிறதோ அதையே பின்பற்றி யொழுகுதல் வேண்டுமென முதலில் வற்புறுத்திக் கூறியவர் அவரேயாவர். அவர் ஒருவரது அதிகார வரம்பிற்குட்பட்டவரல்லர். அவ்வாறு அதிகாரத்திலின்றும் மீறி நடத்தலா லுண்டாகுந் தீங்குகளை யனுபவிப்பதில் அவர் சற்றும் பின்வாங்காதவர். வயதில் முதியோன் ஒருவன் அறிவுடையனா யிருந்தாலொழியத் தன் வயதின் மூப்பினான் மட்டும் மரியாதைபெற வருசனல்லன் என்பதையும், மூடத்தந்தை யொருவன் தான் தந்தையெனும் பெயரைக் கொண்டதனாலேயே தனது புத்திரனைத் தன்னுடைய அறிவற்ற செயல்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு வற்புறுத்தச் சுதந்திர முடையவனாகான் என்பதையும், அவர் தந் தோழர்கட்கு உணர்த்தினர்.



எப்பொழுதும் மாந்தரின் பகுத்துணருந் தன்மைக்கே முழுப் புகழையு மளித்தல்வேண்டுமென்ற கொள்கையைச் சாக்கிரத்தீன் பிடிவாதமாகப் பின்பற்றிவந்தனர். மக்கள் பலர்க்கும் உபகாரமாயுள்ளதே நன்மை என்னும் கொள்கையையுடைய 'யூட்டிலிட்டேரியானிஸம்' என்கிற சித்தாந்தத்தை நிலைநிறுத்தியவரும் அவரே. இதனை ஐம்பொறிகளினின்பமே பொருள் என்னும் கொள்கை என்ப. கடவுள் ஒருவர் உளர் என்பதில் அவருக்கு நம்பிக்கையுண்டு. எனினும் கடவுளின் இயல்பு இத்தகையது என்பதைப் பற்றி அவருக்குச் சந்தேகமிருந்தது. தர்க்கசாத்திரத்தை அவர்தான் முதலில் ஆரம்பித்தவர். விண்ணூல

கைப்பற்றியவும் மன்னுலகைப் பற்றியவுமாய விடயங்கள் பலவற்றிலும் உள்ள குற்றங்களை அவர் ஒருவிதக் கண்ணோட்டமுமின்றி யெடுத்துக் கூறுவார். அவர் ஒரு விடயத்தையும் எழுதவில்லை; எவ்விடயத்தைப்பற்றியும் பேசித் தமது கருத்தை வெளியிடுதலே அவரியல்பு. ஆனால் அவர், பிளேட்டோவைப்போலப் பிறகு பெருந் தத்துவசாஸ்திரிகளாய் என்று மழியாப் புகழ்பெற்ற அறிவாளர்களான வாலிபர்களுடன் பேசிவந்ததனால், அவ்வாலிபர்களுக்குச் சிறிதேனு மஞ்சாது குற்றங்களை எடுத்துக்காட்டுங் குணத்தையும் புகட்டினர். அவர், அறிவை யுபயோகிக்க வேண்டிய விடயங்களில், அவ்வாலிபர்களது மனத்தின்கண் அஞ்சாமையும், சுதந்திரமுங் குடிகொள்ளும்படி செய்தனர்.

அவர் ஒருபோதும் பிரசங்கம் புரிந்திலர்; எனினும் எப்போதுந் தருக்கம் புரிந்துவந்தனர். இதுவே சாக்கிரத்தீனுடைய போதனை முறை. அவர் மனிதர்கள் பெரும்பாலும் கையாண்டுவருங் கொள்கைகள் யாவும் பரிசோதித்துப் பார்க்குங்கால் அறிவுக்கு அமையாதனவாகவும் நிலைத்திருக்கத் தகாதனவாகவுமிருந்ததைத் தெளிவுறக் காட்டிவந்தனர். தாம் சந்திக்கும் ஒவ்வொருவனிடத்திலும் அவன் நம்பியிருக்குங் கொள்கைகள் பரிசோதனை செய்யப்புகின் நிற்கமாட்டா வென்பதை அவனுக்கு விளக்கிக் காட்டவேண்டு மென்பது அவரது விருப்பம். அவரது இத்தகைய நடத்தை வாலிபர்கட்கு எத்தகைய உற்சாகத்தை யுண்டுபண்ணி யிருக்கவேண்டு மென்பதையும் வயோதியர்கட்கு எத்தகைய துன்பத்தை விளைவித்திருக்கு மென்பதையும் நாம் எளிதில் அறிய



லாம். அவர், சந்தை கூடுமிடங்களுக்குந் தேகப்பயிற்சிச் சாலைகட்கும் அடிக்கடி சென்று, அங்குள்ள விருத்தர், வாலிபர், தனவந்தர், ஏழைகள் மற்றுமுள்ளோர் பலரையும் தர்க்கத்திற் கழைப்பது வழக்கம்.

அவரது சாதுரியமான கேள்விகளால் மௌட்டிய மனமுடையாராய்த் தற்பெருமை வாய்ந்த மரியாதை பெற்றுவரும் முதியோர்கள் பலரும் இகழ்ச்சிக்குள்ளாயினமையால், அவர்களிற் பலர் அவரை நிந்தித்தனர். ஆகவே அவர் வெகு சீக்கிரத்தில் அதேனாவின் தெருக்களில் கொடியவர் எனப் பெயர் பெற்றனர். சாக்கிரத்தீன் குடியரசு நாட்டிற் பிறந்தவராயினும் குடியரசின் குற்றங்களை யெடுத்துக் கூறிவந்தார். அதேனாநகரில் அதிகாரிகளைச் சீட்டுப்போட்டுத் தெரிந்தெடுத்தலாகிய வழக்கை யவர் பரிகசித்து வந்ததே இதற்கு உதாரணமாகும். அவர் சாதாரண மாந்தர்களின் போலிக்கொள்கைகளையும் அறிவின்மையையும், மூடபக்தியையுங் கண்டித்து வந்தமையால் அம்மாந்தர்கள் அவரை மதித்திலர். குடியரசில் உண்மைப்பற்றுடையோர் அவரை ஓரபாயகரமான போதனையைச் செய்பவரெனவும், பழைய ஆசாரங்களை மாற்றுதற் பொருட்டுத் தமது நூதனமான கொள்கைகளைப் பரவச் செய்வதிலேயே தமது வாழ்நாளைக் கழிப்பவரெனவும் கருதியிருந்தார்கள். ஆதலின் பலர் அவரைப் பழிதூற்றினர். அவரது மனப்போக்கும், அவர் பரவச்செய்த கொள்கைகளும் இராச்சியத்தையும் மக்கள் கூட்டுறவிற்குக் காரணமான ஒற்றுமையையும் நாளடைவில் கெடுக்கதக்கவையா யிருந்தன. அனித்தன் என்னும் அதேனியர்

ஒருவர் அதேனா ராச்சியத்தின் மதத்தைப் பாதுகாப்பவர்போல் வந்து சாக்கிரத்தீஸ் பக்தி யில்லாதவரென்று அவர்மீது குற்றஞ்சாட்டினர்; சாக்கிரத்தீஸ் நகரத்தாருடைய தேவதைகளை நம்பாமையினாலும், வாலிபர்களைத் தீய ஒழுக்கங்களைப் பின்பற்றும்படி தூண்டுவதாலும் குற்றவாளியாவர் என்றும் மரண தண்டனைக் குரியர் என்றும் கூறினர். ஆனால் மேற்கூறிய அனித்தன் சாக்கிரத்தீஸ் மரண தண்டனைக்குள்ளாக வேண்டுமென்று விரும்பினரல்லர். ஆதலின் தான் நீதிபதியிடம் பிரியாது கொடுத்தால் சாக்கிரத்தீஸ் அட்டிக்காவை விட்டுப் போய்விடுவார் என்று அனித்தன் கருதினர். சாக்கிரத்தீஸ் அவ்விதம் சென்றிருப்பின் ஒருவரும் தடுத்திருக்கமாட்டார்கள். ஆனால், சாக்கிரத்தீஸ் வழக்கு விசாரிக்கப்படும்போது தற்காப்பின் பொருட்டு அந்நகரத்திலேயேயிருந்துவிட்டனர். இச்செய்கை எல்லோருக்கும் வியப்பை விளைவித்தது. ஐந்நூற்றொரு நீதிபதிகளடங்கிய ஒரு நியாயத்தலத்தின்கண் இவ்வழக்கின் விசாரணை நடந்தது. நீதிபதிகள் சாக்கிரத்தீஸைக் குற்றவாளியேயெனத் தீர்மானித்தனர்; பின்னர் மரண தண்டனையும் விதிக்கப்பட்டது. சாக்கிரத்தீஸ் ஒரு மாதம் வரையில் தமது சீடர்களுடன் ஊக்கம் மாறாமற் சம்பாஷித்திருந்து பின்புத் தண்டனையை ஏற்கக் கருதித் தமக்குக் கொடுக்கப்பட்ட விடத்தைப் பருகி இறந்தார். ஒவ்வொருவரும் தமக்குச் சரியெனத் தோன்றியவாறு நடக்கலாமெனத் தனியுரிமை பாராட்டும் வழக்கம் பெருகி வருவதைப் பழைய ஒழுக்கத்தையுடையோர் எதிர்த்ததற்குச் சாக்கிரத்தீஸுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது ஓர் சான்றாகும்.



அதேனா நகரத்திலுள்ள மாந்தர்கள், சாக்கிரத்தீஸ் எனும் பெயரை மிக்க மரியாதையோடும் பச்சாத்தாபத்தோடும் நினைத்துவந்தனர். சாக்கிரத்தீஸுடைய கருத்துகளை நல்லவர்கள் பின்பற்றினர். பிளேட்டோ, அரிஸ்தாத்திலன் ஆகிய இவர்கள் தமது தத்துவசாஸ்திர ஆராய்ச்சிக்கு வேண்டிய மூலாதாரமான குறிப்புகளைச் சாக்கிரத்தீஸிடமிருந்து தாமே நேராகவோ அல்லது பிறர்வாயிலாகவோ அறிந்திருந்தனர். சாக்கிரத்தீஸினும் உயர்ந்த அறிவாளி வேறொருவருமிலர் என்பது டெல்பியிலுள்ள குறிசொல்லும் ஆலயத்திற் கூறப்பட்டது.

## பிரிவு. 2. பிளேட்டோ, கி. மு. 427-341.

தத்துவசாத்திரத்தில் பிளேட்டோ என்பார் ஒரு சிறந்த நிபுணர். இவர் சாக்கிரத்தீஸ் உபதேசித்த சாதாரண கற்பனைகளையே ஆதாரமாகக் கொண்டு சாக்கிரத்தீஸும் நினைத்தற்கரிய நூல்களை யியற்றி யிருக்கின்றனர். பிளேட்டோ என்பவர் சிறந்த கவிஞரும், தத்துவசாத்திரத்தில் புலமை மிகுந்தவருமாவர். அவருடைய ஆராய்ச்சிகள் ஐரோப்பிய நாகரிகத்திற்கு நிலைபெற்ற பல பயன்களை விளைவித்ததுந் தவிர, அவரது சீடர்களுக்கன்றி மற்றும் பலர்க்கும் எட்டின. அவர் தருமசாத்திரத்தைப்பற்றியும், தத்துவசாத்திரத்தைப்பற்றியும், மதத்தைப்பற்றியும், அரசியன்முறையைப்பற்றியும் விரிவாக எழுதியிருக்கிறார். கிரேக்கர்கள், ரோமர்கள் ஆகிய இவர்களுடைய சாத்திரங்களிலும் அவரது கருத்துகளின் குறிகள் காணப்படுகின்றன. கிரிஸ்தவ மதம் பெரும்பாலும் அவரது மனப்போக்கையும் கருத்துகளையும் உட்கொண்டிருக்

கின்றது. தற்காலத்திருக்கும் அரசியற்சாத்திரங்களும், செல்வநூல்களும் அவரிடத்திலிருந் துண்டாயின வென்பதற்குப் பல அறிகுறிக ளிருக்கின்றன. மேற்கூறிய சாத்திரங்களில் வல்லவர்கள் சிலவேளைகளில் பிளேட்டோவின் நூற்களைப் பார்வையிட்டுத் தமது அபிப்பிராயங்களை உறுதிப்படுத்திக் கொள்கின்றனர். பிளேட்டோ கேட்போர் மனம் மெழுகென உருகுமாறு, தமது கருத்துகட் கெல்லாம் தம் குருவாகிய சாக்கிரத்தின் என்பவரே காரண மெனக் கூறுகிறார்.

### பிரிவு. 3. அரிஸ்தாத்திலன், கி. மு. 384-322.

அரிஸ்தாத்திலன் அமிண்டான் எனும் மாஸிடோனிய அரசரது அரண்மனை மருத்துவரின் புத்திரராவர். அரிஸ்தாத்திலன் தம் பதினேழாம் வயதில் அதேனுவிற்குச் சென்றனர். அவர் அங்குப் பிளேட்டோவினது சித்தாந்தத்தின் பெருமையை வியந்து, அது முதல் தத்துவ சாத்திரங்களை யாராய்வதிலும் பிறர்க்குப் போதித்தலிலும் காலத்தைக் கழித்தனர். அவருக்கு வயது முதிர முதிர, அவ்வாராய்ச்சி புரிவதே மனதுக் கின்பத்தைப் பயப்பதாயிற்று.

அரிஸ்தாத்திலனுக்கு ஆசிரியராயிருந்த பிளேட்டோ என்பார் இறந்துபட்ட பின்னர், பிலிப் அரசர் தமது புத்திரரும் இளவரசருமாகிய அலெக்ஸாந்தருக்கு ஆசிரியராக விருக்குமாறு அரிஸ்தாத்திலனைத் தம்மிடத்திற் கழைத்தனர். அலெக்ஸாந்தருக்கு அரிஸ்தாத்திலன் கற்பித்த கல்வி இலக்கியத்தையும் பாஷையையும் ஒட்டியதாகும். அரிஸ்தாத்திலன், மாஸிடோனியாவிற்குச் சாதாரண போதகாசிரியராக வந்



தாரே யொழிய, தத்துவசாத்திரியாக வந்திலர். அத்தகைய் புகழ் வாய்ந்த ஆசிரியருக்கும் அவரது சிறந்த சீடனுக்கு மிருந்த கூட்டுறவைப்பற்றி நமக்கொன்றுந் தெரிந்திலது. எனினும் அவர்களில் ஒருவரது குணம் மற்றொருவர் குணத்திற்கு ஒவ்வாததாயும் மாறுபாடுடையதாயு மிருந்தது. அலெக்ஸாந்தரின் ஊக்கத்தையும், பேராவலையும் தூண்டுவதைவிட அவற்றை அடக்குதலிலேயே அரிஸ்தாத்திலன் விருப்பமுற்றனர். ஐரோப்பாவிலுள்ளோரது உயர்தரக் கல்வி பெருகியதற்குக் காரணம் அரிஸ்தாத்திலனே எனக் கூறுதல் மிகையாகாது. அவர் எவ்வாறு ஆராய்ச்சி புரிந்தனரோ அவ்வாறே யிக்காலத்தும் ஐரோப்பாவின்கண் தத்துவசாத்திரம் கற்பிக்கப்படுகிறது. நீதி, இராச்சியபரிபாலனம் ஆகிய விடயங்களில் அவரியற்றிய முக்கியமான நூல்களைக்காட்டிலும், அவ்விடயங்களைக் கற்கத் தொடங்குவோர் வாசித்தற்குரிய சிறந்த நூல்கள் வேறு கிடையா. சமயசாத்திர ஞானங் குன்றியவர்களே யெனினும் தருக்கம் புரிவதில் கூர்ந்த அறிவாளர்களாகிய, கி. பி. 14-வது, 15-வது நூற்றாண்டுகளிலிருந்த அதியூகிகளையும் அரிஸ்தாத்திலனது சித்தாந்தம் தன்வயப்படுத்தியது.

அரிஸ்தாத்திலனுடைய மனோபாவங்கள்யாவும் ஒரு சிறிய கிரேக்க குடியரசு நாட்டைப் பற்றியவை. பெருத்த இராச்சியம் தாபிப்பதை அவர் கண்டித்துவந்தார். தவிர, இயற்கையில் கிரேக்கர்கள் மற்ற இனத்தவர்களைவிடத் தாம் சிறந்தவர்கள் எனக் கொண்டிருந்த கருத்தை அவர் உறுதியாகக் கொண்டவர். ஆதலின், கிரேக்கர்களையும், பிறநாட்டினர்களையும் ஒரேவிதமாகக் காத்தல் வேண்டுமெனப் புதுமை

யாகவும் அறிவோடும் அலெக்ஸாந்தர் கொண்டிருந்த கருத்துக்கு அவர் மாறுபட்டார். அலெக்ஸாந்தர் அக்காலத்தில் ஏற்படுத்திய இராச்சிய அமைப்பையும் உலகத்தில் மாந்தர்கள் ஏற்படுத்த வேண்டுமென அரிஸ்தாத்திலனால் விரும்பப்பட்ட இராச்சிய அமைப்பையும் சீர்தூக்கிப்பார்க்கையில் ஒருவித வியப்புண்டாகும்.

இராச்சிய அமைப்பைப்பற்றி அரிஸ்தாத்திலன் கொண்ட கருத்து

அரிஸ்தாத்திலன் என்பார் ஒவ்வொரு இராச்சியமும் சிறிய நகரமாயிருக்க வேண்டுமெனவும், அஃது அதிகமாகப் பரவியிராமல் தன் பாதுகாப்புக் கேற்ற ஆதரவுகளையுடைய ஒரு பிரதேசத்திலிருத்தல்வேண்டுமெனவும், அது கடற்கரைக்குச் சற்று தூரத்திலிருத்தல்வேண்டுமெனவும், அதற்குத் துறைமுகம் அருகிலிருத்தல் வேண்டுமெனினும் நாகரிகமற்ற மாந்தர்களும், சில்லரை வியாபாரிகளும், மாலுமிகளும் அதனுட் புகுந்து அதை யசுத்தப்படுத்தி, அதன்கண் உறைபவர்களுக்குத் துன்பங்களை யுண்டாக்காவண்ணம் துறைமுகமும் நகரமும் நெருங்கியிராதிருத்தல் வேண்டுமெனவுங் கருதினர். ஒரு நகரம் வியாபாரத்திற்கு இன்றியமையாத இடமாக இருத்தல்வேண்டுமென்பது அவரது கருத்தன்று. ஆயினும் அந்நகரத்தின்கண் அதற்கு முக்கியமான ஏற்றுமதி இறக்குமதிமட்டும் நடந்து வரவேண்டும் என்று அவர் எண்ணினார். தவிர அந்நகரம், குடிகள் ஒருவரை யொருவர் நன்கறிந்து கொள்ளும் பொருட்டு, சிலரையே தன்னுட்கொண்ட சிறு நகராக இருக்கவேண்டுமெனவும், அந்நகரத்திலுள்ள குடிகளுக்கு ஒருபடித்தான உரிமையுண்டாக வேண்டுமெனவும் அவர்களில் சிலர் தம் இளம்



பருவத்தை யுத்தப் பயிற்சிகளிற் செலவழித்து வாலிபப் பருவத்தில் இராசாங்க உத்தியோகத்திற்கு உறுதியுள்ளவர்களாகவும், முதுமையில் புரோகிதர்களாகவும் இருத்தல்வேண்டுமெனவும் அவர் கருதினர். கைத்தொழிலாளரும், வியாபாரிகளும் இத்தகைய நகரத்தவர்க்குக் கீழ்ப்படிந்து இராசாங்கத்தில் தமக்கென எவ்வித உரிமையு மின்றியிருத்தல்வேண்டும். அவ்விராச்சியத்தின் நிலத்தில்ஒரு பகுதி மாந்தர்கட்குப் பொதுவானதாயிருக்க வேண்டும். அதன் வருமானத்தைத் தேவாராதனை, பொது ஜனங்கட்கு உணவளித்தல் முதலிய காரியங்களில் உபயோகித்தல் வேண்டும்; மற்றொரு பகுதி பலபாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாகத்தையும் குடிகளில் ஒவ்வொருவனும் அனுபவித்தற்குரியதாயிருத்தல்வேண்டும். கிரேக்கர்களல்லாத இதர ஜாதியைச்சேர்ந்த அடிமைகளும் வேலையாட்களும் வயல்களை யுழுது பண்படுத்தல் வேண்டும்.

அரிஸ்தாத்திலன் இவ்வாறு பல கற்பனைகளைக் கற்பித்துக் கொண்டிருந்த அக்காலத்தில், அவரது பழைய மாணவரான அலெக்ஸாந்தர் ஒருதேயத்தவரிடமிருந்து மற்ற தேயத்தவர்களைப் பிரித்துவைத்திருந்த பெருந் தடைகள் பலவற்றையும் நீக்கி, வியாபாரத்தை உலக முழுவதும் பரவச்செய்து, கோடிக்கணக்கான குடிகளடங்கிய பெரிய இராச்சியமொன்றை யேற்படுத்திக்கொண்டிருந்தனர். தவிர, அவர் அரிஸ்தாத்திலனுடைய மனத்திற்கெட்டாத இராச்சிய பரிபாலன விடயமாய் உண்டாகும் இடையூறுகளை யெவ்வாறு நீக்குவதென்றும் யோசனைசெய்து கொண்டிருந்தனர். அரிஸ்தாத்திலன், தாம் ஏற்ப

டுத்தவெண்ணிய இராச்சியம் பரவி யொளிர்தற்கான வல்லமை யற்றதாய்ப் பிரபுக்களின் ஆட்சியையுடைய சாதாரணமான கிரேக்க ராச்சியம் போன்றிருந்தது. தவிர, அது ஸ்பார்த்தா நகர ராச்சியத்தை யொத்திருந்தது. அரிஸ்தாத்திலன் கருதியவாறு கிரேக்க நகரங்கள் அமைக்கப்படுமாயின், அவைகள் ஐரோப்பிய நாகரிகம் பெருகுதற்குப் பயனுடையவைகளாக விருந்திரா.

அரிஸ்தாத்திலன் என்பார் பிளேட்டோவைப்பார்க்கினும் அரசியல்விடயத்திலும், மனோபாவத்திலும், மத விடயத்திலும் சற்றுக் குறைவுபட்ட ஆற்றலுள்ள ஆசிரியராவர். தருமசாத்திரம், ரஸஞ்ஞானசாத்திரம், இராச்சிய பரிபாலனசாத்திரம், பௌதிக சாத்திரம் ஆகிய இவற்றை யெல்லாம் அவர் உய்த்துணர்ந்து அவற்றைப் பெருகச் செய்தனர். அவர் எழுதிய நூற்கள் பிளேட்டோவின் நூற்களைப்போன்று அத்துணைச் சிறப்புடைய நூல்களா யிராவிடினும் அவர் பிளேட்டோவைவிடச் சாத்திர ஆராய்ச்சியின் பொருட்டு உண்மையில் அதிக முயற்சி செய்திருக்கின்றனர். அவரது காலத்திலிருந்த மக்கள் அவரை நன்குமதித்தனர். ரோமர்களது தேசசரித்திரத்தில் அவரது பெருமை உள்ளங்கை நெல்லிக்கனியேபோல் காணப்படுகிறது. மிகுந்த புகழ் வாய்ந்த அரேபியர்களது தத்துவசாத்திரப்பயிற்சிக்கும் ஆதிகருத்தா அவரே. அரிஸ்தாத்திலனுடைய குணகுற்றங்களைப் பற்றி நாம் ஆராயும்போது அவரது திறமையைப் பற்றி நமக்கு நல்லபிப்பிராயம் உதிக்கிறது. ஐரோப்பிய நாகரிக அபிவிருத்திக்கு அவரே மற்றையோரைக் காட்டிலும் மிகவும் உழைத்தவராவர்.



## பிரிவு. 4. தெமிஸ்தாக்கிளன்.

இங்ஙனம், நாம் மூன்று சிறந்த தத்துவசாத்திரிகளைப்பற்றிக் கூறினோம். இனி ஒரு மேன்மை பொருந்திய இராச்சியதந்திரநிபுணரைப்பற்றிக் கூறுவாம். சாலமிஸ் எனு மிடத்தில் வெற்றிபெற்று விளங்கிய தெமிஸ்தாக்கிளன் என்பார் நியோக்கிளன் என்பாரது புதல்வர். அவர் கி. மு. 493-492ல் அதேனாவின்கண் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுப் பின்னர் இருபதாண்டுகள் வரையில் தமது அதிகாரத்தை மேன்மேலும் பெருகச் செய்தார். சாலமிஸ் எனும் இடத்தில் அவர் பெற்ற வெற்றிக்குக் கருவிகள் அவரது அறிவும் ஆற்றலுமே யாகும். அதேனாவைக் கிரீஸ் தேயத்தின்கண் சிறந்த கப்பற்படையையுடைய இராச்சியமெனக் கண்டோர் கூறும்படி செய்தல்வேண்டு மென்பது தெமிஸ்தாக்கிளன் என்பாரது முக்கியக் கருத்து. அன்றியும் அவர் கிரீஸ் தேயத்தின்கண் ஸ்பார்த்தா கொண்டிருந்த ஏகாதிபத்தியத்தை அதனிடமிருந்து கவர்ந்து கொள்ளவேண்டு மென்றெண்ணினர்.

பாரசீகர்களது படை மாரதான் பெரும் போரால் சிதைவுபட்ட தென்றும், ஆனால் அது முழுவதும் கெட்டொழியாமையினால் கிரீஸ் தேயத்தின் மீது மற்றொரு படையெழுச்சிக்கு இடமுண்டென்றும் தெமிஸ்தாக்கிளன் உணர்ந்தார். மாரதான் போரின்போது, ஈஜினா பாரசீகத்தாருடன் சேராவண்ணம் பிணையாட்கள் பதின்மரை அதேனாவிற்கு அனுப்புதல் வேண்டுமென அதை ஸ்பார்த்தா நிர்ப்பந்தித்தது. போர்முடிந்ததும் ஈஜினா பிணையாட்களை மீண்டும் கேட்டதற்கு அதேனா மறுத்துவிட்டது.

ஆதலின் கி. மு. 487-ம் ஆண்டில் ஈஜினா, அதேனா
ஆகிய இவ்விரு நகரங்கட்கும் இடையிற் போர்தொ
டங்கியது. ஈஜினாவின் யுத்தக் கப்பல்கள் அட்டிக்கா
வின் கடற்கரையோரத்தில் நடத்திய கடற்கொள்ளைக்
கும் அதேனியர்களுடன் செய்த கப்பற்போரில் ஈஜினா
நாட்டினர் பெற்ற வெற்றியும் அதேனா நகரம் கப்பற்
படையில் மிகத்தாழ்வுற்றிருந்ததென்பதை விளக்கின.
ஆதலின் அதேனாவிற்கு லாரியம் எனுமிடத்தில் வெள்
ளிச்சுரங்கத்தினின்றுங் கிடைத்த ஏராளமான திரவி
யத்தைத் தெமிஸ்தாக்கிளன் புதுக்கப்பல்களைச் செய்
வதில் உபயோகப்படுத்தக் கருதினர். அரிஸ்தைடன்
எனுமொரு அதேனியத்தலைவர், விவசாயத்தை விருத்
திசெய்து, அதன் மூலமாய் விவசாயிகளிடமிருந்து
போர்வீரர்களைச் சேகரித்துச் சேனைகளைத் திரட்டு
வதினால் அதேனா முன்னேற்றமடையும் எனக் கரு
தினார். எனினும் நகரத்தவர் பலரும் தெமிஸ்தாக்கி
ளன் கருத்தையே முடிவில் ஒத்துக்கொண்டனர்.
அதேனாவில் இருநூறு கப்பல்கள் செய்யப்பட்டன.
பிளத்தேயா யுத்தத்திற்குப் பின்பு பாரசீகர்கள்
தகர்த்தெறிந்த அதேனாவின் கோட்டைச்சுவர்க
ளைப் புதுப்பித்தல் அவசியமெனக் கருதி, தெமிஸ்
தாக்கிளன் அவ்வேலையைத் தொடங்கினார். ஸ்பார்த்
தர்கள் அவ்வேலையைத் தடுத்தனரெனினும் தெமிஸ்
தாக்கிளன் அவர்களைத் தமது சூழ்ச்சியால் ஏமாற்றி,
அதேனா நகரத்தைச் சுற்றிலும் ஏழுமைல் நீளமுள்ள
சுவரொன்றைக் கட்டிமுடித்தார். பின்வருங் காரி
யங்களை முன்னரே அறிந்துகொள்ளும் ஞானிகளே
போல், அவர், தமது நகரராச்சியம் பின்பு சீர்திருத்
தமடையு மென்றுணர்ந்து, அதனுடைய முன்னேற்



றத்திற்காகப் பல முயற்சிகளைச் செய்துவந்தார்.
அதேனா நகரம் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் புகழ்
பெற்றிருந்ததற்குக் காரணம் அவரே யெனக் கூற
லாம். அதேனாவினது கப்பற்படை மிகவுயர்வடை
தற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தம்மனத்திற் சிந்தித்
துப் பின்பு அவற்றை விடாமுயற்சியுடன் நடத்தியவ
ரும் அவரே. டீலியச்சபை யேற்பட்டதே தெமிஸ்தாக்
கிளனது அறிவிற்கும் பெருமைக்கும் அறிகுறியாக
விருக்கிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பெரிய இராச்
சியதந்திரியினிடத்திலும் சில குற்றங்களிருந்தன.
ஆடம்பரங்களில் அவர்க்கு மிகுந்த அவாவுண்டு.
அவர் இலஞ்சம் வாங்குவதில் பின்வாங்காதவர்.
அவர் மிகுந்த செருக்குள்ளவர். இத்தகைய விடயங்
களால் அவருக்குப் பல பகைவர்கள் ஏற்பட்ட
னர். அவர் பல்விதங்களில் ஸ்பார்த்தரின் பகை
மையைச் சம்பாதித்துக்கொண்டனர். ஆதலின் ஸ்பா
ர்த்தர்கள் தெமிஸ்தாக்கிளன்மீது அதிக கோபங்
கொண்டு அதேனா நகரத்திலேயே அவருக்கு விரோ
தமாக இலஞ்சம் முதலியவற்றை யளித்து ஒரு கட்சி
யைக் கிளப்பினர். தவிர தெமிஸ்தாக்கிளன் செய்த
சில ஏற்பாடுகள் அரிஸ்தைடன் போன்ற சிலருக்கு
வெறுப்பை யுண்டாக்கின. ஆதலின் கி. மு. 472-ம்
ஆண்டில் தெமிஸ்தாக்கிளன் இராச்சியத்தினின்றுந்
துரத்தப்பட்டனர். அவர் பிறகு சிறிது காலம்
வரையில் ஆர்காஸ் எனுமிடத்தில் தங்கியிருந்தனர்.
அங்கு அவர் வந்ததும் குடியரசைத் தாபிக்கவேண்டு
மென்னும் முயற்சி பலமாய் உண்டாயிற்று. ஆத
லின் பிரபுக்களின் ஆட்சியையுடைய ஸ்பார்த்தர்

கள், தமது அரசனாகிய பாஸேனியன் என்பவரின் சடிதங்களால், தெமிஸ்தாக்கிளினுக்கும் பாரசீக அரசனுக்கும் இடையில் இராச்சியத்துரோக விடயமாக ஏதோ வர்த்தமானங்கள் நடந்துகொண் டிருப்பதாகத் தெரியவந்ததெனக் கூறினர். இராச்சியத்துரோகத்திற்காக விசாரணை செய்யும்பொருட்டுத் தெமிஸ்தாக்கிளனைப் பிடித்து வரும்படி ஸ்பார்த்த உத்தியோகத்தர்களும், அதேனிய உத்தியோகத்தர்களும் அனுப்பப்பட்டனர். தெமிஸ்தாக்கிளன் அவர்களிடம் சிக்கிக்கொள்ளாமல் பாரசீகத்திற்கு ஓடினர். அத்தேயத்தரசன் அவரை மெக்னீஷியா வெனும் மாகாணத்திற்குத் தலைவராக நியமித்தார். முடிவில் அவர் பாரசீக அரசனிடம் உபகாரச்சம்பளம் பெற்றிருந்து பின்னர் இறந்தார். கிரேக்கராச்சியத்தை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்று பாடுபட்ட வீரரது காலம் இவ்வாறு முடிவுற்றது.

### பிரிவு. 5. டெமாஸ்தினன் கி. மு. 384-322.

இனிச் சொல் வன்மையுடைய டெமாஸ்தினன் என்னும் பெரியாரைப்பற்றிக் கூறி இச்சரித்திரத்தை முடிப்பாம். இவரது தந்தையார் ஓர் அதேனியத் தொழிலாளர். அவர் டெமாஸ்தினன் குழந்தையா யிருந்தபோதே இம்மண்ணுலகை நீத்தனர். டெமாஸ்தினனுக்கென அவரது தந்தையார் வைத்துச்சென்ற பொருளை அவரது போஷகர்கள் மோசவழியிற் செலவிட்டுவிட்டனர். அவர் தம்முரிய பருவத்தையடைந்ததும் தமது பொருளை மீண்டுங் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென வுறுதிகொண்டனர். தம் கருத்தை நிறைவேற்றுதற்பொருட்டு, அவர், பிரசங்கம் புரிவதில் மிக வல்லவரான இஸேயன் என்பாரிடம், சட்டமும் பிர



சங்கசாத்திரமும் பயின்றனர். அவர், தமக்குப் பேசுவதிலும் நடையுடை பாவனைகளிலும் இயற்கையாகவே உண்டாயிருந்த குற்றங்களைத் தாமே நீக்கமுயன்ற விதத்தையும், தாம் ஒரு கண்ணாடியின் முன்னிலையில் நின்று கொண்டு அபிநயங்கள் பலவற்றையும் அப்பியசித்ததையும், தம் வாயிற் சிறிய குழாங்கற்களைப் போட்டுக்கொண்டு அரிய செய்யுட்களை உரத்துப்பாடி அப்பியசித்து வந்ததையும் பன்முறை கூறுவது வழக்கம். அவர் பலரும் புகழ்தற்குரிய பிரசங்கவல்லவராயினர். டெமாஸ்தினன் அதேனிய சிரேட்டர்களுள் ஒருவராவர். அவர் யுத்த வீரருமல்லர்; இராச்சிய தந்திரியுமல்லர். அவர் பிரசங்கம் புரிவதில் இணையொருவரில்லாதவர். அவருக்கு அத்தொழிலிற் சமமானவர்கள் அக்காலத்திலும் இருந்திலர்; இக்காலத்திலுமிலர். அதேனாவின் பண்டைக்காலத்துப் பெருமையும், கிரீஸின் பூர்வீகப் பிரசித்தியும் அவர் மனத்தைவிட்டகலா திருந்தன. அதேனாவிற்குப் பெரிக்கிளன் காலத்திருந்த பெருமை மீண்டும் உண்டாகுமெனவும், அது மீண்டும் கிரீஸுக்குத் தலைநகராகுமெனவும், அது தன்னை அயல் நாடுகள் கைப்பற்றாவண்ணம் தற்காத்துக்கொள்ளுமெனவும் அவர் கருதினர். ஆனால் அவர் காலத்திருந்த அதேனியர்கள், பெரிக்கிளன் காலத்தவரைப் போலல்லாது, நற்குணங்களினின்றுந் தவறித் தாழ்வடைந்தவர்க ளென்பதை அவருணர்ந்திலர்.

அவர் அதேனாவின் பண்டைக்காலத்து நடந்தேறிய அரிய பெரிய நிகழ்ச்சிகளைப்பற்றிப் பிரசங்கம் புரிந்த காலத்தில், அவரது பிரசங்கம் அதேனியர்களுக்கு உற்சாகத்தை யூட்டி ஊக்கத்தை யுண்டுபண்

னிற்று. அவரது நோக்கங்கள் அதேனியாகளது நன்மையையேயன்றிக் கிரேக்கர்களுடைய பொது நன்மையையும் நாடியது. அவர் அதேனாவையன்றி, மற்றுமுள்ள கிரீஸ் முழுவதையுமே ஒருவருங் கைப்பற்றாவண்ணம் பாதுகாத்தற்கு முயன்றார். பிலிப்பின் செயல்களைத் தடுத்தற்பொருட்டு, டெமாஸ்தினன் செய்த முயற்சிகளை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதற் பகுதியில் அவரது செய்கைகள் பலவும் அதேனாவின்கண் நடைபெற்றன. அவர், பிலிப்புக்கு விரோதமாக அதேனாவைப் பலப்படுத்துமாறு இராசாங்கத்திற் பலசீர்திருத்தங்களைச் செய்தனர். ஆனால், மாஸிடோனியாவிற்கு விரோதமாக அதேனாவினால் தனித்துப் போராட இயலாமற் போனபடியால் அவரது முயற்சிகள் பயனடையாமற் போயின. கி. மு. 346-ம் ஆண்டிற்குப்பின் அவரது நோக்கமுழுவதும் கிரீஸைப்பற்றியதாகவேயிருந்தது. அவர் நிலைபெற்ற நகர ராச்சியத்தின் நன்மையையும், உரிமையுள்ள கிரேக்கர்கள் ஐக்கியப்பட்டிருத்தலாலுண்டாகும் பயனையும் கிரேக்கர்கட்கு மிகவும் வற்புறுத்திக் கூறினர். ஆயினும் அவரால் கிரேக்கர்களுக்குள் ஐக்கியத்தையேற்படுத்துதற்கு முடியவில்லை. கிரேக்கர்களது உரிமையாட்சியையே எப்பொழுதும் பாராட்டுமிவர் கெரோனியாச் சண்டையினால் அவர்களுக்குண்டான தாழ்விற்காக மிகவும் வருந்தினார். இத்தகைய குணங்கள்வாய்ந்த இப்பெரியார் 322-ம் ஆண்டில் மாஸிடோனிய அதிகாரியினிடமிருந்து தப்பித்துக்கொள்ளும்பொருட்டு விடத்தைப் பருகி உயிர்நீத்தார்.

184370